T. N. L. A. Debates

Official Report

1990

Vol. 18 No. 1

D
V211,31 N90
1V90.18.1
143810

வெளியீடு 25-5-1990

Issued 25-5-1990

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜனவரி 19, 1990-தொகுதி 18-எண் 1

Friday, the 19th January 1990-Volume 18-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

**Legislative Assembly Secretariat, Fort St. George**

**Madras-600 009**

விலை ரூ. 3.00

**[Price Rs. 3.00**

14380
D
V 211,31 'N90
N90.18.1



## உள்ளடக்கம்.

**19—1—1990.**

பக்கங்கள்.

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் .. iii—vi

Personnel of the Government of Tamil Nadu. .. vii—ix

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி) .. .. xiii—xv

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) .. .. .. xv—xxvii

1. இரங்கற் குறிப்புகள்—

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து .. 1—3

2. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 3—41

3. கவன ஈர்ப்பு—

(அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள கரும்புப் பண்ணைக் கழக நிலங்களை நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்குவது குறித்து .. .. .. .. .. 41—44

(ஆ) இலங்கையில் இந்திய இராணுவம் தொடர்ந்து இருக்க வேண்டுமெனத்தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டியது குறித்து .. .. .. 44—46, 46—48

(இ) ஆசிரியர்கள் நியமனத்தில் குறைபாடுகள் இருப்பதாகக் கூறப் பெறுவது குறித்து .. 46, 49

4. அறிவிப்பு—

மாற்றுத் தலைவர்கள் பட்டியல். . .. .. 50

| | பக்கங்கள். |
|---|---|
| 5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)— | |
| (அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1990 .. .. .. .. | 50 |
| (ஆ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990 .. .. .. | 50—51 |
| 6. அரசினர் தனித் தீர்மானம்— | |
| தாழ்த்தப்பட்ட, மலைவாழ், ஆங்கிலோ இந்திய மக்களுக்கான இட ஒதுக்கீடுகளை நீட்டிக்கச் செய்யும் திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் (நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1989 ஆம் ஆண்டு அரசமைப்புச் (அறுபத்திரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்கள்) .. | 51—93 |
| 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்— | |
| திரு. பெ. சு. திருவேங்கடம் .. .. .. | 93—101 |
| திரு. கே. ஏ. செங்கோட்டையன் .. | 101, 107—108, 110—113 |
| திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் .. .. | 113—119, 121—128 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. | 129—135 |

87

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—திரு. பி. சி. அலெக்சாண்டர்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் .. .. | மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத் துறை. |
| 2. கல்வி அமைச்சர் .. | மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் : கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல் பொருள் இயல். |
| 3. சட்ட அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப். |

4. வருவாய்த்துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டு வசதி.

6. அறநிலையத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :

அறநிலையத் துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா.

7. ஊரக வளர்ச்சி— உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி :

நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

8. மின்துறை அமைச்சர் —

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :

மின்சாரம், பால் மற்றும் குடிசை மாற்று வாரியம்.

9. உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :

உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.



10. வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி.

11. பொதுப்பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் :

பொதுப்பணிகள், பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட), திட்டப் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

12. சமூக நலம்—ஊரகத் தொழிற்துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி சுப்பு லட்சுமி செகதீசன் :

சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

13. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் :

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

14. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :

மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல்.

| | |
|---|---|
| 15. செய்தி—தொழிலாளர் நலத்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. என். நேரு : செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக்கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை மற்றும் அரசு அச்சகம். |
| 16. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 17. கைத்தறி—நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு. |
| முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர். | திரு. எல். கணேசன் |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU—Thiru P. C. ALEXANDER.

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister ... .. | **The Hon. Dr. M. KARUNANIDHI :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education .. | **The Hon. Prof. K. ANBAZHAGAN:** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister for Law .. .. | **The Hon. Thiru S.J. SADIQPASHA:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue .. | **The Hon. Thiru NANJIL K. MANOHARAN :** Revenue, District Revenue Establishment, Deputy Collectors Registration and Stamp Act. |
| 5. Minister for Transport .. | **The Hon. Thiru M. KANNAPPAN :** Transport. Nationalised Transport, Motor Vehicles Act. Ports and Housing. |

| | |
|---|---|
| 6. Minister for Hindu Religious and Charitable Endowments. | **The Hon. Thiru K.P. KANDASAMY:** Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona. |
| 7. Minister for Rural Development and Local Administration. | **The Hon. Thiru KO. SI. MANI:** Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural indebtedness. |
| 8. Minister for Electricity .. | **The Hon. Thiru Arcot N. VEERASAMY:** Electricity, Milk, and Slum Clearance Board. |
| 9. Minister for Food and Co-operation. | **The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM:** Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics. |
| 10. Minister for Agriculture .. | **The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM:** Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production. |
| 11. Minister for Public Works .. | **The Hon. Thiru DURAIMURUGAN:** Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works and Highways. |
| 12. Minister for Social Welfare and Rural Industries. | **The Hon. Tmt. SUBBULAKSHMI JAGADISAN:** Social Welfare including Children and Women's Welfare, Beggars' Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khad Board. Bhoodan and Gramadan |



| | |
|---|---|
| 13. Minister for Adi-Dravidar Welfare. | **The Hon. Dr. E. RAMAKRISHNAN:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 14. Minister for Public Health | **The Hon. Dr. K. PONMUDI alias DEIVASIGAMANI:** Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control. |
| 15. Minister for Information and Labour. | **The Hon. Thiru K. N. NEHRU:** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press. |
| 16. Minister for Animal Husbandry. | **The Hon. Dr. K. CHANDRASEKARAN:** Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation. |
| 17. Minister for Handlooms and Urban Development. | **The Hon. Thiru S. THANGAVELU:** Handlooms, Textiles, Town Planning, Urban Development and Accommodation Control. |
| Parliamentary Secretary to Chief Minister. | **Thiru L. GANESAN.** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு டாக்டர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர் :

திரு. வீ. பெ. துரைசாமி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. சா. கணேசன்

டாக்டர் க. காஞ்சனா

திரு. வே. தங்கபாண்டியன்

திரு. கே. அர்ஜுனன்

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

திரு. கோ. பூவராகன்

செயலாளர் :

திரு. சி. கு. இராமசாமி

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் 19-1-1990 ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டது.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்.
(அகர வரிசைப்படி)

| | |
|---|---|
| சீதாராமன், திரு. வெ., பி.காம்., பி.ஜி.எல்., .. | இணைச் செயலாளர் |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல்., .. | இணைச் செயலாளர் |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல்., .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல்., .. | துணைச் செயலாளர் |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல்., .. | துணைச் செயலாளர் |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ., | துணைச் செயலாளர் |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி.ஏ., பி.எல்., .. | துணைச் செயலாளர் |
| கோவிந்தராஜன், திரு. ஆர். .. | குழு அலுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல்., .. | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.ஏ., பி.எல்., .. | சார்புச் செயலாளர் |
| கேசவராம், திரு. சு., பி.ஏ., .. | சார்புச் செயலாளர் |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ., | சார்புச் செயலாளர் |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல்., .. | சார்புச் செயலாளர் |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல்., .. | சார்புச் செயலாளர் |
| முனிர் உன்னிசா, திருமதி, பி.எஸ்ஸி., | சார்புச் செயலாளர் |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ., .. | சார்புச் செயலாளர் |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ., .. | சார்புச் செயலாளர் |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்., .. | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| வெங்கட்டராமன், திரு. கோ. | .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ., | .. | தலைமை நிருபர் (குழுக்கள்) |
| ஜெயதேவ், திரு. பி. சி. | .. | தலைமை நிருபர் (பேரவை) |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 'அ' | | |
| 1. அங்கமுத்து, திரு. கே. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 2. அசேன், திரு. ஜெ. | .. | இராணிப்பேட்டை |
| 3. அண்ணாதுரை, திரு. கா. | .. | பட்டுக்கோட்டை |
| 4. அண்ணாதுரை, டாக்டர் கே. | .. | வரகூர் (செ.வ.) |
| 5. அண்ணாநம்பி, திரு. ஆர். | .. | அவிநாசி (செ.வ.) |
| 6. அண்ணாமலை, திரு. எம். | .. | அரூர் (செ.வ.) |
| 7. அதியமான், திரு. ஆ. | .. | சேடப்பட்டி |
| 8. அப்துல்சமத், திரு. பா. | .. | வாணியம்பாடி |
| 9. அப்துல் லத்திப், திரு. எம். | .. | சேப்பாக்கம் |
| 10. அர்ஜுனன், திரு. கே. | .. | தாரமங்கலம் |
| 11. அழகர்சாமி, திரு. சோ. | .. | கோவில்பட்டி |
| 12. அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. அறிவழகன், திரு. ஆ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 14. அன்பழகன், பேராசிரியர் க. | .. | அண்ணா நகர் |
| 15. அன்பழகன், திரு. வ. | .. | செய்யாறு |
| 16. அன்பில் பொய்யாமொழி, திரு. | | திருச்சிராப்பள்ளி-2 |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 'ஆ' | | |
| 17. ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிபட்டி |
| 18. ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 19. ஆறுமுகம், திரு. த. | .. | அரியலூர் |
| 20. ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. | | சேலம்-2 |
| 'இ' | | |
| 21. இரகுமான்கான், திரு. அ. | | பூங்கா நகர் |
| 22. இராசமாணிக்கம், திரு. இரெ. | .. | குத்தாலம் |
| 23. இராசமாணிக்கம், திரு. க. வெ.வீ. | | மேலூர் |
| 24. இராசன், திரு. வி. பி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25. இராசு, திரு. வி. கே. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 26. இராசு, திரு. வெ. | .. | குளத்தூர் (செ.வ.) |
| 27. இராசேந்திரன், திரு. அ. | .. | போளூர் |
| 28. இராதா, திரு. எஸ். ஆர். | .. | மதுரை கிழக்கு |
| 29. இராதாகிருஷ்ணன், திரு. டி. | .. | சோழவந்தான் |
| 30. இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31. இராமகிருஷ்ணன், திரு. நா. | .. | கம்பம் |
| 32. இராமச்சந்திரன், திரு. எம். | .. | திருவோணம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 'இ'— தொடர்ச்சி. | | |
| 33. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. | விளாத்திகுளம் |
| 34. இராமச்சந்திரன், திரு. ந. | .. | செஞ்சி |
| 35. இராமசாமி, திரு. ஏ. எம். | .. | ஆத்தூர் |
| 36. இராமசாமி, திரு. கே. வி. | .. | கரூர் |
| 37. இராமசாமி, திரு. வி. | .. | திருச்செங்கோடு |
| 38. இராமசாமி, திரு. கே. ஆர். | .. | திருவாடானை |
| 39. இராமநாதன், திரு. மு. | .. | கோவை மே[illegible] |
| 40. இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 41. இராஜேந்திரன், திரு. கே. ஆர். | | பர்கூர் |
| 42. இராஜேந்திரன், திரு. பி. வி. | .. | வேதாரண்யம் |
| 43. இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 'ஈ' | | |
| 44. ஈஸ்வரன், திரு. ஆர். | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 'உ' | | |
| 45. உகம்சந்த், திரு. எஸ். டி. | .. | மதுராந்தகம் |
| 46. உதயசூரியன், திரு. தா. | .. | சின்னசேலம் |
| 47. உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | .. | தஞ்சாவூர் |
| 'ஏ' | | |
| 48. ஏகாம்பர ரெட்டி, திரு. எ. | .. | பள்ளிபட்டு |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 'க' | |
| 49. கண்ணப்பன், திரு. மு. .. | பல்லடம் |
| 50. கண்ணன், திரு. எஸ். பி. .. | அணைக்கட்டு |
| 51. கணபதி, திரு. என். .. | மயிலாப்பூர் |
| 52. கணேசமூர்த்தி, திரு. என். .. | குறிஞ்சிப்பாடி |
| 53. கணேசமூர்த்தி, திரு. ஏ. .. | மொடக்குறிச்சி |
| 54. கணேசன், திரு. எல். .. | ஒரத்தநாடு |
| 55. கணேசன், திரு. க. சொ. .. | ஜெயங்கொண்டம் |
| 56. கணேசன், திரு. சா. .. | தியாகராயநகர் |
| 57. கணேசன், திரு. வே. .. | மங்களூர் (செ.வ.) |
| 58. கந்தசாமி, திரு. கே. .. | கிணத்துக்கடவு |
| 59. கந்தசாமி, திரு. கே. பி. .. | திருச்செந்தூர் |
| 60. கரீம், திரு. எம். கே. .. | கூடலூர் |
| 61. கருணாநிதி, டாக்டர் மு. .. | துறைமுகம் |
| 62. கருப்பசாமி, திரு. எஸ். எஸ். .. | சாத்தூர் |
| 63. கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபநாசம் |
| 64. கன்னையன், திரு. க. .. | தொட்டியம் |
| 65. கஜபதி, திரு. டி. ஆர். .. | ஆற்காடு |
| 66. காஞ்சனா, டாக்டர். க. .. | கிருஷ்ணகிரி |
| 67. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. .. | முதுகுளத்தூர் |
| 68. காளியப்பன், திரு. பி. .. | ஒட்டன்சத்திரம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 'க'—தொடர்ச்சி. | |
| 69. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து... | சிதம்பரம் |
| 70. கிருஷ்ணன், திரு. சி. .. | ஓமலூர் |
| 71. குணசேகரன், திரு. எஸ். .. | தலைவாசல் (செ. வ.) |
| 72. குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம் |
| 73. குருநாதன், திரு. சு. — | பாளையங்கோட்டை |
| 74. குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. .. | பவானி |
| 75. கோதண்டம், திரு. ஏ. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 76. கோபாலகிருஷ்ணன், திரு. வெ... | மேட்டுப்பாளையம் |
| 77. கோவிந்தசாமி, திரு. சி. .. | திருப்பூர் |
| 78. கோவிந்தசாமி, திரு. வி. சி. .. | காவேரிப்பட்டினம் |
| 79. கோவிந்தராஜன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம் |
| 80. கோவிந்தன், திரு. வெ. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 'ச' | |
| 81. சண்முகம், திரு. சி. .. | ஆலந்தூர் |
| 82. சந்திரசேகர், திரு. வி. பி. .. | பொள்ளாச்சி |
| 83. சந்திரசேகரன், டாக்டர் க. .. | ஆலங்குடி |
| 84. சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர் |
| 85. சம்பத், திரு. ஏ. ஜி. .. | முகையூர் |
| 86. சற்குணம், திருமதி எஸ். பி. .. | இராதாகிருஷ்ணன் நகர் |
| 87. சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. .. | உடுமலைப்பேட்டை |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'ச'—தொடர்ச்சி. | |
| 88. சாந்தகுமாரி, டாக்டர் த. — | தாராபுரம் (செ.வ.) |
| 89. சாமிநாதன், திரு. ஆர். — | திருமங்கலம் |
| 90. சிங்காரம், திரு. ஆர். — | பேராவூரணி |
| 91. சிவசுப்பிரமணியன், திரு. சா. — | ஆண்டிமடம் |
| 92. சிவலிங்கம், திரு. எஸ். ஆர். — | பனைமரத்துப்பட்டி |
| 93. சின்னக்குழந்தை, திரு. மு. — | பெரணமல்லூர் |
| 94. சிவலோகம், திரு. எஸ். — | புவனகிரி |
| 95. சின்னசாமி, திரு. கே. — | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 96. சின்னசாமி, திரு. ரா. — | தர்மபுரி |
| 97. சின்னசாமி, திரு. வி. கே. — | பவானிசாகர் |
| 98. சீரங்கன், திரு. எம். — | மேட்டூர் |
| 99. சீனிவாசன், திரு. பெ. — | சிவகாசி |
| 100. சுந்தர், திரு. கே. — | உத்திரமேரூர் |
| 101. சுந்தரதாஸ், திரு. மா. — | விளவன்கோடு |
| 102. சுந்தரம், திரு. க. — | பொன்னேரி (செ.வ.) |
| 103. சுந்தரம், திரு. கே. ஆர். — | குடியாத்தம் |
| 104. சுந்தரம், திரு. ப. — | திருப்பத்தூர் |
| 105. சுந்தரராஜ், டாக்டர் எஸ். — | பரமக்குடி (செ.வ.) |
| 106. சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி |
| 107. சுப்பிரமணியம், திரு. தா. க. — | சத்தியமங்கலம் |
| 108. சுப்பிரமணியன், திரு. அ. லெ. ... | திருநெல்வேலி |
| 109. சுப்பிரமணியன், திரு. வே. நா. ... | பெருந்துறை |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'ச'—தொடர்ச்சி. | |
| 110. சுப்பு, திரு. ஏ. .. | ராசிபுரம் |
| 111. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | ஈரோடு |
| 112. சுப்பையா, திரு. ஆலவயல் .. | திருமயம் |
| 113. செங்குட்டுவன், திரு. ஏ. .. | மயிலாடுதுறை |
| 114. செங்கைசிவம், திரு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 115. செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிச்செட்டிபாளையம் |
| 116. சேட்டு, திரு. எம். — | செங்கம் (செ.வ.) |
| 117. சொக்கர், திரு. ரா. .. | விருதுநகர் |
| 118. சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.) |
| 'ட' | |
| 119. டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம். |
| 'த' | |
| 120. தங்கபாண்டியன், திரு. வே. .. | அருப்புக்கோட்டை |
| 121. தங்கம், திரு. அ. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 122. தங்கராஜன், திரு. எஸ். ஏ. .. | திண்டுக்கல் |
| 123. தங்கராஜு, திரு. ஏ. .. | காட்டுமன்னார்கோயில் (செ. வ.) |
| 124. தங்கவேல், திரு. எம். .. | முசிறி |
| 125. தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.) |
| 126. தங்கவேலு, திரு. ச. .. | சங்கரநாயனார்கோவில் (செ. வ.) |
| 127. தம்புசாமி, திரு. வி. .. | திருவாரூர் (செ.வ.) |
| 128. தமிழ்க்குடிமகன், டாக்டர் மு. .. | இளையான்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 'த'—தொடர்ச்சி. | | |
| 129. தமிழ்மணி, திரு. வி. | .. | செங்கல்பட்டு |
| 130. தயாளன், திரு. ஏ. சி. | .. | ஆரணி |
| 131. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. | | சேலம்–1. |
| 132. தனராஜ், திரு. வி. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 133. திருநாவுக்கரசு, திரு.எஸ். | ... | அறந்தாங்கி |
| 134. திருமூர்த்தி, டாக்டர் து. | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 135. திருவேங்கடம், திரு. பெ. சு. | | கலசப்பாக்கம் |
| 136. துரை சந்திரசேகரன், திரு. | .. | திருவையாறு |
| 137. துரைசாமி, திரு.வீ. பெ. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 138. துரைபாண்டி, திரு.பெ. | .. | மானாமதுரை (செ.வ. |
| 139. துரைமுருகன், திரு. | ... | காட்பாடி |
| 140. துரை ராமசாமி, திரு. | .. | வெள்ளக்கோயில் |
| 141. தென்னரசு, திரு. எஸ்.எஸ். | .. | திருப்பத்தூர் |
| 142. தேவராஜ், திரு. வி.எம். | ... | வேலூர் |
| 'ந' | | |
| 143. நஞ்சப்பன், திரு. ந. | — | பெண்ணாகரம் |
| 144. நடராசன், திரு. ஆ. | — | பேரூர் |
| 145. நடராசன், திரு. பொ. | — | திருத்தணி |
| 146. நடேசன், திரு. எகால் மு. | — | ரிஷிவந்தியம் |
| 147. நடேசன், திரு. ஆர். | — | திருவட்டாறு |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 'ந'—தொடர்ச்சி. | | |
| 148. நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ. | ... | பண்ருட்டி |
| 149. நாராயணன், திரு. ராம. | .. | காரைக்குடி |
| 150. நூர்முகமது, திரு. செ. | ... | பத்மநாபபுரம் |
| 151. நேரு, திரு. கே. என். | — | லால்குடி |
| 'ப' | | |
| 152. பஞ்சாட்சரம், திரு. ஆர். | — | மேல்மலையனூர் |
| 153. பழனிச்சாமி, திரு.டி.கே. | — | திருவொற்றியூர் |
| 154. பழனிச்சாமி, திரு. ஜி. | — | திருத்துறைப்பூண்டி (செ. வ.) |
| 155. பழனிசுவாமி, திரு. க. | — | எடப்பாடி |
| 156. பழனிவேல், திரு. என். | — | பழனி (செ.வ.) |
| 157. பன்னீர்செல்வம், திரு.மா. | — | சீர்காழி (செ.வ.) |
| 158. பாண்டியன், திரு. பி.எச். | — | சேரன்மாதேவி |
| 159. பாப்பா உமாநாத், திருமதி | ... | திருவரம்பூர் |
| 160. பாப்பா சுந்தரம், திரு.அ. | .. | குளித்தலை |
| 161. பால்ராஜ், திரு.சோ. | — | மதுரை–மத்திய |
| 162. பாலசுப்பிரமணியன், திரு.அ.வே. | | திருநாவலூர் |
| 163. பாலசுப்பிரமணியம், திரு.எஸ்.ஆர். | | பொங்கலூர் |
| 164. பாலையா, திரு. ஆ. | — | கொளச்சல் |
| 165. பிச்சாண்டி, திரு.கே. | — | திருவண்ணாமலை |
| 166. பிச்சைமுத்து, திரு. ரெ. | — | பெரம்பலூர் (செ.வ.) |
| 167. பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | | தென்காசி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 'ப'—தொடர்ச்சி. | |
| 168. புகழேந்தி, திரு. இ. | கடலூர் |
| 169. பூவராகன், திரு. கோ. | விருத்தாசலம் |
| 170. பெரியசாமி, திரு. என். | தூத்துக்குடி |
| 171. பெரியசாமி, திரு. ஐ. | ஆத்தூர் |
| 172. பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.) |
| 173. பெரியண்ணன், திரு. அ. | புதுக்கோட்டை |
| 174. பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ஆ.வா.) |
| 175. பொன்முடி, திரு. டி. | தண்டராம்பட்டு |
| 176. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி, டாக்டர் க. | விழுப்புரம் |
| 177. பொன். முத்துராமலிங்கம், திரு. | மதுரை மேற்கு |
| 178. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 179. பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி |
| 180. பொன்னுபிள்ளை, திரு. ஜி. | தேனி |
| 'ம' | |
| 181. மகேந்திரன், திரு. ஆர். | நாட்றாம்பள்ளி |
| 182. மணி, திரு. ஆச்சியூர் எம். | நாங்குநேரி |
| 183. மணி, திரு. கே. ஏ. | கபிலர்மலை |
| 184. மணி, திரு. கோ. சி. | கும்பகோணம் |
| 185. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.). |
| 186. மதிவாணன், திரு. இரா. | ராயபுரம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 'ம'—தொடர்ச்சி. | |
| 187. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 188. மனோகரன், திரு. நாஞ்சில் கி. | திருவல்லிக்கேணி. |
| 189. மனோகரன், திரு. பா. | சிவகங்கை. |
| 190. மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம். |
| 191. மாசிலாமணி, திரு. தி. ரா. | பூந்தமல்லி. |
| 192. மாதப்பன், திரு. கொ. | பாலக்கோடு. |
| 193. மாரப்பன், திரு. பி. | காங்கேயம். |
| 194. மாரிமுத்து, திரு. அ. | வானூர் (செ.வ.). |
| 195. முகமது சித்திக், திரு. எம். | பூம்புகார். |
| 196. முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 197. முத்தையன், திரு. எம். | சங்கராபுரம். |
| 198. முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 199. முருகேசன், திரு. பொ. | காஞ்சிபுரம். |
| 200. முல்லைவேந்தன், திரு. வ. | மொரப்பூர். |
| 201. முனிரத்தினம், திரு. ஆ. மு. | சோளிங்கர். |
| 202. முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | திருவள்ளூர். |
| 203. மூக்கன், திரு. ஆர். | உப்பிலியாபுரம் (ஆ.வா.). |
| 204. மூக்கையா, திரு. எல். | பெரியகுளம். |
| 205. மோகன், திரு. இரா. | சிங்காநல்லூர். |
| 206. மோசஸ், திரு. எம். | நாகர்கோவில். |
| 'ய' | |
| 207. யசோதா செல்லப்பா, திருமதி. | வலங்கைமான் (செ.வ.). |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'ர' | |
| 208. ரமணி, திரு. கே. .. | கோவை (கிழக்கு). |
| 209. ரமணி நல்லதம்பி, திருமதி .. | ராதாபுரம். |
| 210. ரவி அருணன், திரு. .. | அம்பாசமுத்திரம். |
| 211. ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | ஓசூர். |
| 212. ராமச்சந்திரன், திரு. கே. .. | மன்னார்குடி. |
| 213. ராமச்சந்திரன், திரு. சி. .. | திருப்பரங்குன்றம். |
| 214. ராமசாமி, திரு. மொரஞ்சனூர். ப. | அரவக்குறிச்சி. |
| 215. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. | ஆலங்குளம். |
| 216. ராஜு, திரு. எச். எம். .. | உதகமண்டலம். |
| 217. ராஜேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |
| 'ல்' | |
| 218. லட்சுமி, திருமதி பி. .. | வால்பாறை (செ.வ.). |
| 'வ' | |
| 219. வரதராஜன், திரு. ஆர். .. | சங்கரி (செ.வ.). |
| 220. வரதராசன், திரு. உ. ரா. .. | வில்லிவாக்கம். |
| 221. வல்லரசு, திரு. பி. என். .. | உசிலம்பட்டி. |
| 222. விஜயராகவன், திரு. பொன். | கிள்ளியூர். |
| 223. விஜயேந்திரையா, திரு. டி. சி. | தளி. |
| 224. வீராசாமி, திரு. ஆற்காடு நா. | புரசைவாக்கம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 'வ'—தொடர்ச்சி | |
| 225. வீரையன், திரு. கோ. .. | நாகப்பட்டினம். |
| 226. வெங்கடாசலம், திரு. பெ. .. | வீரபாண்டி. |
| 227. வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். | ஸ்ரீரங்கம். |
| 228. வெள்ளிங்கிரி, திரு. யூ.கே. .. | தொண்டாமுத்தூர். |
| 229. வேணு, திரு. கி. .. | கும்மிடிப்பூண்டி. |
| 230. வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | தாம்பரம். |
| 'ஸ' | |
| 231. ஸ்டாலின், திரு. மு. க. .. | ஆயிரம் விளக்கு. |
| 'ஜ' | |
| 232. ஜெயலலிதா, செல்வி ஜெ. .. | போடிநாயக்கனூர். |
| 'ஹ' | |
| 233. ஹமீது இப்ராகிம், திரு. அ. மு. | கடலாடி. |
| 'ஸ்ரீ' | |
| 234. ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். .. | சைதாப்பேட்டை. |
| 235. ஆஸ்கார் சி. நிக்லி, திரு. .. | நியமன உறுப்பினர். |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்.

திரு. கு. அழகிரிசாமி .. தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 6, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, சனவரி 19, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9—00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ;

'' நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று''.

ஒருவர் நமக்கு இதற்கு முன்னால் செய்த நன்மையை மறப்பது அறம் ஆகாது. அவர் தீமையைச் செய்து இருப்பாராயின், அதனை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

1. இரங்கற் குறிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கீழ்க்கண்ட முன்னாள் உறுப்பினர்கள் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்:

| உறுப்பினர் பெயர். | மறைந்த நாள். | தொகுதியும் பணியாற்றிய காலமும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| திருவாளர்கள்— | | |
| அந்தோணி பீட்டர் | 13–07–1989 | திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறைத் தொகுதி 1952 முதல் 1957 வரை உறுப்பினர். |
| இல. ஆறுமுகம் .. | 13–08–1989 | தென்னாற்காடு மாவட்டம், திருநாவலூர் தொகுதி 1977 முதல் 1980 வரை உறுப்பினர். |

| உறுப்பினர் பெயர். | மறைந்த நாள். | தொகுதியும் பணியாற்றிய காலமும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| திருவாளர்கள்— | | |
| பி. எஸ். கே. லட்சுமிபதி ராஜூ. | 04–11–1989 | திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் பழனி தொகுதி 1957 முதல் 1962 வரை உறுப்பினர். |
| எம். ஆர். கிருஷ்ண மூர்த்தி. .. | 12–11–1989 | தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோவில் தொகுதி 1962 முதல் 1967 வரை உறுப்பினர். |
| பாபு ஜனார்த்தனன் .. | 14–11–1989 | திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செய்யாறு தொகுதி 1980 முதல் 1984 வரை உறுப்பினர். |
| வி. முனுசாமி .. | 25–11–1989 | தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி தொகுதி 1967 முதல் 1970 வரை உறுப்பினர். |
| டி. எஸ். அர்த்தநாரி .. | 29–12–1989 | சேலம் மாவட்டம், திருச்செங்கோடு (பொது) தொகுதி 1952 முதல் 1957 வரை உறுப்பினர். |
| கே. ராமசுப்பு .. | 31–12–1989 | சிதம்பரனார் மாவட்டம், கடம்பூர் (பொது) தொகுதி 1957 முதல் 1962 வரை உறுப்பினர். |



| உறுப்பினர் பெயர். | மறைந்த நாள். | தொகுதியும் பணியாற்றிய காலமும். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| திருவாளர்கள்— | | |
| எஸ். என். சோமயாஜுலு. .. | 09–01–1990 | திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், திருநெல்வேலி தொகுதி 1952 முதல் 1957 வரை உறுப்பினர். |
| அ. து. குலசேகர் .. | 16–01–1990 | கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி 1980 முதல் 1984 வரை உறுப்பினர். |

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### நாட்றாம்பள்ளி தொகுதியில் தொழிற்சாலைகள் அமைத்தல்

*509. திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாட்றாம்பள்ளி தொகுதியில் தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ; தலைவர் அவர்களே,

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் தொழிற்சாலைகள் அரசு துறையால் அமைக்க உத்தேசம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

9-05 பணி

திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி தொகுதி மிகவும் பின்தங்கிய வறட்சிப் பகுதி. நாட்ராம்பள்ளி தொகுதியில் அமைந்துள்ள மைகாமேடு என்ற கிராமத்திலே மைகா கனிப் பொருள் அதிக அளவில் கிடைக்கிறது. அதைப் பயன்படுத்தி மத்திய அரசு உதவியுடன் தமிழக அரசு சிறிய அளவில் ஒரு தொழிற்சாலையை நடத்தி வருகிறது. அந்தத் தொழிற்சாலையில் சுமார் 200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். பேரன்பு கொண்ட கழகத் தலைவர் தமிழக முதல்வராக பொறுப்பேற்றிருக்கின்ற இந்த நேரத்தில், மைகா கனிப் பொருள் கிடைக்கின்ற அந்த இடத்தில் பெரிய அளவில் ஒரு தொழிற்சாலையை அமைத்துத் தருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது மேலும் ஆராயப் பட வேண்டிய ஒன்று. ஆராய்ந்த பிறகுதான் அது குறித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளித் தொகுதி காடுகள் வளம் நிறைந்த பகுதி. அந்தப் பகுதியில் மாம்பழம், கொய்யாப்பழம், சீதாப் பழம் போன்ற சிறந்த வகையான உயர்ந்த ரகப் பழங்கள் விளைகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் எங்கள் பகுதியிலிருந்து சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர் போன்ற.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வினாவா? விளக்கமா?

திரு. ஆர். மகேந்திரன் : வினாதான். எங்கள் பகுதியிலிருந்து சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர் போன்ற பெரிய மாநகரங்களுக்கு அந்தப் பழ வகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எங்கள் பகுதியில் விளைகின்ற அந்தப் பழ வகைகளைக் கொண்டு பழச்சாறு உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சுவையான கேள்வி, ஆராயப்படும். (சிரிப்பு).

திரு. எஸ். எஸ். தென்னரசு : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு இதுவரையில் எத்தனை முறை கூடியிருக்கிறது, என்ன பணி ஆற்றியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படி ஒரு குழு அமைக்கப்பட்டுத் தொடர்ந்து அந்தக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அந்தக் குழுவிற்கு Long-term Strategic Planning Committee என்று பெயர். நீண்ட தொலைநோக்குத் திட்டங்களை ஆய்வு செய்கின்ற குழு என்று அதற்குப் பெயர். ஏறக்குறைய, அந்தக் குழு தொடங்கப்பட்டதற்குப் பிறகு ஆறு தடவை கூடி பல கருத்துக் களை விவாதித்து முடிவுகளை மேற்கொண்டு இருக்கிறது.

திரு. ஜெ. அசேன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஏற்கெனவே வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் சிப்காட் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகள் நலிந்த நிலையில் இருக் கின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்கு மீண்டும் புத்துயிர் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே தொடங்கப்பட்ட அத்தகைய தொழிற்பேட்டை களில் இராணிப்பேட்டை தொழிற்பேட்டையும், ஓசூர் தொழிற் பேட்டையும், இந்தியாவிலே இருக்கின்ற பல்வேறு தொழிற் பேட்டைகளோடு ஒப்பு நோக்குகின்ற அளவுக்கு நல்லமுறை யிலே இயங்கி வருகின்றன. அதிலே ஓரிரு தொழிற்சாலைகள் நலிந்த அளவுக்குப் போயிருக்குமேயானால் அவற்றைச் சீர் படுத்தும் முயற்சிகள் தகுந்த வகையில் மேற்கொள்ளப்படும்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக அரசு ஏற்பட்டதற்குப் பிறகு தமிழகத்திலே புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த மேற்கொண்ட நட வடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கழக அரசு அமைந்ததற்குப் பிறகு தொழிலதிபர்களை எல்லாம் அழைத்து — தமிழ்நாடு அளவிலே உள்ள தொழில் அதிபர்களையெல்லாம் முதலில் அழைத்து—அவர்கள் தொடங்க இருக்கிற தொழிற்சாலைகளுக்கு அரசின் சார்பிலே ஊக்கமும், பல்வேறு சலுகைகளும் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது. அதற்கு அடுத்து அகில இந்திய அளவிலே உள்ள தொழிலதிபர் களையெல்லாம் அழைத்து அவர்களைத் தமிழகத்திலே தொழில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு இந்தியா முழுவதும் உள்ள தொழிலதிபர்களுக்கு அரசின் சார்பில் கடிதங்கள் எழுதப்பட்டு, அவர்களிலே பல தொழி லதிபர்கள் தமிழ்நாட்டிலே தொழில் தொடங்க—அதை ஜாயின்ட் செக்டார் முறையிலோ, தனிப்பட்ட முறையிலோ தொடங்க—தங்களுடைய கருத்துக்களை அறிவித்திருக்கிறார் கள். அவை எல்லாம் ஆராயப்பட்டு வருகின்றன.

**திரு. வி. கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழிற்சாலை துவங்குவது சம்பந்தமாக அகில இந்திய அளவிலே கூட தொழில் அதிபர்களை அழைத்துப் பேசியிருப்பதாக கூறியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது பெரியார் மாவட்டத்தில், குறிப்பாக பவானிசாகர், சத்தியமங்கலம் பகுதிகளில் மல்லிகைப் பூக்களை கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்கு விவசாயிகள் உற்பத்தி செய்கிறார்கள். அவற்றை பெங்களூர், மைசூர் போன்ற இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்கிறார்கள். காரணம் அங்கே சென்ட் தயாரிக்கின்ற தொழிற்சாலை இருப்பதாகவும் அதற்கு இந்தப் பூக்களை பயன்படுத்துவதாகவும் கூறியிருக்கிறார்கள். (குறுக்கீடு) மல்லிகைப் பூ. அப்படி மல்லிகைப் பூவை உற்பத்தி செய்கின்ற பெரியார் மாவட்டத்தில், குறிப்பாக சத்தியமங்கலம், பவானிசாகர் பகுதிகளில் தொழிற்சாலை துவங்குவதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** உற்பத்தி ஆகின்ற மல்லிகைப் பூக்களைக் கொண்டு எத்தகைய தொழிற்சாலைகளை அங்கே உருவாக்கலாம் என்பது குறித்து ஆய்வு நடத்த அரசு முன் வரும்.

*9—10 மணி*

**திரு. சா. சிவசுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழிற்சாலை தொடங்குவதற்கு தொழிலதிபர்களுக்கு அரசு வழங்கும் யோசனைகள் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, புதிய தொழில்களைத் தொடங்குவதற்குப் பொதுவான திட்ட அறிக்கைகள் சிப்காட் நிறுவனத்திலே இருக்கின்றன. அந்த அறிக்கை அவ்வப்பொழுது நிலைமைகளுக்கு ஏற்ப திருத்தப்பட்டு தகவல் கோரும் தொழிலதிபர்களுக்கு ஒரு சிறு கட்டணத்திற்கு வழங்கப்படுகிறது. தொழில் தொடங்க முன் வருபவர்களுக்கு வழக்கமான சாத்திய அறிக்கை தயாரிக்க 50 விழுக்காடு வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. தொழில்களை எங்கு அமைப்பது என்பதில் ஆலோசனை அளிப்பதோடு பல்வேறு உரிமங்களைப் பெறுவதிலும் உதவி அளிக்கப்படுகிறது. அயல் நாடுகளில் வாழும் இந்தியர், தமிழகத்தில் தொழில்களை நிறுவிட உதவுவதற்கென தனிப் பிரிவு ஒன்றும் சிப்காட் நிறுவனத்திலே செயல்பட்டு வருகிறது. இவை அன்னியில் வரியில் சில சலுகைகள், மின்சாரம் தருவதிலே சில சலுகைகள், அவர்களுடைய சிறு தொழில்களை தொடங்குவதற்கு ஏற்ற வகையில் தண்ணீர் வசதி போன்ற வசதிகளை அங்கே பெருக்கித் தருதல் போன்ற இத்தகைய உதவிகளை அரசு முன்வந்து செய்கிறது.



**திரு. எம். அப்துல் லத்தீப் :** தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே வாழ்கின்ற இந்தியர்கள் நம்முடைய தமிழ்நாட்டில் குறிப்பாக தொழில் முனைவதற்கு மிகுந்த அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள். என்.ஆர்.ஐ. திட்டத்தின் அடிப்படையில் இதுவரையில் எத்தனை தொழில் முனைவோர்கள் இங்கே தொழில் ஏற்படுத்த, தமிழக அரசாங்கத்தை அணுகியிருக்கிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்ட விசேஷ சலுகைகளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே அவர்களுக்கு இருக்கின்ற குறைகளை நீக்கி மேற்கொண்டு தொழில் முனைவோர்கள் வெளிநாட்டிலிருந்து இங்கே முதலீடு செய்வதற்கு வேண்டிய அளவிற்கு சில திருத்தங்களை, முன் உரிமைகளை வழங்க அரசு என்ன திட்டங்களை வைத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பொதுவான சில கருத்துக்களைத்தான் ஏற்கெனவே கேட்கப்பட்ட கேள்விக்கு என்னால் இங்கே எடுத்து வைக்க முடிந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இங்கு விடுத்துள்ள இந்த வினாவை ஒரு தனி வினாவாக எழுப்புவாரானால் அது குறித்த விவரங்களைச் சேகரித்துப் பதில் அளிக்க எனக்கு வழி இருக்கும்.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல தனியார் தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. இதனால் வேலை வாய்ப்பை இழந்து பல தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்தத் தனியார் தொழிற்சாலைகளை எல்லாம் அரசே எடுத்து அவற்றை மீண்டும் திறந்து அவற்றில் வேலை வாய்ப்பை கொடுக்கும் உத்தேசம் ஏதும் உண்டா? அரசு அதற்கு நடவடிக்கை எடுக்குமா ? இதுபற்றி அரசின் நிலை என்ன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தெரிவிப்பார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு ஏற்கெனவே மூடப்பட்டுக்கிடந்த தொழிற்சாலைகள் பலவற்றில் ஆறு அல்லது ஏழு தொழிற்சாலைகளுக்கு மேற்பட்ட தொழிற்சாலைகளைத் திறந்திருக்கின்றோம். மேலும் ஆறு தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த தொழிற்சாலைகளுடைய அதிபர்கள் அதற்கு ஒத்துக் கொண்டு விரைந்து முன் வராத காரணத்தினால் ஆறு தொழிற்சாலைகளை அரசே ஏற்று நடத்துவது என்று அறிவிக்கப்பட்டு அதற்கு உரிய அனுமதியை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்காக மத்திய அரசுக்கு எழுதப்பட்டு இருக்கிறது. அங்கிருந்து நமக்குச் சரியான, உரிய பதில் வந்ததும் அந்த ஆறு தொழிற்சாலைகளும் அரசின் சார்பிலே மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறந்து தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிப்பதில் இந்த அரசு நல்ல வகையான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதைக் கடந்த காலத்திலே பல நிகழ்ச்சிகள் மூலமாக அவை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்களுக்கும், தொழில் செய்பவர்களுக்கும் பல சலுகைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். ஏற்கெனவே 1988-ல் பின்தங்கிய பகுதிகளிலே தொழில் தொடங்குபவர்களுக்கு மத்தியிலே வழங்கப்பட்ட மானியத் தொகை நிறுத்தப்பட்டதன் காரணமாக நம்முடைய தமிழக அரசு 105 தாலுக்காக்களில் அந்த 15 விழுக்காடு சலுகையை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் அது 19–8–1989 ஆம் தேதியிலிருந்துதான் வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே 1988 ஆம் ஆண்டு மத்தியிலே நிறுத்தப்பட்ட அந்த பின்தங்கிய பகுதிகளுக்கு—மாநில அரசு மானியம்—இடைப்பட்ட காலங்களிலே வழங்காத ஒரு நிலை இருக்கிறது. அதை மறு பரிசீலனை செய்து அந்தப் பின்தங்கிய பகுதிகளுக்கு 15 விழுக்காடு மானியம் வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9–15 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தை அடிப்படையாக வைத்துத்தான் அந்த மறு பரிசீலனையை நடத்தவேண்டும்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டி தொகுதியை தொழில் ரீதியாக மிகவும் பிற்பட்டபகுதியாக டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இருக்கின்ற தமிழக அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் எந்தவொரு தொழிற்சாலையையும் எனது உசிலம்பட்டி தொகுதியில் இதுவரை ஏற்படுத்திடவில்லை. மாண்புமிகு முதல்வர், அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்த நேரத்திலேயே புத்தூர் மலைக்குப் பக்கத்தில் ஒரு மிகப் பெரிய நூற்பாலை ஏற்படுத்துகின்ற திட்டத்தை ஏற்பாடு செய்து சர்வே செய்யப்பட்டு ** எனவே, மீண்டும் அந்த நூற்பாலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள்.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டுகள் கூடாது என்பது நியதி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டுகள் மட்டும் அல்ல. வேறு ஒரு தொகுதிக்குத் தாவக்கூடாது என்பதும் நியதி. உறுப்பினர் அவர்கள் கூறிய குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் அந்த நூற்பாலையை ஏற்படுத்தித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்டபடி உசிலம்பட்டி பகுதிக்குத் தொழிற்சாலை எதுவும் வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். வராததற்கு என்ன காரணம், ஒருவேளை தொழிலதிபர்கள் பயப்படுகிறார்களா என்பவற்றையெல்லாம் அரசு ஆராயும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசு சமீபத்திலே 105 வட்டங்களைத் தொழிற்துறையிலே பின்தங்கிய பகுதியாக அறிவித்தது. ஆனால் அதேசமயத்தில் என்னுடைய பழனி தொகுதி ஏற்கனவே பின்தங்கிய தொகுதியாக இருந்ததை கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்னால் மாற்றி விட்டார்கள். அதனால் அங்கே தொழிற்சாலைகள் புதிதாக ஆரம்பிக்கக்கூடியவர்களுக்கு எந்தவிதமான உதவியும் இல்லாத காரணத்தால் இப்போது அந்தப் பழனி பகுதி மக்கள் பலர் என்னிடம் வந்து முறையிடுகிறார்கள். ஆகவே, அதை மீண்டும் தொழிற் துறையிலே பின்தங்கிய பகுதி என்று நம்முடைய முதலமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏன் இந்த மாற்றம் ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து, அதற்குப் பிறகுதான் அது குறித்த முடிவை அரசு மேற்கொள்ள இயலும்.

## தென்னாற்காடு மாவட்டத்தில் புதிதாக பழுப்பு நிலக்கரிப் படிவம்.

*1118—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் புதிதாக பழுப்பு நிலக்கரிப் படிவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) புதிதாக பழுப்பு நிலக்கரிப் படிவம் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, இதையொட்டி ஒரு கேள்வி நான் கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே, இருக்கிற பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து எடுக்கப்பட்டு வந்த பழுப்பு நிலக்கரி பூராவுக்கும் நம் அரசாங்கத்திற்கு வர வேண்டிய ராயல்ட்டி கொடுப்பதாக முன்னே சொல்லப்பட்டு இருந்தது. அது ஏதோ டன்னுக்கு இவ்வளவு என்றுகூட பத்திரிகைகளிலே செய்தி வந்தது. அந்த ராயல்ட்டி எல்லாம் முன்பு இருந்த மத்திய சர்க்கார் கொடுக்கவும் இல்லை. இப்போதாவது அதைப் பெறுவதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து அந்தப் பணத்தைப் பெறுவார்களா ? அப்படிப் பெறுவது என்று சொன்னால் எவ்வளவு பணம் நமக்கு வரவேண்டியிருக்கிறது என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் சார்பாக மாநில அரசிற்கு ராயல்ட்டி தரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி முன்னாள் பிரதமர் மாண்புமிகு ராஜிவ் காந்தி அவர்களிடத்திலேயே நான் அரசின் சார்பாக ஒரு கடிதம் கொடுத்தேன். அதற்குப் பிறகு அதிகாரிகள் சார்பிலே அது பேசப்பட்டது. ஏற்கனவே இருந்த அரசுகள் அதற்கான கடிதங்களை எழுதின என்றாலும்கூட, தொடர் முயற்சிகள் இந்த அரசின் சார்பில் எடுக்கப்பட்டு இன்றைய நிலவரப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு விளக்கமாக, 23.37 கோடி ரூபாய் அவர்கள் ராயல்ட்டியாகத் தரவேண்டுமென்றும், ஆனால் இதுவரையிலே தராமல் அந்தத் தொகையை அவர்கள் வைத்திருந்த காரணத்தினால் வட்டித் தொகையையும் சேர்த்து மொத்தமாக 46.41 கோடியை மத்திய அரசு தமிழக அரசிற்கு ராயல்ட்டியாகத் தரவேண்டும் என்றும் அந்த வகையிலே மத்திய அரசை வற்புறுத்தலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டு, மத்திய அரசிடத்திலே அது குறித்துக் கூறப்பட்டிருக்கின்றது. இந்த 46.41 கோடி ரூபாய் அன்னியில் இதுவரை பழுப்பு நிலக்கரிக்கு ராயல்ட்டி விதிக்காமல் இருந்ததை மைய அரசுக்கு நாம் சுட்டிக்காட்டி இருக்கிறோம். அப்போது, ஏற்கனவே அந்தக் காலத்தில் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் வந்தபோது இலாபத்திலே பங்கு என்றுதான் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அதனால் அவர்கள் இலாபத்தைக் காட்டாமலே இருந்துவிட்டார்களோ, அல்லது இலாபமே





வரவில்லையோ நமக்குத் தெரியாது. இப்போது அந்த ராயல்ட்டி பிரச்சினையில் பழுப்பு நிலக்கரி டன் ஒன்றுக்கு 2 ரூபாய் 50 காசு என்று ராயல்ட்டி தருவதற்கு மைய அரசு இசைவு அளித்துள்ளது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

(9–20 மணி)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நெய்வேலியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்ற அந்த ராயலிட்டி தொடர்பாக சற்று கிளையாக போகிற இன்னொரு கேள்வி. அதைப் போலவே அடியக்காமங்கலம், நரிமணம் போன்ற பகுதிகளில் எல்லாம் தஞ்சாவூர் மாவட்டத்தில் எடுக்கப்படுகின்ற அந்த குருட் ஆயில் என்று சொல்கிற கச்சா எண்ணெய்க்கு— இப்போதைய பிரதமர் அசாமில் ஒரு பேரலுக்கு இதுவரை 192 ரூபாய் என்று கொடுத்துக் கொண்டு இருந்ததை 100 ரூபாய் கூட்டி ரூ. 292 ஆக அறிவித்து இருக்கிறார்கள். அதைப் போல நமக்கும் இங்கு இருந்து எடுக்கின்ற கச்சா எண்ணெய்க்கு ராயல்ட்டி பெறுகின்ற ஏற்பாடுகள் இருக்கிறதா ? அரசு ஏதாவது பெற்று இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலிக்கே ராயல்ட்டி வேண்டும் என்று வற்புறுத்திய இந்த அரசு நரிமணத்தை விட்டுவிடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் ஏரலுக்கு அடியில் சேது வாய்க்கால் என்ற கிராமத்தில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பாக பெட்ரோல் ஊற்று இருப்பதாக மத்திய அரசு மூலமாக ஆய்வு செய்து கண்டு பிடிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. கடந்த 15 தினங்களுக்கு முன்பாக அந்தக் கிராமத்திலே கிணறு தோண்டும்போது மீண்டும் அங்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழுப்பு நிலக்கரியிலிருந்தா Petrol எடுக்கிறார்கள் ? இந்த வினாவில் அந்த வினாவை எழுப்பக்கூடாது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் நெய்வேலி பகுதியில் அதையொட்டி இருக்கின்ற திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த ஜெயங்கொண்டம் பகுதியிலே இந்த மாதிரி பழுப்பு நிலக்கரி படிவங்கள் ஏராளமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டதாக செய்தி வந்து இருக்கிறது. 3-வது அனல் மின்சார

திட்டம் தொடங்குகிறபோது அந்தப் பகுதியில் தொடங்குவதாக ஒரு ஏற்பாடு இருப்பதாக அறிகிறோம். அதையொட்டி தமிழக அரசினால் பழுப்பு நிலக்கரியை வைத்து நாம் தனியாக நம்முடைய மின்சார இலாக்கா மூலம் மின்சார உற்பத்தி செய்வதற்கு பழுப்பு நிலக்கரியைப் பெறுவதற்கு ஏற்பாடு ஆகியிருக்கிறது என்று விளம்பரப்படுத்தப்பட்டது. அது எந்த நிலைமையில் உள்ளது? 3-வது அனல் மின்சார நிலையம் வருவதற்கு நம்முடைய தமிழக அரசு முயற்சி எடுத்து வருகிறதா? அதற்கு ஏற்பாடு ஏதாவது இருக்கிறதா? சமீபத்தில் நெய்வேலியிலிருந்து வெளியேற்றப்படுகின்ற தண்ணீரைப் பருகியதால் அந்தப் பகுதியில் இருக்கின்ற கிராம மக்கள் வயிற்றுப் போக்கு நோயினால் அவதிப்படுகிறார்கள். இது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது தகவல் வந்து இருக்கிறதா? அதைத் தடுப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறையக் கேள்விகளை அடுக்கி ஒரு கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். இருந்தாலும், அவருடைய கேள்வியின் முதல் பகுதிக்கு விளக்கம், வரகூர் ஜெயங்கொண்டம் பகுதிகளில் பழுப்பு நிலக்கரி படிவங்களுக்கான துரப்பண ஆய்வுகள் மைய அரசின் கனிம அமைப்புகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ந்து மூன்றாவது நிலக்கரிச் சுரங்கம் வருவதற்கான வாய்ப்புகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மூன்றாவது சுரங்கத் திட்டம் மைய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. என்றாலும் கூட, ஒப்புதலை எதிர்நோக்கி முன்னோடி நடவடிக்கையாக தென் ஆற்காடு மாவட்டத்தில் சுமார் 37 கிராமங்களில் உள்ள 11,410 எக்டேர் நிலங்களைக் கையகப்படுத்தி அந்த நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்காக அரசின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல் கட்டமாக 1,385 எக்டேர் நிலங்களைக் கையகப்படுத்தி ஒப்படைக்குமாறு அந்த நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கோரிக்கையை அடுத்து மேற்படி நிலங்களைக் கையகப்படுத்தத் தேவையான சிறப்பு நில எடுப்புப் பணியாளர்களை நியமனம் செய்யக்கோரும் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இப்போது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றிக் கூறினார்கள். அது குறித்தும் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**மதுரை, திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளுக்கு விடுதிகள்.**

*** 4057. திரு. ஆ. அறிவழகன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளுக்கு விடுதி வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்விடங்களில் விடுதி வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுரை சட்டக் கல்லூரிக்கென 40 மாணவர் மற்றும் 12 மாணவியர் தங்குவதற்கேற்ப அரசு விடுதி கட்டடங்கள் கட்டப்பட்டு 1986 முதல் விடுதிகள் நடைபெற்று வருகின்றன. திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளுக்கு சொந்த விடுதி கட்டடம்இல்லை. திருச்சி சட்டக் கல்லூரி மற்றும் விடுதி கட்ட பாரதிதாசன் பல்கலைக் கழகம் நிலம் வழங்க முன்வந்துள்ளது. கோவைசட்டக் கல்லூரிக்கென சொந்த விடுதிக் கட்டடம் கட்டுவதற்குரூ. 11 இலட்சம் அரசு அனுமதித்து உள்ளது. கோவையில் பாரதியார் பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான நிலத்தில், சட்டக் கல்லூரிக்கென அப்பல்கலைக் கழகம் கொடுத்துள்ள நிலத்தில், விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு தலைமைப் பொறியாளரல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(9—25 மணி)

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் சிரமத்தை எண்ணி அரசு விடுதி கட்டுவதற்கு இசைந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(விடை : இல்லை.)

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையை அடுத்து இருக்கின்ற திருநெல்வேலியில் பொறியியல் கல்லூரி, இந்திய மருத்துவக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே நீண்ட நாள் கோரிக்கையாக, சட்டக் கல்லூரி துவங்க வேண்டுமென்று பொது மக்கள் விரும்புகிறார்கள். அதைத் துவங்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தோற்றுவிக்கப்பட்ட சட்டக் கல்லூரிகளுக்கு இன்னும் போதுமான கட்டிடங்கள் உருவாக்கப்பட முடியவில்லை. அவை நிறைவேறியதைத் தொடர்ந்து அல்லது பெருமளவுக்கு நிறைவேறக்கூடிய நிலையைத் தொடர்ந்து, நிதி வசதியைப் பொறுத்துத்தான் மேலும் சட்டக் கல்லூரியை உருவாக்குவது பற்றி எண்ண முடியும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலே சித்த மருத்துவக் கல்லூரி கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அந்தக் கல்லூரிக்கு கட்டிடம் கிடையாது. கல்லூரி மாணவர்களுக்கு விடுதியும் கிடையாது. பல இடங்களில் தங்கி....(மணி அடிக்கப் பெற்றது.)

திரு. சு. குருசாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மதுரை சட்டக் கல்லூரியில் ஒதுக்கப்பட்டுள்ள அறைகள் அங்கே படிக்கின்ற மாணவர்களுக்குப் போதாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த அறைகளை அதிகப்படுத்தி கொடுக்கின்ற முயற்சி அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இருக்கின்ற அறையை அதிகப்படுத்துவது, விரிவுபடுத்துவது அவ்வளவு எளிதல்ல. புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு பெரிய திட்டம், 92 இலட்சம் ரூபாய் அளவுக்குப் போடப்பட்டு, அந்த நிதியை வருங்காலத்தில்தான் தேட வேண்டி இருக்கிற காரணத்தால் அதற்குரிய நிதி கிடைக்கிறபோது பணி தொடங்கப்படும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் சட்டக் கல்லூரி ஆரம்பித்ததிலிருந்து தொடர்ச்சியாக இதே மன்றத்திலே பல வருடங்களாக அந்தக் கல்லூரிக்குச் சொந்தமாக வகுப்பறைகள், காரியாலயங்கள் போன்றவற்றிற்கான கட்டிடங்கள் கட்டப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டே வந்திருக்கிறேன். இப்பொழுதுதான் அதற்கு ஒரு முடிவு வருவது மாதிரி தெரிகிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும்படியான பதிலில், விடுதிகள் கட்டுவதற்கு ஏற்பாடு ஆகியிருக்கிறது என்பது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. வாடகைக் கட்டிடத்திலே இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிற அந்தக் கல்லூரிக்கு, வகுப்பறைகளுக்கும், காரியாலயங்களுக்கும் தேவையான சொந்தக் கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்து தருமா என்று கேட்க விரும்புகிறேன்.





மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவை சட்டக் கல்லூரிக்குச் சொந்தமான கட்டிடங்கள் இல்லாமல் வாடகைக் கட்டிடத்தில் இருக்கிற காரணத்தால் கல்லூரிக் கட்டிடமும், விடுதிக் கட்டிடமும், சேர்த்துக் கட்டுவதற்கு அங்கேயுள்ள பாரதியார் பல்கலைக் கழகத்திலே யிருந்து நிலம் கேட்கப்பட்டு 20 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து இத்துறைக்கு அந்தப் பல்கலைக் கழகம் வழங்க இசைந்து இருக்கிறது. அந்த இடத்தைப் பெறுவதற்கான நடவடிக்கையும் அதைத் தொடர்ந்து கட்டிடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகளும் உருவாகும்; ஆனால் படிப்படியாகத்தான் உருவாக்க முடியும்.

திரு. ஆர். அண்ணா நம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பொதுவாக பள்ளிக்கூடங்களிலே குழந்தைகள் படிக்க முடியவில்லை. பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்க்க வேண்டிய நிலையிலே இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில்....(மணியடிக்கப் பெற்றது.)

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் முத்தையா பிள்ளை மகளிர் கல்லூரிக்குச் சுற்று சுவர்இல்லாத காரணத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பை அரசு அறியுமா ? (மணியடிக்கப் பெற்றது).

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரிகளிலே நிரந்தரமான காலியிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிகின்ற ஆசிரியர்களை நிரந்தரப் படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது நிரந்தரமான ஒப்பந்த அடிப்படை இடம். ஆகவே அதை முழு நேரப் பணியாக அல்லது முழு நேர அலுவலாக மாற்றுவது தனி ஆலோசனைக்கு உரியது. அது உடனடியாக ஏற்கப்பட முடியாது.

## கல்லூரிகளில் பட்டப்படிப்பில் மாணவர்கள் எண்ணிக்கை.

*6739. திரு. எம். மோசஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு கல்லூரிகளில் பட்டப் படிப்பில் வரலாறு, பொருளியல், தமிழ் போன்ற பிரிவுகளில் சேர்ந்துள்ள மாணவர்கள் எண்ணிக்கை மிக மிகக் குறைந்திருப்பதை அரசு அறியுமா?

(ஆ) வேலை வாய்ப்பை பெருமளவில் அளிக்கும் பாடங்களைக் கல்லூரிகளில் கற்பித்துத் தரும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வேலை வாய்ப்பை பெருமளவில் அளிக்கக்கூடிய புதிய பாடங்களைத் துவக்க முன்பே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(9—30 மணி)

**திரு. மா. சுந்தரதாஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் தமிழ், ஹிஸ்டரி போன்ற சப்ஜெக்ட்டுகள் எடுக்கப் படுவதாகத் தெரிகின்றது. அவற்றில் மாணவர்கள் அதிகமாகச் சேரவில்லையென்ற காரணத்தால் அந்த இரண்டு சப்ஜெக்ட்டுகளை எடுக்கப் போவதாகத் தெரிகிறது. அப்படியானால், அங்கே இருக்கிற ஆசிரியர்களின் எண்ணிக்கை குறையும். வேலை வாய்ப்பு இழக்கப்படும், குறையும். ஆகவே, ஹிஸ்டரி, தமிழ் போன்றவற்றை மீண்டும் கல்லூரிகளில் துவங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கேள்வி இரண்டு கண்ணோட்டத்தில் கேட்கப்பட்டிருக்கிறது. ஒன்று, இருக்கிற தமிழ், வரலாறு பொருளியல் போன்ற பாடங்கள் எடுக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். எடுக்கப் பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல. ஆனால் மாணவர்கள் அந்தப் பாடங்களை எடுக்கா விட்டால் அரசாங்கம் எடுத்து விடும். மாணவர்களே வராவிட்டால் அந்த வகுப்புகளை நடத்துவதில் பொருள் இருக்காது. மற்றொன்று, ஏற்கெனவே அரசாங்கம் ஆர்ட்ஸ் சப்ஜெக்ட்டுகளை இனி அதிகமாக தொடங்கத் தேவையில்லை என்று முடிவு செய்திருக்கிறது. இந்த அரசு அப்படி ஒரு கட்டாயமான முடிவில் இல்லை. ஆனால் எதுவும் தொடங்குகிற நிலைமையும் இல்லை.

**திரு: ப. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கல்லூரிகளில் வரலாறு போன்ற பல பாடங்களிலும் படித்துப் பட்டம் பெற்று விட்டு அதன் பிறகு பி.டி. ஆசிரியர் பயிற்சி படித்து விட்டு, ஆயிரக்கணக்கான பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் படித்து 10 ஆண்டுகளாகியும் கூட தமிழகத்தில் 100 பேருக்குத்தான் வேலை வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. அப்படி இதுவரையில் படித்திருப்பவர்களுக்கு, ஒப்பந்த அடிப்படையிலாவது, வேலை வாய்ப்புக் கொடுத்து, மேற்கொண்டு ஆசிரியர் பயிற்சியையே கூட சில நாட்களுக்கு நிறுத்தி வைத்து ஒரு நிரந்தரப் பரிகாரம் காண அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஆசிரியர் பயிற்சி என்பது சமுதாயத்தினுடைய தேவையையொட்டி, அளவு வரையறுக்கப்பட்டு, நடைபெற்று வந்து கொண்டிருந்த ஒன்று. கடந்த சில ஆண்டுகளாக இந்த ஆசிரியர் பயிற்சி தனியார் தொழிலாக, மாற்றப்பட்டு, பல இடங்களில் முறையான அனுமதியில்லாமல், கல்வி நிலையங்களைத் தோற்றுவிக்க அனுமதி பெறாமல், unrecognised Institute ஆக நடைபெற்று வருகின்றன. அதனால் ஏற்படுகின்ற குறைபாடு ஒரு பக்கம். அதன் காரணமாகவும் அரசாங்கத்தில் இடைக்காலத்தில் தகுந்த கண்ணோட்டம் இல்லாததால், ஏராளமான மாணவர்கள் செகண்டரி கிரேடு டிரெயினிங் பெறுகிற முறையில், மேல்நிலைப் பள்ளி அளவில் தொடங்கப்பட்டு, வகுப்புகளில் இருந்து ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 15 ஆயிரம் பேர் வெளிவந்து வேலையில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்பதன் காரணமாக, இந்த ஆண்டு அந்தப் பயிற்சியும் நிறுத்தப்பட்டிருக்கிறது. தனியார் பயிற்சிப் பள்ளிகள் முறைப் படுத்தப்படுவதற்கு சில வழிமுறைகள் நாடப்பட்டிருக்கின்றன. பி.டி. படிக்கின்ற அந்தப் பயிற்சி, அரசாங்கக் கல்லூரிகளில் மட்டும் வழங்கப்படுகின்றது. ஏற்கெனவே தனியார் கல்லூரிகள், அரசாங்க அனுமதி பெற்று இந்தப் பயிற்சியை வழங்கியிருக்கின்றன. ஆனால் அவர்கள் சொல்வது போல, ஆயிரக் கணக்கானவர்கள் இல்லையென்றாலும் கூட, வேலை இல்லாத நிலைமை, படித்த பாடத்தைப் பொறுத்து ஏற்பட்டிருக்கின்றன. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஈடு செய்வதற்காக அதிகத் தேவை இல்லாதப் பாடங்கள், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தொடங்குவது இயலாத காரியம்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கல்லூரிகளில் சேர்ந்து படிக்க விண்ணப்பங்களை அனுப்பும் போது, பல மாணவர்களுக்கு இடம் கிடைக்காத சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 20 சதவீத அளவுக்கு வகுப்புகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு கல்லூரி முதல்வர்களுக்கு அனுமதி வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவரவர்களே, அரசு வேலை வாய்ப்பாக இருந்தாலும் கல்லூரிகள், பள்ளிகளில் இடம் வழங்குவதாக இருந்தாலும், அரசாங்கத்தால், ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற வகுப்புரிமை அடிப்படையில், Most Backward, Backward, General Pool, Scheduled Caste and Scheduled Tribe

டி 2 ஏ 53-367—3

என்றஅந்த அடிப்படையில் உள்ள விகிதாச்சாரத்தின்படி, அவர்கள் விண்ணப்பங்களை அனுப்பியிருப்பார்களேயானால், கட்டாயம் இடம் தரப்பட வேண்டும். அந்த உரிமைகள் பாதுகாக்கப்பட அரசு உரிய ஆணைகளை ஏற்கெனவே பிறப்பித்திருக்கிறது.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, வேலைவாய்ப்பை அதிகப்படுத்தக்கூடிய பாடங்களைச் சேர்க்கும் முயற்சி இருக்கிறது என்று சொன்னார்கள். அதே நேரத்தில், வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய தொழில் கல்விப் பாடங்களை தனியார் கல்லூரிகளில் சேர்ந்து படித்து சென்ற ஆண்டு தேர்வுக்கும் அவர்கள் அனுமதிக்கப்பட்டு, தேர்வும் எழுதிய மாணவர்களின் தேர்வு முடிவுகள் வெளியிடப்படாமல் இருக்கிறதே, அதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே, அப்படிப் படித்த மாணவர்களின் எதிர்கால நிலைமையைக் கருதி, அந்தத் தேர்வுகளின் முடிவை அரசு வெளியிட சரியான நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-35 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சித் தேர்வு எழுதிய மாணவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். ஆசிரியர் பயிற்சித்தான் தாங்கள் குறிப்பிடுவதாக இருக்க வேண்டும், அவர்களுக்கு உரிய தேர்வுத் தகுதிகள் அறிவிக்கப்பட வேண்டுமென்று ஏற்கெனவே அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. ஏறத்தாழ பெரும்பகுதி தெரிவிக்கப்பட்டிருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். வேறு தொழில் துறையில் எந்தத் தேர்வுக்காகவது இது வரையில் முடிவு அறிவிக்கப்படாமல் இருக்குமேயானால் நீதிமன்றத்தில் உத்தரவுகள் காரணமாக இருக்கக் கூடும். அதாவது தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும். முடிவுகளை அறிவிக்கத் தேவையில்லை, நீதிமன்ற தீர்ப்பு வந்ததற்குப் பின்னால் முடிவுகளை அறிவிக்கலாம் என்ற இடையிலே ஒன்றிரண்டு உத்தரவுகள் இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். நீதிமன்றத் தீர்ப்புக்காக ஒரு வேளை காத்திருக்கக் கூடும்; இல்லை என்றால் அரசு அறிவிக்கும்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பை அதிகம் அளிக்கக்கூடிய பாடத்திட்டங்கள் சேர்க்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். கடந்த கால மத்திய அரசு, கையாலாகாத மெக்காலே கொள்கையைப் கைவிட்டுவிட்டு காலத்திற்கு ஏற்ற புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்திருக்கிறது. இந்த மக்கள் அதைவரவேற்று இருக்கிறார்





கள். அதிலும் நவோதயா பள்ளி இன்றைக்கு வரவேண்டும் என்றும் இந்த மாநில மக்கள் விரும்புகிறார்கள். அதனால் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதிலும் மைய அரசிடம் தேசிய முன்னணியிலும் அங்கம் பெற்றிருக்கின்ற அரசு இதை ஏற்குமா என்று உங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு புதிய கொள்கையாக இருந்தாலும் அல்லது ஏற்கனவே உள்ள கொள்கையை மாற்றுவதாக இருந்தாலும் கல்வித்துறையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு நிதியை ஒதுக்கிவிட்டுத்தான் கொள்கையைப் பற்றிப் பேச வேண்டும். நல்ல வேளையாக மத்திய அரசு ஏற்கெனவே Operation Blackboard என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தபோது ஒரு குறிப்பிட்ட நிதியை ஒதுக்கி இருந்தது, அதில் தமிழக அரசு முழு அளவுக்கு மத்திய அரசினுடைய உதவியை பெற்று ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் ஓரளவுக்குப் பரவலாக நன்மை கிடைக்கக் கூடிய முறையில் பயன்படுத்தி இருக்கிறது. மக்களுக்குப் பயன்படக் கூடிய திட்டங்களுக்கு உதவியும் கிடைக்கிறபோது அதை முழு வேகத்தில் தமிழக அரசு செய்து பழக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு பள்ளிக்கூடத்திற்கு 50, 60 கோடியிலிருந்து 100 கோடி ரூபாய் வரை செலவிடக் கூடிய அளவுக்கு மாவட்டத்தில் ஒரு இடத்தில் நவோதயா பள்ளி வருவது என்பது மற்ற பள்ளிக்கூடங்களை எல்லாம் மூடிவிடக் கூடிய அளவுக்கு ஒரு தவறான கண்ணோட்டத்தை உருவாக்கக் கூடிய ஒன்று, அது நடைமுறை சாத்தியத்தில் நமக்கு நல்லதல்ல, நாட்டுக்கும் நல்லதல்ல.

சென்னையில் பேருந்து நிறுத்தங்கள்.

*2096. திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் பல இடங்களில் பேருந்து நிறுத்தம் இல்லாமல் இருப்பதையும், பேருந்துகள் பேருந்து நிறுத்தத்தில் நிற்காமல் இருப்பதையும், பேருந்து நிறுத்தங்களில் நிற்கும் பேருந்துகளின் எண்கள் இல்லாமல் இருப்பதையும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மூ. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அறியும்.

(ஆ) பேருந்து நிறுத்தம் பற்றிய விவரங்களைக் குறிக்கும் தகடுகளை நிறுவவும், தடம் எண்களைப் பற்றிய விவரங்களைக் குறிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பேருந்துகள் நின்று செல்லாததைக் கண்காணித்து நிறுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் பேருந்து நிறுத்தத்தில் நிற்காமல் சாலையின் மையப் பகுதியில் நிறுத்தப்படுகிறது. அதனால் பல விபத்துகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றைத் தவிர்ப்பதற்கு அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தப் புகார் அரசினுடைய கவனத்திற்கு வந்ததற்குப் பிறகு பல்லவன் போக்குவரத்துக் கழக அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கி எல்லா நிறுத்தங்களிலும் உரிய இடங்களில்தான் பேருந்துகள் நிறுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணித்து, அப்படி நிறுத்தாமல் நடு ரோட்டில் நிறுத்தப்படுகிற பேருந்து ஓட்டுநர்களின் மீதும் அல்லது குறிப்பிட்ட நிறுத்தத்தில் நிறுத்தாமல் கொஞ்சதூரம் தள்ளிச் சென்று நிறுத்தக்கூடிய ஓட்டுநர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்பேரில் சில நடவடிக்கைகளும் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் இப்படிப்பட்ட குறை நீக்கப்படும் என்று நம்புகிறேன்.

திரு. மு. க. ஸ்டாலின் : பேரவைத் தலைவர் அவர்களே, பல பேருந்து நிறுத்தங்களில் நிழற்குடைகள் இல்லாமல் இருக்கின்றன. இது குறித்தும் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? எனவே இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில், மொத்தம் 3,131 நிறுத்தங்கள் உள்ளன. அவற்றில் சென்னை மாநகராட்சி எல்லைக்குள் மட்டும் 1,800 நிறுத்தங்கள் உள்ளன. இவற்றில் 833 இடங்களில் மட்டும் நிழற்குடைகள் இப்போது நிறுவப்பட்டுள்ளன. பல இடங்களில் நிழற்குடைகள் நிறுவுவதற்குத் தனியார் நிறுவனங்களும் முன் வந்திருக்கின்றன. மீதி இருக்கின்ற இடங்களில் போக்குவரத்துக் கழகமே நிறுவுவதற்கான ஏற்பாடுகளை எதிர்காலத்தில் செய்யும்.



திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, இந்தப் போக்குவரத்து சம்பந்தப்பட்ட மட்டில்
சென்னை நகரத்திலே காலையில் 8 மணி முதல் 10 மணி வரை,
மாணவர்கள், அலுவலகங்களுக்குச் செல்லக்கூடியவர்கள் செல்லக்
கூடிய நேரமாக இருப்பதன் காரணமாக மிகப் பெரிய நெருக்கடி
ஏற்பட்டு, அதிலே ஏறினால் குழந்தைகளும் மற்றவர்களும்
நசுங்கி மிகப் பெரிய ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை இருக்
கிறது. அந்த மாதிரி மாலை நேரத்திலும் இருக்கிறது. ஆகவே
அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் கூடுதல் பேருந்துகள் காலை 8
மணி முதல் 10 மணி வரையிலும், அதே மாதிரியாக மாலை
யில் 4 மணி முதல் 6 மணி அல்லது 7 மணி வரையிலும் கூடுதல்
பஸ்களை விட இந்த அரசாங்கம் ஏற்பாட்டை செய்து இந்த
நெருக்கடியை ஓரளவுக்காவது குறைக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகத்
தின் சார்பில், 2,300 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல
நெருக்கடியான நேரங்களில் கூடுதலான பேருந்துகள் தற்போதும்
விடப்படுகின்றன. இருந்தாலும் போதுமான அளவுக்கு விட்டும்
சமாளிக்க முடியாத சூழ்நிலை பல இடங்களில் இருப்பது அரசி
னுடைய கவனத்திற்கு வந்துள்ளது. அதைப் போக்குகின்ற வகை
யில், டெல்லி மற்றும் பம்பாய் போன்ற நகரங்களிலே கூட சில
ஏற்பாடுகளை செய்து இருக்கின்றார்கள். பள்ளி நேரங்கள்,
அலுவலகங்களின் நேரங்கள், கல்லூரிகளின் நேரங்கள் ஆகிய நேரங்
களில் அலுவலகப் பணி நேரத்தை மாற்றியமைக்கின்ற காரணத்
தால், இத்தகைய நெருக்கடிகளை டெல்லி போன்ற நகரங்களிலே
தற்போது சமாளித்துக்கொண்டு இருக்கின்றார்கள். அந்தவகை
யிலே சமாளிக்கலாம் என்ற யோசனையைக்கூட பல்லவன் போக்கு
வரத்துக் கழகத்தின் சார்பிலே அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்
கள். அது அரசினுடைய ஆய்வில் இருந்து கொண்டிருக்கின்றது.
இருந்தாலும் கூடுதலான பேருந்துகளை எந்தெந்த வழித்தடங்
களிலேயிருந்து மாற்றி தேவைக்கேற்ப விடமுடியும் என்பதையும்
பல்லவன் போக்குவரத்துக் கழகம் பரிசீலிக்க வேண்டும் என்று
அரசின் சார்பிலே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திருமதி பாப்பா உமாநாத் : நம்முடைய சென்னை மாநக
ரத்தில் 400-லிருந்து 500 பஸ்கள் வரை ஓடாமல் நிறுத்தப்பட்டு
இருப்பதால், போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாக பரவ
லாகப் பேசப்பட்டு வருகிறது. அதைச் சரி செய்வதற்கு அரசு
ஏற்பாடு செய்யுமா? அதேபோன்று பிராட்வே பஸ் நிலையம்
எந்தவித வசதியுமற்ற நிலையில் இருப்பதும் அங்கே பயணி
களுக்கு பாதுகாப்பு இல்லாமலிருப்பதால் பிக்பாக்கெட்காரர்கள்
மொத்தக் குத்தகை எடுத்திருக்கக்கூடிய சூழ்நிலை அங்கே இருப்ப
தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்ப
தையும், அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்
போகிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிராட்வே பஸ் நிலையத்தை ஒழுங்குபடுத்துவதற்கு விரைவிலேயே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பேருந்துகளைப் பொறுத்தவரையில் 2,300 பேருந்துகளில் 'ஸ்பேர் பார்ட்ஸ்' கிடைக்காத சூழ்நிலையில் ஒவ்வொரு டெப்போவிலும் சில பேருந்துகள் இயங்கமுடியாத சூழ்நிலை இருக்கின்றது. அவற்றிற்கெல்லாம் தேவையான உதிரி பாகங்களை வாங்கி அவற்றை இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது, ஓட்டுநர்களும் நடத்துநர்களும் பெருமளவில் ஒரு நான்கைந்து மாத காலத்திற்கு முன்னால் முன் அறிவிப்பு இல்லாமலேயே வேலைக்கு வராமல் இருந்த காரணத்தினால் அப்படிப்பட்டப் பேருந்துகளை சில நேரங்களிலே முழுமையாக இயக்க முடியவில்லை. குறிப்பாக இந்த 1989 ஆம் ஆண்டு மே மாதத்திலே காலை நேரத்திலே 3,324 நடைகளும் மாலையில் 6142 நடைகளும் பேருந்துகள் இயக்க முடியவில்லை. காரணம் டிரைவர்களும் கண்டக்டர்களும் போதுமான அளவுக்கு எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல் வேலைக்கு வராமல் இருந்துவிட்டார்கள்.

9–45 மணி

இதை நிர்வாகம் கவனிக்க வேண்டுமென்று அறிவுறுத்திய பிறகு, இப்போது சில நடவடிக்கைகளை வேகமாக எடுத்ததற்கு பிறகு, பணிக்கு வராமல் இருப்பவர்களுடைய எண்ணிக்கைக் குறைந்திருக்கிறது. அதனால் தடைப்பட்ட நடைகளை இப்போது தொடர்ந்து நடத்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, தற்சமயம் நவம்பர் மாதத்தைப் பொறுத்தவரையில் காலையில் 955 நடைகளும், மாலையில் 2,181 நடைகளும் மட்டுமே செலுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குறைகளையும் கூட இன்னும் இரண்டொரு மாதங்களில் நீக்கிவிட முடியும் என்பதை அரசின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை—வண்டியூர் கண்மாயை சுற்றுலா மையமாக்கல்.

*3330. திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை—வண்டியூர் கண்மாயை அரசு சுற்றுலா மையமாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்



(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், மதுரையிலுள்ள வண்டியூர் கண்மாயில் உணவகம் மற்றும் படகுத்துறை ஆகியவற்றை அமைத்துள்ளது. சிறுவர் இரயில் ஒன்று விடப்பட்டுள்ளது. மத்திய சுற்றுலாத்துறை இங்கு நிரந்தர உணவகம் மற்றும் மேல்நிலைத் தொட்டி அமைக்க ரூ. 7,40,000 ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கு சிறுவர்களுக்கான ரெயில் குறைந்த தூரம் ஓடுகிறது. அதை விரிவுபடுத்த அரசு திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை ஏற்று அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கு சிறுவர்கள் விளையாடுவதற்கான பூங்கா சிறிய அளவே உள்ளது. அதனை விரிவுபடுத்துவதற்கும், சிறிய அளவிலே உள்ள படகுகளை அதிகப்படுத்துவதற்கும் அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவர்களுக்கான விளையாட்டு சாதனங்களை அதிகரிப்பதற்கு திட்டம் இருக்கிறது. ஆனால் படகுகள் விடுவதைப் பொறுத்தவரையில் அங்கே எப்போது தண்ணீர் இருக்கிறதோ அப்போதுதான் படகு விட முடியும். ஏற்கெனவே 7, 8 மாதங்களாக இருக்கின்ற படகுகளே சும்மா இருக்கின்றன. இதற்குமேல் அங்கே படகுகளை அதிகரிக்க திட்டம் இல்லை.

குளித்தலைப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்.

*2638. திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சித் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலைப் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,
(அ) மற்றும் (ஆ) இத்தகைய திட்டம் எதுவும் தற்போது இல்லை.

[1990 சனவரி 19

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை என்பது திருச்சிக்கும் கரூருக்கும் இடையே ஒரு பேரூராட்சியாக இருந்தாலும், அது நகராட்சியாக இருக்க வேண்டிய ஓர் அமைப்பு. அந்த நகரத்திற்கு நீண்ட காலமாக பேருந்து நிலையம் இல்லை. வேறு தனியாரிடத்திலிருந்து வாடகைக்கு எடுத்து அந்த இடத்திலே பேருந்துகளை நிறுத்தும் நிலையும், கழிப்பிட வசதிகூட இல்லாத சீரடைந்த நிலையும் அங்கே இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அங்கே பேருந்துகள் நின்று சென்றுகொண்டிருக்கின்றன. அதனால் மக்கள் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, அங்கே அவசியம் பேருந்து நிலையம் கட்டித்தரப்படுமா? மீண்டும் அதுபற்றி ஆலோசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான பிரேரணை ஏதும் தற்போது இல்லை. இருந்தாலும் பேரூராட்சிக்கு உட்பட்ட வைகைநல்லூரில் சர்வே எண். 107/1-ல் அமையப்பட்டுள்ள தற்போதைய தற்காலிக பேருந்து நிலையத்திற்கான இடம் அருள்மிகு பேராளம்மன் ஆலய நிர்வாகத்திடம் இருக்கிறது. பொதுவாக ஒரு கொள்கை அளவில் கோயில் நிலங்களை வேறு எதற்கும் மாற்றுவதற்கில்லை என்று தற்போது இருப்பதை மாற்றி அதற்கான மேல் நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் முயற்சித்துக் கொண்டிருக்கிறார். அது முடிவுற்ற பிறகு இத்திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை பேரூராட்சியிலே சுற்றுப்புறத்தில் இருக்கிற படுகைகள் நஞ்சை நிலங்களாக இருப்பதால், கோயில் நிலங்களைத் தவிர வேறு வசதிகள் அங்கே இல்லாத பேராளம்மன் கோயில் நிலமாக இருந்தாலும் கடம்பர் கோயில் நிலமாக இருந்தாலும் இந்த நிலங்கள் எல்லாம் பஞ்சாயத்தில் இருக்கின்றன. இந்த இடத்தில் நில ஆர்ஜிதம் செய்து எப்படியாவது அதனை கட்டித்தர அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

### மதுரையில் சுரங்கப்பாதை அமைத்தல்.

*3202. திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

**(அ) மதுரை நகரில் கட்டபொம்மன் சிலை அருகே சுரங்கப் பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?**

**(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?**



1990 சனவரி 19]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை,

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

9.50 மணி

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மதுரை மாவட்ட ஆட்சித்தலைவரவர்கள் உலக வங்கி நிதி உதவியுடன் பூங்கா, ரோடுகள், பயணியர்கள் தங்கும் விடுதி, மதுரை சாலையில் இரயில்வே மேம்பாலத்தைப் பல அடுக்கு மேம்பாலமாகக் கட்டுவதற்கான திட்டம் உள்ளது என்று அறிவித்து இருக்கின்றார். எனவே இந்தச் சுரங்கப்பாதை அமைக்கும் பணியை அந்தத் திட்டத்துடன் சேர்த்துத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வினாவுக்குரிய இடம் மதுரை மாநகரத்தில் பாதசாரிகள் போகிற சுரங்கப்பாதை எதுவும் இல்லாது இருந்தாலும் மதுரை மாநகரத்தில் கட்டபொம்மன் சிலை அருகில் அதாவது பெரியார் பேருந்து நிலையத்திற்கும் புதிய பேருந்து நிலையத்திற்கும் இடையே சுரங்கப்பாதை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் அருகிலுள்ள இரயில்வே மேம்பாலம் உலக வங்கித் திட்டத்தின் கீழ் பெருவழித்துறையால் விரிவுபடுத்தப்பட உள்ளது. அவ்வேலை முடிந்தவுடன்தான் சுரங்கப்பாதை அமைப்பது பற்றி பரிசீலனை செய்ய முடியும். அதற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மதுரை மாநகராட்சியாக இருப்பதால் அங்கு வந்து செல்கின்ற மக்கள் அதாவது 'ஃபுளோட்டிங் பாப்புலேஷன்' என்று சொல்கின்ற மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கின்றது. எனவே கட்டபொம்மன் சிலை அருகில் போக்குவரத்துக்கு அதிக இடைஞ்சலாக இருப்பதால் அந்த இடத்தில் சுரங்கப்பாதை கட்டுவதற்கு அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவல்துறையினர் அதை மிக நுண்ணியமாகக் கவனித்து வருகிறார்கள். போக்குவரத்து நெரிசலைத் தடுக்க அவ்வப்போது நடவடிக்கை எடுத்துத் தடுத்து வருகிறார்கள். இருப்பினும் மேம்பாலம் கட்டும் முயற்சி முடிவுற்று அந்த வேலை முடிந்ததற்குப் பிறகுதான் அந்தப் பணியை துவக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மதுரைக்கு அண்மையில் வந்திருந்தார்கள். மதுரையில் ஜனநெருக்கம் அதிகமான காரணத்தினால் நான் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்ததைப்போல் கோரிப்பாளையம் தேவர் சிலை அருகிலும், இரயில்வே ஸ்டேஷன் டவுன் ஹால் ரோடு சந்திப்பிலும், செயிண்ட் மேரீஸ் கீழவெளிப் பகுதியிலும், யானைக்கால் பகுதியிலும் சுரங்கப்பாதை அமைக்க வேண்டும் என்பது அவசியம் என்றே தெரிகிறது. அதற்கான நடவடிக்கை எடுத்து விரைவில் மேம்பாலம் கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தனிக் கேள்வி போடவும்.

**கிருஷ்ணகிரியில் துணை மின் நிலையம் அமைத்தல்.**

*3502. டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரியில் ஏற்கனவே 33/11 கே. வி. மின்அழுத்தம் உள்ள ஒரு துணை மின் நிலையம் இயங்கி வருகிறது. இத்துணை மின் நிலையத்தை 110/33—11 கே.வி.மின் அழுத்தம் உள்ள துணை மின் நிலையமாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

டாக்டர் க. காஞ்சனா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திடமிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பதில் ஏதேனும் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இத்துணை மின் நிலையம் நிறுவுவதற்கு தர்மபுரி மாவட்டம் எட்டினப்பள்ளி கிராமத்தில்



தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான 6 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. இந்த நிலத்தைக் கையகப் படுத்துவதற்கான வேண்டுகோள் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நேரு அவர்களிடத்தில் மின்துறை இருந்தபோது கடந்த ஏப்ரல் திங்கள் 9ஆம் நாளன்று கிருஷ்ணகிரியில் துணை மின் நிலையம் அமைக்கத் தோதான இடம் வந்து பார்க்கச் சொல்லி, நாங்கள் வேண்டுகோள் விடுக்க, அவர்களும் வந்து பார்த்தார்கள். ஆனால் முழுமையாக எட்டுத் திங்கள் கழிந்து விட்ட நிலையில், மேலும் காலம் தாழ்த்தாமல் கிருஷ்ணகிரியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 8 மாதத்திற்கு முன்னாலே வேண்டுகோள் விட்டாலும் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் துணை மின் நிலையமே 1994—95ஆம் ஆண்டில்தான் நிறுவப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இளம்பிள்ளையில் துணை மின் நிலையம் அமைத்தல்.**

*5300. திரு. பெ. வெங்கடாசலம் :

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், இளம்பிள்ளையில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை தொடங்கப்பெறும்?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1994—95 ஆம் ஆண்டு இந்தப் பணியைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

[1990 சனவரி 1

9.55 மணி

திரு. பெ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, இந்த இளம்பிள்ளைப் பகுதியைச் சுற்றி விவசா கள் இருக்கிற பகுதியாகவும், விசைத்தறியாளர்கள் இருக்கி பகுதியாகவும், மேலும் சிறிய பேக்டரிகள் இருக்கிற பகுதியா வும் இருக்கின்ற காரணத்தினால் இந்தத் துணை மின் நிலைய திட்டத்தை வெகு விரைவில் அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் இளம் பிள்ளையில் 110/22 கே. வி. துணை மின் நிலையம் 8-வது திட்ட காலத்தில் அமைப்பதற்காக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது 8-வது ஐந்தாண்டுத் திட்டம் அடுத்த ஆண்டு தொடங்க இருக் கின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டு கோளை இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. பெ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு இளம்பிள்ளை பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதாக இருந்தது. ஆனால் ஏதோ ஒரு காரணத்தால், அந்தத் துணை மின் நிலையம் அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் உள்ள ல்லசமுத்திரம் என்ற பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும், இப்போது இந்தத் துணை மின் திட்டத்தை உடனடி யாக அமைக்க ஏற்பாடு செய்து கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய வகையில் இருக்கும் என்பதை யும் கருத்தில் கொண்டு, இதனை உடனடியாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசியம் அரசு இதைப் பரி சீலிக்கும்.

### விவசாய விளை பொருள்கள் கொள்முதல்.

*2141. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாய விளைபொருள்களை அரசே ஆதரவு விலை (Support Price) கொடுத்துக் கொள்முதல் செய் வதற்கான திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன?



1990 சனவரி 19]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மாநில அரசின் பரிந்துரையையும் வேளாண்மை விளை பொருள் விலை நிர்ணயக் குழுவின் பரிந்துரையையும் கருத்திற்கொண்டு, வேளாண்மை விளை பொருட்களுக்கு ஆண்டு தோறும் மைய அரசுதான் விலை நிர்ணயம் செய்கிறது. மைய அரசு நிர்ணயிக்கும் விலைக்கு மேல், விலை நிர்ணயம் செய்ய மாநில அரசுக்கு உரிமை கிடையாது. இருப்பினும் விவசாயி களின் நலனைக் கருத்திற் கொண்டு மாநில அரசு ஏகபோக நெல் கொள்முதல் செய்யும் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உற்பத்தி ஊக்கத் தொகை தருகிறது. எனவே, அரசு ஆதரவு விலை (Support Price) கொடுத்து விவசாய விளை பொருட்களை கொள்முதல் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு நெல்லுக்கும் கோதுமைக்கும் மட்டும்தான் ஆதரவு விலை என்கிற நிலை இருந்தது. இப்போது சிறு தானியங்களான கம்பு, கேழ்வரகு, சோளம், மக்காச் சோளம் போன்றவற்றிற்கும் ஆதரவு விலை தருவது என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. இதைப் பொறுத்து, நம்முடைய அரசாங் கத்தின் நிலை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த மத்திய அரசுதான் அந்த விலையை நிர்ணயித்திருக்கிறது. இப்போது அதைப்பற்றி நான் ஒன்றும் பதில் சொல்வதற்கில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆதரவு விலை கொடுத்து அரசாங்கம் இவற்றைக் கொள்முதல் செய்யவில்லை என்றால், விவசாயிகளுக்கு பெருத்த கஷ்டம் ஏற்படும். எனவே ஆதரவு விலை கொடுத்து அனைத்து தானியங்களையும்—விவசாய விளை பொருள்களையும் அரசே கொள்முதல் செய்யும் நிலையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் உற்பத்தி செய்வதற்கு ஆகின்ற செலவையும், ஒரு ஹெக்டேரில் எந்த அளவுக்கு விளைச்சல் ஏற்படுகிறது என்பதையும் கணக்கிட்டு, அதற்கான குழு நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து விலையை நிர்ணயித்திருக்கிறது. அந்த ஆதரவு விலையில்தான் இப்போது

நாம் நெல்லைக் கொள்முதல் செய்கிறோம். இருப்பினும் மேலும் விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்று நம்முடைய மாநில அரசு—அதிலும் குறிப்பாக நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்—ஒரு குவிண்டாலுக்கு ரூ. 35 ஊக்கத்தொகையாகத் தந்து கொள்முதல் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தேங்காய் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படாத வகையில் நாடு முழுவதும் மானியம் வழங்கி வருகிறது. அதைக் கேரள அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டு அங்கே உற்பத்தியாகிற தேங்காய்க்கு அதிக விலை கிடைக்க வழிவகை செய்திருக்கிறது. * * *
இங்கே இருக்கிற தேங்காய் உற்பத்தியாளர்களும் நல்ல விலையைப் பெறுகிற வகையில்...... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வரி குற்றச்சாட்டான வரி. நேரடியாக வினாவுக்கு வரவும்.

திரு. கே. அர்ஜுனன் : தமிழகத் தேங்காய் உற்பத்தியாளர்களும் அதிக விலையைப் பெறுகிற வகையில் அதைப் பயன்படுத்திக் கொண்டு தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரம் இப்போது என்னிடம் இல்லை.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்கிற பஞ்சை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அதிக அளவில் அனுமதித்து இருக்கிறது என்று செய்தித்தாள்கள் மூலம் பார்க்கிறோம். எனவே வெளிநாடுகளில் உள்ள பஞ்சு மார்க்கெட்டில் நம்நாட்டு பஞ்சுக்கு அதிக விலை கிடைக்க மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ள காரணத்தால் விவசாயிகளுக்கு விலை இறக்கம் ஏற்படாமல் தடுக்கவும், பஞ்சுக்கு நல்ல விலை கிடைக்கவும் மத்திய அரசாங்கமே வெளிநாடுகளுக்குப் பஞ்சை ஏற்றுமதி செய்கிற பணியை மேற் கொள்ளுமா? அல்லது, மாநில அரசு முன்வந்து அதை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து, தனிக் கேள்வி போடவும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டம்..

* 6928. டாக்டர் எஸ். சுந்தரராஜ் :
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி டிவிசன் வேளாண்மைத் துறையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் (DPAP) 1988–89 ஆம் ஆண்டு செலவு செய்யாமல் திருப்பி அனுப்பிவிடப்பட்ட பணம் எவ்வளவு?

(ஆ) எதனால் திருப்பி அனுப்பப்பட்டது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இசைவுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சற்று நீட்டிக்கப் பெறுகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, 1988–89 ஆம் ஆண்டு, பரமக்குடி டிவிஷனிலிருந்து கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக என்னிடம் தகவல் இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டம் எப்பொழுதுமே வறட்சியாகத்தான் உள்ளது. வெள்ளம் வந்தால்தான் பயிர் விளையக்கூடிய சூழ்நிலை உள்ளது இது மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களுக்கே நன்கு தெரியும். வெள்ளம் வரவில்லை என்றால் நிரந்தரமாகவே பஞ்ச மாவட்டமாகவே இருக்கிறது. அவ்வாறு இருக்கும் பஞ்ச மாவட்டத்தில், ஐந்து ஒன்றியங்கள் அடங்கிய பரமக்குடி டிவிஷனில் இரண்டு ஒன்றியங்களை மட்டும் எடுத்து, அந்த இரண்டு ஒன்றியங்களில் வேலைக்கு அதிகமாக ஆட்கள் இல்லாததால் அந்தப் பணம் திருப்பி அனுப்பப்பட்டதாக வேளாண்மைத் துறை அலுவலகத்தில் என்னிடம் கூறியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல் இருக்கிறது. அவ்வாறு இருக்கும்பொழுது அந்தப் பணத்தை மக்களுக்குக் குறிப்பிட்ட சமயத்தில் விதை, உரம் போன்றவைகளை வழங்குவதற்கு அதிகமாக ஆட்கள்—அரசு அலுவலர்கள் நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீராண்டி கோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, 1988–89 ஆம் ஆண்டில் பரமக்குடி வோட்டத்திற்கு 1,42,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்தத் தொகையில் 1,41,500 ரூபாய் செலவு செய்யப்பட்டு மீதமுள்ள தொகை நடப்பாண்டில் 1989–90 இல் செலவு செய்யப்பட உள்ளது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : பேரவைத் தலைவரவர்களே, ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதைப் போல. வேலையை மேலே வைத்து, தொகையைக் கீழே கொண்டு செல்லுகின்ற விவசாய அலுவலர்களை நீக்கிவிட்டு, விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு விவசாயப் பல்கலைக் கழகத்திலும், விவசாயத் துறையிலும் முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

அணை கட்டும் திட்டங்கள்.

* 2077. திரு. அ. மாரிமுத்து:
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வானூர் தொகுதியில் கழுவெளி என்றழைக்கும் பகுதியில் புலியங்கால் ஓடையின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கழுவெளி பகுதியில் ஏறக்குறைய 25 ஆண்டுக் காலமாக சுமார் 25,000 ஏக்கர் விளை நிலங்களின், வெள்ளக் காலங்களில் நீர்ப் பிடிப்பினால் பாதிக்கப்பட்டு, அவ்வப்பொழுது இந்தக் கேள்வியை எழுப்புவதும், அரசாங்கத்தினுடைய நிதி நிலைமை மோசமாக இருக்கிறது, பரிசீலிக்கப்படும் என்று பதிலைக் கூறுவதும் தொடர்ந்து வழக்கமாக இருந்து வருகிறது. எனவே, நிரந்தரத் தீர்வு கண்டு அந்தப் பகுதியில் உள்ள விவசாயப் பெருமக்கள் பலன் பெறுகின்ற வகையில் நிரந்தரமான ஒரு பரிகாரத்தை அரசு செய்து தருமா என்று சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தத் துணைக் கேள்வியின் மூலம் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்ததற்காக அரசு இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்கும்.

திரு. அ. மாரிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட செயற் பொறியாளர் அவர்களை அணுகிக் கேட்கின்ற பொழுது அதற்கு விவசாயத் துறை மூலமாக நடவடிக்கை எடுப்பதா அல்லது வனத் துறையின் மூலம் நடவடிக்கை எடுப்பதா அல்லது பொதுப் பணித்துறை மூலமாக நடவடிக்நை எடுப்பதா என்ற ஒரு ஐயப்பாடு எங்களிடையே இருக்கிறது என்று—சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறுகிறார்கள். அதுபற்றிய முழுமையான விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அதைத் நான்—உறுப்பினர் சொன்ன அத்தனையையும் அரசு பரிசீலிக்கும் என்று—சொன்னேன்.

* 2112. திரு. கே. ஆர். ஜி. தனபாலன் :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் காட்டேரியில் வரும் மழை தண்ணீரைத் தேக்கி சிறு அணை கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்பமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இல்லை.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலத்தில் இருக்கின்ற காட்டேரியில் அணை கட்டுவதற்குத் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முந்தைய அரசின் முதல்வராக இருந்த பொழுது நேரில் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். அந்தக் காட்டேரியின் சுற்றுப்புறம் மூன்று புறமும் மலையால் சூழப்பட்டிருக்கிறது. ஒரு புறம் மட்டும் தடுப்புச் சுவர் எழுப்பி காட்டேரியில் அணை கட்டினால் அந்தச் சுற்றுச் சூழ்நிலையில் இருக்கின்ற விவசாயிகளுக்குப் பாசனத்திற்கு நீர் வசதியும், சுற்று வட்டாரத்தில் இருக்கின்ற கிராமங்களுக்குக் குடிநீர் வசதியும் ஏற்படுத்த முடியும். ஆகவே, இந்த அரசு உடனடியாக அந்த இடத்தில் அணையைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10.05 மணி [1990 சனவரி 19

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, எருமைப்பாளையம் கிராமத்தில் காட்டேரி என்ற ஏரி ஒன்று இப்போது நல்ல முறையில் இருக்கிறது. அதிலே தேக்கப்படும் தண்ணீர் அதற்குரிய பாசன நிலங்களுக்குப் பயன்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனை அணையாக மாற்ற வேண்டுமென்று சொல்கிறார். அரசினுடைய நிதி நிலைக்கேற்ப அவருடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. அ. பீட்டர் அல்போன்ஸ்: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா நேரத்தில் Point of order கிடையாது.

பனை ஏறும் தொழிலாளர்களுக்கு அரசின் உதவித் தொகை.

*2318—திரு. மா. சுந்தரதாஸ்:
மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பனை ஏறும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடையும்போது, பிரேதப் பரிசோதனையின்றி அரசின் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பனை மற்றும் தென்னை மரத்திலேறி தொழில் செய்யும்போது தவறி விழுந்து அடிபட்டு மரணமடையும் தொழிலாளரின் குடும்ப வாரிசுதாரருக்கு மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 நிதியுதவியாக வழங்கப்பட்டு வருகிறது. அங்ஙனம் நிதியுதவி கோரும் விண்ணப்பங்களை அனுப்பும்போது, அத்துடன் இறந்தவரின் பிரேதப் பரிசோதனைச் சான்றினையும், ஏனைய சான்றுகளுடன் இணைக்க வேண்டும் என அரசு நிர்ணயித்துள்ளது. விபத்து நிமித்தம் வழங்கப்படும் மேற்படி நிதி வழங்கலில், தவறு நேரா வண்ணம் இருப்பதற்காகவே, அரசு இதனை நிர்ணயித்துள்ளதால், இந்த விதியைத் தளர்த்துவதற்கில்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் ஒரு பகுதி கேரளாவிலும், ஒரு பகுதி தமிழ் நாட்டிலும் இருக்கிறது. கேரளா பகுதியைப் பொறுத்தவரையில் அங்கே தாசில்தார் உடனடியாக வந்து பார்த்து, வில்லேஜ் ஆபீசர் சர்டிபை செய்து, ஊரிலே இருக்கிற இரண்டு பெரியவர்களிடம் சான்றிதழ் வாங்கி, பிரேதப் பரிசோதனை செய்யாமல் பணம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்



1990 சனவரி 19]

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டம், ஆணை இருக்கிற காரணத்தால் அப்படிக் கொடுக்க முடியவில்லை. தாசில்தாரை விட லோக்கல் டாக்டர் பெரியவர் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தல்ல. எனவே, கேரள மாநிலத்தில் செய்வதைப் போல தாசில்தார் உடனடியாக அவரே நேரடியாக வந்து பார்ப்பதைப் போல இங்கும் செய்வதற்கு அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். பனை, தென்னை மரங்களில் ஏறும் தொழிலாளிகள் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள். விபத்து ஏற்படும்போது அவர்களின் குடும்பம் பாதிக்கப்படுகிறது. பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டுமானால் நூற்றுக்கணக்கான ரூபாய் தேவைப்படுகிறது என்பதால் அதை அவர்களால் செய்ய முடிவதில்லை. அதனால் பிரேதப் பரிசோதனை செய்யாமலே அடக்கம் செய்கிறார்கள். ஆகவே இந்த ஆணையைத் தளர்த்தி கேரளாவில் செய்வதைப் போல வில்லேஜ் ஆபீசர், தாசில்தார் நேரடியாக வந்து பார்த்து, இரண்டு பெரியவர்களிடம் சான்றிதழ் வாங்கி நிதியுதவி கொடுக்கிற வழிமுறையை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிரேதப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்று நிதி வழங்குவதில் அரசுக்கும் பாதுகாப்பு இருக்கிறது. அந்த நிதியைப் பெறுகிற பயனாளிகளுக்கும் பாதுகாப்பு இருக்கிறது. எனவே, இந்த விதியைத் தளர்த்துகிற யோசனை அரசுக்கு இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே பிரேதப் பரிசோதனை செய்யாமல் நிதியுதவி கோரி வந்த மனுக்கள் எத்தனை? பிரேதப் பரிசோதனை செய்ததற்குப் பின்னால் வந்துள்ள மனுக்கள் எத்தனை ? கை, கால் முறிந்தவர்களிடமிருந்து வந்த மனுக்கள் எத்தனை ? இவ்வாறு வந்துள்ள பலவித மனுக்களுக்கு பணம் கொடுக்கப்படவில்லை என்ற புகார் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்படி வந்த மனுக்கள் எத்தனை நிலுவையில் இருக்கின்றன ? எவ்வளவு பேர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, இந்தப் பணம் வழங்குவதில் கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தைக் கருத்திற் கொண்டுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதியுதவி வழங்குவதில் காலதாமதம் கூடாது என்று ஏற்கனவே அவர்கள் உத்தரவிட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டவுடன் தொகை வழங்கப்பட்டு வருகிறது. எனவே காலதாமதம் என்பது இந்த அரசிடத்தில் இல்லை. எத்தனை பேர்களுக்குத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்ற பட்டியல் இப்போது என்னிடம் இல்லை. அதற்கான தனி வினாவை எழுப்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[1990 சனவரி 19

மேச்சேரியில் பாய் முடையும் தொழில்.

* 3267—திரு. எம். சிரங்கன் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுகா, மேச்சேரியில் நடைபெற்றுவரும் பாய் முடையும் தொழிலை பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் விதத்தில் கூட்டுறவு முறையின் கீழ் கொண்டுவரும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சிரங்கன் : தலைவர் அவர்களே, மேச்சேரி பகுதியில் பாய் முடையும் தொழில் குடிசைத் தொழில் என்ற அளவில் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசு அதனைக் கூட்டுறவு முறையில் கொண்டு வந்தால் அந்தப்பகுதி மக்களுக்குப் பயனளிப்பதாக இருக்கும். அப்படிப்பட்ட திட்டம் அரசிடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் இதைப் போன்று தொழில் முனைவர்களை ஒன்றுபடுத்திக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் செயல் திட்டம் அரசில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் அந்தப் பகுதியில் குறைந்த பட்சம் 25 பேர்கள். தொழில் திறமை உள்ளவர்களை ஒன்று சேர்த்து சேலம், கதர் மற்றும் கிராமத் தொழில் உதவி இயக்குநர் மூலமாக அந்தச் சங்கத்தைப் பதிவு செய்வார்களானால் அந்தப் பகுதியில் அந்தத் தொழில் தொடங்கும் வாய்ப்பைக் கதர், கிராமத் தொழில் துறை மூலமாக உருவாக்கலாம்.

திரு. எம். சிரங்கன் : தலைவர் அவர்களே, அந்தத் தொழில் வளர்வதற்கு அமைச்சர் அவர்கள் கூறிய விவரங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

(விடை—இல்லை)



1990 சனவரி 19]

கொடைக்கானல் மலைப் பகுதியில் கொத்தடிமை முறை

* 695 திரு. என். பழனிவேல் : :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், கொடைக்கானல் மலைப் பகுதியில் (வட்டத்தில்) இன்னும் கொத்தடிமை முறை நடைமுறையில் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்தில், தற்போது கொத்தடிமை முறை நடைமுறையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

10.10 மணி

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் பகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் கொத்தடிமை முறையால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான குடும்பங்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் அப்போது இருந்த ஒரு உதவி கலெக்டர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அப்போதுஇருந்த அரசு அந்தத் துணை ஆட்சித் தலைவரை வேறு இடத்திற்கு மாற்றி, அந்தக் கொத்தடிமையினருக்குப் பாதகமான நிலையை ஏற்படுத்தினார்கள். நான் சமீபத்திலே கொடைக்கானலுக்குச் சென்றபோது, அந்த கொத்தடிமை முறை மீண்டும் அதே நிலையில்தான் இருந்து கொண்டு இருக்கிறது என்பதைக் கண்டேன். அந்த மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்கள் இதை என்னிடம் ஒரு குறையாகச் சொன்னார்கள். ஆகவே மீண்டும் சம்பந்தப்பட்டத் துறை அதிகாரிகளை அனுப்பியாவது அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, குறிப்பாக எந்தெந்த இடத்திலே அப்படிப்பட்ட கொத்தடிமை முறை இருக்கிறது என்பதை விவரமாக அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால், உடனடியாக

நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே ஒரு அதிகாரி மிகத் தீவிரமாக அந்த முயற்சியிலே இறங்கியதை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபோன்று அத்தகைய கொத்தடிமை முறையை ஒழிக்கின்ற முயற்சியிலே இறங்குகிற எந்த அதிகாரியாக இருந்தாலும், அவர்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள். அதற்கு வாய்ப்பாக எந்த இடத்தில் அந்த முறை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் மாத்திரமல்ல, அவையிலே உள்ள எந்த உறுப்பினரும் அந்த நிலை எங்கிருந்தாலும் அதை அரசுக்குத் தெரிவித்தால், அது அரசு நடவடிக்கை எடுக்க நல்ல வழிவகை வகுப்பதாக இருக்கும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கொத்தடிமைகளுக்கு உதவியாக இருந்த அதிகாரியை அப்போதிருந்த அரசாங்கம் மாற்றியது. இப்போது இருக்கிற அரசாங்கம் அல்ல. ஆகவே இப்போது இருக்கக்கூடிய அரசாங்கம், அத்தகைய அதிகாரிகளை ஊக்கப்படுத்தும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் எந்த எந்த இடத்திலே அந்த மாதிரியான முறைகள் இருக்கின்றன என்ற தெளிவான குறிப்புகள் என்னிடத்திலே இப்போது இல்லை. அதுகுறித்த விவரங்களை நான் முதலமைச்சருக்கே சமர்ப்பிக்கிறேன். அதற்கு முன்பாக அரசும் தன்னுடைய முயற்சியாக முன்முயற்சி எடுத்து, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, அதைக் கவனித்தால், அவர்களுக்கே அந்தத் தகவல் கிடைக்கும் என்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(விடை—இல்லை,)

பேரணாம்பட்டு ஆதி திராவிடர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

*3441. திரு. வெ. கோவிந்தன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பேரணாம்பட்டு ஆதி திராவிடர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடாற்காடு மாவட்டம் பேரணாம்பட்டு ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு நகரைச் சுற்றியுள்ள பெரும்பாலான கிராமங்கள் காலனி வீடுகளைக் கொண்டது. குறிப்பாக ஆதி திராவிட மாணவர்கள் எட்டாவது வகுப்பு வரை படித்துவிட்டு, மேற்கொண்டு படிக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அதைப் போக்க பேரணாம்பட்டில் உள்ள அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக அரசு உயர்த்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் விடுவித்த கேள்வி முறையானதுதான். ஆனால் கடந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள் எல்லாம் சிறப்பிழந்து இருக்கிற ஒரு சூழ்நிலையின் காரணமாக, அந்தப் பள்ளிகள் எல்லாம் பழுது பார்க்கவேண்டிய நிலைமையில் இருப்பதை முன்னிட்டு, பள்ளிகளை எல்லாம் ரிப்பேர் செய்துவிட்டு, மீண்டும் பள்ளிகளை ஆரம்பிக்கவும் அவற்றின் நிலைகளை மேல்நிலைப் படுத்தவும் அரசு முன்வரும் என்பதைத் தெளிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. கோவிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டில் ஆதி திராவிட மாணவர் விடுதி வாடகைக் கட்டிடத்தில் உள்ளது. அதற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் . பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கட்டிடங்களையும் அரசினர் விடுதிகளாகக் கட்டவேண்டும் என்றுதான் அரசு நினைக்கிறது. ஆனால் நிதிநிலை சரியில்லாத சூழ்நிலையின் காரணமாக இந்த அரசினுடைய பரிசீலனையில் அது இல்லை. இந்த ஆண்டு குறிப்பாக 25 புதிய விடுதிகளைக் கட்ட ஆரம்பித்திருக்கிறோம். கூடியமட்டிலும் புதிய விடுதிகளை ஆரம்பிக்க அரசு முனைகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகிரியில் தாலுகா அரசு மருத்துவமனை.

* 575. திரு. ஆர். ஈஸ்வரன் :

மாண்புமிகு மக்கள்நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சிவகிரியில் தாலுகா அரசு மருத்துவமனை ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் சிவகிரியில் தாலுகா அந்தஸ்துள்ள மருத்துவமனை நிறுவ செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

10.15 மணி [1990 சனவரி 19

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகிரி ஒரு தாலுக்காவாக இருக்கிறது. சுமார் 30,000 ஜனத்தொகை உள்ள இடம். அருகாமையில் 10, 15 கிராமத்து மக்கள் அந்தத் தாலுக்காவிற்கு வரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே சிவகிரியில் தாலுக்கா அரசு மருத்துவமனை வருவதற்காக நான் ஏற்கெனவே அமைச்சர் அவர்களுக்கு மனுச்செய்திருக்கிறேன். அந்தத்தாலுக்கா மருத்துவமனையில் அனைத்து மருத்துவப் பிரிவுகளும் இருக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து மனுச் செய்திருக்கிறேன். ஆனால் அமைச்சரவர்கள் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லையென்று சொல்கிறார்கள். ஆகவே வருகிற நிதியாண்டிலாவது சிவகிரி தாலுக்காவில் ஒரு அரசு மருத்துவ மனையை அனைத்து மருத்துவப் பிரிவுகளையும் கொண்டதாக ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு நிதிநிலையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மிக்க நன்றி.

(விடை—இல்லை.)

### இராசபாளையம் நகருக்குக் குடிநீர் வசதி.

* 3114. திரு. வி. பி. இராசன் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராசபாளையம் நகரில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது நிறைவு பெறும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ). ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 57 லிட்டர் வீதம் குடிநீர் விநியோகிக்க வகை செய்யப்பட்ட ஒரு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்த பின் செயலாக்கத்திற்கு எடுக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி திட்டத்தின் உத்தேச மதிப்பீடுகள் இறுதியாக்குதல் ...ர்ச் 1990-ல் முடிவடையும்.



1990 சனவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்.

### (அ) தஞ்சை மாவட்டத்திலுள்ள கரும்புப் பண்ணைக் கழக நிலங்களை நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்குவது குறித்து.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மூலமாக அமைச்சருடைய கவனத்திற்கு இந்த விஷயத்தைக் கொண்டு வர விரும்புகிறேன். தஞ்சாவூர் மாவட்டம் வடபாதிமங்கலத்திலிருந்த கரும்புப் பண்ணை கலைக்கப்பட்டதனால் உள்ள நிலத்தை வினியோகிப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கையில் தலா ஒரு நபருக்கு 3/4 ஏக்கர் வீதம் அந்த நிலத்தை வினியோகிக்கலாம் என்று அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சர்வோதயத் தலைவர் திரு. ஜகன்னாதன் அவர்கள் கடந்த மூன்று நாட்களாக அதை உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ், அந்த விதியின் கீழ் $1\frac{1}{2}$ ஏக்கர் வழங்க வேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்து வருகிறார். அந்த நிலத்தைப் பெறக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் இரு தரப்பட்ட நிலை இருக்கிறது. ஒரே ஊரில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களாக இருந்தாலும், ஒரு சாரார் நிரந்தரமாக அந்தக் கரும்புப் பண்ணைக் கழகத்திலே பணியாற்றிய விவசாயத் தொழிலாளர்கள். இன்னொரு சாரார் அந்தக் கரும்புப் பண்ணைக் கழகத்திற்கு வெளியிலிருந்த தொழிலாளர்கள். அந்த இரு சாராரும் அந்த நிலத்தைப் பெறும்பொழுது அவர்களுக்குச் சமமாக 3/4 ஏக்கர் வீதம் பெறும்பொழுது, நிரந்தரமாக இருந்தவர்களுக்கு நிலம் கொஞ்சம் கூடுதலாகக் கிடைக்கலாமே என்ற ஒரு ஆதங்கம் இருக்கிறது. அந்த ஆதங்கத்தை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். எனவே அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய மனக் குறையை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதை இரு சாரார்களுக்கும் ஒரே மாதிரி இல்லாமல், அதிலே வேறுபாடு செய்து, நிரந்தரமாக இருந்தவர்களுக்கும், வெளியிலே இருந்தவர்களுக்கும் வித்தியாசப்படுத்தி, அந்த நிலங்களை வினியோகிக்கக் கூடிய முறையில் அரசு ஒரு தீர்வு கண்டு, இந்தப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து, ஜகன்னாதன் அவர்களுடைய உண்ணாவிரதத்தை ஒரு முடிவிற்குக் கொண்டு வர அரசு முயற்சி செய்யுமா என உங்களின் மூலமாக முதலமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுகுறித்து ஒரு அறிக்கை கூட இந்த அவையிலே வைக்க வேண்டுமென நான் எண்ணியிருந்தேன். இதற்கிடையே மாண்பு மிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள் இந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கின்ற காரணத்தால் அந்த அறிக்கையில் உள்ள சிறுகுறிப்புகளை மாத்திரம் நான் இங்கே தரவிரும்புகிறேன்.

5–1–1990 ஆம் தேதியிட்ட அரசு அறிவிப்பு எல்லா ஏடு களிலும் வெளிவந்திருப்பதை அவை உறுப்பினர்கள் படித் திருக்கக் கூடும். 5–1–1990-ல் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை யில் தஞ்சை மாவட்டத்தில் தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தை மூடிய பிறகு அதன் வசமுள்ள நிலங்களை நிலமற்ற விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் ரூ. 10,000 என்ற விலையில் விற்பதற்கு முன்பிருந்த அரசு முடிவு செய்திருந்தது. இன்றைய அரசு அந்த முடிவினை மாற்றி மேற்படி நிலங்களை அப்பகுதி யிலுள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கே, நஞ்சை ஏக்கர் சுமார் ரூ. 3,600 எனறும், புஞ்சை ஏக்கர் சுமார் ரூ. 600 என்றும் சலுகை விலையில் கொடுப்பதற்கு தீர்மானித்தது. பத்தாயிரம் ரூபாய் ஏக்கர் என்று ஏற்கெனவே தீர்மானிக்கப் பட்டதை மாற்றி, நஞ்சை 3,600 ரூபாய் என்றும், புஞ்சை 600 ரூபாய் என்றும் சலுகை விலையில் கொடுக்க இந்த அரசு தீர்மானித்தது. அந்த நடவடிக்கைகளை தமிழ்நாடு நிலச் சீர்திருத்த உச்சவரம்புச் சட்டத்தின்படி மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசு தீர்மானித்தது. அந்த முடிவினை ஒட்டி ஒரு சிறப்பு அதிகாரி அதற்காக நியமிக்கப்பட்டு அவர் மேற்படி நிலங்களைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை வரவேற்றார். மொத்தம் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்தன. அவற்றை ஆராய்ந்து தகுந்த விசாரணைகளை நடத்தி, அவற்றுள் சுமார் 4,800 விண்ணப்பதாரர்கள், நிலம் இருக்கும் அதே ஊர்களைச் சார்ந்தவர்கள் என்ற முறையிலேயும், நில மற்ற விவசாயத் தொழிலாளர்கள் என்ற முறையிலேயும் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள் என்று அந்த அதிகாரி முடிவு செய்தார்.

10-20 மணி

மேற்படி கரும்புப் பண்ணைக் கழகத்திற்குச் சொந்தமான நிலங்களில் கால்வாய்கள், சாலைகள் போன்றவைகள் தவிர, சாகுபடிக்கு ஏற்றதாக உள்ள நிலம் சுமார் 3,900 ஏக்கர் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது. எனவே தகுதி பெற்ற விண்ணப்ப தாரர்கள் அனைவருக்கும் நபர் ஒருவருக்கு நஞ்சையாக இருந் தால் $\frac{3}{4}$ ஏக்கர் என்ற அளவிலும், புஞ்சையாக இருந்தால் $1\frac{1}{2}$ ஏக்கர் என்ற அளவிலும் நிலங்கள் அளக்கப்பட்டு, உட்பிரிவு செய்து கற்கள் நடப்பட்டு கூடிய விரைவில் வழங்கப்படும். தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் நிலமற்ற ஏழை விவசாயத்தொழிலாளர்கள் ஆவார்கள். சட்டப் பூர்வமான ஆணைகள் சிறப்பு அதிகாரி யால் பிறப்பிக்கப்பட்டவுடன் விரைவில் நிலம் வழங்கப்படும். தகுதி பெற்ற விவசாயத் தொழிலாளர்களின் பெயர், மற்ற



விவரங்கள் வட்டாட்சியர் அலுவலகத்திலும், மற்றும் சில பொது இடங்களிலும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என்று 5 ஆம் தேதியே அறிக்கை வெளியிடப்பட்ட பிறகு போராட்டம் நடத்துவதிலோ, உண்ணாவிரதம் இருப்பதிலோ ஏதாவது பொருள் இருக்க முடியுமா என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஐந்தாம் தேதியே இந்த அரசின் சலுகைகள் அறிவிக்கப்பட்டாகிவிட்டன. அதற்குப் பிறகு ஏறத்தாழ 3,900 ஏக்கரா நிலம்தான் இருக்கிறது. பத்தாயிரம் பேர் விண்ணப்ப தாரர்கள். அதிலே 'எலிஜிபிள்' என்று பார்த்தபோது, தகுதி யானவர்கள் என்று பார்த்தபோது அந்த இடத்திலேயே விவ சாயம் செய்யக்கூடிய நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குத்தான் தரவேண்டும் என்கிற அந்த நியதியின்படி பார்த்தால் 4,800 பேர்கள் தகுதியானவர்களாக வருகிறார்கள். அந்த 4,800 பேர் களுக்கு 3,900 ஏக்கராவைப் பிரித்துத் தருவதா அல்லது உண்ணா விரதம் இருக்கின்றவர்கள் கூற்றின்படி ஆளுக்கு $1\frac{1}{2}$ ஏக்கரா கொடு என்று கேட்டால் 4,800 பேர்களில் எத்தனை பேர்கள் விடுபட்டுப் போவார்கள், அவர்களுடைய நிலை என்ன என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."

என்று வள்ளுவர் பாடியிருக்கிறார். ஏறத்தாழ பொதுவுடைமைக் கருத்துக் கூட அதுதான். அந்த அளவில், இருப்பதைத்தான் பகிர்ந்து கொடுக்க வேண்டுமேயல்லாமல் $1\frac{1}{2}$ ஏக்கரா 4,800 பேர்களுக்குக் கொடு என்றால் எங்கேயிருந்து கொடுக்க முடியும்? இருப்பது 3,900 ஏக்கராதான்.

அதுவும் பத்தாயிரம் ரூபாய் என்று கடந்த காலத்திலே, கவர்னர் ஆட்சிக் காலத்திலே என்று கருதுகிறேன். ஏக்கருக்கு பத்தாயிரம் ரூபாய் என்று விலை குறிப்பிடப்பட்டதை மாற்றி 3,600 ரூபாய் என்று சலுகை விலை அளிக்க இந்த அரசு முன் வந்தும் கூட—அதிலே நாங்களாகவே முன்வந்தது ஒரு தவறாகக் கூட இருக்கலாம். எப்போதுமே கேட்டுச் செய்தால்தான் நன் றாக இருக்கும், நாங்களாக முன் வந்து செய்தது தவறாக இருக்குமோ என்று நான் கருதுகிறேன். எனவே $\frac{3}{4}$ ஏக்கரா என்ற அளவில் 4,800 பேர்களுக்கு தகுதி உடையவர்களுக்குத் தரப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர் கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, அந்தப் பண்ணையிலே வேலை பார்த்தவர்களுக்கு எல்லாம், கரும்புப் பண்ணையிலே வேலை பார்த்தவர்களுக்கெல்லாம் தருவது என்றால், அதிலே சில பேர் டிரைவர்களாக இருந்தவர்கள், அவர்கள் கூடக் கேட் கிறார்கள். ஆகவே அதையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டுத் தான் விவசாயிகள், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அந்தப் பகுதியிலேயே, நிலமிருக்கிற அந்த இடத்திலேயே குடியிருப்ப

வர்களுக்கு மாத்திரம் என்று கணக்கிடப்பட்ட போது 4,800 பேர்களுக்கு 3,900 ஏக்கர் நிலத்தைப் பகிர்ந்துக் கொடுக்க அரசு முன் வந்திருக்கிறது. அதற்கான ஆயத்தங்கள் எல்லாம் நடை பெற்று முடிந்துவிட்டன.

இன்னும் சில நாட்களிலே அந்தப் பட்டியல் ஆங்காங்குள்ள வட்டாட்சியர் அலுவலகத்திலும், பொது இடங்களிலும் வைக்கப் பட இருக்கின்றது. அந்த நிலங்களை உரியவர்கள் பெற்றுக் கொள்ளலாம். 3,600 ரூபாய்க்கு அவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதி இருக்கிறது. ஒரு ஏக்கர் 3,600 ரூபாய், $\frac{3}{4}$ ஏக்கரா என்ற அந்த அளவுக்கு ஏற்றபடி இன்னும் குறைந்த விலை யிலேயே அந்த $\frac{3}{4}$ ஏக்கராவை, குறைந்த பணம் கொடுத்துப் பெறக்கூடிய ஒரு வாய்ப்பை இந்த அரசு முழுக்க முழுக்கப் பொதுவுடைமைக் கருத்தின் அடிப்படையிலே செய்திருக்கும் போது, அதிலே சில பேர் வேண்டுமென்றே உண்ணாவிரதம் இருப்பதும் போராட்டம் நடத்துவதும் தேவையற்ற ஒன்று. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் கூட ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். உடனடியாக அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தை அவர்கள் நிறுத்திக்கொண்டார்கள். இப்போது உண்ணாவிரதம் இருப் பவர்களுக்கும் விளக்கம் அளிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலை வரின் மூலமாகச் செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10.25 மணி

(ஆ) இலங்கையில் இந்திய இராணுவம் தொடர்ந்து இருக்க வேண்டு மெனத் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டியது குறித்து.

* திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கும் அவர் களுடைய பாதுகாப்பிலும் நலனிலும் அக்கறை கொண்ட எங்களைப் போன்றவர்களுக்கும் மிகுந்த சஞ்சலத்தை உண் டாக்கக்கூடிய ஒரு செய்தியினை தங்கள் மூலமாக இந்த அரசி னுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர ஆசைப்படுகிறேன். நேற்றைய தினம் பம்பாயில் நிருபர்களுக்கு பேட்டியளித்த இந் தியப் பேரரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு ஐ. கே. குஜ்ரால் அவர்கள் எந்த நாட்டிலும் இந்தியர்களுக்கு எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் அவர்களைக் காப்பாற்ற நமது ராணுவம் அனுப்பப்படமாட்டாது என்று சொல்லி யுள்ளார்கள். உலகம் முழுவதும் இருக்கின்ற இந்தியர்களை இந்த வார்த்தைகள் பாதித்தாலும், பாதிக்காவிட்டாலும், இலங் கையில் வாழும் தமிழர்களின் பாதுகாப்பை இந்த வார்த்தைகள் மிகவும் பாதிக்கும் என்று நாங்கள் அஞ்சுகிறோம். மத்திய அரசு எந்த நெருக்கடி வந்தாலும் இராணுவத்தினை அனுப்ப மாட் டோம் என்று சொல்கிறார்கள். தமிழினத்தினுடைய பாதுகாவ லாக இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய



கடமை முடிந்து விட்டது என்று சொல்லி விட்டார்கள். தாயும் தந்தையுமாக இருக்கின்ற இந்த இரண்டு அரசுகளும் தங்களது கடமைகளிலிருந்து இவ்வாறு ஒதுங்கிவிட்டால் உலகத் தமிழர்கள் அநாதைகளாகிவிடுவார்கள். ஆகவே, இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு—கடைசித்தமிழனுக்குப் பாதுகாப்புஇருக்கின்றவரை இந்திய இராணுவம் அங்கேயே இருக்க வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக ஒரு தீர்மானத்தையோ அல்லது ஒரு அறை கூவலையோ மத்திய அரசுக்கு விட வேண்டுமென்று உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரை நான் கேட்டுக்கொள் கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆல்போன்ஸ் அவர்களுடைய இந்தக் கருத்தை இரண்டு கூறுகளாக நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அவர்கள் இலங்கையிலே இராணுவம் தொடர்ந்து இன்னும் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இலங்கையிலே இருக்கின்ற இந்திய ராணுவம் ஜனவரி மாதம் 31-ஆம் தேதியோடு திரும்பப் பெறப்படும் என்று ஏற் கனவே இருந்த பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களே அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அந்தத் தவணை நீடிக்கப்பட்டு மார்ச் 31 வரையிலே கூட இராணுவம் அங்கே இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே ஏற்கனவே இருந்த மத்திய அரசு எடுத்த முடிவைத்தான் இந்த அரசு இன்றைக்குத் தொடர்ந்து உடனடியாக இராணுவம் இங்கே திரும்பி வர வேண்டாம் என்றும் மார்ச் மாதம் வரையிலே நிலைமைக்கு ஏற்ப இராணுவம் இங்கே திரும்பி வரவேண்டு மென்று முடிவு எடுக்கப்படுகிறது. இந்தச் செய்தியை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளியுறவு அமைச்சர் பேசியதைப் பற்றி இங்கே குறிப்பிட் டார்கள். பத்திரிகையில் வந்த தலைப்பை மாத்திரம் வைத் துக்கொண்டு நாம் விவாதிக்கக்கூடாது. வெளியுறவு அமைச்சர் பேசிய பேச்சு முழுவதையும் மாண்புமிகு உறுப்பினர் என்னிடத் திலே, தங்களுடைய அறையிலே இந்தச் செய்தியைச் சொன்ன பிறகு, பத்திரிகையை வாங்கி நானும் பார்த்தேன். அதிலே வெளியுறவு அமைச்சர் என்ன குறிப்பிடுகிறார் என்றால் மற்ற நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டுமென்ற அக்கறை எங்களுக்கு உண்டு. அவர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக் கூடாது என்று விரும்புகிறோம். அப்படி ஏதாவது ஏற்பட்டால் தூதரகம் மூலமாகவும் அரசியல் ரீதியாகவும், உயர்மட்டப் பேச்சு மூலமாகவும் பிரச்சனையைத் தீர்க்க முயற்சி செய்வோமே தவிர ஒருக்காலும் இனிமேலும் இராணுவத்தை அனுப்ப மாட்டோம் என்று சொன்னார். அடுத்து மாறி வரும் உலக சூழ்நிலையில் இராணுவத்தின் மீது நம்பிக்கை வைப்பதில் அர்த்தம் இல்லை என்பதால் தேசீய முன்னணி அரசு இந்த முடிவிற்கு வந்துள்ளதாகவும் அவர் பதில் அளித்தார்.

இதனால் யாரும் பயப்பட வேண்டாம். உங்களுக்கு உரிய மரியாதையும் பாதுகாப்பும் கிடைக்கும் என்று பல்வேறு வெளி நாடுகளில் வசிக்கும் கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு இந்தப் பேட்டியின் மூலம் குஜ்ரால் உறுதி கூறினார் என்று இருக்கிறது. இந்த வாசகங்களை எல்லாம் விட்டுவிட்டு அந்த ஒரு வாசகத்தை மாத்திரம் எடுத்து வைத்துக்கொண்டு பார்த்தால் ஆபத்து வரும் போலத்தான் தோன்றும். ஆனால் பயப்படத் தேவையில்லை. ஒன்று மாத்திரம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தியர்களுக்கோ, தமிழர்களுக்கோ பிறநாடுகளில் தீங்கு எற்படும் போது தவிர்க்க முடியாத நிலையில் இந்திய இராணுவம் அனுப்பப்பட வேண்டிய சூழல் ஏற்படுமானால் அது அங்குள்ள இந்தியர்களையோ தமிழர்களையோ காப்பாற்றுவதற்குப் பயன்பட வேண்டுமே தவிர அவர்களைத் தாக்கி அழிப்பதற்குப் பயன் படக்கூடாது என்பது என்னுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி.)

## (இ) ஆசிரியர்கள் நியமனத்தில் குறைபாடுகள் இருப்பதாகக் கூறப்பெறுவது குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது செகண்ட்ரி கிரேட் டீச்சர்ஸ் அப்பாயின்ட்மெண்டிலே பல்வேறு தவறுகள் நடந்ததாக பத்திரிகையிலே நீங்களும் படித்திருப்பீர்கள். நானும் படித்திருக்கிறேன். 35 வயதானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காமல் 19, 20............ (குறுக்கீடு)

## (ஆ) இலங்கையில் இந்திய இராணுவம் தொடர்ந்து இருக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டியது குறித்து—தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் வெளிநாடுகளில் இருக்கின்ற தமிழர்களாயினும், வெளிநாடுகளிலே இருப்பதிலும் மிக அண்மையில் இருக்கின்ற தமிழர்களாயினும் அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று சொன்னதை நாம் வரவேற்கிறோம். ஆனால் அந்நிய நாடுகளிலே இருக்கிறவர்கள் எல்லாம் வெளியுறவு தொடர்புடையவர்களாக இருக்கின்ற காரணத்தினாலே மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரவர்கள் சொன்னதை வைத்து இங்கே கொஞ்சம் பார்க்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில் முந்தைய அரசு இராணுவத்தை திருப்பிப் பெற்றுக் கொள்வது என்று சொல்கின்ற முடிவிற்கு ஏற்ப தான் இப்போதும் இந்த அரசு பின்பற்றுகிறது என்று சொன்னார்கள்,





10-30 மணி

ஆனால் இலங்கையிலே இருந்துகொண்டிருக்கிற அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுப்பதோடு இணைத்துத்தான் வெளியே ராணுவத்தைப் பெறுவது அல்லது திருப்பிப் பெறுவது என்பது முடிவு செய்யப்படும் என்று முந்தைய அரசு ஒவ்வொரு தடவையும் கூறிக்கொண்டு இருந்தது. இரண்டாவது செய்தியாக, தூதுவராலயத்தின் மூலமாகவும் மற்ற வகையிலேயும், எங்கே துன்பம் வந்தாலும் பேசி முடிவு எடுக்கப்படும் என்று சொன்னதோடு வெளியுறவு அமைச்சர் அவர்கள் நின்று இருந்தார்கள் என்று சொன்னால் நமது மகத்தான ராணுவம் ஒரு பக்கத்திலே இருக்கிறது என்ற எண்ணம் மற்றவர்களுக்குத் தோன்றியிருக்கும். அது போகாது என்று சொல்லியிருக்க வேண்டாமோ என்று எனக்குத் தோன்றுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த உணர்வுகளிலே அதிகமான ஈடுபாடு உடையவர்கள். ஆதலினாலே, அவர்களும் இந்த அரசாங்கத்திலே இருப்பதனாலே இவைகளை வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய மனதிலே போட்டு வைப்பார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், அங்கு அதிகாரங்கள், உரிமைகள் எல்லாம் பெற்றுத் தந்த பிறகுதான் இந்தியப் படை வாபஸ் ஆகும் என்று முன்னாள் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் குறிப்பிட்டதாக, நான் அவருக்கு நினைவூட்டுகின்றேன், எல்லா அதிகாரங்களும் பெற்றுத் தந்தாகிவிட்டது. இந்தியாவிலே உள்ள மாநிலங்களுக்கு நிகராக அங்கே உள்ள தமிழ் மாநிலம் என்று அழைக்கப்படுகிற வடகிழக்கு மாநிலத்திற்கு சுயாட்சியே வழங்கப்பட்டாகிவிட்டது என்று திரும்பத் திரும்ப முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவித்து இருக்கிறார். பாராளுமன்றத்திலேகூட அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் கேட்டதற்கு அதிகமாகவே வாங்கிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். சொன்னது மாத்திரமல்ல, அதைத் தொடர்ந்துதான் ராணுவம் வாபஸ் பெறப்படும் என்று அறிவித்து, படிப்படியாக ராணுவம் வாபஸ் பெறப்பட்டு வருகிறது. அவர்கள் அந்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்ட பிறகுதான் ராணுவம் திரும்பி வரவேண்டும் என்றால், இன்றைய தேசிய முன்னணி அரசு மத்தியிலே உருவாவதற்கு முன்பே நாம் டி.வி.யிலே பல நேரங்களிலே வாரா வாரம் பார்த்திருக்கிறோம். இன்னின்ன மாவட்டங்களிலிருந்து இந்திய ராணுவம் திரும்பி வந்து சென்னையிலே அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படுகிறது என்று செய்திகளிலே பார்த்திருக்கிறோம். எனவே, ராணுவம் திரும்ப ஆரம்பித்து, இரண்டு, மூன்று மாத காலத்திற்கு மேல்

ஆகியது என்பதை நான் அவருக்கு ஞாபகப்படுத்த விரும்பு கின்றேன். இன்னொன்று சொன்னார்கள், ராணுவத்தை அனுப்பமாட்டோம் என்று சொல்லாமல் இருந்து இருக்கலாம் என்று சொன்னார்கள். அவருடைய உணர்வும், என்னுடைய உணர்வும் ஒன்றாக அதிலே இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொல்ல வந்தது, ராணுவத்தை அனுப்பலாம். அனுப்பக்கூடிய சூழ்நிலை வந்தால் அனுப்பித் தான் தீரவேண்டும். அப்படி அனுப்பினால் அந்த ராணுவம் யாரைக் காப்பாற்றச் செல்கிறதோ, அவர்களைக் காப்பாற்று வதற்கு மாறாக, அவர்களை அழிப்பதாக அந்த ராணுவத்தி னுடைய நடவடிக்கை இருக்கக்கூடாது என்பதுதான் இந்த அரசி னுடைய நிலை.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

* திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு குஜ்ரால் அவர்கள் சொன்னது சம்பந்தமாக காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். இலங்கைக்கு அனுப்பப் பட்ட ராணுவமே, இந்திய–இலங்கை உடன்படிக்கையின் அடிப் படையிலேதான் அனுப்பப்பட்டது. அப்படி இல்லாமல் நம்முடைய நாட்டு ராணுவத்தை நம்முடைய இந்தியர்கள் இருக்கக் கூடிய அந்த நாடுகளிலே அனுப்புவது என்று சொன்னால் அது அத்துமீறிய, ஆக்கிரமிப்புச் செயலாக ஆகும். அண்மை யிலேகூட, பனாமா நாட்டிலே அமெரிக்க நாட்டு ராணுவத்தை அனுப்பியதை நாம் எல்லோரும் சேர்ந்து கண்டித்திருக்கிறோம். அப்படிப்பட்ட ஒரு ராணுவ நடவடிக்கையைத்தான் அவர்கள் கோருகிறார்களா? அப்படிக் கோருவதாக இருந்தால் அது தவறாகும் என்பதை நான் எச்சரிக்கையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : பனாமாவுக்குள் அனுப்புவதும், இலங்கைக்கு நம் ராணுவத்தை அனுப்புவதும் ஒன்றா ? இதை நமது அரசு ஏற்றுக்கொள்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. வரதராசன் அவர்கள் சொல்ல வந்தது, இந்திய, இலங்கை உடன்பாட் டிற்குப் பிறகுதான் அனுப்பப்பட்டது என்று நாம் சொல்ல விட்டு விட்ட ஒரு செய்தியை நினைவுபடுத்தி இருக்கிறார். அவ்வளவுதான்,





## (இ) ஆசிரியர்கள் நியமனத்தில் குறைபாடுகள் இருப்பதாகக் கூறப்பெறு வது குறித்து—தொடர்ச்சி

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே. இப்போது நடந்து முடிந்த செகண்டரி கிரேடு டீச்சர்ஸ் அப்பா யின்ட்மென்ட்டிலே 35 வயதானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமல், 19 வயதானவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்து, சி.இ.ஓ.க்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்றும், பல தவறுகள் நடந்ததாக பல பத்திரிகைகளிலே வந்ததாகப் படித்தேன். தராசு போன்ற பத்திரிகைகளிலே எல்லாம் மிகக் கேவலமாக எழுதியிருந்தார்கள். அந்த அளவுக்கு நான் சொல்ல விரும்பவில்லை. அதெல்லாம் நீங்கள் படித்தது. அந்த அளவுக்கு சி.இ.ஓ-க்களுக்கு அதிகாரம் கொடுக் காமல்; எங்கள் மாவட்டத்திலே 35 வயதானவர்களுக்கு வேலையில்லை. 19, 20 வயதானவர்களுக்கு வேலை கொடுத் திருக்கிறார்கள் என்று சொன்னால், இது ஏதோ அநியாயமாக இருக்கிறது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நிச்சயமாக 35, 32 வயதானவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். சி.இ.ஓ-க்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். 19, 20 வயதானவர்களுக்கு எங்கிருந்தோ ஆணை வருகிறது என்று சொல்கிறார்கள். சி.இ.ஓ-க்களுக்குத் தெரியாது என்று சொல் கிறார்கள். பத்திரிகைகளிலே கேவலமாக எழுதுகிறார்கள். இது தமிழ்ச் சமுதாயத்திற்கே கேவலமாக இருக்கிறது. தயவு செய்து இத்தகைய நியமனத்தை ரத்துச் செய்து, சரியான முறையிலே, சி.இ.ஓ-க்களுக்கு அதிகாரம் கொடுத்து நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலாவது, இது குறித்து நீதிமன்றத் திலே வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு முடிவில் நடைமுறை களிலே உள்ள குறைகளை ஒரு வேளை நீதிமன்றம் சுட்டிக் காட்டினால் அது ஏற்கப்படும். ஆனால் அதே நேரத்திலே ஏற் கனவே உள்ள விதிமுறைகளைப் பின்பற்றித்தான் செயற்படுத் தப்பட்டு இருக்கிறது. அந்த விதிமுறைகளில் சில குறைபாடு கள் இருக்கலாம். அந்தக் குறைபாடுகளை அறிகிறபோதுதான் திருத்த முடியுமே தவிர ஏற்கனவே உள்ள விதிமுறைகள் அத் தனையையும் இந்த அரசு எந்த வகையிலும் மாற்றவில்லை என்பதையும் ; நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற காரணத்தால் அதைப் பற்றி அதிக விளக்கத்தை நான் இந்த நேரத்தில் சொல் வது முறையல்ல என்பதையும் சொல்லி இந்த அளவோடு விடையை நான் முடிக்க விரும்புகிறேன்.

10.35 மணி

## 4. அறிவிப்பு.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, (1) இன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இந்த மூன்றாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன் :

1. திரு. சா. கணேசன்
2. டாக்டர் க. காஞ்சனா
3. திரு. வே. தங்கபாண்டியன்
4. திரு. கே. அர்ஜுனன்
5. திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்
6. திரு. கோ. பூவராகன்

## 5. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம்)

### (அ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) பச்சையப்பன் அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப் பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990.



மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : இச் சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 6. அரசினர் தனித் தீர்மானம்.

தாழ்த்தப்பட்ட மலைவாழ், ஆங்கிலோ இந்திய மக்களுக்கான இட ஒதுக்கீடுகளை நீட்டிக்கச் செய்யும் திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் [நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1989ஆம் ஆண்டு அரசமைப்பு (அறுபத்திரெண்டாம் திருத்த) சட்டமுன் வடிவினால் செய்யக்கருதப்பட்டுள்ள திருத்தங்கள்.]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட அரசினர் தனித் தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

''நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற 1989 ஆம் ஆண்டு அரசமைப்பு (அறுபத்திரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2)ஆம் பகுதியின், வரம்புரை யின் (d) பகுதியின், நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கிறது''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற
இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத்தீர்மானத்தை
திருத்தங்களை இந்தத் தீர்மானத்தின் மூலமாக—ஏற்றுக்
கொள்ள வேண்டுமென்று இந்த அவையை நான் கேட்டுக்கொள்
கிறேன். இந்த அவையில் இதற்கு எதிரான கருத்து எதுவும்
இருக்காது என்பதை நான் மிக நன்றாக நம்பிக்கையோடு உணரு
கிறேன். அரசமைப்புச் சட்டத்தினுடைய பாராளுமன்ற மக்கள்
அவையிலும் மாநில சட்டமன்றத்திலும் 334 பிரிவு தாழ்த்தப்
பட்ட, மலைவாழ் மக்களின் இட ஒதுக்கீட்டிற்கும், ஆங்கிலோ
இந்தியன் பிரிவினரின் நியமனத்திற்கும் வகை செய்கிறது.
இதுவரை இந்தப் பிரிவினர் 40 ஆண்டு காலம் இந்த உரிமையை
அதற்குச் சலுகை என்று பெயர் அளித்தாலும்கூட அவர்களுக்கு
அளிக்கப்பட்ட இந்த உரிமையை அனுபவித்து வந்திருக்
கிறார்கள். இது 1990 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம்

நாளோடு முடிவடைகிறது. மேலும் இந்த உரிமையை அல்லது சலுகையை 10 ஆண்டு காலத்திற்கு நான் இங்கே குறிப்பிட்ட பிரிவு மக்களுக்கு நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்து அதற்கான அரசமைப்பு 62-வது சட்டத் திருத்தம் பாராளுமன்றத்திலே இரு அவைகளாலும் நிறைவேற்றப்பெற்று மாநில சட்டமன்றத்திற்கு பின் ஏற்பு அளிக்க மத்திய அரசு அனுப்பியுள்ளது.

10-40 மணி

இருக்கிற மாநிலங்களிலே, பெரும்பான்மையான, 13 மாநிலங்களுக்கு மேற்பட்டவைகள் இதற்கான ஏற்பளித்து அனுப்பிவைத்தால் தான் இந்தத் திருத்தம், அரசமைப்புச் சட்டத்தின் இந்தத் திருத்தம் அமலுக்கு வர முடியும். எனவே, அந்தப் பெருமையை இந்த மாமன்றம் இழக்கக் கூடாது என்பதற்காக, உடனடியாக இந்தக் கூட்டத் தொடரும் அமைந்து, அதிலே இந்தத் தீர்மானத்தை முன்மொழிகின்ற வாய்ப்பினையும் நான் பெற்றுள்ளேன். ஏற்கனவே 1970 ஆம் ஆண்டு, ஒவ்வொரு பத்து ஆண்டும் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்கிற தீர்மானத்தை 13-க்கு மேற்பட்ட மாநிலங்கள் நிறைவேற்ற வேண்டுமென்ற அடிப்படையில் 1970 ஆம் ஆண்டு திராவிடமுன்னேற்றக் கழக அரசு இருந்த அந்தக் கால கட்டத்தில் இதை மீண்டும் நீட்டிக்க வேண்டுமென்ற திருத்தத்திற்கு ஏற்பளித்து இந்த அவையிலே தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றோம். அதற்குப் பிறகு, 20 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது அந்த வாய்ப்பைத் திராவிட முன்னேற்றக் கழக அரசும் இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களும் பெற்று இருக்கின்றார்கள். எனவே தாழ்த்தப்பட்ட, மலைவாழ் பிரிவினருடைய முன்னேற்றத்திற்கு முன்னோடியாக விளங்குகின்ற மாநிலம் நம்முடைய தமிழ் மாநிலம். அது மாத்திரமல்ல, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக, இட ஒதுக்கீடு முறைக்காக ஒரு காலத்திலே போராடி அரசியல் சட்டத்திலேயே முதல் திருத்தத்தைக் கொண்டு வரக்கூடிய அந்தச் சூழலை உருவாக்கிய மாநிலமும் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் என்பதை யாரும் மறந்திருக்க இயலாது. அத்தகைய உணர்வுகளை உள்ளடக்கிய இந்த மாநிலத்தில், இந்த மண்ணில், இந்த மாமன்றத்தின் சார்பிலே நாம் அனைவரும் ஒருங்கிணைந்து இந்தத் திருத்தத்தை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்கிறது என்ற வகையிலே தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எல்லாக் கட்சியினுடைய தலைவர்களுடைய ஒத்துழைப்பும் உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பும் இதற்குத் தேவை என்று வேண்டி, அந்த அளவில் அமைகின்றேன்.

*திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானம் இந்தச் சட்டமன்ற கூட்டத்தொடரினுடைய முதல் தீர்மானம் என்ற முறையில் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தீர்மானத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கூறியதுபோல் இந்தத தீர்மானம், 1970ஆம் ஆண்டிலும், 1980ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னால் இந்த ஆண்டும், 10 ஆண்டு காலம் இப்படிப்பட்ட தீர்மானத்தின் மூலமாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும் இட ஒதுக்கீடு தருவதற்கான இந்தத் தீர்மானத்தை நாம் இந்த மன்றத்தின் மூலமாக நிறைவேற்றி, மத்திய அரசினுடைய தீர்மானத்தை நாம் ஆதரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த மன்றத்திற்கு இருக்கிற பெருமையெல்லாம் நாம் தீர்மானம் நிறைவேற்றி 10 ஆண்டு காலம், 10 ஆண்டு காலம் என்று அனுப்பினாலும் கூட, 40 ஆண்டு காலம், இந்த ஒதுக்கீடுகள் கொடுத்ததற்குப் பின்னாலும் அந்த மக்களைப் பொறுத்தவரையில் முன்னேறி இருக்கிறார்களா என்றால் நிச்சயமாக முன்னேறவில்லை. முன்னேறுவதற்கு பல்வேறு அரசு திட்டங்கள் எடுக்கப்பட்டிருந்தாலும்கூட அந்தத் திட்டங்கள் அத்தனையும் அவர்களுக்குச் சேரவேண்டிய அளவிற்கு சேராமலும், அவர்கள் எப்படி முன்னேற வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அந்த அளவிற்கு அவர்கள் முன்னேறாமலும் இருப்பதை நாம் நிச்சயமாக ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். ஆனால், இன்றைக்கு இந்தத் தீர்மானத்தின் மூலமாக இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களிலேயும் இந்த ஒதுக்கீடுகளைத் தருவதற்கு நாம் ஏற்றுக்கொள்கிறோம். இந்த ஒதுக்கீட்டின்மூலமாக ஒதுக்கப்படுகின்ற தொகுதிகள் அத்தனையும்—நாம் ஒரு கணக்கை எடுத்துப் பார்க்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன்—10 ஆண்டுகாலம், 20 ஆண்டுக் காலம் என்று சில தொகுதிகள் தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும், மலைவாழ் மக்களுக்காகவும் தொடர்ந்து ஒதுக்கப்படுகிற தொகுதிகளாக இருக்கின்றன. அப்படி ஒதுக்கப்பட்ட தொகுதிகள் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கின்றன என்று கணக்குப் பார்த்தால்கூட, ஒதுக்கிவைக்கப்பட்ட தொகுதிகளாகத்தான் அவைகள் இருக்கின்றனவே தவிர, நிச்சயமாக மற்ற தொகுதிகள் அளவுக்கு அந்தத் தொகுதிகள் முன்னேறவில்லை என்பதை மட்டும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

10-45 மணி

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிற இந்த நேரத்தில், நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இப்படி தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்காகவே ஒதுக்கப்படுகின்ற தொகுதிகளில் எல்லாம், நிறைவேற்றப்படுகின்ற திட்டப் பணிகள் அத்தனையும் மற்ற தொகுதிகளில் நடக்கிற அளவுக்கு நடக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் நாம் ஏற்றுக் கொண்டாக

வேண்டுமே தவிர, எல்லாத் தொகுதிகளிலும் ஒரே முறையில் நிறைவேறுகின்றன என்று சொல்ல முடியாது. எனவே, இந்த ஒதுக்கீடு எந்த அளவுக்கு அவசியம் என்பதை நாம் நிச்சயமாக மறுக்க முடியாது.

இந்த ஒதுக்கீட்டுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தந்தை பெரியார் அவர்களை நாம் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்க வேண்டும். தந்தை பெரியார், ஜாதி ஒழிய வேண்டும், மதம் ஒழிய வேண்டும் என்பதில் எவ்வளவோ ஆர்வம் காட்டி இருந்தாலும்கூட, அந்த ஆர்வத்தின் அடிப்படையில்கூட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மலைவாழ் மக்கள் என்று சொல்லப்படுகின்றவர்களுக்கு, அரசின்மூலமாக உதவிகள் இருந்தால்தான் அவர்கள் முன்னேற முடியும் என்ற அடிப்படையில், தந்தை பெரியார் குரல் எழுப்பினார்கள். அந்தக் காலத்திலிருந்து இன்றுவரையில், அதற்காக நாம் பரிகாரம் தேடிக் கொண்டிருக்கிறோமே தவிர, தந்தை பெரியார் அவர்களின் ஆணையை நிறைவேற்றுகின்ற நிலைமை இன்றைக்கும் வரவில்லை என்பதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

தந்தை பெரியார் அவர்கள் என்ன ஆசைப்பட்டாரோ அது இன்றைக்கு நிறைவேறுகிற வகையில்தான், இங்கே நிறைவேற்றப்படுகிறது. அந்த வகையில் இன்றைய தினம், நாம் அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்தத் தீர்மானத்தின்மூலமாக, தந்தை பெரியார் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், நாம் துணையாக இருக்கிறோம் என்ற அளவுக்கு, அதிலிருந்து மாறவில்லை என்ற அளவுக்கு, இந்தத் தீர்மானத்தை நாம் நெஞ்சார, மனமாற ஆதரிக்கிறோம். இந்த மக்கள் என்றைக்கு முன்னேறுகிறார்களோ, என்றைக்கு அனைத்து மக்களோடு அவர்களும் சமமாக இணைகிறார்களோ, என்றைக்கு ஜாதி ஒழிக்கப்படுகிறதோ, என்றைக்கு மதத்தின் நிலை மாறுகிறதோ, அன்றைக்குத்தான் மக்கள் அனைவரும் சமம் என்ற நிலை வரமுடியும். அதற்கு இந்த ஒதுக்கீட்டு முறைகள், அவர்களுக்குத் தரப்படுகிற தனிச் சலுகைகள் அத்தனையும் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வற்புறுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, முதல்வர் அவர்கள், நாம் அனைவரும் ஏற்றுக் கொள்கிற ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறார்கள். அதனை அப்படியே வழிமொழிந்து காங்கிரஸ் கட்சியினுடைய. சார்பிலே சில கருத்துக்களைச் சொல்லி ஆதரவைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





இந்தத் தனித் தொகுதி ஒதுக்கீடுகள் இன்னும் பத்தாண்டுகளுக்கு வேண்டுமென்பதில் மிக அழுத்தமாகவே ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்தைக் கூறுவதற்குத் தயாராக இருக்கிறோம். இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டியிருக்கிற ஒரு சமுதாயம் என்ற வகையில், அவர்களுக்கு இந்தப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று அரசியல் அமைப்பு ரீதியிலேயே பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது. முதலில் பத்தாண்டுக் காலம் கொடுப்பது என்றும், அந்தப் பத்தாண்டுக் காலத்திற்குள்ளேயே அவர்கள் அந்தப் பெருமையையெல்லாம் பெற்று, சமமான நிலைக்கு வந்துவிடுவார்கள் என்ற எண்ணத்தோடு அரசியல் அமைப்பு விதிகளை நிர்ணயித்தவர்கள் எண்ணினாலும்கூட, அது நிறைவேறியிருந்தாலும் கூட, அது தொடர்ந்து இருக்கவேண்டுமென்ற நோக்கோடு நாம் இங்கே அமர்ந்திருக்கிறோம்.

முதல் கட்டமாக இப்போது பத்தாண்டுகள். இங்கே இந்தச் சிறப்பு வருவதற்கு எவ்வளவு பெரிய போராட்டங்கள் நடைபெற்றன என்பதை மட்டும் மனதில் வைத்துக்கொண்டோம் என்று சொன்னால், இந்த உரிமை எவ்வளவு முக்கியம் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். இந்த உரிமையை அவர்களுக்கு அளிப்பது, அதன்மூலம் அவர்கள் சம வாய்ப்புப் பெறுவது என்பதற்கும், அவைகளுக்கு நாம் ஒத்துழைப்புத் தருவது என்பதற்கும் அது வாய்ப்பாக வந்துவிடுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் கூட, தமிழகத்திலிருந்து அதற்காக எப்படிப்பட்ட குரல் கிளம்பியது என்பதைச் சொன்னார்கள். தமிழகத்திலிருந்து முதலில் புறப்பட்ட அந்தச் சம்பவத்தை யாரும் மறந்திருக்க இயலாது. அதைப்போலவே, வைக்கம் போராட்டம் என்ற ஒரு பெரிய போராட்டத்தை நடத்தி, அந்தப் போராட்டத்திற்குத் தளபதியாக நின்ற தந்தை பெரியாருடைய திருவுருவம் இங்கே இருக்கிறது. தந்தை பெரியாரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்று முழு அனுமதியும் அளித்து ஆசீர்வதித்த அண்ணல் காந்தியடிகளுடைய திருவுருவப் படத்தின் முன்னால் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். இங்கே இன்னொருவருடைய திருவுருவப் படம் இருக்கிறது. அதுதான் காமராஜ் அவர்கள். தந்தை பெரியார் அவர்கள் வைக்கத்தில் போராட்டம் நடத்தியபோது, ஒரு தொண்டனாகக் கலந்து கொண்டார்கள். அந்த நேரத்தில் பாரதியுடைய பாடல்களையெல்லாம் பாடிக்கொண்டே அங்கே சென்றார்கள் என்ற தகவல்கள் எல்லாம் இருக்கின்றன. நீண்டதொரு சொற்பொழிவாகிவிடக் கூடாது என்பதற்காக, சுருக்கமாகவே சொல்ல விரும்புகிறேன்.

10-50 மணி

இதைவிடமேலாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புவது இந்த உரிமையைப் பெறுவதற்கு அண்ணல் காந்தி தன்னுடைய உயி ரையே பணயம் வைத்து ஒரு போராட்டம் நடத்த வேண்டி வந்தது என்பதுதான். அந்தப் போராட்டத்திலே இறுதியிலே எந்தவகையிலே வெற்றி பெற்றோம் என்பதையும், டாக்டர் அம்பேத்கார் அவர்கள் எந்த வகையிலே மிகச் சிறப்பாக அதற்கு ஒத்துழைத்தார்கள் என்பதையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1932 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ஆம் தேதி லண்ட னில் இருக்கிற பிரதமர் அலுவலகத்திலிருந்து மாக்டனால்ட் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள், அண்ணல் காந்தி மகா னுக்கு. அதிலே அரிஜனங்கள் என்று சொல்லப்படுகிற—நான் சொல்கிற சொற்றொடர்களை, குறிப்புக்காகத்தான் சொல் கிறேன். எனவே, தவறாக எடுத்துக்கொள்ளவேண்டாம்— அந்தத் தீண்டத் தகாதவர்கள் என்று சொல்லப்படுகிறவர் களுக்காக ஒரு தனித் தொகுதி ஒதுக்க வேண்டும் என்று சொன் னார். அதாவது ஒரு அரிஜன் என்பவருக்கு இரண்டு வாக்குகள் இருக்கும். ஒரு வாக்கு இந்துவாக நின்று போட்டியிடுகிற ஒரு வனுக்கு அவர் போட முடியும். ஆனால் இன்னொரு வாக்கும் இருக்கும். அவர் அரிஜனுக்கு மட்டுமேதான் அதைப் போட முடியும். அதாவது சுருக்கமாகச் சொல்லப்போனால் ஒரு அரிஜன் வேட்பாளராக நின்று போட்டியிடுகிற இடத்திலே ஒரு அரிஜன்தான் அவருக்கு ஓட்டளிப்பாரே தவிர, ஒரு இந்துவுக்கு அவர் ஓட்டளிக்க மாட்டார். ஆக, இந்துவினுடைய ஓட்டையே அவர்கள் பெற முடியாது. ஏனென்றால் பெறுகிற அளவுக்கு அவருக்குப் பெருமை கிடையாது. அவர்கள் தங்களுடைய இனம் என்று சொல்லப்படுகிற அந்த அரிஜனங்களுடைய வாக்குகளை மட்டுமே பெற்று வரவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைத் தன்னுடைய தீர்ப்பின்மூலம் மாக்டனால்ட் அவர்கள் அறிவித்து அதை காந்திக்குக் கடிதமாக எழுதினார்கள். அப்படி எழுதுகிற நேரத்திலேதான் நான் அதை ஒப்புசகொள்ள மாட்டேன் என்று சொன்னார். ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று சொல்லி பூனாவிலே எரவாடாச் சிறையிலே இருந்தபோது செப்டம்பர் மாதம் 20-ஆம் தேதி உண்ணா நோன்பு நான் ஆரம்பிப்பேன் ; ஏனென்றால் அவர்களைப் பிரித்து, பிளவுபடுத்துகிற சூழ்ச்சிக்கு நான் ஒப்புக்கொள்ள மாட்டேன் ; எல்லோருக்கும் இருக்கிற உரிமை அவர்களுக்கும் இருத்தல் வேண்டும் என்று சொல்லி ஒரு போராட்ட்த்தை அவர்கள் ஆரம்பித்தார்கள். அந்தப் போராட் டத்தை ஆரம்பித்து அவர்கள் நடத்தியவிதம் லூயிஃபிஷர் எழுதுகிற அந்தப்புத்தகத்தைப் பார்த்தால் ஒரு கவிதை போலே அமைந்திருக்கிறது. செம்டம்பர் 13ஆம் தேதி அவர்கள் அறிவிக்கிறார்கள். அறிவித்தவுடனே ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள்.—நமது மாண்புமிகு முதல்வர்



அவர்கள் குறிப்பிட்டதற்காகச் சொல்கிறேன். வரலாறுகளை எல்லாம் அவர்கள் தெரிந்திருக்கிற காரணத்தால் சொல்கிறேன். —நாடியைத் தொட்டுச் சொல்வதைப் போலே அவர்கள் சொன் னார்கள். திரு. எம். சி. ராஜா அவர்கள் உடனே சொல்கிறார் மகாத்மா காந்தி அவர்கள் தான் எடுத்துக் கொண்டிருக்கிற தத்துவத்தின் அடிப்படையிலேதான் அவர் உண்ணாநோன்பு இருக்கிறார், எனவே அவர் எடுத்துக்கொண்டிருக்கிற அந்த கோட்பாட்டை நான் ஆதரிக்கிறேன் என்று சொன்னவர், தீண்டத்தகாதவர்கள் என்று வெள்ளைக்காரர்களால் ஆளாக் கப்பட்டிருந்த நமது அருமைச் சகோதரர்களின் பிரதிநிதியாக இருந்தவர். அங்கே திரு. எம். சி. ராஜா அவர்கள் சொன்னார்கள். திரு. எம். சி. ராஜா அவர்கள் சொன்னதோடு மட்டுமல்ல.

காந்திமகான் உண்ணாநோன்பு இருக்கிறார் என்று சொல் வதற்கு முன்னாலேயே ஒரு அருமையான நிகழ்ச்சி நடந்தது. காந்திமகானுக்கு யாருடைய ஆசீர்வாதமாவது வேண்டுமென்ற ஒரு எண்ணம் தோன்றுகிறது ; அவருடைய உள்ளத்திலே தாகூர் வருகிறார் ; உடனே அதிகாலையில் எழுகிறார் ; அதிகாலை இரண்டரை மணிக்கு எழுந்து ஒரு தகவலை எழுதுகிறார், நான் உங்களுடைய ஆசியைப் பெறவேண்டுமென்று விரும்புகிறேன் என்று. தபாலிலே கடிதத்தைப் போடுகிறார் ; தாகூரிட மிருந்து ஒரு தந்தி வருகிறது ; உங்களுடைய போராட்டத்திற்கு என்னுடைய ஆதரவை நான் தெரிவிக்கிறேன் என்று ; அதாவது இரண்டு பேரும் ஒரே நேரத்திலே ஒன்றாகச் சிந்தித்து இருக்கிறார் கள் என்பதற்காகச் சொல்கிறேன். (Greatmen think alike) என்பதற்காகச் சொல்கிறேன். அதன் பிறகு போராட்டம் நடக் கிறது. செப்டம்பர் 13-ஆம் தேதி அப்படி அறிவித்தவுடனேயே மக்கள் மத்தியிலே பெரிய கொந்தளிப்புகள் எல்லாம் ஏற்படு கின்றன ; இது ஒருபுறம் இருக்க, செப்டம்பர் மாதம் 20-ஆம் தேதி அவர் உண்ணா நோன்பு இருக்கிறார் எறவாடாச் சிறை யிலே ; சிறையிலே ஒரு மாமரத்து நிழலிலே ஒரு வெண்மை நிறம் கொண்ட கட்டிலிலே அவர் படுத்து இருக்கிறார் ; இந்த நாடு பூராவும் கொந்தளிக்கிறது. இந்துத் தலைவர்கள் என்று அறி விக்கப்பட்டவர்கள் எல்லாம் பம்பாயில் கூடி ஒரு முடிவுக்கு வருகிறார்கள். எம். சி. ராஜா, டாக்டர் அம்பேத்கார், சோலங்கி போன்றவர்கள் ஒரு புறத்திலே கூடி ஒரு முடிவை எடுக்கிறார்கள். முடிவை எடுத்து அம்பேத்கார் அவர்கள் காந்தி யார் அவர்களைப் போய்ச் சந்தித்துப் பேசுகிறார்கள். அவருடைய உயிர் ஒடுங்கிக் கொண்டு இருக்கிறது. பக்கத்திலே போய் அமர்ந்து டாக்டர் அம்பேத்கார் பேசுகிறார். அம்பேத்கார் சொல்கிற செய்திகள் அத்தனைக்கும் சரி, சரி என்று ஒப்புக் கொண்டே வருகிறார் காந்திமகான். இறுதியிலே அந்த ஒப்பந்தம் ஏற்படுகிறது.

10–55 மணி

அந்த ஒப்பந்தம் என்னவென்று சொன்னால் அரிஜன மக்களுக்கென்று தனித் தொகுதிகளை அவர்கள் ஒதுக்கலாம்; ஆனால் அந்தத் தொகுதிகளிலே எல்லா மக்களும் ஓட்டுப் போட்டு அனைவரினுடைய பிரதிநிதியாகத்தான் அவர்கள் இருக்கவேண்டும் என்று சொல்கிற ஒரு அருமையான திட்டத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தினுடைய அடிப்படையிலே கையெழுத்து ஆகிறது. அனைத்துத் தரப்பாரும் அதிலே கையெழுத்து இடுகிறார்கள். அதுதான் அந்தப் பூனா ஒப்பந்தம் என்றும் எறவாடா ஒப்பந்தம் என்று சொல்லப்படுவது. அந்த ஒப்பந்தத்தை ஆதரித்து இறுதியிலே மரியாதைக்குரிய டாக்டர் அம்பேத்கார் அவர்கள் ஒரு பெருவிழாவிலே பேசுகிறார்கள்; இந்த அதிசய மனிதன் ஒரு அற்புதத்தை விளைவித்துவிட்டார்; நான் சொன்னதை எல்லாம் ஏற்றுக்கொண்டதைப் பார்த்து நான் வியப்புற்றுப் போனேன் என்று சொல்கிறார். அந்த அளவுக்கு ஒரு மூலம் அங்கே இருக்கிறது. அதோடு நிற்கவில்லை. எல்லோரும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். ஆனால் அதற்கிடையில் நடந்தது என்ன? காந்தி மகானுடைய அந்தப் போராட்டத்தின் காரணத்தால் இந்த நாட்டிலே ஒரு பெரிய பண்பாடு உருவாவதற்குக் காரணமாக இருந்தது. காந்திமகான் அங்கே உண்ணா நோன்பு இருக்கிறார் என்று சொன்னவுடனே இதுவரையில் யாருமே உள்ளே போக முடியாத காசியில் இருக்கிற ராம் மந்திர் எல்லோருக்கும் திறந்துவிடப்பட்டது. காளி கூட்டம் எல்லோருக்கும் திறந்துவிடப்பட்டது. பம்பாயிலே இருக்கின்ற 7 கோயில்களிலே, பெண்கள் தேசியச் சங்கம், அரிசனங்களுக்குக் கோயில்களைத் திறந்துவிடலாமா என்ற கேள்வியைக் கேட்கிறது. அதற்கு வைத்து குறிப்பெடுக்கிறார்கள். அதிலே கோயிலுக்குள்ளே போகலாம் என்று சொல்கின்றவர்கள் 24,797 பேர்கள். மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். 24,797 பேர்கள். போகவேண்டாம் என்று சொல்கின்றவர்கள் 445 பேர்கள் ஆகவும் இருக்கின்ற அளவுக்கு பம்பாயிலே இருக்கின்ற கோயில்கள் திறந்து விடப்படுகின்றன. இவைகளைச் சொல்வதற்குக் காரணம் சட்ட சபையிலே, பாராளுமன்றத்திலே பிரதிநிதித்துவம் அவர்களுக்குக் கிடைக்கின்றது என்ற சூழ்நிலை, எல்லா இடங்களிலும் அந்தப் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு உரிய ஒரு விதை ஏற்கெனவே போடப்பட்டது சில இடங்களிலே, இருந்தாலும் இதுவும் மகத்தானதாக இருந்தது. உடனே உண்ணாவிரதத்தை நிறுத்திவிடுவார்கள் என்று நினைத்தார்கள். சனிக்கிழமை இந்த ஒப்பந்தம் ஆகிறது. ஆனால் காந்திஜி அவர்கள் சொன்னார், என் உயிர் ஒடுங்குகின்ற நிலையிலே இருக்கின்றது என்று அம்பேத்கார் எழுதுகிறார், லூயி பிசர் அவர்கள் எழுதுகிறார், தொட்டிலிலே கடுமையான காய்ச்சலினாலே உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கின்ற குழந்தையைப் பார்த்து, என்ன ஆகுமோ, என்ன ஆகுமோ என்று சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கின்ற ஒரு தாயின் நிலையிலே இந்தியா இருந்துகொண்டிருந்தது. கட்டிலிலே இருந்துகொண்டிருந்த காந்தி கிழவரைப் பார்க்கின்றபோது என்று சொல்லி லூயிபிசர் அவர்கள் எழுதுகிறார். அந்த அளவுக்கு இருந்தபோது, இவர் சொல்கிறார். ''நாம் ஒப்பந்தத்திற்கு வந்தோம். நம்மை ஆளுகின்றவன் இதை ஏற்றுக்கொள்கின்றானா என்று தெரிய வேண்டாமா? எனவே மக்டோனால்ட் இதை ஒத்துக்கொள்கிறாரா, ஒத்துக்கொண்டு இதற்குச் சம்மதம் தெரிக்கிறாரா? இல்லை என்றால் என் உயிரை விடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஏனெனில் தீண்டாமை என்பது இந்து மதத்திலே சிலரால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற புரட்டு. எனவே அதனை நான் எதிர்க்கின்றேன். இந்தப் பிரிவினையை, பிளவு சக்தியை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதலாலே அவர் ஏற்றுக்கொள்கிறாரா என்று நான் பார்க்கவேண்டும். எனவே உண்ணா நோன்பை நிறுத்தமாட்டேன் என்று சொல்கிறார். சனிக்கிழமைகூட, எழுத்துக்கு எழுத்து, ஒரு வார்த்தைகூட தவறாமல் அத்தனையும் தந்தி அடிக்கப்படுகிறது. அது அங்கேபோய்ச் சேர்கிறதா? ஞாயிற்றுக்கிழமை. ஞாயிற்றுக்கிழமை என்று சொன்னால், உங்களுக்குத் தெரியும், வெளிநாடுகளிலே இருக்கின்ற அமைச்சர் பெருமக்களாக இருந்தாலும், சரி, பிரதமராக இருந்தாலும் சரி, வெளியிலே சென்றுவிடுவார்கள். அமைச்சர்கள் யாரும் லண்டனிலே இல்லை. பிரதமரே சசக்ஸ் என்ற இடத்திலே ஒரு மரணத்திற்காக இரங்கல் தெரிவிப்பதற்குப்போய் இருக்கிறார். ஆனால் காந்தியினுடைய மரணமே வந்துவிடுமோ என்று எண்ணுகிற நேரத்திலே அவர் அங்கேயிருந்து ஓடிவந்து டவுனிங் ஸ்ட்ரீட், 10-ல் பகலிலேயிருந்து இரவு பூராவும் உட்கார்ந்து கொண்டு சிந்தித்து, காந்தி, அம்பேத்கார் ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தை, அதைப் போலவே மற்றவர்களும் கையெழுத்துப் போட்டு ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தை அந்த அரிசன மக்களுக்குக் கொடுக்கின்ற அந்த உரிமை நிச்சயமாக இருக்கவேண்டும் என்று அவர் ஒத்துக்கொண்டு அவர் சொன்ன பிறகுதான் திங்கட்கிழமை மாலை $5\frac{1}{4}$ மணிக்கு கஸ்தூரிபாய் அவர்களின் கையிலேயிருந்து ஒருகிளாஸ் ஆரஞ்சு ரசத்தைக் குடித்து உண்ணாவிரதத்தை நிறுத்துகிறார் என்பது வரலாறு. அதிலேயிருந்து தொடங்கி நாம் அரசியலமைப்பிலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற உரிமைகள் வரை இன்று பார்க்கின்றபோது, இந்த தொகுதிகள் மிக முக்கியமானது மட்டுமல்ல, அவர்களுக்கு, சமமான அளவுக்கு அவர்கள் எல்லா வகையிலேயும் சேர்வது வரை அதைக்கொடுத்துக் கொண்டேதான் இருக்கவேண்டும்.



முன்னாலே பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஒரே இடத்தில் அவர்கள் தொடர்ந்து இருக்கவேண்டுமா? மற்ற இடங்களிலே இருக்கின்றவர்களுக்கு அந்த வாய்ப்பு வேண்டாமா என்று சொல்கின்றபோது, இதே அவையிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டுகொண்டிருக்கின்ற நேரத்திலே, இங்கே எதிர்க் கட்சி வரிசையிலே இருந்து

கொண்டிருந்த அருமைக்குரிய திரு. கருத்திருமன் அவர்கள் ஜனவரி
20, 21 தேதியில் பேசியிருக்கிறார்கள். அன்றும் இதே பிரச்சி
னையிலே பேசியிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆதரிக்கிறது. இப்படி
ஒரு எண்ணம் ஒரே இடத்திலே தொடர்ந்து இருக்கவேண்டுமா
என்று எண்ணம் வருகின்ற காரணத்தினாலேயே, ஒரு 20, 25
விழுக்காடு இருக்கின்றவர்கள் எங்கு இருக்கின்றார்களோ அதுதான்
தனித் தொகுதியாக பிரிக்கப்படுகின்ற காரணத்தினாலே இனி
மேல் இப்படிப்பட்ட தொகுதிகளிலே ஒரு ஐந்தில ஒரு பங்கு அல்
லது மூன்றில் ஒரு பங்கு பகுதி இடம் மாற்றிக்கொடுப்பதற்கு,
எண்ணிக்கையிலே குறைப்பதற்கு அல்ல, உரிமையை கட்டுப்படுத்
துவதற்கு அல்ல, ஆனால் தொகுதிகளிலே உடனடியாக எல்லாவற்
றையும் மாற்றுவதற்கும் அல்ல. ஒரு ஐந்தில் ஒரு பகுதி அல்லது
மூன்றில் ஒரு பகுதியாவது மாற்றிக் கொடுக்கலாமா என்பதனை
எல்லோருக்கும் எல்லா இடத்திலும் இருக்கின்றவர்களுக்கும் இந்த
வாய்ப்பு வருகின்ற சூழ்நிலையை உருவாக்கலாமே என்ற காங்
கிரஸ் கட்சியின் சார்பிலே அன்று பேசியதைத் தொட்டு நானும்
இன்று காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே, இதை வேண்டு
கோளாக வைத்து மற்றவைகளிலும் எல்லா உரிமைகளையும்
அவர்களுக்குத் தொடர்ந்து கொடுக்கவேண்டும் என்று சொல்லப்
படுகின்ற இந்தத் தீர்மானத்தைக் காங்கிரஸ் கட்சியினுடைய
சார்பிலே நான் ஆதரித்துப் பேசி அமைகிறேன்.

11–00 மணி

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களே, வாய்ப்பு அளித்ததற்கு நன்றி. மாண்புமிகு
முதல்வர் அவர்களால் இங்கே முன்மொழியப்பட்ட தீர்மானத்தை
இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக நான்வரவேற்
கிறேன.வரவேற்கின்ற அதே நேரத்தில்இந்தத்தீர்மானத்தின்பேரில்
சில விவரங்களை இந்தப் பேரவையின் முன்னால் சமர்ப்பிக்கவும்
விரும்புகிறேன். நான்கு தடவைகளாக இந்த நீடிப்பு தொடர்ந்த
கொண்டிருந்தாலும் மீண்டும் நீடிக்க வேண்டிய நிலையில் தான்
இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசன மக்கள், மலைவாழ்
மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்
பார்க்கின்றோம். இந்த நீடிப்புக்களைக் கொடுத்து அவர்களுக்கு
உதவிசெய்துகொண்டிருக்கின்ற நிலைமை இருக்கிறதே என்பதை
பற்றியும் நாம் கவலையோடு சிந்திக்கக் கடமைப்பட்டு இருக்
கிறோம். சுமார் 40 ஆண்டுக் காலமாக இந்த நீட்டிப்பு அல்ல
இப்படிப்பட்ட விசேஷ உரிமைகள் அல்லது சலுகைகள் தாழ்த்
தப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்டபோது 40 ஆண்டுக்கால
மாக காங்கிரஸ் ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் திரு
குமரி அனந்தன் அவர்கள், காந்தியடிகள், அரிஜனங்கள் தாக்கப்
பட்ட நேரத்தில் எல்லாம் எந்த அளவுக்கு கவலை கொண்
டார்கள் என்பதையும், எப்படி வருத்தப்பட்டார்கள் என்ப
தையும் மிக உருக்கமாக இங்கே எடுத்துச் சொன்னார்கள்.
ஆனால் அப்படிப்பட்ட தாக்குதல்கள் 40 ஆண்டுக் காலத்தில்



எந்த அளவுக்கு இருந்து கொண்டிருந்தன என்பதையும் நாம்
மிகக் கவலையோடு பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.
21 ஆம் நூற்றாண்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற நேரத்
தில் அல்லது செல்வதாகச் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில்
பல நூற்றாண்டுகளுக்குப் பின்னாலேதான் அரிஜன மக்கள்,
தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் இன்றைக்கு
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வில்
முன்னேற்றத்தைக் காண முடியவில்லை. அடித்தட்டு மக்களை
மேல் மட்டத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதை விட
குறைந்த பட்சம் சமப் பங்கிலாவது அவர்கள் வந்திருக்கிறார்
களா அல்லது வளர்ச்சி அடைந்திருக்கிறார்களா அல்லது முன்
னேற்றம் அடைந்திருக்கிறார்களா என்பதை நாம் சற்றுக் கவ
லையோடு சிந்தித்துப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.
இந்த நேரத்தில் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய
கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன்.

இன்றைக்கு நாம் அரிஜன மக்களுக்குப் பல சலுகைகளை,
உரிமைகளை அளிக்கிறோம். அப்படிப்பட்ட சலுகைகளும்,
உரிமைகளும் அதே தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ அரிஜன மக்க
ளுக்கு இல்லாமல் அவர்கள் பின் தங்கியிருக்கிறார்கள். குறிப்
பாக எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரே
குடும்பத்தில் பிறந்த இந்து, கிறிஸ்தவ அரிஜனங்கள் பக்கத்துப்
பக்கத்திலே, அடுத்தடுத்து வாழ்ந்து கொண்டிருந்தாலும், மிகச்
கஷ்டமாக வாழ்ந்து கொண்டிருந்தாலும், அந்த உரிமைகள்,
சலுகைகள் கிறிஸ்தவ அரிஜனங்களுக்கு இல்லை. மதத்தின்
பெயரால் இந்த சலுகைகள் மறுக்கப்படுகின்றன. நான்
சொல்வது எல்லாம், அண்ணன் இந்துவாக இருந்து, தம்பி
கிறிஸ்தவன் என்கிற ஓரே காரணத்திற்காக இப்படிப்பட்ட
சலுகைகளையும் உரிமைகளையும் கொடுக்காமல் மறுப்பது
சரியல்ல, ஓரே ஜாதியில் இருவரும் இருந்தும் இப்படிச் செய்வது
நியாயமல்ல. இந்து அரிஜனங்களுக்கு வழங்கப்படுகின்ற
அனைத்து சலுகைகளும் கிறிஸ்தவ அரிஜனங்களுக்கும் வழங்
கப்பட வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் இதிலே
மாற்று கருத்து இருக்காது என்று நம்புகிறேன். இதே நேரத்தில்
தேசிய முன்னணியிலும் ஒரு தூணாக இருக்கின்ற நம்முடைய
மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசிடத்தில் இது
சம்பந்தமாக வலியுறுத்தி மத்திய அரசின் திட்டங்களில்
எல்லாம் கூட கிறிஸ்தவ அரிஜனங்களுக்கும் சலுகைகள்
விஸ்தரிக்கப்படக்கூடிய வகையிலே அதற்கான முயற்சிகளை
மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல இன்றைக்கு மலைவாழ் மக்கள் கஷ்டப்படுகிறார்
கள். அவர்களுக்கு இருக்கின்ற சில பிரச்சினைகளை இந்த
அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு
கிறேன். ஒரு காலத்திலே மலை முழுமையாக அவர்கள்

வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் பிறகு பல்வேறு, திட்டங்களுக்காக, ரிசர்வ் பாரஸ்ட் என்கிற பெயரால் அணைத் திட்டங்கள் என்கிற பெயரால், மின் திட்டங்கள் என்கிற பெயரால் மலையில் வாழ்ந்து கொண்டிருந்த அந்த மக்கள் கையில் இருந்த நிலங்கள் எல்லாம் பறிக்கப்பட்டு இன்றைக்கு நிலமற்றவர்களாக, அனாதைகளாக அவர்கள் வாழ்கிறார்கள். ஒரு காலத்தில் மலைப் பகுதிகள் முழுவதையும் அவர்கள் ஆண்டு கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அவர்களுக்கு ஒரு சென்ட் நிலம் கூட இல்லாத சூழ்நிலை இருக்கிறது. பல தடவை அவர்களுக்கு மாற்று இடங்கள் வழங்குவோம், பட்டா வழங்குவோம் என்று அரசு அறிவித்திருந்தாலும் இதுவரை அப்படி வழங்கப் படவில்லை. குறிப்பாக, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சிற்றாறு அணைத் திட்டத்திற்காக ஏராளமான மலைவாழ் மக்களிடமிருந்து நிலங்கள் எடுக்கப்பட்டன, அப்போது மாற்று இடங்கள், பட்டாக்கள் தருவோம் என்று அறிவித்தார்கள். ஆனால் இதுவரை சிற்றாறு பகுதியில் அந்த மலைவாழ் மக்களுக்கு வழிவகை செய்யப்படவில்லை. அந்த மக்கள் இன்றைக்கு நிலமில்லாமல் சிரமத்தோடு கஷ்டப் பட்டு வாழ்கிறார்கள். இருந்த நிலத்தையும் இழந்து அவர்கள் இன்றைக்கு வாழ வழியில்லாமல் இருக்கிறார்கள். '' காலுக்குச் செருப்பும் இல்லை, கால் வயிற்றுக்குக் கூழும் இல்லை, வாழ்வுக்கு உழைத்தோமடா '' என்று அன்றைக்கு பாடப்பட்டது போல இன்றைக்குக் கால் வயிற்றுக் கஞ்சிக்காவது வழி கிடைக்காதா என்று அவர்கள் காடுகளில் சென்று விறகுகளைப் பொறுக்கி வாழ்கிற நிலையில் இருக்கிறார்கள். ஆனால் அப்படி அவர்கள் விறகு பொறுக்கி கால் வயிற்றுக்கஞ்சிக்காக வாழ முனைகின்ற நேரத்திலேதான் வன அதிகாரிகளுடைய குறுக்கீடுகள் அங்கே வருகின்றன. விறகு பொறுக்குகின்றவர்களைப் பிடித்து மிகக் கடுமையான தாக்குதல்கள் நடக்கின்றன. பல்வேறு விதமான வழக்குகள், பல்வேறு விதமான சிக்கல்களை இன்றைக்கு வனஇலாகா அதிகாரிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வரையும் இந்த அரசையும் நான் கேட்டுக் கொள்வேன்.

11.05 மணி

இப்படிப்பட்ட தாக்குதல்களிருந்து அந்த மலைவாழ் மக்களுக்கு நாம் பாதுகாப்பு அளிக்க வேண்டும். மலைவாழ் மக்களுக்கு மலையிலே அவர்கள் இழந்திருக்கிற பூமிக்குப் பதிலாக, நல்ல பூமியை, நிலத்தினைப் பட்டா செய்து கொடுத்து அவர்களுடைய வாழ்விலே ஏற்றம் ஏற்படுவதற்கு நாம் முனைய வேண்டும். மலைவாழ் மக்களுடைய பெண்டிர்கள் விறகு பொறுக்கச் செல்கிற நேரத்திலே வன இலாகா அதிகாரிகளால் ஏற்படுகின்ற துன்பங்களிலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.





அதுமாத்திரமல்ல. இன்றைக்கு பல்வேறு இடங்களில் மலைவாழ் மக்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்கள். காடுகளை வெட்டக் கூடியவர்கள், மிகப் பெரிய காடுகளை வெட்டி சந்தன மரங்களை வெட்டக் கூடியவர்கள் எல்லாம் இவர்களைக் கொத்தடிமைகளாக வைத்து வேலை வாங்குகிறார்கள். ஆனால் அதிகாரிகள் பிடிக்கும்போது அந்தப் பெரிய பெரிய கடத்தல்காரர்கள் தப்பித்து, இந்த மலைவாழ் மக்கள் அந்த வழக்குகளிலே சிக்க வைக்கப்படுகிறார்கள். இதிலே வனத்துறை அதிகாரிகள், காவல் துறையினர், பல்வேறு அதிகாரிகள் இதிலே பங்கேற்றுக் கொள்கிறார்கள். நான் தமிழக முதல்வர் அவர்களையும், தமிழக அரசையும் பார்த்து வேண்டிக்கொள்வேன். இப்படிக் கடத்தல்காரர்கள் தப்பித்து, அங்கே கொத்தடிமைகளாகப் பணி செய்கின்ற மலைவாழ் மக்கள் மாட்ட வைக்கப்படுகின்ற சூழ்நிலைக்கு இந்த அரசு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல. கடந்த ஆட்சிக் காலத்தில் மலைவாழ் மக்கள் கொத்தடிமைகளாக வாழ்ந்து கொண்டிருந்த நேரத்தில் அவர்களுக்கு உதவவேண்டுமென்று முயற்சி செய்த அதிகாரிகள்கூட பழி வாங்கப்பட்ட நிலைமைகளை நான் இங்கே நினைவுப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கொடைக்கானல் அதற்கு ஒரு எடுத்துக் காட்டாக இன்றைக்கும் நம்முடைய நினைவிலே மங்காமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் கொத்தடிமைகளாக வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு இந்த அரசு முன்முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, இன்றைக்கு சமுதாயத்தின் அடித் தட்டில் வாழ்கின்ற அரிசன மக்கள் மிகக் கடுமையான தாக்குதல் களுக்கு உள்ளாகிறார்கள். எங்கே தாக்குதலுற்றார்கள் என்று கேட்பீர்களேயானால், காங்கிரசு ஆட்சி நடத்துகின்ற பல்வேறு மாநிலங்களிலே தினசரி இப்படிப்பட்ட தாக்குதல்கள் கடந்த 40 ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. காந்திமகான் உயிரோடு இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருந்தால் கட்டாயமாக உண்ணாவிரதத்தை முடித்து இருக்க முடியாது என்கின்ற அளவுக்கு இன்றைக்கு இப்படிப்பட்ட தாக்குதல்கள் தொடர் கதைகளாக நடந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட தாக்குதல்கள் நாடு முழுவதிலும் நடக்கும் நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அரிசன மக்களுக்கு வாழ்வு வழங்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் பெரும்பாலும் விவசாயி களாக, விவசாயத் தொழிலாளர்களாக வாழ்கிறார்கள். நாம்

நிலச் சீர்திருத்தத்தை அதிகமாக அமல்படுத்தச் செய்ய வேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டம் என்பது கறாராக அமல்படுத்தப்பட்டு உரிய நிலம் ஏழை அரிசன விவசாயத் தொழிலாளர்களுக்கு முறையாகப் பகிர்ந்து அளிக்கப்படுமே யானால் இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையிலே அவர்களுக்கு ஒரு முன்னேற்றத்தை நாம் ஏற்படுத்தித் தர முடியும்.

அதுபோல குறைந்தபட்ச கூலிச் சட்டம் பெரும்பாலும் விவசாய கூலிகளாக இருக்கின்ற அரிசன மக்களுக்கு கறாராக அமல்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை உருவாகுமேயானால் அவர்களுடைய வாழ்க்கையிலே ஓரளவு முன்னேற்றத்தை நாம் கொண்டு வர முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவு படுத்த விரும்புகிறேன். இடதுமுன்னணி ஆட்சி செய்கின்ற மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்களில் இப்படிப்பட்ட திட்டங்கள் வாயிலாக அரிசன மக்களுக்கு உபரி நிலங்கள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அங்கெல்லாம் இப்படிப்பட்ட சமநிலைக்கு அவர்கள் இழுத்து வரப்பட்டு இருப்பதன் காரணமாக அவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. தமிழகத்திலே அரிசன மக்கள் மீது, மலைவாழ் மக்கள்மீது, தாழ்த்தப்பட்ட மக்கள்மீது அக்கறை கொண்டிருக்கிற தமிழக அரசு இந்தப் பிரச்சினையில் விசேஷ அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அரிசனங் களுக்கு எதிராக நடத்தப்படுகின்ற தாக்குதல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க முயற்சி எடுக்கவேண்டும்.

பல்வேறு இடங்களில் அரிசனங்களுக்கு என்று ஒதுக்கீடு செய்யப்படுவதைக்கூட அரிசனங்கள் என்று போலிச் சான்றிதழ் பெற்ற ஒரு சிலர் அனுபவித்துக் கொண்டிருக் கிறார்கள் என்பது மாத்திரமல்ல, தேர்தல்களில்கூட அவர்கள் அப்படிப்பட்ட முயற்சியை மேற்கொண்டார்கள் என்பதெல்லாம் நமக்குச் சரித்திரமாக முன்னின்றுகொண்டு இருக்கிறது. அரிசன மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை வேறு யாராவது அதிகாரிகளை வசப்படுத்தி போலியாகப் பெற்றுக் கொள் வதற்கு முயற்சி செய்வார்களேயானால், அதற்கு உடந்தையாக இருக்கிற அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும். அப்படிப்பட்ட போலியான முயற்சி களைத் தடுத்து நிறுத்துவதற்கு எல்லா முன்முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





கூடியாக நான் முதல்வர் அவர்களையும், தமிழக அரசையும் வேண்டிக் கொள்வது எல்லாம், அடித்தட்டிலே வாழ்கின்ற அரிசன மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் எதிர்காலத்திலேயாவது ஒரு நல்ல முன்னேற்றம் ஏற்படும் வகையில் மீண்டும் மீண்டும் இந்தச் சட்டத்தை நீட்டித்து நீட்டித்துத் தான் அவர்களுக்கு காலத்தை ஓட்ட வேண்டு மென்ற நிலைமை இல்லாமல், அவர்களும் சமுதாயத்திலே சம அந்தஸ்தோடு வாழ்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தும் வகையில் எல்லா விதமான முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டு இந்தத் திருத்தத்தை நான் வழிமொழிந்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

11.10 மணி

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்ட 62-வது திருத்த மசோதாவின்மீது, இம் மசோதாவை வரவேற்று, இங்கே நடைபெறுகிற விவாதத்தில் கலந்து கொண்டு பேசு வதற்கு வாய்ப்பு அளித்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

இட ஒதுக்கீடு தொடர வேண்டும்; அவர்களுடைய அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத் தோடு கொண்டுவரப்பட்டது இந்த மசோதா. 40 ஆண்டுக் காலமாக அவர்கள் அனுபவித்து வந்த அந்த உரிமைகள் தொடர வேண்டும். எம்.எல்.ஏ. மற்றும் எம்.பி. தேர்தல் களில் அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்கள்—தொகுதி கள்—தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட இந்த மசோதாவை நான் முழுமனதோடு இங்கே ஆதரிக்கிறேன். ஆனால், அவர்களால் சுயமாக எல்லாக் கிராமங்களிலும் தேர்தல் நேரங்களில் வாக்களிக்க முடிகிறதா என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பல்வேறு அரிஜனக் கிராமங்களில் வசிக்கக்கூடிய மக்கள், வேறு இடங்களில் வாக்குச் சாவடிகள் அமைக்கும்போது அவர்கள் அந்த இடங்களுக்குப் போய் வாக்களிக்க முடிகிறதா? அவர்கள் அங்கே போய் வாக்களிக்கப் போகிறபோது ''உங்களுடைய வாக்குகளை எல்லாம் போட்டாகி விட்டது. போய் வாருங்கள்'' என்று சொல்லுகிற நிலை இருக்கிற தொகுதிகள் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலேயே பல்வேறு இடங்களில் அப்படி நடைபெற்றது. நான் கடுமையாக நடவடிக்கை எடுத்திருப்பேன். ஆனால் அந்த நேரத்தில் வேறு விதமாக பிரச்சினை கிளம்பும். திருப்புடை-

மருதூர் என்ற ஊரில் நான் இதுவரை 20, 25 ஓட்டுகளுக்கு மேல் வாங்கியதில்லை. மானமறநல்லூர் என்று ஒரு கிராமம். அங்கே ஹரிஜன மக்கள் போய் வாக்களித்ததே கிடையாது. அவர்கள் போவதற்கு முன்பே அவர்கள் வாக்குகள் போடப்பட்டு விடும். நம் தமிழகத்தில் இப்படி எத்தனை கிராமங்கள் இருக்கின்றன என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற இடங்களில் மட்டும் அவர்கள் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் அவர்கள் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அவர்களுடைய பிரதிநிதித்துவம் கண்டிப்பாக அங்கே இருக்கும். ஆனால், அவர்கள் வாக்களிக்கிற அந்த அரசியல் உரிமை மற்றத் தொகுதிகளில் அநேகமாக மறுக்கப்படுகிறது. ஒரு வேளை ஆதரவாக இருந்தால் அந்த உரிமை கொடுக்கப்படலாம். ஆகவே அந்த அரசியல் உரிமையை மிகவும் முழுமையாகப் பாதுகாக்க வேண்டுமானால் அவர்களுடைய கிராமங்களிலேயே, ஹரிஜன மக்களுக்கு அவர்கள் வசிக்கக் கூடிய கிராமங்களிலேயே—வாக்குச் சாவடிகள் இருக்கும் நிலையை உருவாக்கித் தர வேண்டும். அப்படி அவர்களுக்கு அவர்கள் வசிக்கக் கூடிய இடங்களிலேயே வாக்குச் சாவடிகள் இருந்தால்தான் சுயமாக அவர்கள் வாக்களிக்க முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சொன்னதைப் போல், அவர்களுடைய சலுகைகளைப் பலபேர் தட்டிப் பறிக்கக்கூடிய அளவுக்கு ஹரிஜன மக்களுடைய சலுகைகளை மற்றப் பிரிவினர் பெறுவதற்கு போலிச் சான்றிதழ்கள், இன்னும் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டதை நாடே நன்றாக உணரும். பத்திரிகைகளிலும் பல செய்திகள் வந்திருக்கின்றன. என்னதான் இட ஒதுக்கீடு கொடுத்தாலும் 50 அல்லது 52 எம். எல். ஏக்கள் தான் வர முடியும். வேண்டுமானால் இந்த 50 அல்லது 52 எம். எல். ஏக்கள் வளர்ந்திருக்கலாம். ஆனால் அந்தச் சமுதாயம் என்றைக்கு வளரப் போகிறது ? அந்தச் சமுதாயத்திற்கு வளர்ச்சியே கிடையாது. எம். எல். ஏ. வேண்டுமானால் எம்.எல்.ஏ. ஆக இருக்கலாம். எம்.பி., எம். பியாக இருக்கலாம். ஆனால் ஒட்டு மொத்தமாக அந்தச் சமுதாய மக்கள் வாழ்வது எப்போது ? வளருவது எப்போது ?

ரேஷன் கடைகளில் இலவச அரிசி தருகிற கியூவில் நிற்பவர்கள்கூட அவர்கள்தான். காரணம் அவர்கள் விவசாயக் கூலிகள், சாதாரண மக்கள். இன்னும் சொல்லப்போனால் அவர்கள் கியூவில் நிற்கும்போது அவர்களை அடையாளம் காண முடிகிறது. அவர்கள்தான் இலவசமாக அரிசிவாங்க வந்திருக்கிறார்கள்.





பக்கத்து வீட்டுக்காரனுக்குத் தெரியும். இவர்களுக்கும் தெரியும். காரணம் கியூ. பத்திரிகையிலும் வந்து விடுகிறது. அவர்கள் இலவச அரிசி பெறுவது டி.வியிலும் காட்டுகிறார்கள். இன்னான் னார் பெறுகிறார்கள் என்று காட்டுகிறார்கள். ஒரு சாதாரண மனிதன், ஒரு சாமான்ய மனிதன் இதைப் பெறும்போது இது விளம்பரப்படுத்தப்படுகிறது. 5 கிலோ அரிசி—நங்கள் 20 கிலோ போடப் போகிறார்கள்—அதைப் போடும்போது அவர்கள் வாங்குகிறார்கள். அதைக் காட்டுகிறார்கள். ஆனால் பெரிய பெரிய பணக்காரர்கள் வெறும் கடிதப் போக்குவரத்தின் மூலமாக அரசாங்கத்திடமிருந்து பல கோடி ரூபாயை பல லட்ச ரூபாயை கடனாக வாங்கிக் கொள்கிறார்கள். வெறும் கடிதப் போக்குவரத்தில் பெறுகிறார்கள். இதை யாருக்கும் தெரியப்படுத்துவது கிடையாது. அரசாங்கத்திற்கும் அவர்களுக்கும் தான் தெரியும். காரில் போய் கடன் வாங்கிக் கொள்கிறார்கள். பெரிய வங்கிகளில் அரசாங்கத்தில் பெரிய கடன் தொகையைப் பெறுகிறார்கள். ஆனால் 5 கிலோ அரிசி வாங்குகிறவன் கியூவில் நிற்கிறான். இப்படி எத்தனைக் காலத்திற்கு அவர்களுக்கு அரிசி போட்டு—20 கிலோ அரிசி இலவசமாகக் கொடுத்து இந்த நாட்டை உருப்பட வைக்கப் போகிறோம் என்ற கேள்வியை நான் என் உள்ளத்திலேயே கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

11.15 மணி

[1]என்னைப் பொறுத்தவரையில் அதற்கெல்லாம் ஒட்டு மொத்தமாகத் திட்டங்களை வைத்து, நம்முடைய முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், கேட்டால், கொடுத்தால்தான் நல்லது என்று, நீங்கள் பேசுவதற்குள்ளேயே நம்முடைய நாஞ்சிலார் அவர்களிடத்திலே கூடச் சொன்னேன். யாருக்காவது இலவசமாக ஒரு வேட்டி கொடுத்தால் அதைப் பிரித்துப் பார்ப்பார்கள், இது நல்ல வேட்டி இல்லை என்று சொல்வார்கள். ஆனால், எனக்கு வேட்டியே கிடையாது என்று கேட்டால், அப்பொழுது கொடுத்தீர்கள் என்றால் மதிப்பான். பசியாக இருக்கிறேன் என்று சொல்லி தாலுக்கா ஆபீசுக்கு முன்னால், கலெக்டர் ஆபீசுக்கு முன்னால் வந்து நின்று, எங்களுக்குச் சாப்பாடே இல்லை என்று சொன்னால் அரிசியைக் கொடுங்கள். ஒரு சமுதாயத்தைக் காப்பாற்றலாம். இல்லாவிட்டால் 300 ரூபாய் வரம்பு—இப்பொழுது 1,000 ரூபாய், இப்படி வரம்பு வைத்துக் கொண்டு கொடுப்போமேயானால் சாப்பாட்டுக்கே ஒரு ஓட்டலாக அரசாங்கத்தை நாம் நடத்தியதைப்போல பிற்காலத்தில் எண்ணங்கள் வந்து விடக் கூடாது. காரணம், நீங்கள் நல்ல எண்ணத்தில் செய்கிறீர்கள். ஒத்துக் கொள்கிறேன். ஆனால் வெளியே வரவேற்பு கிடையாது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் இலவச வேட்டி, புடவை கொடுத்தார். அரிசி கொடுத்தார். இப்பொழுது இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களும் அரிசி கொடுக்கிறார் : வேட்டி கொடுக்கிறார். ஏழை எளியவர்களுக்கு, இல்லாதவர்களுக்குத்தான் கொடுக்கிறாரே தவிர இருக்கின்றவர்களுக்குக் கொடுக்கவில்லை. அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் அதை எதிர்க்கின்றார்களா அல்லது ஆட்சேபிக்கின்றார்களா ? அவருடைய கருத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று நான் வேண்டுகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : இந்த நாடு வளர வேண்டுமென்பதற்காக எதிர்க்கின்றேன். நான் ஓட்டுக்காகப் பயந்தவன் அல்ல; என் ஊரிலே தெரியும். ஓட்டு வாங்குவதற்குப் பயந்தவன் கிடையாது. அதாவது இலவசமாகக் கொடுக்கக் கொடுக்க உழைப்பதற்கு ஒரு எண்ணமே வராது.

ஊரிலேயிருந்து யாராவது ஒருவர் நம்முடைய—யாருடைய வீட்டுக்காவது வேலை தேடி வந்தால் அவருக்கு ஏதாவது ஒரு வேலையைக் கொடுத்து வேலையைப் பார் என்று சொன்னால் அவன் ஒழுங்காக இருப்பான். ஆனால், நான் தோறும் சாப்பாட்டைப் போட்டுக் கொண்டு, கையிலே பத்து ரூபாயைக் கொடுத்தால் வேலைக்கே போக மாட்டான். ஆகவே, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு இப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை வளர்ப்பது பிற்காலங்களில் ஒரு நல்ல ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு உதவாது என்பதற்காக நான் இங்கே சொன்னேன். வேண்டுமானால் நான் இப்பொழுது சொன்னேன். பணக்காரர்கள்—அதற்குள் குறுக்கே வந்து விட்டார்கள் — நம்முடைய அரசாங்கத்திலே உருந்து வசதி படைத்தவர்கள், கடன் வாங்கியவர்கள் இருப்பார்கள் அல்லவா, அவர்களையெல்லாம் தினத்தந்தியிலே போட வேண்டாமா? வாங்கியவர்கள் தெரிய வேண்டும் அல்லவா? இவன் மட்டும் கியூவிலே நிற்கிறான். பார்க்கிறார்கள் எல்லோரும். வசதி படைத்தவர்கள் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறார்கள்; TIIC, SIPCOT இதில் எல்லாம் வாங்கியிருக்கிறார்கள். தியேட்டர் கட்ட இவ்வளவு, பேக்டரி தொடங்க இவ்வளவு, எவ்வளவு கடன், எவ்வளவு அவர்கள் விற்பனை வரி பாக்கி வைத்திருக்கிறார்கள், அவர்களையெல்லாம் படத்திலே போட்டால் தான் அந்த





ஊரிலே தெரியும். ஏனென்றால், அதிகமாகக் கடன் வாங்கியவன்தான் பெரிய மனிதனாக இருக்கிறான். கியூவிலே நிற்கின்றவர்களுக்கு ஐந்து கிலோ, பத்து கிலோ, இருபது கிலோ அரிசி என்று வழங்கும்பொழுது, அப்படிப்பட்டவாகள் நம்முடைய சமுதாயததுல இந்தச சாதாரண மக்களுடைய உழைப்பில், அவர்களுடைய இரத்தத்தில் வாழ்ந்து விடக் கூடாது. ஆகவே, அதற்காகத்தான் சொன்னேன. வேறு ஒன்றுக்கும் அல்ல.

வாக்குகளுக்காக இதை யாரும் கொடுக்கக் கூடாது என்பதுதான். ஆனால் தேர்தல் நேரத்தில் சில தொகுதிகளையெல்லாம் சொன்னார்கள்—இப்பொழுது அல்ல—சட்டமன்றத் தேர்தலிலே சொல்கிறேன்—வேட்டி, சேலை; வேட்டி, சேலை கொடுத்து ஓட்டு வாங்கினால் சட்டசபை என்ன ஆகும்? தேர்தலுக்கு இதை அரசாங்கம் செய்வது வேறு. இப்பொழுது நீங்கள் கொடுத்தீர்கள் என்றால், தேர்தல் நேரத்திலே அந்த வேட்டி கிழிந்து போகும். நாங்கள் வேட்டி வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

ஒருவேளை அரசாங்கம் இக்கட்டாகக்கூட எண்ணலாம். இதை நாம் நிறுத்திவிட்டால் ஒரு வேளை எதிர்ப்பார்களோ, இதைக் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்தால் ஆதரிப்பார்களோ என்று எண்ணலாம். ஓட்டு போடுபவன் போட்டுக் கொண்டுதான் இருப்பான்; வாங்குகிறவன் வாங்கிக் கொண்டுதான் இருப்பான், போட மாட்டான். ஏனென்றால், தேர்தல் நேரத்தில்...

* THIRU OSCAR C. NIGLI : Hon. Deputy Speaker Sir, I was just wondering whether we are talking about the Constitution (62nd Amendment) Act or about some other issue. I would suggest that, since we have taken up for discussion only this subject, let us carry on with it.

திரு. பி. எச். பாண்டியன் : அதாவது, நம்முடைய தேர்தல் காலங்களிலே கட்சி என்றுதான் நிற்பார்கள். அவர்களுக்குத் தெரியாது. தேர்தலிலே நிற்காதவர்களுக்குத் தெரியாது.

11-20 மணி

THIRU OSCAR C. NIGLI : Hon. Deputy Speaker Sir, I was just trying to emphasise the fact that we have to ratify the Amendment. More than half of the States have ratified the Amendment. I think Hon. Mr. Pandian is committing the fallacy of logic when he is unable to answer my questions. He is not talking on the 62nd Amendment. He is attacking it in a different angle, talking about the elections, nominations, etc. They do not come into the picture at all. It is an unfortunate thing that they have been brought here.

[1990 சனவரி 19

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் திரு. பாண்டியன் அவர்கள் சலுகைகளுக்கு எதிராக இங்கே வாதம் செய்து கொண்டிருக்கிற காரணத்தால் ஒருவேளை ஆதி திராவிட மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு தரப்படுகிற இந்தச் சலுகையை எதிர்க்கிறாரோ என்ற சந்தேகம் வந்துவிடக் கூடும் என்பதால் இந்தக் கேள்வி எழுகிறது. எனவே, அவர்கள் இந்த தீர்மானமாக்குகிற பிரச்சினையில் பேசினால் எல்லோரும் ஏகோபித்து இந்தத் திருத்தத்தை ஏற்றவர்கள் ஆவோம்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, நான் இந்த 62-வது அரசியல் சட்டத் திருத்த மசோதவை ஆதரிக்கிறேன் என்று எடுத்த எடுப்பிலேயே சொல்லி விட்டேன். இது 50 பேர்கள் சம்பந்தப்பட்ட மசோதா. ஆனால் இந்த 50 பேர்களை உருவாக்கக்கூடிய சமுதாயம் எப்படி இருக்கிறது? அந்தச சமுதாயம் இன்றைக்கு கையேந்தி வாங்கிக் கொண்டிருந்தால் அதை எப்படி வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்ல முடியும் என்பதற்காகத்தான் சொன்னேன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 50 பேர்கள் ஏற்றுக் கொண்டாலே மக்கள் பிரதிநிதித்துவ தத்துவ அடிப்படையில் எல்லோரும் ஏற்றுக் கொண்டதாகத்தான் அர்த்தம்.

திரு. பி. எச். பாண்டியன் : இந்தத் தத்துவத்தில் நான் உடன்பாடு வைப்பது கிடையாது. ஏனென்றால் மக்கள் மன்றம்தானே பெரியது என்று நாம் சொல்கிறோம்? நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நிக்லி அவர்கள் ஒரு வேளை நான் பல கோடி ரூபாய், பல லட்ச ரூபாய் வாங்கியவர்கள் எல்லாம் என்று சொன்னேனே அப்போதே எழுந்து பேசியிருப்பாரானால் அது விவகாரம் வேறு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தீர்மானத்தை ஒட்டிக் கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

திரு. பி. எச். பாண்டியன் : இந்தத் தீர்மானத்தில் இல்லாவிட்டாலும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வேறு ஏதாவது உரையில் பதில் சொல்லும்போது, அரசாங்கத்திலே எவ்வளவு கடன் வாங்கி இருக்கிறார்கள் இந்தப் பெரிய மனிதர்கள் என்று அவர்கள் பெயர்களைச சொல்லி, இயக்குநரிடம் சொல்லி அந்தயெல்லாம் பத்திரிகையிலே விளம்பரம் போட்டு நாட்டிற்குக் காட்ட வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. நீங்கள் போடலாம்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசாங்கத்திடம் கடன் வாங்குவது என்பது அவர்களுடைய தொழில் நடத்துவதற்காகத்தான் கடன் வாங்குகிறார்கள். அரசாங்கம் அப்படி யாராவது முனைவர்களாக வந்து தொழில்



1990 சனவரி 19] [டாக்டர் மு. கருணாநிதி]

நடத்தினால் நாட்டில் தொழில் வளம் பெருகும் என்பதற்காக பல்வேறு நிறுவனங்கள் மூலமாக கடன்களைக் கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்துகிறது. அவர்கள் ஓரளவிற்கு தாங்களே முன்வந்தும் மற்றும் பங்குதாரர்களை சேர்த்துக் கொண்டும் அந்த முயற்சியில் இறங்குகிறார்கள். அந்த அடிப்படையில் தான் Joint Sector என்றும் Associate Sector) என்றும் கூட அரசாங்கத்தின் சார்பில் கொள்கைகள் வகுக்கப்பட்டு நிதியுதவி தரப்படுகின்றன. அவர்களுடைய புகைப்படங்களை வெளியிடத் தேவையில்லை. அந்தத் தொழில்கள் தொடங்கப்படுகிற நேரத்திலேயே இன்னின்னார் கடன் வாங்கி இருக்கிறார்கள் — சிப்காட் மூலமாக, டிக் மூலமாக, இப்படி கடன் வாங்கியிருக்கிறார்கள், இதோடு கூட்டு சேர்ந்திருக்கிறார்கள் என்பது இந்த உலகத்திற்கே தெரிந்து விடுகிறது, ஒருவேளை நண்பர் பாண்டியன் அவர்கள் சொல்வதைப் போல அரசாங்கத்திடம் கடன் வாங்கிக் கொண்டு யாராவது ஏமாற்றியிருந்தால், பித்தலாட்டம் செய்திருந்தால் அவர்களுடைய புகைப்படங்களை வேண்டுமானால் பிரசுரிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது. நல்ல காரியத்திற்காக கடன் வாங்கி அரசாங்கமும் அவர்களும் சேர்ந்து நடத்துகிற நல்ல காரியங்களை இன்றைக்கு நாம் விமர்சிக்கிற நேரத்திலே அது விகாரமாகி விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த விளக்கத்தை அளிக்கிறேன். கடன் வாங்கி தவறு செய்பவர்கள் யாராவது இருந்தால் அவர்களுடைய படங்களைப் போட்டு இவர்களிடத்தில் எச்சரிக்கையாக இருங்கள் என்று நாட்டு மக்களுக்குக் கூட கூறலாம்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதில் ஒத்த கருத்தை உடையவனாக இருக்கிறேன். இதுவரையில் 17 ஆயிரம் பேர்கள் கடன் வாங்கியிருக்கிறார்கள், அவர்கள் தொழில் தொடங்கினார்களா? 17 ஆயிரம் தொழில்கள் இருக்கின்றனவா என்பதைத் தெரிந்து அவைக்குத் தெரிவியுங்கள். இந்த மசோதாவை முழுமையாக ஆதரிக்கிறேன். நான் பேசிய கருத்துக்கள் அத்தனையும் பொதுவாகப் பேசியதுதான். ஏனென்றால் நாளைக்குப் போய் பார்த்தால் 'உங்களுக்கு அரிசி கொடுக்கக் கூடாது' என்று சொன்னதாகச் சொல்வார்கள். நான் அதற்காகப் பயப்படவில்லை. அதனால் ஒன்றுமில்லை. அதாவது அரிசனங்கள் என்று வருகிறபோதுதான் பேசுவார்கள். ஒரு இடத்திலும் அதை ஜாதிப் பிரச்சினையாக்கி விடக்கூடாது. அதனால்தான் அதை நிறுத்தி விட்டேன். ஆகவே தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

11-25 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, இந்தக் கட்டத்திலே அரசியல் சட்டத் திருத்த மசோதாவை பிரேரேபித்த முதன் மந்திரியின் அந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பிலே, ஜனதா தள் சார்பிலே

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்) [1990 சனவரி 19

நான் ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல வந்திருக்கிறேன். இதுவரையிலே அரசியல் கட்சிகளின் சார்பிலே பேசின கருத்துக்கள் எல்லாம், ஆதியிலேயிருந்து நம்முடைய நாட்டின் நிலைமை, அந்த இனத்திற்கு யார் யார், எந்த எந்தத் தலைவர்கள் எல்லாம் பாடுபட்டார்கள், எப்படி எப்படி அதை நிறைவேற்றினார்கள் என்பதைப் பற்றிய நல்ல கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள். அது ஏன் இன்னும் நிறைவேறவில்லை. இத்தனை வருடங்கள் ஆச்சே, வெள்ளைக்காரன் காலத்திலும் சரி, நமக்குச் சுதந்திரம் வந்த காலத்திலும் சரி, இன்னும் அந்த நிலையிலேயே அவர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் சில பேர்கள் சுட்டிக் காட்டினார்கள். இன்னும் அவர்கள் முன்னேறவில்லை என்ற கருத்தில்தான் நாம் இன்னும் அவர்களுக்கு அந்தச் சலுகையைக் கொடுக்கிறோம். காரணம் என்ன? நம்முடைய நாட்டில், இந்தச் சமூகம், எஸ்.சி.; எஸ்.டி. என்பதை ஒரு வழியாக மகாத்மா காந்தி அவர்கள் அரிஜன் என்று மாற்றினார்கள். ஏன் என்றால், சில பேர்களுடைய ஜாதியின் பெயரைக் கொச்சைப் படுத்திச் சொன்னால், கோபம் வரும். ஏன் என்னையே கூட, பார்ப்பான் என்று சொன்னால், ரொம்பவும் கோபம் வரும். பிராமணன் என்று சொன்னால், ரொம்ப சந்தோஷப் படுவேன் இல்லையா, அது மாதிரி, அவர்களிடத்திலே போய், ஏன், பள்ளன், பறையன் என்று சொன்னால், கோபப் படுவான். எனவே அரிஜன் என்று சொன்னால் மொத்தமாப் போச்சு, தீர்ந்து போச்சு. அதனால் அவர்களுடைய பெயரை, முதன் முதலாக மாற்றினார்கள் காந்தி அவர்கள். 30 வருடமாக இந்தியா முழுவதும் சுற்றினார்கள். இந்தியா முழுவதும் இந்தத் தீண்டாமையை ஒழிப்பேன் என்று சுத்தினார், பாவம். அதிலே குறைச்சல் இல்லை. அப்போது நாம் எல்லாம் ஒன்றாக இருந்தோம். இப்போது மாதிரி பாகிஸ்தான் பிரியவில்லை பங்களாதேஷ் பிரியவில்லை. எல்லோரும் ஒன்றாக இருந்த காலத்திலே அவர்கள் சுற்றினார்கள். யாராவது கேட்டானா காந்தியைப் பற்றி. காந்திக்குப் படம்தான் வைக்கிறார்களே தவிர சிலைதான் வைக்கிறார்களே தவிர, இன்னும் அதைக் கேட்கிறவன் நாட்டிலே ஒருவரும் இல்லை.

நாங்கள் ஒரு கட்சிதான் ஜகஜீவன்ராம் அவர்களை நிறுத்தினோம். இவர்களுக்கு ஓட்டுப் போட்டால், நாங்கள் அவரை பிரதம மந்திரியாகக் கொண்டுவருவோம் என்று சொன்னோமா இல்லையா, ஜனதாக் கட்சியிலே, இந்த ஹரிஜனங்களுக்கு, அவர் ஒரு ஆளுக்கு ஓட்டுப் போடுங்கள், பிரதமராக நிறுத்துவதற்கு அவர்களுக்குத் தகுதியிருக்கிறதா, இல்லையா பாருங்கள் என்று கேட்டோம். எந்த ஜாதிக்காரனாவது ஓட்டுப் போட்டானா? (குறுக்கீடுகள்). நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யாராவது ஒருவர் பேசுங்கள்.



1990 சனவரி 19]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உறுப்பினர் வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்கள் சொல்கிற கருத்துக்கு உரிய மரியாதை அளித்துச் சொல்கிறேன். ஏன் என்றால், அவரோடு மிக நெருங்கிய தொடர்பு உடையவன்தான், எப்போதும் பாசம் உடையவன்தான். ஜகஜீவன்ராம் அவர்களை ஜனதாக் கட்சியினுடைய பாராளுமன்றக் கமிட்டியினுடைய தலைவராக, பார்லிமெண்டரி கமிட்டி இருக்கிறது அல்லவா, லெஜிஸ்லேச்சர் பார்ட்டி மாதிரி, பார்லிமெண்டரி பார்ட்டி, அதனுடைய தலைவராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜனதாக் கட்சியிலே 1978-லே சொன்னபோது, அதை ஏற்று இருந்தாலும்கூட எவ்வளவோ சிறப்பாக இருந்திருக்கும். அது ஏற்கப்படவில்லை. அங்கேயே ஏற்கப்படவில்லை என்பதைச் சொல்கிறேன். எனவே ஜனதாக்கட்சி ஏற்றுக்கொண்டது என்பதை நான் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை என்பதற்காகச் சொல்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே பார்லிமெண்டிலே, சட்டசபையிலே நடந்த பல நிகழ்ச்சிகளைப் பற்றி நான் இங்கே சொல்ல முடியும். இன்றைக்கு இருக்கக்கூடிய சமூகத்திலே அவர்களை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்களா இல்லையா என்றால், நம்முடைய கலைஞர் அவர்கள் ஒருவர்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால் அவர்களுடைய மகனுக்கு தாழ்த்தப்பட்ட சமூகத்திலே கல்யாணம் பண்ணியிருக்கிறார்கள். வேறு எவனாவது கல்யாணம் பண்ணி இருக்கிறானா? நான் உங்களைக் கேட்கிறேன். இத்தனை பேர்களையும் கேட்கிறேன்.

அதுமட்டுமா, ஏன் பொதுத் தொகுதிக்குக் கொடுக்கணும், பொதுத் தொகுதியிலே போய், எவனாவது எஸ்.சி., எஸ்.டி. ஆட்களை நிறுத்து என்று சொன்னால், எந்தக் கட்சியும் நிறுத்துவது இல்லை. அவர் ஒருவர்தான் நம்முடைய கலைஞர் ஒருவர்தான் திருச்சியிலே லால்குடி யூனியனிலே ஒரு ஹரிஜனை நிறுத்தினார். எங்கள் யூனியன் சேர்மனாக நிறுத்தினார்கள் ஐயா. அவர்கள் தோற்றுப் போய்விட்டார்கள். காரணம் என்ன சொல்கிறேன் என்றால், ஒருவரும் ஆதரிக்கவில்லை. சமூகத்திலே அவர்களைப் புறக்கணிக்கிறார்கள் என்பதற்காகச் சொல்கிறேன். இப்போது சமீபத்திலே நடந்தது. வெகு நாளைக்கு முன்பு அல்ல. நாம் மறந்துபோக முடியாது. அந்த லால்குடி யூனியனிலே, அவர்களுக்குத் தெரியும், இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே.........

திரு. இளம்வழுதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, லால்குடியிலே ஹரிஜன் ஒருவரை நிறுத்தினார்கள் என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல. பொதுத் தொகுதியிலே சி. டி. தண்டபாணி அவர்களையும், அண்மையிலே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மறைந்த ஆப்ரஹாம் அவர்களையும் நிறுத்தி வைத்தார்கள் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் தீட்சிதர் அவர்கள் எந்தக் கட்சியிலேயும் நிறுத்த வில்லை என்று பொதுவாகச் சொல்லிவிட்ட காரணத்தினாலே, இப்போது குறிப்பிடவேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஊராட்சி மன்றத் தேர்தல் நடந்த காலத்திலே, எங்களுடைய கட்சிக்குக் கொடுக்கப்பட்ட 4 ஒன்றியங் களில் தஞ்சை மாவட்டத்திலே நாங்கள் போட்டியிட்டதிலே— 3 ஒன்றியங்களில் அரிசன வகுப்பைச் சேர்ந்த எங்களுடைய தோழர்களைத்தான் நிறுத்தினோம். நாகப்பட்டினம், கீவலூர், தலைஞாயிறு, ஆகிய இந்த மூன்றிலும். நாகப்பட்டினத்திலே நாங்கள் தோற்றோம். ஆனால் கீவலூர், தலைஞாயிறு ஒன்றியங் களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எங்களுடைய தோழர் கள்தான் ஒன்றியச் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் இன்றைக்குப் பொறுப்பிலே இருக்கிறார்கள். அதேபோல் எங்களுடைய கட்சி ஒன்றாக இருந்த காலத்திலும், இன்று வரைக்கும் கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் என்பது—இன்றைக்கு டி.பி.எச். என்பவர் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே அங்கே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர், அவர்களை நிறுத்தித்தான் சேர்மனாக ஆக்கியிருக்கிறோம். அவர்கள் இன் றைக்கு சேர்மனாக இருக்கிறார். இன்றைக்கு அல்ல. 1957-ஆம் ஆண்டிலே ஊராட்சி ஒன்றியங்கள் உருவான காலத்தி லிருந்து அன்றைக்கு மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எச். ஜி. முருகையன் அவர்கள் அந்த ஒன்றியத்தினுடைய சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்றைக்கு அப்படி எந்த ஒரு கட்சியும் இல்லை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மையல்ல, சரியல்ல, என்ற காரணத்திற்காக நான் இதைச் சொல்ல விரும்பு கிறேன்.

11–30 மணி

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சந்தோஷப்படுகிறேன். அப்படியிருந்தால், விளம்பரம் சரியில்லை என்று நினைக்கிறேன். விளம்பரப்படுத்தி இருந்தால் நானே அதை உறுதிப்படுத்தியிருப் பேன். ஆக இந்த முடிவு வந்தது. மத்தியிலே மறுபடியும் 10 வருடம் எக்ஸ்டண்ட்பண்ணியிருக்கிறார்களே, அதை 'யூனானிமஸ்' ஆக மறுப்பு இல்லாமல் அனுப்ப வேண்டுமென்று கலைஞர் அவர் கள் கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றித்தான் பேசுகிறோம் இப் போது. அதைப்பற்றி பேசுகிறபோது பல பிரச்சினைகள் எல்லாம் இப்போது உரிமைகளாக இருக்கின்றன. ஆங்கிலோ–இந்தியன் ஒருவர் நடுவிலே பேசினார். இந்த நாட்டிலே இப்போது 50-க்கு மேற்பட்ட ஆங்கிலோ-இந்தியர்கள் இருக்கிறார்களா இல்லையா? அவர்கள் வெளியே போய்விட்டார்களா? அதைப் பற்றி நாம் கணக்கு எடுக்கிறோமா, இல்லையா? அதைப் பற்றி கணக்கு எடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.



நான் வரவேற்கிறேன். அவர் சொன்னார். இன்னும் முன் னேறவில்லை என்று சொன்னார்கள். நாம் சட்டசபையில் இருந்து தானா அவர்கள் முன்னேறவில்லை? மத்தியிலே இருந்து மாநிலம் வரைக்கும் அவர்கள் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு இல்லை என்பதற்குத் தான் நான் சொல்ல வந்தேன். முன்னேறுகிறார்களா, இல்லையா என்பதைப் பற்றி இல்லை.ஜனதா கவர்ன்மெண்ட் பற்றி, காங்கிரஸ் கவர்ன்மெண்ட் பற்றிச்சொல்கிறார்கள். ஏதோ நானும் அப்படித்தான் வந்தேன் அவர்களும் அப்படித்தான் வந்தார்கள். அவர்கள் இந்திரா காங்கிரஸ்காரர்களாகப் போய் விட்டார்கள். நாங்கள் ஜனதா, ஜனதா தள்-ஆகப் போய்விட்டோம். அவ்வளவு தான் வித்தியாசம். மொத்தத்தில் எல்லாம் ஒன்றுதான். ஆக இந்த உரிமைகள் வந்து அவர்களுக்கு இன்னமும் வழங்க முடியவில்லை. ஆங்காங்கே அரிசனங்களைப் பற்றி முன்னாலே சொன்னார்கள். அவர்களுக்கு சலுகைகள் கொடுத்து இருக் கிறோம். அதை அவர்களால் சரியாக அனுபவிக்க முடிய வில்லை. கிட்டத்தட்ட 100-ல் 90 பேர், என்ற அளவில், மத்திய சர்க்கார் எஸ். சி., எஸ். டி. இது இரண்டை யும் சேர்த்து 20 பர்சென்ட்டிற்குப் பின்னால் 18 பர்சென்டாக மாற்றிவிடுகிறார்கள். நானும் தான் எஸ். சி. என்று சொல்லி எப்படியோ சர்டிபிகேட் வாங்கிவிடுகிறார்கள். நான் அதை 'பிராக்டிகலாக' நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். அப்படிப்பட்ட சலுகைகளில் அவர்கள் ஏமாந்து போகிறார்கள். படிப்பிலிருந்து, வேலை வாய்ப்பிலிருந்து மற்ற எல்லா சலுகைகளையும் அவர்கள் அனுபவிக்க முடியாமல் மேல் வகுப்பினர் எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். மேல் வகுப்பு என்றால் நீங்கள் மட்டும் இல்லையா என்று கேட்க தீர்கள். நான் உட்பட சொல்கிறேன். ஆனால் எங்களால் அந்த மாதிரி சர்டிபிகேட் வாங்க முடியாது. அவர்கள் சர்டிபிகேட் வாங்கி வேலைக்குப் போகமுடியாமல் நாட்டில் நிலைமைகள் இருக்கின்றன. அதுமாதிரி சங்கடங்கள் இருக் கின்ற காரணத்தால் இந்த மாதிரி சட்டம் நிறைவேற்றுவது அவர்களுக்கு உரிமை கொடுப்பதாகும். சட்டத்தை மாற்றி சலுகைகள் எல்லாம் இப்போது நடக்கிறது. அது மாதிரி எஸ்.சி., எஸ்.டி.க்கு 10 வருடம் கூட நிரந்தரமாகக் கொடுங்கள். 40 வருடங்களாக முன்னேறாமல் எப்படி முன்னேறப் போகிறார்கள்? சுதந்திரம் கிடைத்து 42 ஆண்டுகளாயிற்று. நாங்களும் அவர்களுக்காகக் கேட்டிருந்தோம். ஆகவே அந்த விதமான சட்டம் கொண்டுவரப்பட்டது. அதுபோல மாநிலத் திலும் சரி, அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகள் கொடுக்கப் பட்டாலும், அவர்கள் முன்னேற முடியாமல் இருப்பதற்கு இன்னும் இதர மக்களுக்கு ......(குறுக்கீடு) மற்ற கட்சி களைச் சார்ந்தவர்கள் பேசினார்கள். அவர்களுக்கெல்லாம் எவ்வளவு நிமிடங்கள் கொடுத்திருக்கிறீர்கள்? என்று பாருங்கள்.

எனக்குக் கொஞ்சம் கூட நிமிடங்கள் கொடுங்கள். அவர்கள் சொன்னார்கள். காந்தியிலிருந்து, அம்பேத்காரிலிருந்து, காமராஜரிலிருந்து என்று சொல்லிவிட்டு அண்ணாதுரையை விட்டு விட்டார்கள். எல்லா தலைவர்களும் முதலில் அரிசனங்களை முன்னேற்றுகிறோம் என்று சொன்னால் தான், அது ஒரு நாகரிகமாக இருக்கிறது என்று நினைக்கிறார்கள். வேறு ஒன்றும் செல்லமுடியாது. யார் என்ன செய்தார்கள் ? என்று சொல்கிற போது காந்தி தான் 1930ஆம் வருடத்தில் கொண்டு வந்த சலுகைதான் ராஜகோபாலாச்சாரி காலத்தில் மதுரை கோவிலில் அரிசனங்கள் ஆலயப் பிரவேசம் என்பது. மதுரை கோவிலில் வைத்தியநாத ஐயர் அரிசனங்களைக் கொண்டு வந்து விட்டார்களா, இல்லையா ? இப்போது நாம் டிரஸ்டிகளைப் போட்டால், 5 டிரஸ்டிகளைப் போட்டால் ஒரு அரிசன டிரஸ்டியைப் போடு என்று சொல்லிக் கொண்டு இருக்கிறோம். இப்போது எல்லா மட்டத்திலேயும், நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளிலே அவர்களை சேர்த்துப் போடுகிறோம். ரயிலில் போனால் ஒன்றாக இருக்கிறோம். பஸ்ஸில் போனால் ஒன்றாக இருக்கிறோம். ஹோட்டலுக்கு ஒன்றாகப் போகிறோம். நடந்து போனாலும் ஒன்றாகப் போகிறோம். ஆனால் வீட்டிற்குள்ளே வரும்போது அங்கே பிரிந்து போகிறோம். எத்தனை கல்யாணங்கள் பண்ணியிருக்கிறோம். கூட்டுக் கல்யாணங்கள். இரண்டு பேரும் கலப்புத் திருமணம் செய்து கொண்டால் சலுகை என்று வைத்திருக்கிறோம். எத்தனை கலப்புத் திருமணங்களுக்கு சலுகை வருகிறது ? வேறு எந்த ஜாதியிலாவது போய் கலப்புத் திருமணம் பண்ணிக்கொள் என்றால், பண்ணிக் கொள்ள மாட்டேன் என்கிறான்.

**11-35 மணி**

எஸ்.சி.,எஸ்.டி.யைச் சேர்ந்தவர்களாக இருந்தால் திருமணம் பண்ணிக்கொள்ள வர மாட்டேன் என்கிறார்கள். சலுகைகள் கொடுத்தாலும் நடக்க மாட்டேன் என்கிறது. இது மாதிரி அவர்கள் முன்னேற்றத்திற்காக நாமெல்லாம் சேர்ந்து நல்ல கருத்துக்களைச் சொல்லி அவர்களை எப்படி எப்படியெல்லாம் முன்னேற்றுவது என்று பார்க்க வேண்டும். கலப்புத் திருமணம் செய்வதற்கு ஆதரவு அளிப்பதா அல்லது நல்ல வேலைகளைக் கொடுப்பதா என்று பார்த்து செய்ய வேண்டும். நம்மோடு நெருங்கிப் பழகுவதற்குரிய அளவிலே அவர்களைக் கொண்டு வர இன்னும் முடியவில்லை. எங்கே பார்த்தாலும் இப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறது. எங்களுடைய ஸ்ரீரங்கம் முனிசிபாலிட்டியிலே கூட 9 அரிசனங்கள் வேகன்சி அப்படியே தான் இருக்கிறது. முன்னேறவே முடியவில்லை. எனவே இந்த நல்ல காரியத்தை செய்யும் வகையில் மத்திய அரசாங்கம் 10 வருடம் நீடித்துத் தந்திருப்பதை ஏற்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்



இந்தச் சலுகையை நாமும் துரிதமாகத் தரவேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலே எல்லோரும் சேர்ந்து, வித்தியாசம் பார்க்காமல், நினைக்காமல் ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும், பாஸ் பண்ண வேண்டும் என்று சொல்லி, ஏகமனதாக இந்தத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படியாக உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனதா தளக் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு தீட்சிதர் அவர்கள் இந்த ரேட்டிபிகேஷனை ஆதரித்துச் சொன்னார்கள். இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக சமுதாய மாறுதல்கள் வரும் என்று சொல்லுகிற அதே நேரத்தில் மாண்புமிகு சபாநாயகர் அவர்களை அழைத்து வந்து, கடந்த ஆண்டு, நீங்கள் அமர்ந்திருக்கிற அந்த நாற்காலியில் அமரச் செய்தபோது, ' எங்களுடைய கிருஷ்ண பரமாத்மா உதித்த யாதவ குலத்திலே பிறந்த உங்களை வாழ்த்துகிறேன் ' என்று சொன்னார். இப்படி குல மாறுதல்கள் சமுதாயத்திலே இருந்துகொண்டிருக்கும் போது வெறும் சட்டங்களை மட்டும் அவர் வாயால் ஆதரிப்பதில் மாபெரும் சமுதாயப் புரட்சிகள் நிகழ்ந்துவிடாது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட அரசமைப்புச் சட்டத்தினுடைய 62-வது திருத்தச் சட்டம், இந்த அவையினுடைய ஒப்புதலைப் பெற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன் மொழியப்பெற்ற அந்தத் தீர்மானத்தை இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் சார்பாக நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன்.

பொதுவாக இந்தத் திருத்தச் சட்டம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில், அடக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் பத்தாண்டுகளுக்கு இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் முனைப்போடு செயல்பட்டு, தேசிய முன்னணி ஆட்சி, ஆட்சியை ஏற்றுக் கொண்டவுடன் முதல் சட்டமாக இதனை நிறைவேற்றி, எல்லாச் சட்டமன்றங்களுக்கும் அனுப்பக்கூடிய ஒரு சட்டமாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய இட ஒதுக்கீடு குறித்து சட்டமாக அமைந்திருப்பதை நான் பாராட்டி, அதற்காக முனைப்போடு செயல்பட்டு, ஒரு அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை பாராளுமன்றத்திலே நிறைவேற்றிய தேசிய முன்னணியினுடைய ஆட்சியையும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்களையும் நான் பாராட்டுவது என்னுடைய கடமை என்பதோடு, இந்தக் கூட்டத் தொடரின்

முதல் நாளிலேயே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்து நாம் விவாதம் நடத்துவதற்கு முந்தியே இந்தத் திருத்தச் சட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனை இந்த அவையினுடைய ஒப்புதலுக்காக வைத்திருப்பதற்காக, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் பாராட்டுகிறேன்.

பொதுவாக இந்த அரசைப் பொறுத்த வரையில், இத்தகைய சட்டங்களில், அது நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் முனைப்புக் காட்டுவது விந்தையானதும் அல்ல, ஆச்சரியத்திற்கு உரியதும் அல்ல. ஏனென்றால் பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசு, தந்தை பெரியார் அவர்கள் சமுதாயத்தில் உருவாக்கிய உணர்வுகளை மனத்தில் தேக்கி, அவர்களுடைய எண்ணங்கள் எல்லாம், எல்லா மனித உள்ளங்களில் இடம் பெற வேண்டும் என்ற கருத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்த அரசு இதற்கு முன்னுரிமை வழங்கி இருப்பதில் ஆச்சரியம் இல்லை.

என்னைப் பொறுத்த வரையில் இத்தகைய சட்டத் திருத்தங்கள் தேவை. மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் வசந்த் சாத்தே அவர்கள் பாராளுமன்றத்திலே பேசியிருக்கிறார்கள். இன்னும் 500 ஆண்டுகளுக்கு இந்த இட ஒதுக்கீடு நீடிக்கப்பட்டாலும் சமுதாயத்தில் இன்றைக்கு இடம் பெற்று விட்ட ஏற்றத்தாழ்வு மாறாது. அப்படி மாற வேண்டுமானால் நம்முடைய எண்ணங்களிலே உள்ளங்களிலே சமத்துவ உணர்வுகள் நிலை பெற வேண்டும். சட்டப் புத்தகங்களிலே நாம் இன்றைக்கு திருத்தங்களைக் கொண்டு வருவதைவிட மனித எண்ணங்களிலே திருத்தங்கள் கொண்டு வர வேண்டும். அந்த திருத்தங்கள் எல்லாம் நம்முடைய உள்ளங்களிலே இடம் பெற வேண்டும்.

11-40 மணி

அப்படி இடம் பெறவேண்டும் என்பதற்காகத்தான் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தந்தை பெரியார் அவர்கள் தன்னுடைய நீண்ட ஆயுளிலே இதற்காகப் பெரும் பகுதியைச் செலவழித்து சமூக நீதியின் அடிப்படையிலே சமத்துவம் நம்முடைய சமுதாயத்தில், நம்முடைய மரபுக்கு ஏற்ப உள்ளங்களில் எழுதப்பட்டால்தான் சமுதாயத்தில் இன்றைக்கு இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகள், தீண்டுதல், தீண்டாமை என்கின்ற நிலைகள் எல்லாம் மாறும் என்பதற்காக அவர்கள் பாடுபட்டார்கள். நாங்கள் விரும்புவது அண்ணாவினுடைய கருத்துக்களும், பெரியாருடைய கருத்துக்களும் பொதுவான கருத்துக்கள். எனவே அந்தக் கருத்துக்களுக்கு நாம் முன்னுரிமை வழங்க வேண்டும். சட்டப் புத்தகங்களிலே எழுதப்படுகிற இந்தத் திருத்தங்கள் எல்லாம்



படித்தவர்கள் படித்துப் பார்க்கலாம் அல்லது இதைப்பற்றி நினைப்பவர்கள் எண்ணிப் பார்க்கலாம். ஆனால் படிக்காத பாமர மக்கள், கிராமங்களிலே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் பெரியாருடைய கருத்துக்களை அதுவும் தீண்டாமை, சமுதாயத்தில் இருக்கின்ற அநீதிகள், ஏற்றத்தாழ்வுகள் இவைகளைக் குறித்து ஆணித்தரமாக பல ஆண்டுக் காலமாக பெரியார் பரப்பிய கருத்துக்களும் அதற்கு பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் இந்த மாநிலத்தில் மட்டும் அல்ல அவர்கள் மாநிலங்கள் அவையில் இடம் பெற்று பேசிய பேச்சுக்கள் அடிப்படையிலும் அவர்களுடைய கருத்துக்கள் பாட புத்தகங்களிலேயும் இடம் பெற வேண்டும். நம்மிடையே இருக்கக்கூடிய இந்த ஏற்றத் தாழ்வுகள் மாற வேண்டும் என்ற எண்ணம் நம்முடைய உள்ளங்களில் இடம் பெற வேண்டும். இன்றைக்கு நாம் பார்க்கிறோம். இன்றைக்குக் கூட நம்முடைய நாட்டிலே தந்தை பெரியார் பிறந்த இந்த நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த இந்த நாட்டில், பெரும் தலைவர் காமராஜர் போன்றவர்கள் எல்லாம் சமுதாயத்தினுடைய கண்கள் திறக்கப்பட வேண்டும் என்று பாடுபட்ட இந்த நாட்டில் இன்றைக்குக்கூட காலனிகள் இருந்து கொண்டிருக்கின்றன. காலனி ஆதிக்கம் ஒழிக்கப்படவேண்டும் என்று நாம் குரல் கொடுத்து நம்முடைய நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறோம். ஆனால் இன்றைக்குக்கூட காலனிகள் என்று சொல்லக்கூடிய ஒரு இழி நிலை நம்முடைய எல்லா கிராமங்களிலும் இருந்து கொண்டிருக்கின்றன. நாம் வாழ்கின்ற சமுதாயத்தில் அவர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கப்பட வேண்டும் ஆண்டாண்டுக் காலமாக அநியாயத்திற்கு ஆளாக்கப்பட்ட ஒரு சமுதாயத்திற்கு நீதி வழங்கப்பட வேண்டும். அவர்களும் சமன் நிலையில் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த திருத்தச் சட்டங்கள். ஆனால் இன்றைக்குக் கூட நாம் காலனிகளை வைத்துக்கொண்டு இருக்கிறோம். அவர்களையும் மற்ற சமுதாய மக்களோடு வாழ்வதற்கான ஏற்பாடுகளை நாம் செய்வதற்குக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இன்றைக்கு சில சிக்கல்கள் வரலாம், சில எதிர்ப்புகள் வரலாம். ஆனால் குறைந்தபட்சம் அரசு உருவாக்குகிற அவர்களுடைய குடியிருப்புகளையாவது ஊரிலிருந்து தூரத்திலே கட்டி, அவர்களை தனிமைப்படுத்தி அதை காலனி என்ற சொல்லாலே சொல்லக்கூடிய இந்த இழி நிலை என்று வரையிலே மாற்றப்படாதோ—சட்டங்கள் மாறலாம், திருத்தங்கள் வரலாம். ஆனால் சமுதாய எண்ணத்தில் திருத்தம் வராது. நம்முடைய சமுதாய வாழ்விலே மாற்றங்கள் வராது. அந்த மாற்றங்கள் வரவேண்டுமானால் அவர்களும் சமமாக நம்முடைய பேட்டைகளிலே—எல்லா மக்களும் வாழ்கின்ற பேட்டைகளிலே—அவர்களும் வாழக்கூடிய வகையில் திருத்தங்கள் என்றைக்கு வருகிறதோ அன்று வரையிலே இவர்களுக்கு இந்த இட ஒதுக்கீடு திருத்தச் சட்டங்கள் வந்து கொண்டே இருக்கும். சமுதாயத்திலே ஒரு மாறுதலும் ஏற்படாது என்பதை மட்டும் நாம் திண்ணமாக நம்முடைய எண்ணத்தில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும். இன்றைக்குக் கூட நாம்

பார்க்கிறோம். சம பந்திகளை நடத்துகிறோம். ஆனால் சம பந்திகளை நடத்தும்போது அதிலே இருக்கின்ற நோக்கம் படிப்படியாக சமுதாயத்தில் ஊடுறுவ வேண்டும் என்பதற்கான முயற்சிகளை நாம் எல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டும். எனவே தான் இந்தத் சட்டம் இன்னும் 500 ஆண்டுகள் நீடித்தாலும் அது சமுதாயத்தில் எந்தவிதமான மாற்றத்தையும் கொண்டுவர முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பேசியிருக்கிறார்கள். நம்முடைய தாழ்த்தப்பட்ட மக்கள் இப்போது வந்திருக்கின்ற நம்முடைய சட்டமன்றத்தேர்தல்களிலே ஏற்கனவே பெற்றிருக்கின்ற இட ஒதுக்கீட்டைப் பெற்றிடும் வகையில் முனைப்போடு செயல்பட்டு விரைவாக தேவையான சட்டமன்றங்கள் இதற்கான ரேட்டிபிகேஷன் அனுமதியை வழங்க வேண்டும். இது விரைந்து செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் செய்யப்பட்டிருக்கிறது. இதை செய்து முடித்தால்தான் அண்மையில் நடைபெற இருக்கிற சட்டமன்றத்தேர்தல்களிலே அவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய முடியும். ஆனால் அதே நேரத்தில் பல ஆண்டுக் காலமாக நம்முடைய தொகுதி நிர்ணயக் குழு என்ன செய்துகொண்டிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரே தொகுதியிலே, சில தொகுதியிலேதான் அரிஜனங்கள் போட்டியிடவேண்டும் என்று இருப்பது மாற்றப்பட வேண்டும்.

11-45 மணி

மாறி மாறி அவர்களுக்கு தொகுதிகள் அளிக்கப்படுகின்ற வகையில் அரிஜன மக்கள் மற்ற தொகுதிகளிலும் போட்டியிட்டு—அரிஜனங்கள் வெற்றி பெறும்போது, அவர்களுடைய எம். எல். ஏ.-க்கள் அரிஜனங்கள் என்று ஒரே தொகுதியில் சொல்லிக் கொண்டு இருக்காமல்—நம்முடைய மாநிலத்திலே கூட பல தொகுதிகளிலே அரிஜன எம். எல். ஏ.-க்கள் என்று சொல்லக்கூடிய வகையில் மற்றவர்கள் எல்லாம் சொல்லக்கூடிய வகையில் அந்தத் தொகுதிகளை மாற்றியமைக்கவேண்டும். எனக்குத் தெரிந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது, டீ-லிமிட்டேஷன் கமிஷன் என்னவானது என்று தெரியவில்லை. செய்யப்படவேண்டும். அது கான்ஸ்டிடியூஷனல் ரிக்குயர்மென்ட். அது அரசமைப்புச் சட்டப்படி செய்யப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இதுவரையிலேயும் செய்யவில்லை. எனவே, அவர்களுடைய பிரதிநிதித்துவம் எல்லா இடங்களிலும் பரிணமிக்கக்கூடிய வகையிலே அந்தத் தொகுதி நிர்ணயக்குழுவை உடனே ஏற்படுத்தி, இப்போது இருக்கிற தொகுதிகள்தான் இல்லை. அவர்கள் கணிசமாக இருக்கிற தொகுதிகளில்தான் அவர்கள் வரவேண்டும் என்ற நியதியைக்கூட ஒரு அடிப்படையாகக் கொள்ளாமல் சாதாரணமாக மாறி, மாறி, தொகுதிகள் அமையவேண்டும்,





ஏனென்றால் ரிசர்வேஷன் செய்யப்படும்போது அரிஜனங்கள் தான் வரமுடியும். அரிஜனங்கள் வரமுடியும் என்ற அந்த விதி இருக்கும்போது நம்முடைய நோக்கம் எந்தத் தொகுதியிலே அதிகமான அரிஜனங்கள் இருக்கிறார்களோ அந்தத் தொகுதிதான் நியமிக்கப்படவேண்டும் என்பதை விடுத்து, மாறி, மாறி அவர்களுக்கு வரக்கூடிய தொகுதிகளை மாற்றி அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேகூட எடுத்துச் சொன்னார்கள், பொதுத் தொகுதியிலேகூட போட்டியிட்டு நம்முடைய தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று. அதுவும் ஒரிஸ்ஸா போன்ற ஒரு மாநிலத்திலே, அந்தக் குறிப்புகளை நான் பார்த்தேன். பொதுத் தொகுதியிலே போட்டியிட்டு தேசிய முன்னணியின் சார்பாக ஜனதா தள்-ல்னுடைய இரண்டு உறுப்பினர்கள் பொதுத் தொகுதியிலே போட்டியிட்டு ஒரிஸ்ஸா மாநிலத்திலிருந்து-எந்த மாநிலத்திலே அரிஜனங்களுக்கு விரோதமாக அதிகமான எண்ணங்கள் வேரூன்றியிருக்கின்றதோ, அந்த மாநிலத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் அவரைத்தான் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று அணுகவேண்டியிருக்கிறது அதிலேதான் இருக்கிறது முக்கியமான விஷயம். இரண்டு பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக வருவது முக்கியமானது அல்ல. மற்ற மக்களும், தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லப்படக்கூடியவர்களிடத்திலே அவர்கள் சலுகைகளை நாடி அங்கு சென்று அவர்களை அணுகவேண்டும் என்பதுதான் மிக முக்கியமானது. எனவே நம்முடைய அணுகுமுறைகள் மாறவேண்டும். நம்முடைய உள்ளங்களிலே இருக்கக்கூடிய உணர்வுகள் மாறவேண்டும். அப்படி அந்த உணர்வுகள் மாறவேண்டும் என்று சொன்னால் இந்த அரசை நான் கேட்டுக்கொள்வது, தந்தை பெரியாருடைய அந்த உணர்வுகள் தமிழகத்திலே நீக்கமற நிறைந்து இருக்க வேண்டும். அந்த உணர்வு இன்றைக்குக் குறைந்து வருகிறது, அந்த உணர்வைக் காப்பாற்றுவதுதான், நாம் ஒரு ஆட்சியாளர் ஏன்ற முறையிலே மட்டுமல்ல, தந்தை பெரியாரை ஏற்றுக் கொண்ட தமிழகத்தினுடைய தலையாய கடமை என்ற முறையில்; தந்தை பெரியார் உணர்த்திய அந்த உணர்வுகள் பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் உணர்த்திய அந்த உணர்வுகள்; நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த உணர்வை ஊட்டினார்களோ, அந்த உணர்வை நம் தமிழகத்தில் எல்லா சமுதாய மக்களிடையேயும் நிலைநிறுத்துவதற்கு முயற்சி செய்தால்தான் இந்தச் சட்டங்கள் எல்லாம் பயன்படுமே ஒழிய இல்லாவிட்டால் புஸ்தகத்தினுடைய அலங்காரங்களாக, வாக்கியங்களாக, வாசகங்களாகத்தான் இருக்கமுடியும். எனவே, அவற்றை புஸ்தகத்தில் வைத்துக்கொள்ளாமல் நமது உள்ளங்களிலும், எண்ணங்களிலும் ஏற்படுத்தும் வகையில் தந்தைபெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்களுடைய பெருநோக்கு,

பொது நோக்கு எல்லா மக்களும் சமம் என்ற நோக்கு, இந்த நாட்டிலே, பரவுவதற்காக எந்தகைய தியாகங்களைச் செய்தாவது, ஆட்சி இருந்தாலும், இல்லாவிட்டாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் பெரியாருடைய எண்ணங்கள், இந்த நாட்டிலே நிலை பெறவேண்டும் என்பதற்காக இந்த அரசு தன்னை அர்ப்பணித்துக்கொள்ளவேண்டும். நாம் அனைவரும் அதற்காக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் தந்தை பெரியாரைக் குறிப்பிடும்போது, அதே நேரத்தில் நம்முடைய பெருந்தலைவர் காமராஜை எண்ணிப் பார்க்கிறேன். நமக்கு சில பொதுத் தலைவர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய எண்ணங்கள் நாட்டு மக்களுடைய உள்ளங் களிலே இடம் பெற்றால் நமக்கு இதிலே வெற்றி கிடைக்கும். எனவே, இதைச் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை முனைப்போடு, முன்னுரிமை வழங்கி இந்தத் திருத்தச் சட்டத்தைக்கொண்டு வந்ததற்காக தமிழக மக்களின் சார்பாக அவருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, பாராளு மன்றத்திலும் இதை உடனே நிறைவேற்றித் தந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களுக்கும் அவருடைய அரசிற்கும் தமிழக அரசிற்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து அமர்கிறேன், நன்றி.

*திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே ஏகமனதாக நிறை வேற்றப்பட்ட நம்முடைய அரசியல் சட்டத்தினுடைய 62-வது திருத்தத்தை நம்முடைய அனுமதிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை முழு மனதோடு ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். அரசியல் சட்டத்திலே முதலாவதாக 15 ஆண்டுகள் வரை தாழ்த்தப்பட்ட மக்கள், மலைஜாதி மக்களுக்கு இட ஒதுக்கீடு சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆரம்ப காலத்திலே நம்முடைய தலைவர்கள், அரசியல் சட்டத்தை உருவாக்குகிறபோது 15 ஆண்டுகளிலே சமுதாயத்திலே ஓரளவு ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் நீங்கி சமத்துவமான நிலை ஏற்பட்டு விடலாம் என்று நம்பியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் ஒரு 15 ஆண்டுக் காலம் நீட்டிக்கப்பட்ட பின்னாலும்கூட அந்த எண்ணங்கள், அந்த நிலை நாட்டிலே ஏற்படாததன் காரணமாக மீண்டும் ஒரு 10 ஆண்டுக் காலம் என்று இந்தச் சட்டத்தைத் திருத்தி இப்போது அந்த உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.





11-50 மணி

அதுவும் போதாமல் இன்றைக்கு 4-வது தடவையாக 10 ஆண்டுக் காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இந்த இடஒதுக்கீடு மேலும் 10 ஆண்டுக் காலம் இருந்தால்தான் இனி ஓரளவுக்கு சமத்துவமான நிலைக்கு இந்த சமுதாயத்தில் ஒரு இடத்தை அவர்களால் உண்டு பண்ணக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில் இன் னும் 10 ஆண்டு காலம் கடந்தபின்கூட இந்த சமத்துவம் வந்து விடுமா, அதற்கு வேண்டிய அஸ்திவாரங்கள், வேண்டிய ஏற்பாடு கள் எல்லாம் நாட்டில் நடந்து கொண்டிருக்கிறதா? என்பதைப்பற்றி எல்லாம் இங்குள்ள அரசியல் கட்சிகளைச் சார்ந்த அத்தனை பேரும் மிக ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால் இன்றைக்கு சமுதாயத்திலே சம அந்தஸ்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிடைக்கவில்லை. இன்றைக்கு பல தொழில் களை அநேகர் தொடங்குகிறார்கள். ஆனால், தாழ்த்தப்பட்ட வர்கள், மலைவாழ் மக்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க வாய்ப்பில்லாத காரணத்தால் யாரிடத்திலாவது அவர்கள் அண்டிப் பிழைக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். விவ சாயத் தொழிலாளியாக இருந்தால் அந்த நிலச் சொந்தக்காரரை அண்டிப் பிழைக்கிறார்கள்; அவர்களுக்கு சுயமான தொழில் செய்ய வாய்ப்பு கிடையாது. இங்கே பேசும்போது பல தலை வர்கள் சொன்னார்கள், தொழில்தொடங்குவது என்றுசொன்னால் அவர்களுக்குவேண்டிய கடன், ஏனைய வசதிகள் தேவை. இன் றைக்கு, யாராவது ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச்சேர்ந்தவர் 20 பேர் 30பேர் வேலை செய்யக்கூடிய தொழில்தொடங்க வேண்டும் என்றுசொன்னால்கூட அதற்கு வேண்டிய கடனை, ஏனைய வசதி களை அவர்கள் பெறமுடியாத நிலை இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது.

மலைவாழ் மக்களை எடுத்துக்கொண்டால் மலையில் இன் றைக்கும் அவர்கள் யாருக்காவது ஒருவருக்கு கொத்தடிமைகளா கத்தான் இருக்கிறார்கள். ஆகவே, இந்த நாட்டில் சுதந்திர மாக, சமத்துவமாக ஏனைய மக்களோடு தாழ்த்தப்பட்ட, மலை வாழ் மக்கள் வரவேண்டும் என்று சொன்னால் அதற்கு விசேஷ மாக ஒரு கடுமையான முயற்சியை நாம் எல்லோரும் சேர்ந்து செய்தால்தான் சமத்துவ நிலையை ஏற்படுத்த முடியும். ஆகவே, நாம் பலவிதமான சட்டங்களைக் கொண்டு வந்தாலும் கூட கிராமத்தில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் சொந்தமாக, சுயமாக வாழ்க்கையை நடத்த முடியா மல் இருக்கிறார்கள். அதற்காக சீரான நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்து உபரி நிலத்தை அரிசன மக்களுக்குக் கொடுக்க வேண்டும். அதே சமயத்தில் அவர்கள் சுயமாக தொழில் செய்யக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற முறை

யில் அதற்கு வேண்டிய காரியத்தை துரிதமாக நாம் அத்தனை பேரும் செய்வதற்கு முனைப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒரு 10 ஆண்டுக் காலத்திற்கு இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு சலுகைகள் கிடைக்கக்கூடிய திருத்தத்தை முழு மனதோடு ஆதரித்து இதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று என்னுடைய கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று அவை முன்பு தமிழக முதலமைச்சர் அவர்களால்கொண்டுவரப்பட்டு இருக்கின்ற இந்தத்தீர்மானத்தை நான் சார்ந்து இருக்கின்ற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் வரவேற்கக்கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போல இந்த 62-வது அரசமைப்புச் சட்ட திருத்த மசோதாவை பாராளுமன்றத்திலே நிறைவேற்றி அரிசன மக்கள் மற்றும் பழங்குடி மக்களுக்கான சலுகையை மேலும் 10 ஆண்டுக் காலம் நீட்டித்துக் கொடுத்த பாரதப் பிரதமர் பெருமதிப்பிற்குரிய வி.பி. சிங் அவர்களையும், தேசிய முன்னணி அரசையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் பாராட்டுகின்ற இந்த நேரத்தில் அதன் தலைவராகத் திகழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் அரிசன மக்களுக்கு எத்தகைய உதவிகளைப் புரிந்தார்கள் என்பதை நான் நினைவு கூறக்கடமைப் பட்டிருக்கிறேன். தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் அன்று இராஜாஜி அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த நேரத்தில் அரிசனங்கள் அனைவரும் ஆலயங்களுக்குள் செல்லலாம் என்ற வகையில் ஆலயப் பிரவேசச் சட்டம் ஒன்றை நிறைவேற்றினார்கள். ஆனால் அது சட்ட அளவிலே இருந்ததே தவிர அது அங்கே உயிர்பெற முடியாத நிலையில் அரிசன மக்கள் எல்லாம் ஆலயங்களுக்குள் செல்லுகின்ற ஒரு நிலை ஏற்படாமல் இருந்தது. ஆனால் தென் பாண்டி மண்டலத்தில் தேவர் திருமகனார் அவர்கள் பல்லாயிரக் கணக்கான அரிசனப் பெருமக்களை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் அழைத்துச் சென்றார்கள். அதன் பின்புதான் அரிசன மக்கள் ஆலயங்களுக்குள் செல்லலாம் என்ற ஒரு நிலை தென் பாண்டி மண்டலத்தில் ஏற்பட்டது என்றால் அது மிகையாகாது. அந்த அளவுக்கு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு பல்லாயிரக் கணக்கான அரிசன பெருமக்களை அழைத்துச் சென்ற முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் நமது மகாத்மா காந்தி அவர்கள் கவனத்தை ஈர்த்தார்கள். மகாத்மா காந்தி அவர்கள் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய இத்தகைய செயலைப் பாராட்டினார்கள் என்று நாம் அறிய முடிகிறது.



அது மட்டும் அல்லாமல் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்களுக்கு 33½ கிராமங்கள் சொந்தம் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கின்ற அந்த 33½ கிராமங்களையும் யாருக்கு அவர் வழங்கினார் என்றால் அந்தப் பகுதியில் வாழ்ந்த ஏழை எளிய அரிசன மக்களுக்குத் தான் அந்த 33½ கிராமங்களை வழங்கினார்கள் என்று இன்று நாம் கண்கூடாகப் புரிந்துகொண்டு இருக்கிறோம்.

11–55 மணி

அந்த அளவிற்கு, தனக்குச் சொந்தான நிலத்தைக்கூட ஏழையெளிய அரிஜன மக்களுக்கு பகிர்ந்து அளித்தார் என்கின்ற வரலாறு இன்றும் கண் முன்னே நின்று கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய காலத்தில் ' இரட்டைத் தொகுதி ' என்கின்ற தேர்தல் முறை இருந்தது. இந்த இரட்டைத் தொகுதி தேர்தல் முறையில் கூட, பொதுத் தொகுதியில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரும் அவருக்கு இணையாக அங்கே, தனித் தொகுதியில் ஒரு அரிஜனப் பெருமகனையும் நிறுத்தி வெற்றி பெறச் செய்தார்கள் என்கின்ற நிகழ்வையெல்லாம் நாம் மறந்துவிட முடியாது. அந்த அளவிற்கு, அப்படிப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் உருவாக்கித் தந்த இந்த அகில இந்திய பார்வேட் பிளாக் கட்சியின் சார்பில் இந்தத் தீர்மானத்தை வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசுகின்ற நேரத்தில் இதிலுள்ள சில குறைபாடுகளையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் ஒரு தனித் தொகுதி இருக்கிறது என்றால், அது சட்டமன்றத் தொகுதியாக இருந்தாலும் சரி நாடாளுமன்றத் தொகுதியாக இருந்தாலும் சரி, தனித் தொகுதியானது 10 வருடம், 15 வருடம் என்று ஒரு தொகுதியே தொடர்ந்து நீடிக்கின்ற நிலை இருக்கிறது. ஒரு தொகுதி இருக்கிறது என்றால் அந்தத் தொகுதி தொடர்ந்து 15 வருட காலம் தனித் தொகுதியாக இருக்குமேயானால், அந்தத் தொகுதியிலே இருக்கின்ற பிற சமுதாய மக்கள் விரக்தி அடைகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் 5 வருடத்திற்கு ஒரு முறை என்கின்ற அளவிற்கு அந்தத் தொகுதியை மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ந்து 15 வருட காலம் ஒரே தொகுதியே தனித் தொகுதியாக இருப்பதை விட பக்கத்திலே இருக்கிற, அதற்குப் பக்கத்திலே இருக்கிற, எந்தத் தொகுதிலே அரிஜனப் பெருமக்கள் அதிகமாக வாழ்கின்றார்களோ அந்தத் தொகுதிக்கு, அடுத்த 5 வருடத்திற்கு அதற்கு அடுத்த 5 வருடத்திற்கு என்று மாறுதல் செய்கின்ற நிலையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் தமிழக அரசும், மத்திய அரசுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. பி. என். வல்லரசு] [1990 சனவரி 19

இன்றைய தினம் தமிழகத்திலே 39 பாராளுமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. ஆனால் பிற மாநிலங்களில் இருக்கின்ற மக்கள் தொகையையும் நமது தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் தொகை எண்ணிக்கையையும், வாக்காளர்களுடைய எண்ணிக்கையையும் நாம் எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில் இங்கே நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற 39 பாராளுமன்றத் தொகுதியினுடைய எண்ணிக்கை குறைவு என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. இன்றைய தினம், மற்ற மாநிலங்களிலேயெல்லாம் ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு உட்பட்டு 7 சட்டசபை உறுப்பினர்கள் இருக்கின்ற நிலை இருக்கிறது. அந்த அளவிற்கு இருக்கின்ற காரணத்தினால் நமது தமிழகத்திலே இருக்கின்ற வாக்காளர்களுடைய எண்ணிக்கை, மக்கள் தொகை எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, இன்னும் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற பாராளுமன்றத் தொகுதியினுடைய எண்ணிக்கையைக் கூட்டி அமைப்பதற்கு நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் தமிழக அரசும் அதற்கு முனைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இந்தத் தீர்மானத்தை நான் சார்ந்து இருக்கின்ற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் வரவேற்று அமர்கிறேன், வணக்கம்.

*Thiru OSCAR C. NIGLI : Hon. Deputy Speaker, Sir, I shall take this opportunity mainly to speak on the Constitution (62nd Amendment) Act which covers not only Scheduled Castes and Scheduled Tribes but also the Anglo-Indian Community. As a representative of that community, I think it is my duty to welcome this Act which extends the reservation for another ten years. The National Front Government at the Centre has to be applauded for having made this as one of the very first Bills which it had brought forth in both Houses of the Parliament. At the same time, here, the DMK Government has also made it mandatory to ratify the measure.

In this context, I would just make a mention about a small confusion that has taken place with regard to the reservation policy. Recently, there has been a spate of anti-reservation agitations in North India. This was because of a confusion created by a statement made by the former Prime Minister, Hon. Thiru Rajiv Gandhi. During the Election period, he had made a statement that reservation for jobs for Scheduled Castes and Scheduled Tribes would be carried on for the next ten years. But in reality, what he meant was that the reservations in Legislatures and the Parliament for the Scheduled Castes and the Scheduled Tribes and the Anglo-Indians would be carried on for the next ten years. It is so because job-reservation for Scheduled Castes and Scheduled Tribes has no time-limit. It goes on until such time the Government so desires that it is no longer necessary to have job-reservation. Until that time, it will go on, The statement has created a kind of confusion in the minds of some people that the Bill is for job-reseravtions for scheduled Castes, Scheduled Tribes and Anglo-Indians.



1990 சனவரி 19]

THIRU M. SUNDARADOSS: There has been no ambiguity at all. What was the ambiguity which the former Prime Minister of India created? The hon. Member has to clearly specify the ambiguity here. Let him explain it.

12–00 மணி

THIRU OSCAR C. NIGLI : The ambiguity which I was referring to is this. The former Prime Minister said, "If we are voted to power, we will give job-reservations for Scheduled Castes and Scheduled Tribes for another ten years". What he actually meant was, reservation in Parliament and State Legislatures. This has been misunderstood by some people, What he said was, job reservation will be extended. As per the Constitution job reservation for Scheduled Castes and Scheduled Tribes need not be extended and it will go on till such time as it is decided by the Government that it is no longer required. They are totally two different issues–one for job reservation and the other, 62nd Amendment Bill, for reservation in Parliament and state Legislatures.

THIRU KUMARI ANANDAN : Hon. Mr. Deputy Speaker Sir, somebody might have misunderstood what Mr. Rajiv Gandji has said. But actually who was responsible for all those things? It is Mr. Devilal who has made a statment on this subject.

THIRU OSCAR C. NIGLI: Mr. Deputy Speaker Sir, now I think all of us are clear that his reservation is for S.Cs. S.Ts. in Parliament and in State Legislatures. The constitutional safeguards are nothing new. These safeguards were incorporated by the Constituent Assembly on the 6th June 1949. Articles 297 and 298, which were later re-numbered as Articles 336 and 337, provide for the Anglo-Indian community quotas in service and education for a period of ten years and nomination in the Central and Provincial Legialatures was secured in Artcles 293 and 295 which were later re-numbered as Articles 331 and 333. Safeguards for the Anglo-Indians late back to the Government of India Act, 1935 and therefore, this Article 334 of the Constitution is a composite provision which provides for special representatioh by nomination for Anglo Indians as well as special provision of seats for the scheduled castes and scheduled tribes will continue under the original Article i.e. special representation will expire after ten years and that should have been in 1960 and forth it has been extended, every ten years. As the Hon. Chief Minister has said, it has been extended for a period of 40 years now. So, ratification becomes imminent, because as per Article 368 of the Constitution any amendment which affects the representation in Parliament and State Legislate, is to be ratified by not less than one half of the States before the Amendment Bill is presented to the President for his assent.

[Thiru OSCAR C. NIGLI] [1990 சனவரி 19

I once again welcome this Bill and I am happy that successive Governments without any exception, have been really sympathetic. Now even the National Front Government has promised protection to the minorities. The D.M.K. Government and the Hon. Chief Minister has promised that he will safeguard the interests of the minorities. In this context I would appeal to him again to quickly start the Minorities Commission to safeguard our interests. Also I would like to mention about the Scheduled Castes and Scheduled Tribes Christians who are really suffering and all of us know about that. It is not the State Government. It is the Central Government now which will have to bringout some changes whereby the Scheduled Caste and Scheduled Tribes Christians do not lose the benefit.

With these few words I welcome this Bill honestly and sincerely and hope that this Government at the State level which is benevolent to this community will acceded to our request last year for granting a seat in Poly Technic and this year the Hon. Chief Minister has promised a seat in Medical and Engineering Colleges.

I once again support and felicitate this Bill and I hope it will champion the cause of the minorities and of the downtrodden. Thank you.

மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற இரு அவைகளில் நிறைவேறிய இந்தத் திருத்தத்தை, அரசியல் சட்ட முறைப்படி இந்தத் தீர்மானத்திற்கு இங்கே இந்த அவையின் ஒப்புதலைப் பெற வேண்டுமென்பதற்காக, அவையின் முன் வைத்த தீர்மானத்தையொட்டி, அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் தங்களுடைய ஆதரவான கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

ஆதரிக்கின்ற அதே நேரத்தில், அவர்கள் எடுத்துச் சொன்ன பல்வேறு பிரச்சினைகளை இந்த அரசு அலட்சியப்படுத்துவதற்கு இல்லை. இந்தச் சட்டமன்றம், நாடாளுமன்றம் ஆகியவைகளில் இடங்களை ஒதுக்கினால் மட்டும் தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட, மலைவாழ் மக்களுடைய மொத்த வாழ்வும் உயர்ந்து விடாது என்பதையும் மனதில் கொண்டு, அதற்கான நடவடிக்கைகளில் இந்த அரசு இறங்குவதோடு, மத்திய அரசும் அத்தகைய நடவடிக்கைகளுக்குத் துணை நிற்க வேண்டுமென்பதைக் கேட்டுக் கொள்ளத் தயங்காது என்பதை இந்த நேரத்தில் கருத்துக்களை எடுத்து வைத்த கட்சிகளின் தலைவர்கள் அனைவருக்கும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1990 சனவரி 19] [டாக்டர் மு. கருணாநிதி] 12-05 மணி

பொதுவாக இந்த இட ஒதுக்கீட்டை நம்முடைய நண்பர் திரு. நிக்லி அவர்கள் குறிப்பிட்டதைப் போல இது, ஏற்கெனவே இருந்து வருகிற கல்வி, வேலை வாய்ப்பு இவைகளிலே இருந்து வருகிற இட ஒதுக்கீடு அது தொடருகிறதா இல்லையா என்பது போன்ற ஒரு குழப்பத்திற்கு நாட்டு மக்கள் ஆளானது உண்மை. ஆனால் இந்த இட ஒதுக்கீடு சட்டமன்றங்களில், நாடாளுமன்றங்களில் ஆதி திராவிட பழங்குடியின மக்களுக்கு உரிய வாய்ப்புகள் தேவை என்பதற்காகக் கடந்த 40 ஆண்டுக்காலமாக நடைமுறையில் இருந்து வருகிற ஒன்று. அது மேலும் தொடர வேண்டும் என்று நாம் எண்ணுகிறோம்.

இட ஒதுக்கீடு என்கிற இந்த ஒரே சொற்றொடர் கல்வி, வேலை வாய்ப்புகளுக்கும் வழங்கப்படுகிற காரணத்தினால் குழப்பம் ஏற்படுவது இயற்கையாகும். நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல் தமிழ்நாட்டிலேதான் இந்த இட ஒதுக்கீடு கல்வித் துறையில் வேலை வாய்ப்புத் துறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அமைந்திடல் வேண்டும் என்கின்ற ஒரு சமுதாயப் புரட்சி உருவானது. அந்த சமுதாயப் புரட்சிக்கு வித்திட்டது 1926 ஆம் ஆண்டு பதவிப் பொறுப்பிலே இருந்த நீதிக் கட்சியினுடைய தலைவர்கள். நீதிக் கட்சியினுடைய அமைச்சராக இருந்த திரு. முத்தையா முதலியார் அவர்கள் கம்யூனல் ஜி.ஓ. என்கின்ற இந்த இட ஒதுக்கீடு முறையை அன்றைக்கு அறிமுகப்படுத்தி எல்லா மக்களும் ஒதுக்கப்படாமல், அடக்கப்படாமல், ஓரம் கட்டப்படாமல் அவர்களுடைய உரிமைகளைப் பெற வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சி தொடர்ந்து மெல்ல, மெல்ல ஆனால் உறுதியாக, பரிணாம வளர்ச்சி பெற்று 1952 ஆம் ஆண்டில் அதற்கு ஒரு ஆபத்து வந்து யார் அரசியல் சட்டத்தைத் தயாரித்தார்களோ, அரசியல் சட்டத்திலே இந்த இட ஒதுக்கீட்டு முறை இருப்பதை அங்கீகரித்தார்களோ அவர்களே சென்னைக்கு வந்தவுடன் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து சமூக அடிப்படையில் இட ஒதுக்கீடு கூடாது என்ற நிலையிலே வாதாடி நீதிமன்றத்திலே வெற்றியும் பெற்றார்கள். அந்த நேரத்திலே தான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் அதற்கான ஒரு போராட்டத்தைத் தமிழகத்திலே உருவாக்கினார்கள். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்தாலும் தெளிவாக அனைவரும் தெரிந்து கொள்ள முடியும்.

அன்றைக்கு காங்கிரஸ் ஆட்சி இங்கே நடைபெற்றது. திரு. கே. டி. கோசல்ராம் போன்றவர்களும் மற்றும் காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களும், சிவகங்கைத்

தொகுதியைச் சேர்ந்த நண்பர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்களும் இந்த மாமன்றத்திலே வாதாடி, அன்றைய தினம் அமைச்சராக இருந்த திரு. கோபால ரெட்டி அவர்கள் நாங்கள் இதை அப்பீல் செய்வோம் என்று எடுத்துரைத்தார்கள். எனவே கட்சி சார்பில்லாமல் இந்த இட ஒதுக்கீடு சமுதாய அடிப்படையிலே அமைந்திடல் வேண்டும் என்ற இந்தக் கருத்தை அன்றைய தினம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந் தலைவர் காமராஜர் உள்ளிட்ட அனைவருமே ஒன்றாக நின்று, அன்றைக்கு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பாராளுமன்றத்திலே அரசியல் சட்டத்திலே முதல் திருத்தம் கொண்டு வந்ததே தமிழ்நாட்டிலே அன்றைக்கு நடைபெற்ற அந்த உரிமைக் கிளர்ச்சிக்காகத்தான். முதல் திருத்தமே Socially and Educationally என்கின்ற அந்தத் திருத்தம் அரசியல் சட்டத்திலே அன்றைக்கு ஏறியது என்றால் அதற்குக் காரணம் தமிழகத்திலே அன்றைக்கு விளைந்த அந்த மாபெரும் சமுதாயப் புரட்சியாகும். இட

12–10 மணி

ஒதுக்கீடுகளால் நன்மையேயில்லை என்று நாம் அடித்து சொல்லி விட முடியாது. நம்முடைய நண்பர் பாண்டியன் அவர்கள் பல வேதனையான செய்திகளை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். திரு. தீட்சிதர் அவர்களும் அதையே குறிப்பிட்டார்கள். இன்னும் பல முன்னேற்றங்கள் அவர்களுடைய வாழ்விலே வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் கல்வி, வேலை வாய்ப்பு போன்ற இட ஒதுக்கீடுகளால் அவர்கள் பயன் பெற்றிருக்கின்றார்களா இல்லையா என்பதை நாம் அனுபவ ரீதியாகக் காண முடிகிறது. எல்லோரும் பயன் பெற்று விட வில்லை. நூற்றுக்கு நூறு பயன் பெற்று விடவில்லை என்றாலும்கூட ஓரளவு நாம் மன ஆறுதல் பெறுகின்ற அளவுக்கு, எதிர் காலத்திலே ஒரு நம்பிக்கை ஒளி நிச்சயமாக உதயமாகும் என்று எண்ணுகின்ற அளவுக்கு, அந்தச் சமுதாயத்திலேயும் சரி, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலேயும் சரி, இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை 1926 ஆம் ஆண்டில் நீதிக் கட்சிக் காலத்திலே தொடங்கப்பட்ட இந்தக் கொள்கை, இன்றைக்கு வெற்றிகரமாக நிறைவேறி வருகிறது என்பதை எங்களால் காண முடிகிறது.

தேர்தல் நேரங்களிலே, நானும் நம்முடைய கல்வி அமைச்சர், கழகத்தினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், வேட்பாளர்களைத் தேர்வு செய்வதற்காக அமர்ந்து அவர்களை அழைத்துப் பேசும்போது, இந்தத் தனித் தொகுதிக்காக வேட்பு மனு தாக்கல் செய்ய வந்தவர்கள் மற்ற தொகுதிகளைவிட அதிகமாக இருப்பார்கள். அதிலும் குறிப்பாக, நான் பெருமையோடு, மகிழ்ச்சியோடு, பூரிப்போடு சொல்லிக் கொள்கிறேன். ஒரு 30 பேர்கள் நாங்கள் போட்டியிட வேண்டும், கழகத்தின் சார்பிலே வேட்பாளர்களாக நிற்க வேண்டும் என்று மனு கொடுத்தால், 30 பேர்கள் மனு கொடுத்தால், அதிலே



25 பேர்களாவது பி.ஏ., எம்.ஏ., பட்டதாரிகளாக இருக்கிறார்கள். அதை நாங்கள் பார்க்கும்போது, நானும் பேராசிரியரும் எண்ணி எண்ணி மகிழ்வதுண்டு. பேசிப் பேசி மகிழ்வதுண்டு. மற்றத் தொகுதிகளை விட இந்தத் தொகுதியில் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், பொறியாளர்கள், டாக்டர்கள் என்று இவ்வளவு பேர் வருகிறார்கள் என்றால் இந்த இட ஒதுக்கீட்டின் காரணமாக அல்லவா என்று நாங்கள் பேசி மகிழ்ந்ததுண்டு. எனவே ஒன்றுமேயில்லை என்று நாம் சங்கடப்படுவதை விட பெருமளவுக்கு இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு முன்னேற்றம் பிற்படுத்தப்பட்டவர் சமுதாயத்திலும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர் சமுதாயத்திலும், தாழ்த்தப்பட்டவர் சமுதாயத்திலும் இந்த இட ஒதுக்கீட்டின் காரணமாகக் கிடைத்து இருக்கிறது.

ஆனால் நாம் இங்கே விவாதித்துக் கொண்டு இருப்பதே முற்றிலும் வேறுபட்ட ஒரு இட ஒதுக்கீட்டைப் பற்றி. சட்டமன்றங்களிலும், நாடாளுமன்றங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள், மலை வாழ் பழங்குடி மக்கள் அவர்களுக்குரிய இடங்களைப் பெற வேண்டுமென்பதற்காக அரசியல் சட்டத்தில் அன்றைக்கு இந்தத் தீர்மானத்தை உருவாக்கி 40 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு மீண்டும் அதை நீடிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை இந்த அவையின் முன்னால் வைத்து நம்மைப் போன்ற 13 மாநிலங்களும் நிறைவேற்றித் தந்தால்தான் இது அமுலுக்கு வரும் என்ற சூழ்நிலையில் இதைப்பற்றி நாம் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறோம்.

ஒரு வரலாற்றையே இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே பேசும் போது குறிப்பிட்டார்கள். 'டீலிமிட்டேஷன்' நடைபெறவே இல்லை என்ற தன்னுடைய ஆதங்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். அவருக்கு மாத்திரமல்ல. எல்லோருக்குமே அந்த ஆதங்கம் இருக்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பே நடைபெற்று இருக்க வேண்டிய ஒன்று தொகுதிகளைப் பங்கிடுதல் என்பதாகும். அந்த 'டீலிமிட்டேஷன்' நடைபெறவே இல்லை. புதிய அரசு, பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற மத்திய அரசு, 'டீலிமிட்டேஷன்' பணியினை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றிக் கொடுக்கின்ற இந்த சமயத்திலே நான் உங்கள் அனைவரின் சார்பாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போலவே அதிக இடங்கள் நாடாளுமன்றத்திலும், சட்ட மன்றத்திலும் கூட தேவை, ஏனென்றால் இங்கே நண்பர் திரு. நூர் முகமது அவர்கள் பேசினார்கள் என்று எண்ணுகிறேன். அவர்கள் எல்லாம் பேசும்போது சொன்னார்கள். இன்றைக்கு ஒவ்வொரு தொகுதியும் லட்சக் கணக்கிலே வாக்காளர்கள் உடைய

தொகுதியாக எண்ணிக்கை கூடி விட்டது. ஆனாலும் தொகுதிகள் அப்படியே இருக்கின்றன, பணி ஆற்ற முடியவில்லை என்ற கருத்து எடுத்துச் சொல்லப்பட்டது. திரு. வல்லரசு அவர்களும் அந்தக் கருத்தை இங்கே வலியுறுத்திப் பேசினார்கள்.

நான் நினைத்துப் பார்க்கிறேன். பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பொறுப்பில் இருந்தபோது சென்னையில் ஒரு விழாவிற்கு வந்தார்கள். பாலர் அரங்கத்தில் நிகழ்ச்சி. காலை 11 மணி அளவிலே நடைபெற்றது. அந்த விழாவிலே பெருந்தலைவர் காமராசர் அவர்களும், முதலமைச்சர் என்ற முறையில் நானும் கலந்து கொண்ட நேரத்தில் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிரதமராக இருந்த அன்னை இந்திராகாந்தி அம்மையார் அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். இப்போது 6 தொகுதிகள் இருக்கின்றன, ஒவ்வொரு பாராளுமன்றத்திற்கும். இதிலேயே இலட்சக்கணக்கான வாக்காளர்கள் இருக்கின்றார்கள். எனவே ஒரு பாராளுமன்றத்திலே 6 தொகுதிகள் என்பதை 7 தொகுதிகளாக ஆக்க வேண்டுமென்று 1973 அல்லது 1974 ஆம் ஆண்டில் அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். நானும் அதை வலியுறுத்தி அம்மையார் அவர்களிடத்திலே சொன்னேன். ஆனால் இதுவரையிலே 6 சட்டமன்றத் தொகுதிகள் நாடாளுமன்றத் தொகுதியிலே இருப்பதற்கு மாறாக அவைகள் அதிகரிக்கப்படவில்லை. அதை அதிகரிக்க வேண்டும் என்ற கருத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன். உங்கள் அனைவரின் சார்பாகவும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

*12.15 மணி*

அதைப்போலவே நாடாளுமன்றத் தொகுதிகளும் கூட, இன்றைக்கு 39 தொகுதிகள் தான் தமிழகத்திற்கு இருக்கின்றன. அது நமக்குக் கிடைத்த பரிசு. குடும்ப நலத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றியதற்காக இரண்டு இடங்களை நாம் இழந்திருக்கிறோம். எனவே அந்தப் பரிசை பெற விரும்புவதா அல்லது மேலும் இரண்டு இடங்களையும் பெற விரும்புவதா என்கிற கேள்விக் குறி இன்றைக்கு நம்முடைய உள்ளத்தில் ஊடுருவி நின்று கொண்டிருக்கிறது. அந்தக் கேள்விக்குறிக்கு இடம் இல்லாமல் இன்றைக்கு இருக்கிற மத்திய அரசு 'டி-லிமிட்டேஷன்' கமிட்டி ஒன்றை அமைக்குமானால், அந்தக் குழு சிந்தித்துப் பார்த்து இந்த 39 இடங்களையும்கூட அதிக நாடாளுமன்ற இடங்களாக அதிகரிக்கவும், மிக முக்கியமாக சட்டமன்றத் தொகுதிகளுடைய எண்ணிக்கையையும் அதிகப்படுத்தவும் வாய்ப்பிருக்கிறது. எண்ணிக்கையை அதிகப்படுத்தினால், இப்போது 6 என்று இருப்பதை 7 என்று ஆக்கினால் கிட்டத்தட்ட 300-க்கு மேல் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற இந்த அவை போதுமா என்ற கேள்வி எழும். அப்போதாவது ஒரு புதிய கட்டிடத்திற்கு போகக் கூடிய எண்ணம் நமக்கு ஏற்படாதா என்பதற்காகவாவது சட்டமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை அதிகம் ஆக்க வேண்டுமென்ற அந்தக் கருத்தையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.





இன்று எல்லா கட்சித் தலைவர்களாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானத்தை, இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்கிற தீர்மானத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற சம்பிரதாய முறைப்படி இப்போது கேட்டுக் கொண்டு இந்த அளவில் அமைகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி; ''நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்ற 1989 ஆம் ஆண்டு அரசமைப்பு (அறுபத்திரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவினால் செய்யக் கருதப்பெற்றுள்ள இந்திய அரசமைப்பின் 368-வது பிரிவின் (2)-ஆம் பகுதியின், வரம்புரையின் (d) பகுதியின், நிபந்தனையின்கீழ் வரும் திருத்தங்களுக்கு இப்பேரவை ஏற்பளிக்கிறது''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

**7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—**

***திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1990ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 18ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு,* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.''

**டாக்டர் த. சாந்தகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு நீங்கள் வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைக் கூறி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களுக்கும், உலகம் எல்லாம் பரவி வாழ்கின்ற தமிழர்களுக்கு எல்லாம் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற எங்களுடைய தலைவர், தமிழகத்தினுடைய முதல்வர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணாவினுடைய கொள்கைக்கு இணங்க, சற்றே

---

* 136-144 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

145-150 ஆம் பக்கங்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர் களால் படிக்கப்பெற்ற ஆளுநர் பேருரையின் தமிழாக்கம் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

றக்குறைய ஓராண்டுக் காலமாக தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்புக்கு இந்த அரசு வந்த நேரத்தில் நம்முடைய நிலைமை எப்படி இருந்தது என்றால் '' கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி '' என்கிற நிலையில் இருந்தது. அந்த நிலைமையில்தான் நம்முடைய நிதி நிலைமையும், உணவு நிலைமையும் இருந்து கொண்டிருந்தது என்பதை நாம் நன்றாக உணர்வோம். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடுத்தத் தேர்தலைப் பற்றி மட்டும் சிந்திக்காமல் அடுத்த தலைமுறையைப்பற்றி மட்டும் சிந்திக்கின்ற தலைவர் என்ற வகையில் அவர்களுடைய ஆட்சியினுடையத் திட்டங்கள் இந்த ஓராண்டுக் காலத்தில் நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கின்றன. அவர்கள் ஏற்கெனவே முதல்வராக இருந்த நேரத்தில் தமிழகத்தினுடைய வளர்ச்சிக்காக குடிசைமாற்று வாரியம், குடிநீர்-வடிகால் வாரியம், ஆதி திராவிடர் நல வாரியம், தொழில் முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்களை எல்லாம் ஏற்படுத்தினார்கள். இப்போது மாதம் ஒரு தொழில் என்கிற வகையிலே திட்டங்களைத் தீட்டி, தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற நிலையிலே அவர்கள் இந்த ஆட்சியின் பொறுப்பேற்று தமிழகத்தில் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், அன்றைக்கு இருந்த மத்திய அரசு நமக்குப் பரிசாக இந்த அரசு ஆட்சிக்கு வந்த உடனேயே அரிசி விலையை உயர்த்தி, இந்த அரசுக்கு ஒரு பரிசு தந்ததைப் போன்ற ஒரு நிலைமை உருவாக்கியது.

12-20 மணி

அதுமட்டுமல்ல, ஏற்கெனவே ஆளுநர் ஆட்சியின்போது மாதந்தோறும் 50 ஆயிரம், 60 ஆயிரம் டன் என்ற வகையிலே அரிசி தந்து உதவிய மத்திய அரசு இந்த ஆட்சிக்குப் பரிசாக உடனடியாக அதைக் குறைத்து நமக்கு அரிசிப் பற்றாக்குறையை உருவாக்குகின்ற ஒரு சூழ்நிலையை அன்று இருந்த மத்திய அரசு ஏற்படுத்தியது. அரிசி விலையை உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், அரிசியைக் கொண்டு தமிழ்நாட்டில் அரசியல் செய்தது என்பதை நான் மெத்த அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் நம்முடைய முதல்வர் அவர்கள் நாங்கள் சொன்னதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்கின்ற அடிப்படையில் ஆண்டுக்கு 5 முறை 5 கிலோ அரிசியை 300 ரூபாய்க்கு வருமானம் உடையவர்களுக்கு இலவசமாக வழங்கி வந்தார்கள்.

அதுபோல் இலவச வேட்டி, சேலை ஏழை எளியவர்களுக்கு வழங்கப்பட்டன. ஏழைப் பெண்களுக்கு திருமண உதவியை நம்முடைய அரசு செய்து கொடுத்திருக்கிறது. கருவுற்ற பெண்களுக்கு உதவித் தொகை, விவசாயிகளுக்கு 106 கோடி ரூபாய் கடன் உதவி, ஆதி திராவிட மக்களுக்கு கான்கிரீட் வீடுகள்,





பெண்களுக்கு 30 சதவீதம் வேலை வாய்ப்பு, சொத்து உரிமையில் பங்கு, முட்டையுடன் கூடிய சத்துணவு ஆகியவைகளை நம்முடைய அரசு செய்து கொடுத்திருக்கிறது.

அதே நேரத்தில் நம்முடைய இந்திய நாட்டில் விவசாயிகள் தான் நாட்டினுடைய முதுகெலும்பாக விளங்குகின்றார்கள் என்பதை உணர்ந்திருக்கின்ற இந்த அரசு ஏற்கெனவே விவசாயிகள், '' நாங்கள் சேற்றிலே கை வைத்தால்தான் நாட்டிலே இருக்கின்ற நீங்கள் சோற்றிலே கை வைக்க முடியும்.'' என்ற கோஷத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் உணர்ந்து இருக்கின்ற காரணத்தால், ஏற்கெனவே விவசாயிகளுக்கு ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் என்றிருந்ததில் 25 ரூபாய் குறைத்து, 50 ரூபாயாக அவர்களுக்குத் தந்திருக்கிறார்கள். இதுபோன்று இன்னும் பல திட்டங்களை நம்முடைய அரசு விவசாயிகளுக்காகச் செய்து கொடுத்திருக்கிறது.

அதே நேரத்தில் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் வழங்க வேண்டும், நிதி ஆதாரத்தைப் பெருக்க வேண்டும் என்பதிலே நம்முடைய அரசு மெத்த அக்கறை காட்டியது என்பதை நாடு அறியும். ஏற்கெனவே, 1958ஆம் ஆண்டு பஞ்சாயத்து சட்டத்தை அன்றைய தினம் நாட்டுக்கு உருவாக்கித் தந்தார்கள். அந்த நிலை 1976 வரையிலே நீடித்து வந்தது. அதற்குப் பிறகு வந்த அரசு அந்த பஞ்சாயத்துத் திட்டத்தையே சீர்குலைக்கின்ற வகையில் பல்வேறு இலாக்காகளை, ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து எடுத்து, அந்த அமைப்பையே சீர்குலைத்துவிட்டது என்பதை நான்சொல்லி நீங்கள் அறிய வேண்டிய அவசியம் இல்லை. மகாத்மா காந்தியடிகள் இராம ராஜ்யம் என்றார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் கிராம ராஜ்யம் என்றார்கள். கிராம ராஜ்யம் நல்ல முறையிலே நடந்தால்தான் மைய அரசானாலும், மாநில அரசானாலும் போடுகின்றத் திட்டங்கள் கிராமங்களில் அடித்தட்டில் இருக்கின்ற அந்த மக்களுக்குப் போய்ச் சேரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆனாலும், முன்பிருந்த அரசு கல்வி, வேளாண்மை, கிராமத் தொழில், குடிதண்ணீர், குடும்பக் கட்டுப்பாடு, ஆரம்பக் கல்வி என்கின்ற பல்வேறு நிலைகளையும் சீர்குலைத்துவிட்ட காரணத்தினாலே அந்த அமைப்பு இன்று சீர்குலைந்து காணப்படுகிறது என்பதை நான் உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இன்றைய தினம் இந்த ஓராண்டுக்குள் பல்வேறு நிலைகளை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து செய்தாலும் கூட அது இன்னும் முழுமை பெறாமல் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த வகையில் எதிர்காலத்தில் நம்முடைய அரசு மத்திய அரசு கொண்டுவருகின்ற அந்தப் புதிய பஞ்சாயத்துச் சட்டத்தையும் ஆராய்ந்து இந்தப் பஞ்சாயத்து ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்கள் நல்ல

நிலைமையில் மக்களுக்குப் பணியாற்றும் வகையில் அதிக அதிகாரங்களைப் பெறவும், அதிக நிதி ஆதாரங்களைப் பெறுகின்ற வகையிலே சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல் மக்கள் குரலே மகேசன் குரல் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த வகையில் இன்றைய தினம் புதிதாகப் பொறுப்பேற்று இருக்கிற மத்திய அரசு அதை உணருகின்ற வகையில் ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட மக்கள் வேலை வாய்ப்பில் அல்லது படிக்கின்ற வகையில் ஒரு சதம் பெறவேண்டும் என்கிற மண்டல் கமிஷன் அறிக்கையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று பல ஆண்டுக் காலமாகக் கோரிக்கை விடுத்து இருந்தாலும் கூட ஏற்கெனவே இருந்த மைய அரசு செவி சாய்க்காத காரணத்தாலே இன்றைய தினம் புதிய மைய அரசு பொறுப்பேற்ற உடன் அதில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் அதற்காக பிரதமர் தலைமையிலே ஒரு குழுவை அமைத்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கி அமர்ந்து இருக்கின்ற மைய அரசைப் பாராட்ட வேண்டும்; அதை உடனடியாகச் செயல்படுத்துகின்ற பிரதமரையும் பாராட்ட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

12–25 மணி

உடனடியாக அதைச் செயல்படுத்த இருக்கிற நம்முடைய பிரதமர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துகொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலும் நம்முடைய தலைவர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியதைப் போல், இங்கே தமிழ்நாட்டிலிருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோர், அவர்களுடைய கல்வியானாலும் சரி, வேலை வாய்ப்பானாலும் சரி, உரிய சலுகைகளைப் பெற வேண்டும், உரிய வாய்ப்புக்களைப் பெற வேண்டும் என்ற வகையில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கொள்கையில் உறுதியாக இருந்து வருகிறது. ஏற்கெனவே இருந்த அரசு ஒரு காலக் கட்டத்தில் அதை எடுத்துவிட்டு, பொருளாதார அடிப்படையில் அதை மாற்றி அமைத்தபோது கூட, நம்முடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தி.மு.க சார்பில் எதிர்ப்புக் குரல் கொடுத்தார்கள். போராடினார்கள். பிறகு அப்போதிருந்த அரசும் பணிந்து, பழைய நிலைக்கே வந்தது. பிறகு மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களான வன்னியர்கள், சீர்மரபினர் மற்றும் பல்வேறு சமுதாயத்தினருடைய கோரிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, ஓராண்டுக் காலத்தில் அவர்களுக்காக இட ஒதுக்கீட்டையும் செய்து, அதற்கான



சட்டத்தையும் நிறைவேற்றி அவர்களெல்லாம் பல்வேறு நிலைகளிலும்—அதாவது எஞ்சினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி வேலை வாய்ப்பு போன்றவற்றில் அதிகமான இடங்களைப் பெறுகிற வகையில் செய்து தந்தார்கள். அதற்காக அந்த மக்கள் நம்முடைய முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். நாமும் இந்த அரசாங்கத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதைப் போன்றே, '' நீரின்றி அமையாது உலகம் '' என்ற வள்ளுவருடைய வாக்குக்கு ஏற்ப, குடிநீர்க் குழாய்கள் இல்லாத பட்டிதொட்டிகள், கிராமங்கள் இருக்கக்கூடாது என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட உடனேயே ஒரு திட்டத்தைத் தமிழ்நாட்டிலே செயல்படுத்தினார்கள். அந்த வகையில் சற்றேறக்குறைய 10,000-க்கும் மேற்பட்ட சிறு கிராமங்களிலும் கைப் பம்புகளை அமைத்துத் தருகிற வகையில் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். வருகிற மே மாதத்தில் அந்தத் திட்டம் நிறைவுறும் என்று ஆளுநர் உரையிலே கூட சொல்லியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் எல்லா கிராமங்களிலும் குடிநீர் திட்டத்தைப் பொறுத்த வரையில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி பெறுகிற நிலையில் திட்டத்தைத் தீட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அரசுக்கு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் கிராமங்களில் இருப்பவர்களானாலும் சரி, நகரங்களில் இருப்பவர்களானாலும் சரி, நிச்சயமாக அங்குள்ள தாய்மார்கள்தான் குடிதண்ணீரைக் கொண்டு வருகிற நிலை இருக்கிறது. எனவே, அந்த வகையில் தாய்மார்களுடைய கஷ்டத்தைப் போக்குகிற வகையில் நம்முடைய அரசாங்கம் இதிலே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே இந்த ஆண்டு தென் மாவட்டங்களிலே ஓரளவுக்கு மழை பெய்திருந்தாலும் வட மாவட்டங்களில் பருவ மழை தவறிவிட்டிருக்கிறது. இன்றைய நிலையில் என்னுடைய மாவட்டமான திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், தர்மபுரி போன்ற மாவட்டங்களில் இப்போதே குடிதண்ணீர் பிரச்சினை ஏற்படுகிற ஒரு அபாயகரமான சூழ்நிலை இருந்து வருகிறது. அதனால் நம்முடைய அரசு அந்த மாவட்டங்களில் இருக்கிற விவசாயிகளுக்குக் கடன் வழங்குகிற திட்டங்களில், சலுகை, வரி வஜா செய்யும் திட்டம், குடிநீர்ப் பஞ்சம் வராத நிலை ஆகியவற்றை உருவாக்க வேண்டும். இது குறித்து அரசு அதிகாரிகளுக்கு முன்னதாகவே அறிவித்து அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று மின்சாரம் மிக முக்கியமான பிரச்சினையாகும். தமிழ்நாடு மின்சாரத்தில் தன்னிறைவு பெறாத சூழ்நிலை இருந்து வருகிறது என்பதை நாம் அறிவோம். திடீர் என்று ஒரு சில நேரத்தில் மின்சார தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுகிறது. இந்த ஆண்டில் கூட அப்படி ஏற்பட்டது. ஆளுநர் உரையிலேகூட அது சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நேரத்தில் தொழில்கள் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் விவசாயமும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. அந்த வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தி நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களையே அழைத்து வந்து எண்ணூரில் புதிய அனல் மின் நிலையம் அமைக்கும் பணியை விரைவுபடுத்தி இன்றைய தினம் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார்கள். அதற்காக நான் நம்முடைய அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்காலத்தில் எவ்வளவு அதிகமான அளவுக்கு............. (மணியடிக்கப்பெற்றது) மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியுமோ அந்த அளவுக்கு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

12.30 மணி.

அடுத்து, நட்புக்கு இலக்கணமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்கனவே இருந்த அரசு அவருடைய பெயரை, இருந்த நிறுவனங்களிலேயிருந்து நீக்கியிருந்தாலும் கூட, அதே போன்று அவர்கள் என்ன திட்டத்தைச் செயல்படுத்தினார்களோ அந்தத் திட்டத்தைக் கைவிட்டிருந்தாலும்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பெருந்தன்மையோடு, தமிழக மக்கள் பாராட்டுகின்ற வகையிலே நம்முடைய மறைந்த முன்னாள் முதல்வர் மரியாதைக்குரிய மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவிடத்தைக் கட்டி முடித்தது.

அதே போன்று அவர்கள் எங்கே அவர்களுடைய சிலையை வைக்க வேண்டுமென்று கேட்டார்களோ அந்த இடத்தையே உடனடியாக அவர்களுக்குத் தந்தது.

தெலுங்கு கங்கைத் திட்டத்தை அந்த அரசு துவக்கியிருந்தாலும் கூட, அதிலே தொய்வில்லாமல் விரைவு படுத்தி, ஆந்திர அரசாங்கத்தோடு பேசி, விரைவாக சென்னை மாநகர மக்கள் குடிதண்ணீர் பெறுகின்ற வகையிலே அதற்காக உரிய நடவடிக்கை எடுத்திருப்பது ஆகியவற்றை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.





அதே போன்று முதல்வர் அவர்களுடைய பெயராலே மருத்துவப் பல்கலைக் கழகத்தை நம்முடைய குடியரசுத் தலைவரவர்களைக் கொண்டு துவக்கியது, தபால் தலை வெளியிட்டது.

இப்படிப்பட்ட நிலையை நாட்டு மக்கள் பாராட்டுகின்றார்கள் ; நல்ல இதயம் படைத்தவர்கள் பாராட்டுகிறார்கள் என்பதை நான் உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டம் மிகப் பெரிய மாவட்டமாக விளங்கி வந்தது. திருவண்ணாமலையை தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையை இந்த அரசாங்கம் ஏற்று, இன்றைய தினம் ஏற்கனவே இருந்த அரசு எந்தப் பெயரைச் சூட்டியதோ அதையே மாற்றாமல், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் என்கின்ற பெயரையே வைத்து ஒரு புதிய மாவட்டத்தை அரசுக்கு இருக்கின்ற நிதி நெருக்கடியையும் கருதாமல் இன்றைய தினம் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நம்முடைய இந்த அரசையும், நம்முடைய முதல்வர் அவர்களையும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தினுடைய மக்களினுடைய சார்பிலே நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இஸ்லாமிய மக்கள் நம்முடைய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய பெயரை ஒரு மாவட்டத்திற்குச் சூட்ட வேண்டுமென்று கோரிய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் என்ற பெயரையும் நம்முடைய முதல்வர் அவர்கள் இன்றைய தினம் சூட்டியிருக்கிறார்கள். அதற்காக நாம் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அரசியல் சட்டத்தை நிர்ணயித்த நம்முடைய டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய பெயரை ஒரு மாவட்டத்திற்கு வைக்க வேண்டுமென்ற நீண்ட நாள் நெடு கோரிக்கையை அந்தச் சமுதாய மக்கள் மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கின்ற பல தரப்பினரும் வற்புறுத்தி வந்தார்கள். ஆனால், நம்முடைய முதல்வரவர்கள் இந்தியாவிலேயே டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய பெயரை ஒரு மாவட்டத்திற்குச் சூட்டிய பெருமையைத் தமிழகம்—தமிழக அரசு பெறுகின்ற வகையிலே வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம் என்கின்ற வகையிலே இன்றைய தினம் அதையும் அவர்கள் சூட்டியிருக்கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய அரசையும், நம்முடைய முதல்வரவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1990 சனவரி 19

அரசு எத்தனை திட்டங்களை தீட்டினாலும்கூட, எத்தனை திட்டங்களை நிறைவேற்றினாலும் கூட கிராமங்களுக்கு அது போய்ச் சேர வேண்டும் என்கின்ற வகையில் செய்தாலும் இன்றைய தினம் அரசுக்கு விரோதமாக, அரசுக் காரியங்கள் சரியான முறையில் நிறைவேற்றப்பட முடியாத வகையில் ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்றவர்களும் இருக்கிறார்கள் என்பதை இந்த அரசாங்கத்திற்கு உங்கள் மூலமாக நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் கிராம நிர்வாக அதிகாரிகள், சத்துணவு அமைப்பாளர்கள், அதிலே பணியாற்றுகின்ற ஊழியர்கள், கூட்டுறவுத் துறையிலே நியாய விலைக் கடைகளில் பணியாற்றுகின்ற விற்பனையாளர்கள், அதிலே பணி புரிகின்ற தனி அதிகாரிகள், பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திலே இருக்கின்ற செயலாளர்கள் — அவர்கள் ஒரு கட்சிக்குச் சார்பாக நடந்து கொண்டால் கூட மன்னித்து விடலாம் ; ஆனால் அரசுக்கு விரோதமாக, அரசு இடுகின்ற கட்டளைக்கு விரோதமாக, அரசினுடைய திட்டங்களுக்கு விரோதமாகவே பெரும்பாலானவர்கள் செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலமாகச் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். எதிர்காலத்திலே நம்முடைய அரசு இதற்கு ஒரு முடிவு செய்யவில்லை என்று சொன்னால் நாம் எந்தத் திட்டத்தை நிறைவேற்றினாலும் அது கிராம மக்கள் மத்தியிலே போய்ச் சேருவதிலே நிச்சயமாக இடைஞ்சல் இருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பொது வாழ்வில் ஈடு பட்டுள்ளோர் குற்ற நடத்தைச் சட்டத்தை விரிவாகக் கொண்டு வருவதற்காக நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகின்றேன்.

12.35 மணி.

அதே நேரத்திலே அரசாங்கத்திலே இருக்கின்ற அதிகாரிகள்— கையூட்டு வாங்குகின்ற அதிகாரிகளைத் தண்டிக்க இப்பொழுது சட்டம் இருந்தாலும் கூட அவர்கள் வருவாய்க்கு அதிகமான சொத்துக்கள் சேர்த்திருப்பார்களேயானால் அதைத் திரும்ப அரசாங்கம் பெறுவதற்கு உண்டான சட்டம் இன்றைய தினம் இல்லாமல் இருக்கிறது. அதை நம்முடைய அரசாங்கம் நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவர்களுக்கிருந்த நான் முதலில் சொன்ன நிதி நெருக்கடி, அதே நேரத்தில் உணவுப் பற்றாக்குறை, பருவ மழை தவறிய நிலை இத்தனைக்கும் இடையில் தமிழ் நாட்டின் மக்களுடைய கஷ்டங்களை உணர்ந்து இன்றைய தினம் பல்வேறு காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.



1990 சனவரி 19] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

அதே போல அரசு ஊழியர்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசுக்கு பெரிய பற்றாக்குறை இருந்தாலும் கூட ஏறக்குறைய 450 கோடி ரூபாய் வரையிலும் ஒதுக்கி அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தி இருக்கிறார்கள். அப்படி உயர்த்தி இருந்தாலும் கூட நிறைவு பெறாத சூழ்நிலையில் நம்முடைய அரசு ஊழியர்கள் ஒரு பக்கத்தில் இருந்து வருகிறார்கள். அதையும் எதிர்கொண்டு நம்முடைய அரசாங்கம் கவனித்து தீர்த்து வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

143810

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் சில கருத்துக்களை வழங்குகிற வாய்ப்பை அளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுங்கட்சி வரிசையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது, சொல்வதைச் செய்வோம், செய்வதைத்தான் சொல்வோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் அளித்திருக்கின்ற தீர்ப்பை எண்ணிப் பார்க்கிறபோது தேர்தல் வாக்குறுதிகளை இந்த அரசு நிறைவேற்றவில்லை என்பதாக மக்கள் இன்றைக்கு தீர்ப்பளித்து இருக்கிறார்கள். நேற்றைய தினம் ஆளுநர் உரைக்கு முன்னால் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற மாண்புமிகு எஸ்.ஆர். இராதா அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லி, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் மக்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்ளாத ஆட்சி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை உணர்த்துகிற வகையில் வெளிநடப்பு செய்தோம். நாங்கள் சில கருத்துக்களை உங்கள் மத்தியில் கோடிட்டு காட்டுவதற்கு கடமைப் பட்டிருக்கிறோம்.

* திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் பேச்சில் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளிநடப்பு செய்ததற்கு ஒரு காரணத்தைச் சொன்னார்கள். ஆனால் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியையும் அதில் இணைத்தார்கள். ஆளுகிற கட்சி தங்களுடைய திட்டங்களை, கொள்கைகளை நிறைவேற்றுவதில் தவறி விட்டது என்று சுட்டிக் காட்டி தான் காங்கிரஸ் கட்சி வெளி நடப்பு செய்ததா என்பதை கனம் உறுப்பினர் அவர்களிடம் விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

N90.18.1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். இராதா அவர்களும், காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்களும் நேற்று ஆளுநர் உரைக்கு முன்னால் சில செய்திகளைப் படித்து விட்டு, அதற்குப் பிறகு வெளிநடப்புச் செய்ததைக் காட்சியாகக் கண்டோம். முறைப்படி அந்த இரண்டு பேச்சுகளும் இங்கே பதிவாகாது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இன்னும் சொன்னால் 17-வது விதியின்படி அவர்கள் அப்படி நடந்து கொள்ளக் கூடாது என்று கூடப் பேரவைத் தலைவர் என்ற முறையில் சொல்லலாம். ஆனாலும் மக்களாட்சிக்கு மதிப்பு அளிக்கிற முறையிலே தான் உங்களுடைய கருத்துகளை அவையிலே பொறுமையோடு கேட்டு, அதற்குப் பிறகு நீங்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறீர்கள். எனவே, அதையே மேற்கோளாகக் காட்டுவது என்பது, நான் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டேன் என்று நீங்கள் சுட்டிக் காட்டுவதைப் போல ஆகிவிடக் கூடாது. நீங்கள் வேறு செய்திகளை நேரிடையாகப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். எனவே, இந்த அளவோடு அதை நிறுத்திவிடுவது நல்லது.

திரு. மா. சுந்தரதாஸ் : 1984–85, 1986–87 ஆம் ஆண்டுகளில் இப்படி எல்லாம் நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைக் கிளப்பவில்லையே. அதைக் கிளப்பியது மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் தான். அவர்களே நேரிடையாகப் பேசலாம் நேற்றைய நிகழ்ச்சியை மேற்கோள் காட்ட வேண்டிய தேவை இல்லை. மேற்கோள் காட்டுவது தேவையில்லை என்பதற்காகச் சொல்கிறேன்.

*12-40 மணி*

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுக் காட்டக் கூடாது என்ற அடிப்படையிலே நீங்கள் சொல்வது அவ்வளவு சரியாக இருக்காது என்று நான் கருதுகிறேன். இதற்கு முன்னாலேயிருந்த நடைமுறை ஆளுநர் வந்தாலே யாரும் எதிரிலே வரக் கூடாது என்ற காலம் இருந்தது. இன்றைக்கு ஆளுநர் நிலை என்ன என்று சந்தேகப்படுகிற அளவிற்கு காலம் போய்விட்டது. இன்றைக்கு இருப்பவர் நாளைக்கு இருப்பார்களா, நாளைக்கு இருப்பவர் நாளை மறுநாள் இருப்பாரா என்று சந்தேகத்திற்குரிய ஒரு ஆளுநரை வைத்துக் கொண்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லா மனிதர்களுக்கும் பொருந்துவது.





திரு. எஸ். ஆர். இராதா : எல்லா ஆளுநர்களுக்கும் சேர்த்துத் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லா மனிதர்களுக்குமே பொருந்துவது என்று சொன்னேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நீங்கள் நம்பிக்கை இல்லாமல் இருக்கிறீர்கள். நான் நம்பிக்கையோடு சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. இது திருவள்ளுவர் சொன்னது. நான் சொல்லவில்லை.

திரு. எஸ். ஆர். இராதா : நான் தயவுசெய்து பணிவன்போடு பேரவைத் தலைவர் அவர்களுக்குச் சொல்கிறேன், திருவள்ளுவர் சொன்னதாலே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தல்ல. நான் நம்பிக்கையோடு இருக்கிறேன். இன்றைக்கு இருக்கிறேன். நாளைக்கும் இருப்பேன் என்ற தைரியத்தோடு இருக்கிறேன். அந்த அடிப்படையிலே சொல்கிறேன். நேற்றைக்கு பின்பற்றப்பட்ட நடைமுறை இருக்கின்றதே, நீங்கள் எதிர்க் கட்சியாக இருந்த காலத்திலும், பல்வேறு ஆண்டுகளிலே அது நடைமுறையிலே வந்துவிட்ட ஒன்று. அந்த அடிப்படையிலே தான் ஆளுநர் உரையை எதிர்த்து எங்களுடைய கருத்துக்களைச் சொல்லி, வெளிநடப்புச் செய்கிற உரிமை என்பது இந்தச் சட்டமன்றத்திலே பல்வேறு ஆண்டுக்காலமாக அது முறையாக ஆகி விட்டது. அந்த முறையைப் பின்பற்றித் தான் நாங்கள் நேற்று, வெளிநடப்புச் செய்திருக்கிறோம். எங்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வெளிநடப்புச் செய்ததை நான் ஏதும் திறனாய்வு செய்யவில்லை. நீங்கள் திசை திருப்புகிறீர்கள். நான் திரு. செங்கோட்டையன் அவர்களுக்குக் குறிப்பிட விரும்பியது, அவரே, நேரிடையாக இந்தச் செய்திக்கு வரலாமே, அதை மேற்கோள் காட்ட வேண்டுமா என்றுதான் கேட்டேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நீங்கள் சொல்கிற வார்த்தையில் என்ன ஆயிற்று என்றால், வெளிநடப்புச் செய்கிற முறைகளிலே ஏதோ தவறு இருப்பது போலவும், நான் தான் நேற்று முறைகளைத் தவறாகச் செய்து விட்டேன் என்பது போலவும் ஆகி விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் எந்தத் தீர்ப்பும் அளிக்கவில்லை என்பதற்காகச் சொல்கிறேன். திரு. செங்கோட்டையன் அவர்களே நேரிடையாகத் திறனாய்வுக்கு வரலாமே, அதை மேற்கோள் காட்டவேண்டுமா என்பதற்காகத்தான் சொன்

னேன். இதிலே விளக்கத்திற்கு இடமேயில்லை என்று கருதுகிறேன். செங்கோட்டையன் அவர்களே நேரிடையாகக் குற்றம் சாட்டலாம், நேரிடையாகப் பேசலாம். அவருக்கு முழு உரிமையும் இருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : இது முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள். ஏன் என்றால் நடவடிக்கைகள் அத்தனையும் பதிவு செய்யப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்கள் கடமையைச் செய்து விட்டீர்கள். பேரவைத் தலைவர் அவர் கடமையைச் செய்வார்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை நிகழ்த்துகிற நாளில், அரசியல் கட்சிகள், அல்லது சட்டமன்றத்திலே உள்ள கட்சிகள், தங்களது கருத்தைத் தெரிவிப்பதற்கு அது ஒரு வழி என்ற காரணத்தினால், வெளி நடப்பு செய்வது என்பது சில காலமாக, இடம் பெற்றிருக்கிற ஒன்று. ஆனால் அது பதிவேட்டில் ஏறாது. ஏன் என்றால், ஆளுநர் உரை நிகழ்த்துகிற அன்றைய தினம் ஆளுநர் உரை படிப்பதைத் தவிர, வேறு எதுவும் பதிவேட்டில் இடம் பெறுவது இதுவரையில் கிடையாது. ஆகவே நாங்கள் வெளிநடப்பு செய்தும், இடம்பெறவில்லை. இனி யார் செய்தாலும் ஆளுநர் உரை நிகழ்த்துகிற நாள் அன்று, வெளிநடப்பு செய்தது என்பது பத்திரிகையிலே வருமே தவிர, சட்டமன்ற பதிவேட்டில் இடம் பெறுவதில்லை என்ற மரபு தொடர்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : தயவு செய்து பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்னாலே பதிவேடுகளிலே இப்படி ஒரு வெளி நடப்பு நடக்கிறது என்பது பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நான் அந்த அடிப்படையிலே தான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் முழுப் பேச்சையும் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்பது கூட அல்ல. இந்தக் காரணத்தினாலே, வெளிநடப்பு செய்யப்பட்டிருக்கிறது, வெளிநடப்பு செய்திருக்கிறார்கள் என்பது வர வேண்டும். ஏன் என்றால், நேற்றைக்குப் பார்த்தால், தன்னாட்சி வழங்கப்பட இருக்கிற நம்முடைய டி. வி. நாங்கள் இருந்ததாகவே காட்டாமல் விட்டு விட்டார்கள். தன்னாட்சி வந்தால் இன்னும் என்னென்ன செய்வார்களோ என்று தெரியவில்லை. நேற்றைக்குப் பார்த்தால் நாங்கள் ஒரு எதிர்க்கட்சியாக இருப்பதாகவே காட்டாமல், உங்களைக் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். காட்டட்டும். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : படம் எடுக்கும் போது நீங்கள் இல்லாததால் நேர்ந்த குறை. (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். இராதா : படம் எடுக்கும் போது நீங்கள் சொல்லி படம் எடுத்தார்கள். (குறுக்கீடு). தன்னாட்சி வழங்கினால் இன்னும் என்னவாகுமோ என்று தெரியவில்லை. படத்திலே நாங்கள் வரவேண்டும். அவ்வளவுதான். (குறுக்கீடு).

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : இல்லை, இல்லை. நான் சொன்னது, வெளிநடப்பு எல்லாம் சட்டமன்றத்திலே பதிவு ஆகாது என்று சொல்லவில்லை. ஆளுநர் உரை நிகழ்த்துகிற அன்றைய தினம் பதிவு ஆவது இல்லை என்பது நீண்ட காலமாக இருக்கிற ஒன்று. அந்த முறையை நாம் இப்போது மாற்றுவது என்பது இயலாத ஒரு காரியம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, முதலிலே நாம் எல்லோரும் இங்கே அமர்ந்திருக்கும் போது கொஞ்சம் வேடிக்கையாகக் கூட நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பக்கம் திரும்பி அவர்களை எல்லாம் படம் எடுங்கள் என்று எல்லாம் சொன்னார்கள். இப்போது படத்திலே வரவில்லை என்பதற்காக யாரும் குறை சொல்லவில்லை. இருந்தாலும் கூட, எல்லாவற்றையுமே நாங்கள் தெளிவாக, விளக்கமாக, வெளிப்படையாகச் செய்கிறோம் என்று சொன்னவர்கள், எதிர்க்கட்சி என்ற ஒன்றையே காட்டாமல் அவர்கள் சென்றது எப்படி என்பது ஒன்று. இரண்டாவது செய்தி, சட்டமன்றத்திலே ஆளுநர் அவர்கள் எந்த நிலையில் அன்று இருந்தார், இங்கே வருகிற போது என்ன நிலையில் இருந்தார் என்பதை சொல்லி, இந்திய தேசிய காங்கிரஸ் வெளிநடப்புச் செய்தது. ஆனால் நான் நினைவுபடுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். கவர்னர் உரையை முழுமையாகப் புறக்கணித்துக் கொண்டு இருந்த தி. மு. க. தான். இப்போது ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. கவர்னர் என்று சொல்கிற பதவியே வேண்டாம் என்று வாதிட்டவர்கள் தான் இப்போது ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில், நாங்கள் இப்போது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலைக்கு ஏற்ப எங்கள் கருத்து என்ன என்று சொன்னது நியாயமானதே என்று நான் கருதுகிறேன்.

12.45 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எங்களுடைய கருத்தைச் சொல்கிறபோது, ஆளுநர்கள் வேண்டாம் என்று நாங்கள் சொல்கிறோம். ஆளுநர் உரை நிகழ்கிறபோது நாங்கள் அந்த உரையைப் புறக்கணித்து வெளிநடப்பு செய்தால் அதுவும் இன்றைக்கு நடைபெறுவதைப் போலத் தான் அன்றைக்கும் இடம் பெறாமல் போனது. இன்றும் ஒன்று, அரசியல் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு அரசியல்

சட்டத்தை மாற்றுகிறபோது தான் இவை மாறும் என்று ஏற்றுக்கொண்டுதான் அரசியல் சட்டத்திற்கு நாங்கள் உண்மையாக இருப்போம் என்று தெரிவித்துவிட்டுத்தான் ஆளுநர் பொறுப்பு தேவையில்லை என்ற கருத்தை நாங்கள் சொல்கிறோமே தவிர, இன்றைய அரசியல் சட்டத்தின்படி நடக்க மறுத்துவிட்டு அதற்கு மாறாக ஆளுநரை மட்டும் ஆதரிப்பதாக அது பொருள் ஆகாது. சட்டப்படி நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதுவும் இன்றைக்கு உள்ள ஆளுநர் இன்னும் எவ்வளவு நாட்கள் இந்தப் பதவியில் இருக்கிறார் என்பது, அவர் ராஜினாமா செய்ததாக சொல்லப்பட்டிருந்தாலும்கூட, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவு வருகிற வரையில் அவர் நீடிக்கிறார் என்பதுதான் உண்மை. சட்டத்திலே உள்ள, அரசியல் சட்டப்படி அவர் ஏற்றுக்கொள்ளப்படுகிற வரையில் அவர் அந்தப் பொறுப்பில் இருக்கிறார். இன்னும் சொல்லப்போனால், இன்னொருவர் நியமிக்கப்படுகிற வரையிலும் கூட அவர் நீடிக்கலாம் என்ற கருத்தும் இருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இதே கருத்தை நமது பேராசிரியர், கல்வியமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நேற்று முதல்வர் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற காரணத்தினாலே நான் சொல்ல விரும்புகிறேன். ஜனாதிபதியினுடைய விருப்பம் எவ்வளவு நாட்கள் இருக்கிறதோ, அவ்வளவு நாட்கள் அவர் இருப்பார். இப்போது ஜனாதிபதியினுடைய விருப்பம் எப்படி இருக்கிறது? விருப்பம் தொடர்ந்து இருந்திருக்குமானால் அவரை ராஜினாமா செய்யும்படி கேட்டிருக்க வேண்டியதில்லை. அவர் கேட்டதற்குப் பிறகு இவர் ராஜினாமாவை அனுப்பியிருக்கிறார். எனவே யாருடைய விருப்பத்திற்கு இணங்க அவர் இருக்க வேண்டுமோ, அவரே ராஜினாமாவை கேட்டுவிட்டார். யாரிடம் கேட்கிறோமோ அவர் ராஜினாமாவும் கொடுத்துவிட்டார். அடுத்தவர் வரும் வரை பொறுப்பு ஏற்பது என்பது எப்போது என்று சொன்னால், நான் கருதுகிறேன். அவருடைய ஐந்து ஆண்டுக்காலம் முடிந்து மற்றவர்கள் வரும் வரை அவர் இருக்க வேண்டும் என்பதுதான் அடுத்தவர் பொறுப்பு ஏற்பது வரை என்ற பொருள்படும் என்று நான் கருதுகிறேன் என்று என்னுடைய கருத்தை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, விவாதம் ஆளுநர் உரையின் மீது நடக்கிறதா? ஆளுநர் இருக்கிறாரா? இல்லையா என்பதன் மீது நடக்கிறதா என்பதை நான் உங்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ஆளுநர் உரையின் மீது திரு. செங்கோட்டையன் பேசுவார்.





திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்டதைப் போன்று நேரடியாக பல்வேறு கருத்துக்களை வழங்குகின்ற வாய்ப்பு இருக்கின்றது என்ற காரணத்தின் அடிப்படையில் இங்கே மாண்புமிகு ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இன்றைக்கு இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு நல்ல காரியங்களை செய்திருக்கிறது. ஏழை மக்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு அரிசி இல்லையே என்று ஏங்கிக் கிடக்கின்ற நேரத்தில் அரிசி விலை ரூ. 6, ரூ. 7 என்று ஏறிக் கொண்டிருக்கின்ற அவலநிலையும், தமிழ்நாட்டு மக்கள் நியாய விலைக் கடைக்குச் செல்கின்றபோது ரூ. 200-க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்கு அரிசி கிடைக்கிறதா என்றால் முழுமையாக அவர்களுக்கும் கிடைக்காமல், இப்போது ரூ. 200-லிருந்து ரூ. 300-க்குள் என்று சொல்லி, நியாய விலைக் கடைகளில் அரிசியும் வழங்கிவிட்டு, இன்றைக்கு ரூ. 1,000-க்கு மேலும் வருமானம் உள்ளவர்களுக்கும் அரிசி வழங்கப்படும் என்ற செய்தியும் சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு மறைந்த புரட்சித் தலைவருடைய ஆட்சியில் வருமான அடிப்படையே இல்லாமல் குடும்ப அட்டைகள் வைத்திருக்கின்ற அத்தனை பேர்களுக்கும், அமெரிக்க திருநாட்டில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் 2 கிலோ அரிசி வழங்கியவர்கள் என்பதை நீங்கள் மறந்திருக்க முடியாது. ஆகவே, அந்த அடிப்படையில் இன்றைக்கு நீங்கள் அவர் கொண்டு வந்த திட்டங்களை ஏற்றுக்கொண்டு, அந்தத் திட்டங்களை படிப்படியாக, ரூ. 200 வருமானம் உள்ளவர்கள், ரூ. 300 வருமானம் உள்ளவர்கள், அதற்குப் பிறகு ரூ. 1,000 வருமானம் உள்ளவர்கள் என்று சொல்லி, வருமான அடிப்படையில் இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கின்ற அவலநிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து எங்களுக்கு முன்னாலே கோடிட்டு காட்டுகிறபோது, இந்த அரசாங்கம் 10,000 கிராமங்களுக்கு ஆழ் துளை குழாய்க் கிணறுகளை அமைத்து விட்டதாக இங்கே சொன்னார்கள். நாம் இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம். புரட்சித் தலைவர் அன்றைக்கு ஆட்சியிலே இருக்கின்ற காலத்திலே ஒரேயொரு ஆண்டில் மட்டும் 50,000 ஆழ் துளை குழாய்க் கிணறுகள் அமைத்து தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்கள் ஆழ் துளை குழாய்க் கிணறுகளிலிருந்து பெரும் அளவிற்குத் தண்ணீரைப் பருகவேண்டுமென்று திட்டங்களைத் தீட்டினார்கள். அந்த அடிப்படையிலே திட்டங்களைப் பார்க்கிறபொழுது நாம் இன்றைக்கு ஆளுநர் உரை பற்றிய விவாதத்திலே கலந்து கொண்டு உரையாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆளுநர் உரையிலே பல்வேறு கருத்துக்களை நீங்கள் இன்றைக்குச் சொல்லியிருக்கிறீர்கள். நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகிற தஞ்சை மாவட்டத்திற்கு இன்றைக்குப் போதிய அளவிற்குத் தண்ணீர் கர்நாடக மாநிலத்திலிருந்து வருகிறதா என்றால் கிடையாது.

12.50 மணி

[திரு. கே. ஏ. செங்கோட்டையன்] [1990 சனவரி 19

1924ஆம் ஆண்டு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி, 1974-வது ஆண்டு வரை, 50 ஆண்டுக்காலம் அந்த ஒப்பந்தம் நீடிக்கப்பட்டு அதற்குப் பிறகு, இன்றைக்கு ஆண்டு கொண்டிருக்கிற இந்த ஆட்சி, அன்றைய கால கட்டங்களிலே, 200 டி.எம்.சி. தண்ணீர் தான் விடுவேன் என்று கர்நாடக அரசு சொல்லிய நேரத்தில், அப்பொழுது வாதிட வேண்டிய இந்த ஆட்சி, தமிழ்நாட்டிலே நெற்களஞ்சியம் என்று சொல்லப்படுகிற தஞ்சையிலே விளை நிலங்களில் எல்லாம், நெற் உற்பத்தியாகிற பகுதிகளுக்குத் தண்ணீர் பெறமுடியாமல், 1976-வது ஆண்டு மத்திய அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் அவர்களுடைய தலைமையிலே, தமிழக முதல் அமைச்சரும், அதே போல், கர்நாடக முதல் அமைச்சரும் பேச்சு வார்த்தை நடத்தி, அந்தப் பேச்சு வார்த்தையின் அடிப்படையிலே, 400 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டுக்கு மேட்டூரிலே —காவிரியிலே விட வேண்டுமென்று ஒப்புதல் கேட்ட நேரத்தில் 100 டி.எம்.சி. தான் நாங்கள் குறைக்கிறோம், அதுவும், தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற வாய்க்கால்களை நவீனமயமாக்கி சீரமைக்கிற நேரத்தில், 20 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, ஆண்டுக்கு 5 டி.எம்.சி. குறைத்து, படிப்படியாகக் குறைத்து, 20 ஆண்டுகளில் 100 டி.எம்.சி. தண்ணீரைக் குறைத்து 300 டி.எம்.சி. தண்ணீர் அளிக்க ஒப்புதல் அளித்த பிறகு, தமிழ்நாட்டிலேயிருந்து அன்றைக்குப் பேச்சு வார்த்தை நடத்தச் சென்று முதல் அமைச்சர் அவர்கள், அன்றைக்கு ஒப்பந்தம் செய்யாத காரணத்தினால், இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம். இன்றைக்கு இங்கிருந்து அமைச்சர் செல்கிறார். கர்நாடக மாநில முதலமைச்சரைச் சந்திக்கச் செல்கிற நேரத்தில், கர்நாடக முதல் அமைச்சர் இருக்கிறாரா இல்லையா என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல், இங்கேயிருந்து கர்நாடக மாநிலத்திற்குச் சென்று முதல் அமைச்சரும், அங்கே இல்லை, அமைச்சரும் அங்கே இல்லை என்று சொல்லி, அமைச்சர் திரும்பி வருகிற அவல நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 1973-வது ஆண்டிலே நீங்கள் 100 டி.எம்.சி. யாவது தண்ணீர் பெற்றிருந்தால், இன்றைக்கு நெற் களஞ்சியம் என்று சொல்லப்படுகிற, நெல்லை உற்பத்தி செய்கிற....

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்கள், 300 டி.எம்.சி. தண்ணீர் தருவதாகவும், அதை ஒத்துக் கொள்ள முடியாது என்று ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போடாமல் வந்து விட்டதாகவும், மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு அப்படிப் பேசுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. உண்மைக்குப் புறம்பான செய்தியை அவையிலே கூறி, மக்களைக் குழப்புவது நல்லதல்ல. நான் பலமுறை, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது, பேசியிருக்கிறேன். காவிரி பிரச்னையைப் பொறுத்தவரையில், கட்சிச் சார்பில்லாமல் நாம் அதை அணுக வேண்டுமென்று குறிப்



1990 சனவரி 19] [டாக்டர் மு. கருணாநிதி]

பிட்டிருக்கிறேன். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது பேசியிருக்கிறேன். அப்பொழுது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இருந்தபொழுது சொல்லியிருக்கிறேன். தி.மு.க. அரசு காவிரிப் பிரச்னையில் எந்த நிலையை எடுத்ததோ, அதே நிலையைத்தான் அ.தி.மு.க. வும் எடுத்து இருக்கிறது. எனவே, அதைப் பாராட்டுகிறோம் என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே, தவறான வாதங்களை வைக்கக் கூடாது. 1974-வது ஆண்டு காவிரி ஒப்பந்தம் காலாவதியாகி விட்டது என்ற ஒரு தவறான கருத்தை நாமே ஏற்றுக்கொள்ள முடியாது. அது கர்நாடக மாநிலத்தினுடைய வாதம். அதற்கு நாம் துணை போகக் கூடாது. காலாவதி ஆகவில்லை. சர்ப்ளஸ் வாட்டரை எப்படிப் பகிர்ந்துகொள்வது என்றுதான் 1974-ஆம் ஆண்டு தீர்க்க வேண்டுமென்று 1924-வது ஆண்டு ஒப்பந்தம். அதற்கு மாறான கருத்துக்களைக் கூறுவது தமிழ்நாட்டுக்கு நாமே நம்மை அறியாமல் ஒரு தேவையற்ற ஆபத்தை உருவாக்குவதாக ஆகிவிடும்.

**திரு. பி. என். வல்லரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கர்நாடக முதல் அமைச்சர் அங்கே இருக்கிறாரா என்பது கூடத் தெரியாமல் சென்று திரும்பி வந்திருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். பொதுப் பணித் துறை அமைச்சருக்குக் கிடைத்த தகவல், கர்நாடக முதல் அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றிருக்கிறார். மீண்டும் கர்நாடகத்திற்கு வர இருக்கிறார் என்ற தகவலின் அடிப்படையில்தான் அவர் சென்றார். ஆனால், கர்நாடக முதல் அமைச்சர் அவர்கள் அங்கேயிருந்து அப்படியே டெல்லிக்குச் சென்று விட்டார் என்ற செய்தி கிடைத்தது. அதனால் தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. கர்நாடக முதல் அமைச்சர் தான் தன்னுடைய திட்டத்தை மாற்றிக் கொண்டார் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

12-55 மணி

***திரு. எஸ். ஆர். இராதா** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிற இடத்திற்கு எதிரிலே உறுப்பினர் உட்கார்ந்து இருக்கிற காரணத்தினாலே அவர்கள் பொதுப்பணித் துணை அமைச்சராகி விட்டார்களோ என்று தோன்றுகிறது. ஆனால் அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் அல்ல என்பது எங்களுக்குத்தெரியும். பதில் சொல்ல வேண்டுமென்றால் இங்கே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கலாம். அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கலாம்.

இங்கே முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் அடுத்த விஷயந்திற்கு போவதற்கு முன்னால் இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு பிரச்சினையைக் குழப்பிவிட்டார்கள். மறுபடியும் இந்த நிலைமையைக் குழப்பிக்கொண்டு இறுதியாக கர்நாடகத்துக்காரர்களை தவறாக எடுத்துக்கொள்ளாத ஒரு நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்களை இங்கே தந்தார்கள். 1976-ஆம் ஆண்டு மத்திய அமைச்சராக இருந்த ஜெகஜீவன்ராம் அவர்கள் தலைமையில் தான் இரண்டு மாநில அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றன. அப்போது என்ன பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில் இங்கே இருக்கிற அனைத்துக் கட்சிகளையும் பொறுத்தவரையில் இன்றைக்கு எவ்வளவு தண்ணீரை நீங்கள் பெற்றுத் தருகிறீர்களோ . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவரவர்களே, ஒரு 'சென்சிட்டிவ்' பிரச்சனை. அதனால்தான் நான் அடிக்கடி தலையிட வேண்டியதாக இருக்கிறது. நான் பதில் சொல்லும் போது நான்கு நாட்கள் கழித்துகூட சொல்லலாம். ஆனால் அதற்கிடையிலே உங்களுடைய பேச்சு பத்திரிகையில் வந்துவிடுமேயானால் அது கர்நாடக மாநிலத்திற்கு சாதகமாக ஆகிவிடும் என்பதால்தான் நான் குறுக்கிட விரும்புகிறேன். நீங்கள் பேசுகின்ற பேச்சு அவர்களுக்கு சாதகமாக ஆகிவிடக்கூடாது : தமிழ்நாட்டிற்குப் பாதகமாக ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் குறுக்கிடுகிறேனே அல்லாமல் வேறு அல்ல. அப்போது ஒரு ஒப்பந்தம் வந்தது. 100 டி. எம். சி. சிக்கனப்படுத்த— அதைக்கூட குறைந்துக்கொள்வது என்று குறிப்பிடக் கூடாது—100 டி. எம். சி. தண்ணீரை சிக்கனப்படுத்த— 'மார்டனைசேஷன்' மூலமாக தமிழ்நாட்டிலே 100 டி. எம். சி. தண்ணீரை சிக்கனப்படுத்த ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்த ஒப்பந்த வரைவு வந்தபோது சில 'டெக்கனிக்கல் டெர்ம்ஸ்' நமக்கு சரி வரவில்லை. எந்த இடத்திலே இருந்து சீர் செய்வது, எங்கே இருந்து தண்ணீரை அளப்பது என்பதிலே அந்த ஒப்பந்தம் நமக்கு சரிவரவில்லை. எனவே தான் கையெழுத்துப் போடாமல் வந்தோம். தமிழ்நாட்டின் நன்மைக்காகச் செய்யப்பட்ட காரியம் அது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலே அதை விட்டுவிட்டு வேறு பிரச்சனைகளுக்கு நான் வருகிறேன். காரணம் முதலமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். தமிழ்நாடு





டிற்குத் தேவையான தண்ணீரை பெற வேண்டியிருக்கிற காரணத்தால் பல்வேறு பிரச்சனைகளை ஆய்ந்து முடிவு எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல முடிவுகளை அறிவிப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்புத் தர என்றைக்கும் தயாராக இருக்கின்றன : நாங்கள் தயாராக இருக்கிறோம். இருந்தாலும் கூட இன்றைக்கு ஆளுநர் உரையிலே பல்வேறு பிரச்சனைகளை நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் விவசாயிகளுக்கு ஏதாவது ஒரு திட்டத்தை ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிறார்களா என்றால் இல்லை. அதுபற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

விவசாயிகள் உற்பத்தி செய்கிற விளைபொருள்களுக்கு, குறிப்பாக அவர்கள் உற்பத்தி செய்கிற பாலைக்கூட 20 சதவீதம் குறைத்து வாங்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்தில் வாய் மூலம்உத்தரவு போடப்பட்டிருக்கிறது.ஒன்றியங்களிலே இருக்கிற சங்கங்களுக்கு வாய்மொழி மூலமாக உத்தரவு போட்டு, விவசாயிகள் உற்பத்தி செய்கிற பாலைக்கூட முழுமையாக வாங்க முடியாத ஒரு இக்கட்டான நிலைமை தமிழ்நாட்டில் உருவாகியிருக்கிறது. அதன் விளைவாக பாலை உற்பத்தி செய்கிற விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் இந்த மன்றத்திற்கு நாங்கள் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, இந்த அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகள் மூலம் ஏற்படுகின்ற பலன்கள் இன்றைக்கு அடித்தளத்திலே இருக்கிற மக்களுக்கு உழைக்கின்ற மக்களுக்கு போய்ச் சேருகின்றனவா என்றால் அவை போய்ச் சேரமுடியாத அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்வு பூர்வமாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

அதைப்போல, கூட்டுறவுத் துறைத் தேர்தலையும் பார்த்தோம். கூட்டுறவுத் துறைத் தேர்தல்களை நடத்துகிறோம் என்று சொன்னபோது. அன்றைக்கு அவசரக்கோலத்தில் தேர்தல் தேதியை அறிவித்தோம். ஆனால் அந்த நிலையிலே கூட உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று ஒவ்வொரு சங்கத்திலும் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைச் சேர்த்தார்கள். அப்படிச் சேர்த்த உறுப்பினர்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே குறிப்பிட்ட ஏரியாவிலே இருக்கிறார்களா என்றும் சட்டத்திற்கு உட்பட்டு, விதிகளுக்கு உட்பட்டு இருக்கிறதா என்றும் கூட அங்கே இருக்கிற அதிகாரிகள் ஆய்ந்து நடவடிக்கை எடுக்காமல் யாரை வேண்டுமானாலும் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையிலே சேர்த்தார்கள். பால் உற்பத்தியாளர்களை நெசவாளர் சங்கத்திலே சேர்த்திருக்கிறார்கள். காய்கறி வியாபாரிகளை நெசவாளர் சங்கத்திலே சேர்த்திருக்கிறார்கள். துப்புரவுப் பணியாளர்களை நெசவாளர் சங்கத்திலே சேர்த்திருக்கிறார்கள். அதைப்போல அங்கே பால் விற்பனை செய்கிறவர்களை,

உற்பத்தியாளர்கூட அல்ல, உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கி விற்பனை செய்கின்றவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்திருக்கிறார்கள். இதைப்போன்ற அவல நிலைமை இன்றைக்கு தமிழ் நாட்டிலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நாங்கள் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றோம்.

மேலும் இந்த அரசைப்பற்றி எண்ணிப் பார்க்கிறோம். பல இடங்களிலே புதிதாக மின்சார விளக்குகள் போட வேண்டுமென்று மின்சாரத் துறையைக் கேட்டால், எங்களிடத்திலே அதற்கான உபரி பொருள்கள் இல்லை : ஆகவே, நாங்கள் புதிதாக மின்சாரக் கம்பங்களை அமைக்க முடியவில்லை : மின்சாரம் வழங்குவதற்குத் தேவையான உதவிகளை எங்களால் செய்ய முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, மின்சார விளக்குகள் போடவேண்டுமென்று கருதினாலும் கூட இன்றைக்குப் புதிதாக விளக்குகளைப் பொருத்த முடியாத நிலைமை தமிழ்நாட்டில் நிலவுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** ; பேரவையின் ஒப்புதலுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

13-00 மணி

**திரு. கே. ஏ. செங்கோட்டையன்** ; ஊராட்சி மன்றங்கள் பேரூராட்சி மன்றங்கள், நகராட்சிகள் அனைத்தும் அதற்குரிய மதிப்பீடுகளைத் தயாரித்து அதற்காக அங்கேயிருக்கிற மின்சார வாரியத்திற்கு தொகையைக் கட்டினாலும் கூட, அந்தத் தொகையைப் பெற்றதற்குப் பிறகும் கூட, மின்சார வாரியத்தின் மூலமாக 100-க்கு 10 சதவீதம் மின் விளக்குகள் கூட புதியதாகப் பொருத்தப்படவில்லை என்றக் குற்றச்சாட்டை நாங்கள் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, கிராமப்புறங்களில் உள்ள மக்களாக இருந்தாலும், நகர்ப்புறங்களில் இருக்கிற மக்களாக இருந்தாலும் மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் புரிந்துக் கொண்டு இந்த ஆட்சிச் செயல்படவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆகவே பொதுவாக பல்வேறு திட்டங்களை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். திட்டங்கள் செயல் வடிவம் ஆக்கப்பட்டிருக்கிறதா என்றால் கிடையாது. எழுத்து வடிவத்தில் தான் இருக்கிறதே தவிர செயல் வடிவத்திலே அந்தத் திட்டங்கள் இல்லை என்பதையும், அந்த உணர்வுகளைப் புரிந்துக் கொண்டு தான் தமிழ்நாட்டிலே இருக்கிற மக்கள் இன்றைக்கு உங்களுக்கு தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். நாடாளுமன்ற தேர்தலில் மட்டுமலக இடைத் தேர்தலாக நடந்த சட்டமன்ற தேர்தலிலும் கூட உங்ளுக்கு மக்கள் மாபெரும் தீர்ப்பை அளித்து—நீங்கள் சொன்னதைத்தான் செய்வீர்கள், செய்வதைத்தான் சொல்வீர்கள் என்ற வாக்குப்படி நடைமுறைப்படுத்தவில்லை என்ற அடிப்படையிலே





இன்றைக்கு மக்கள் தீர்ப்பு அளித்திருக்கிற காரணத்தாலே, 1980ஆம் ஆண்டு தேர்தலைப்பற்றி உங்களுக்குத் தெரியும். நாடாளுமன்ற தேர்தலிலே இரண்டு இடங்களிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிற நேரத்தில், அன்றைக்கு இங்கேயிருந்த சட்டமன்றத்தைக் கலைக்க வேண்டுமென்று சொல்லி நீங்கள் மத்தியிலே சென்று வாதாடினீர்கள். ஆனால் இன்றைக்கு ஒரு இடத்தைக் கூட பெற முடியாத இக்கட்டான சூழ்நிலையில் இன்றைக்கு நீங்கள் ஆட்சியிலே தொடர்ந்து அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள். மக்கள் அளித்திருக்கிற தீர்ப்பு சாதாரணமான தீர்ப்பு அல்ல. இங்கே இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியிலேயும் வெற்றி பெற்றிருக்கிற வித்தியாச ஓட்டை கூட நீங்கள் பெற முடியாத அளவுக்கு மக்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே மக்கள், ஒரு இயக்கமாக இருந்து அரசுக்கு தங்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு நிலைமைகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் இந்த ஆளுநர் உரையிலே எதுவுமே இல்லை. ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற பல கருத்துக்களைப் பார்க்கின்றபோது செயல்வடிவம் ஆகக்கூடிய கருத்துக்கள் எதுவும் இல்லை. மக்களுக்கு பயன் அளிக்கிற வகையிலே பல்வேறு திட்டங்கள் இதிலே கொடுக்கப்படவில்லை, என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டி, ஆளுநர் உரையில் உரையாற்றுகின்ற ஒரு வாய்ப்பை தந்தமைக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

***திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரையின் மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் கலந்துகொண்டு காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு சந்தர்ப்பம் அளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநருடைய உரை என்பது அரசாங்கத்தினுடைய உரை என்பது நாமெல்லாம் அறிந்த ஒன்றுதான். ஆனால் ஆளுநர் உரை இம்முறை மாறுபட்ட உரையாகத் தெரிகிறது. வித்தியாசம் இருக்கிறது. நேஷனல் கேரக்டர் வருகிறது. ஏனெனில், நேஷனல் ஃபிரண்டில் திராவிடமுன்னேற்றக் கழகமும் ஒரு அங்கம் என்பதால் அப்படி வருகிறது. தேசிய நோக்கில் மாநிலப் பிரச்சனைகளை அணுகும் முறை கையாளப்பட்டிருக்கிறது. இந்த அணுகுமுறையை நான் வரவேற்கிறேன். தேசிய முன்னணி அரசாங்கத்தை எங்களுடைய அரசாங்கம் என்று உரிமை பாராட்டி முதல்வர் அவர்கள் பேசியதையும் நான் வரவேற்கிறேன்.

எம்.ஜி.ஆருக்கு நினைவு தபால் தலை மத்திய அமைச்சரால் வெளியிடப்பட்டது. எம்.ஜி.ஆருக்கு பாரத ரத்னா என்ற உயரிய விருதை வழங்கி கௌரவித்தது எங்களுடைய ராஜீவ் காந்தியின் அரசு. அதேபோல அவருக்கு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்ற முடிவையும் ராஜீவ் காந்தியின் அரசே மேற்கொண்டு அதற்கு நடவடிக்கை எடுத்தது. தற்போது தேசிய முன்னணியினுடைய அமைச்சர் என்னுடைய அருமை நண்பர் கே. பி. உன்னிகிருஷ்ணன் அவர்கள் அதை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த முதல் அஞ்சல் உறையை முதலமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் ஒரு அசாதாரணமான நிகழ்ச்சி. பல்வேறு மாறுபாடுகள் கொண்டிருக்கிற நம்மை இணைத்து வைத்து சங்கமமாக செய்திருக்கிற ஒரு மாபெரும் சக்தியாக மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் மாறிவிட்டிருக்கிறார்கள். அவருடைய நினைவைப் போற்றும் வகையிலே ஒரு மாவட்டம் அமைவது பொருத்தமாக இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே போல மறைந்த அன்னை இந்திராகாந்தி அவர்களுடைய பெயரையும் ஒரு மாவட்டத்திற்குச் சூட்டி, இந்த இரண்டு தேசத் தலைவர்களையும் உரிய முறையில் கௌரவிக்க அரசாங்கம் முன் வர வேண்டும். ஆளுநருடைய உரையிலேயே அது வந்திருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.

ஆளுநருக்கு நன்றி தெரிவிப்பது வெறும் சம்பிரதாயம் அல்ல. ஒரு ஜனநாயக மரபை உருவாக்க வேண்டுமென்ற கருத்தில் தமது பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார்கள். இருப்பினும் தம்முடைய கடமையை நிறைவேற்றும் வகையில் இங்கே வந்து உரையாற்றியிருக்கிறார்கள். அவருடைய உயர்ந்த உள்ளத்தையும், ஜனநாயகப் பண்பையும் மதித்து பாராட்டவும் நன்றி தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் எங்களுடைய கடமையையும் தவறக்கூடாது என்பதற்காகவும் தவறுகளைச் சுட்டிக்காட்டி எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் நாங்கள் வெளிநடப்புச் செய்ய நேரிட்டது என்பதையும் நான் இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த உரையில் தேசிய முன்னணி அரசாங்கம் அறிவித்துள்ள சில நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் வரவேற்றிருக்கிறது. அதில் முக்கிய நடவடிக்கையாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 263-வது பிரிவின் கீழ் மாநிலங்களுக்கு இடையேயான குழு ஒன்றை இண்டர்-ஸ்டேட் கௌன்சில் அமைப்பதை முக்கியமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. தி.மு.க. இதே சட்டமன்றத்திலே நிறைவேற்றிய மாநில சுய ஆட்சி பற்றிய தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பது வேறு. தற்போது தேசிய முன்னணி அரசு கூறியிருப்பது வேறு. ராஜமன்னார் குழுவின்

13-05 மணி





பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு தி.மு.க. அறிவித்திருக்கும் கருத்து இதற்கு நேர் முரண்பட்டது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ந்தேதி முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அந்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசியிருக்கிறார்கள். அதிலே 116-வது பக்கத்தில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"The Inter-State Council envisaged by Art. 263 of the Constitution will be ineffective and will not serve any purpose."

என்று அன்றைய தினம் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது வி. பி. சிங் கொண்டு வரும் இண்டர்-ஸ்டேட் கௌன்சில் under Art. 263—I would like to know—will it serve any purpose? உங்களுடைய அன்றைய நிலை தவறா? இன்று உங்கள் நிலை மாறி விட்டதா? சென்ற மக்களவைத் தேர்தலின்போது தி.மு.க. தன்னை தேசீய முன்னணியுடன் இணைத்துக் கொண்டது. இந்தியாவை ஒரு தேசம் என்றே ஏற்றுக் கொள்ளாத தி.மு.க. தன்னை தேசீய முன்னணியில் இணைத்துக் கொண்டது என்பதை தேசீயவாதிகள் வரவேற்றார்கள். மக்கள் சபையில் என்.வி.என். சோமு மாநிலங்கள் அவை.... (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இண்டர்-ஸ்டேட் கௌன்சிலைப் பற்றி குறிப்பிட்டார்கள். கடந்த காலத்தில் அரசியல் சட்டத்திலே இண்டர் ஸ்டேட் கௌன்சிலுக்கான வழிமுறைகள் இருந்தும் கூட அது அமைக்கப்படாமலேயே போய் விட்டது. இப்போது வந்துள்ள அரசு அரசியல் சட்டத்திலே உள்ள அந்த இண்டர் ஸ்டேட் கௌன்சிலை அமைப்பதற்கு முன்வந்திருக்கிறது. அதைத்தான் கவர்னர் உரையிலே வரவேற்றுப் பாராட்டிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாநில சுய ஆட்சி தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது சொல்லப்பட்ட இண்டர்-ஸ்டேட் கௌன்சிலானாலும் சரி, அதிலே சொல்லப்பட்டிருக்கின்ற வேறு பிரச்சினைகள் ஆனாலும் சரி, அவைகளை நாடாளுமன்றத்திலே நிறைவேற்ற வேண்டுமேயானால் 2/3 மெஜாரிட்டி வேண்டும் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு. எனவே அதுவரையிலே காத்திருக்க வேண்டும். அதற்கிடையிலே கிடைப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : ஆனால் அன்றைய தினம் நீங்கள் மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறீர்கள். ஆர்ட்டிகிள் 263 என்பது எந்த வகையிலும் பயனுள்ளதாக இருக்காது என்று அன்றைய தினம் நீங்கள் குறிப்பிட்டு இருக்

கின்ற காரணத்தினாலேதான் அதை நான் சுட்டிக்காட்டினேன். அவையினுடைய குறிப்பிலே அது இருக்கிறது. மக்கள் சபையிலே என். வி. என். சோமு அவர்களும், மாநிலங்கள் அவையிலே கோபாலசாமி அவர்களும் நாங்கள் இந்தியர்கள் அல்ல என்று பிரகடனப்படுத்தினார்கள். அன்றைய தினம் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்கள் ராஜ்ய சபையிலே கோபாலசாமி பேசும்போது எழுந்து நின்று அவர் குறிப்பிட்டு வருத்தம் தெரிவித்திருக்கிறார். தி.மு.க. தலைமை இன்று வரை அதை மறுத்தது இல்லை. தேசீய முன்னணியில் ஏன் சேர்கிறீர்கள் என்று தி.மு.க. தலைவரைக் கேட்டபோது எங்களுடைய மாநில சுயாட்சி கொள்கையை தேசீய முன்னணி ஏற்றுக்கொண்டு தேர்தல் அறிக்கையும் வெளியிட்டு இருக்கிறது. எனவேதான் தேசீய முன்னணியில் தி.மு.க. சேர்கிறது என்று அறிவித்திருக்கிறார்கள். தற்போது அதையே ஆளுநர் உரையிலும் திரும்ப வலியுறுத்தியிருக்கிறார்கள். அதில் சிறிய திருத்தம். ஜெனூயின் ஃபெடரலிஸம் என்பது முழுமையான கூட்டாட்சி என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. உண்மையான கூட்டாட்சி என்று இருந்திருக்க வேண்டும். அதேபோன்று கமிட்மெண்ட் உறுதிப்பாடு என்பது பொருந்தாது. ஆங்கிலத்திலே நான் அப்படியே படிக்கிறேன்.

''We trust that further steps will be taken by the Centre to reflect their commitment to genuine federalism and autonomy to the States.'' என்று இருக்கிறது. 'Commitment to what ?' கமிட்மெண்ட் என்று சொன்னால் commitment to whom and when ? என்பதும் இதிலே குறிப்பிடப்படவில்லை. தி.மு.க. சொல்லி தேசீய முன்னணி ஏற்றுக்கொண்ட அந்த மாநில சுயாட்சி கொள்கையில் மத்திய அரசு மேலும் நடவடிக்கை எடுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறீர்கள். அப்படியானால் உங்களுடைய மாநில சுயாட்சி கொள்கை என்பது என்ன ? வெளியுறவு, தேச பாதுகாப்பு, கரன்சி அதாவது நாணயம் அல்லது நோட்டு அச்சடித்தல், மாநிலங்களுக்கிடையே தொடர்பு—இண்டர் - ஸ்டேட் கம்யூனிகேஷன்ஸ் மட்டுமே மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என்பதும், மற்ற எல்லா அதிகாரங்களும் மாநிலங்களிடம்தான் இருக்க வேண்டும் என்பதும் உங்களுடைய மாநில சுயாட்சி கொள்கையாக அந்த தீர்மானத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசுக்கு ஒதுக்கப்படும் 4 துறைகளிலும் கூட மாநில அரசின் நலன்கள் சம்பந்தப்பட்டிருந்தால் மாநில முதலமைச்சர்களையும் இந்த கௌன்சிலையும் கலந்து கொண்டுதான் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.





நீங்கள் கூறியிருக்கும் இதையே தான் பஞ்சாப் பிரிவினை வாதிகள் ஆனந்தபூர்சாகிப் தீர்மானத்திலே கூறியிருக்கிறார்கள். அவர்கள் இண்டர்-ஸ்டேட் கம்யூனிகேஷன்ஸ் என்பதற்கு பதிலாக ரெயில்வேய்ஸ் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை வலியுறுத்தும் ஐக்கிய அகாலி தள கட்சியினுடைய தலைவர் சிம்ரஞ்ஜித்சிங்மான் என்பவருக்கும் வி.பி. சிங்கிற்கும் இருந்த ரகசிய தொடர்பு பற்றி இப்போது தினசரி பத்திரிகையிலே செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

13–10 மணி

அதேபோல் காஷ்மீரிலுள்ள பிரிவினைவாதிகள் கோரிக்கையும் அதேதான். அங்குள்ள பயங்கரவாதிகளுக்கும், தேசிய முன்னணி அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் சிலருக்கும் ரகசிய தொடர்புகள் இருப்பதாகச் சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. தி. மு. க. வின் மாநில சுயாட்சிக் கொள்கையை ஏற்றுக்கொண்டுவிட்ட தேசிய முன்னணி அரசு, ஆனந்தபூர் சாகிப் தீர்மானத்தையும், காஷ்மீர் பயங்கரவாதிகளுடைய கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது. எனவே, இந்த அரசுக்கும், மத்திய அரசுக்கும் மாநில சுயாட்சி சம்பந்தமாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகள், ஒப்புக்கொள்ளப் பட்ட அம்சங்கள் ஆகியவற்றை விளக்கமாக இந்த அவையிலே எடுத்து வைக்க நீங்கள் முன் வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அப்போதுதான் நீங்கள் கூறியிருப்பதைப் போன்று வெளிப் படையான அரசு, ' ஓப்பன் கவர்மெண்ட் ' அமைய நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் நாட்டு மக்கள் நம்பு வார்கள். தி. மு. க. கோரும் மாநில சுயாட்சியால் நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் ஆபத்து ஏற்படும் என்று ராஜீவ் காந்தி அவர்கள் எச்சரித்தார். அத்துடன் தற்போதுள்ள ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., உள்ளிட்ட எல்லா அகில இந்திய சர்வீஸ்களும் ஒழிக்கப்பட்டு விடும் என்பதையும் எடுத்துரைத்தார். அப்போது சில தி.மு.க. தலைவர்கள்..........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் மாநில சுயாட்சியை ஆதரித்துப் பேசுகிறாரா, எதிர்த்துப் பேசுகிறாரா ? ராஜீவ் காந்தி சொன்னதாகச் சொல்கிறார். ஆனால் ராஜீவ் காந்தியினுடைய பாட்டனார் பண்டித ஜவஹர் லால் நேரு அவர்கள், இந்தியா சுதந்திரம் பெறுகின்ற காலக் கட்டத்திலே சொன்னது, ' பிரிந்து போகும் உரிமையோடு கூடிய மாநில சுயாட்சி எல்லா மாநிலங்களுக்கும் இருக்கும்' என்று கூடச் சொன்னார்கள். பிறகு அதைக் கைவிட்டு விட்டார்கள்.

அது வேறு விவகாரம். ஆனால் மாநில சுயாட்சி என்பது தேசப் பிரிவினை அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாநில சுயாட்சியைப் பற்றி எங்களுடைய கருத்து என்ன, கொள்கை என்ன என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், The inter-State Council envisaged by Article 263 of the Constitution will be ineffective என்று சொல்லிவிட்டு, அதே போல் பின்னாலே நீங்கள் மீண்டும் சொல்லி இருக்கிறீர்கள். 312-ஆவது ஆர்ட்டிகிள் இருக்கக்கூடாது, அதை எடுத்துவிட வேண்டும் என்பதையும், this provision relating to All-India Services and creation of new All-India Services should be omitted என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் 312 என்ன என்பதை கான்ஸ்டிடியூஷன் மிகத்தெளிவாக விளக்கியிருக்கிறது. கான்ஸ்டிடியூஷனிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 312 இல்லாமல், 'ஆல் இந்தியா சர்வீஸ்' இருக்க முடியாது.

"Notwithstanding anything in Chapter VI of Part VI or Part XI' if the Council of States has declared by resolution supported by not less than two-thirds of the members present and voting that it is necessary or expedient in the national interest so to do, Parliament may by law provide for the creation of one or more All-India Services including an All-India Judicial Service common to the Union and the States, and, subject to the other provisions of this Chapter, regulate the recruitment, and the conditions of service of persons appointed, to any such service." என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல், அவர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., என்று சொன்னார் அல்லவா ?

" The services known at the commencement of this Constitution as the Indian Administrative Service and the Indian Police Service shall be deemed to be services created by Parliament under this article." என்பதையும் மிகத்தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, 312 வேண்டாம் என்று சொல்கின்ற உங்கள் மாநில சுயாட்சிக் கொள்கை வருமேயானால், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பதவிகள் ஒழிக்கப்படும்....





திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ' இன்டர் ஸ்டேட் கவுன்சிலை ' திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது என்பதைப் போன்ற ஒரு தகவலைக் கூறிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் நான் எழுந்தேன். 1980-ஆம் ஆண்டு இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன், அப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திருமதி சுசீலா கோபாலன், எம்.பி. அவர்கள், மாநில சுயாட்சி தனித் தீர்மானத்தை 80 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலே கொண்டு வந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பேசுகின்ற வாய்ப்பினை நான் பெற்றேன். இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்ற தலைவர் அவர்களைக் கலந்து கொண்டு, அதிலே என்ன பேச வேண்டும் என்று கேட்டு, பாராளுமன்றத்திலே நான் பேசிய பேச்சு, சபைக் குறிப்பிலே இருக்கிறது. நாளைய தினமே அந்த முரசொலியைக் கொண்டுவந்து காட்டத் தயாராக இருக்கிறேன். மிகத் தெளிவாக அன்றைக்கு நான் பேசியது, 'இன்டர்—ஸ்டேட் ' கவுன்சில் ஒன்றை அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, திரும்பத் திரும்ப அன்றைக்கு நான் பேசி சபைக் குறிப்பிலே இருக்கிறது. பத்திரிகைகளிலேயும் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தே, இன்டர்-ஸ்டேட் கவுன்சில் வேண்டாம் என்பதல்ல. அன்றைக்குக் கடுமையாக அந்தத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசியவர்கள், அப்போது உயிரோடு இருந்த சஞ்சய்காந்தி, எம். பி., அவர்கள், அன்றைக்கு கடுமையாக மாநில சுயாட்சியே கூடாது என்று எதிர்த்துப் பேசினார். மற்ற அத்தனை கட்சிகளும் மாநில சுயாட்சியை ஆதரித்துப் பேசினர். இறுதியிலே பேசிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், மாநில சுயாட்சியைப் பற்றிப் பேசுவதைப் பரிசீலிக்கலாம் என்ற வாதத்தைத் தான் சொன்னாரே தவிர, மாநில சுயாட்சி கூடாது என்ற வாதத்தை அன்றைக்கு பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையாரே சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

13.15 மணி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : இப்போது மாநில சுயாட்சி என்ன என்பது தான் பிரச்சினை. Inter - State Council என்று சொல்லவில்லை. Inter-State Council கூடாது என்று சொன்னால் ஆர்ட்டிகிள் 263 இருக்காது. நீங்கள் சொல்லியிருப்பது ஆர்ட்டிகிள் 263க்கு கீழே இருக்கிற Inter-State Council வருவது பயன் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரு கோரிக்கை எழுப்பப்படுகிற நேரத்தில் பல்வேறு பிரச்சினைகளை முன் வைக்கிறோம். பொதுவாக ராஜமன்னார் குழு தான் முதன் முதலாக மத்திய மாநில உறவுகளை ஆராய்வதற்காக அமைக்கப்

பட்ட குழு. தமிழ்நாட்டில், ராஜமன்னார் குழுவினுடைய அந்த அறிக்கையை வைத்த பிறகு மாறன்–செழியன் குழு ஒன்று அமைக்கப்பட்டு அவர்கள் அதை ஆராய்ந்து ஒரு அறிக்கை தந்தார்கள். இந்த இரண்டு அறிக்கைகளையும் முன்வைத்து அன்றைய தினம் அமைச்சரவையிலே விவாதித்துச் சட்டமன்றத்திலே 1974-ஆம் ஆண்டு மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டுவரப் பட்டது. மாநில சுயாட்சி தீர்மானத்திலே பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டு இருக்கின்றன. எப்போது அது முழுமை பெறும் என்றால் நாங்கள் தீர்மானத்திலே இன்ன இன்ன வேண்டும் என்று சொன்ன காரணத்தாலே இவைகள் எல்லாம் முழுமையானவை, முற்றானவை என்று பொருள் அல்ல; ஒரு விவாதத்திற்கு வைக்கப்பட்டு இவை இவைகளை ஏற்றுக்கொள்ளலாம் என்று மத்திய மாநில அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு தான் அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்படும். அஃதல்லாமல் நாங்கள் சொன்னதை எல்லாம் உடனடியாக சாதிக்கக் கூடியவைகள் என்று எண்ணிக்கொண்டு கருத்துக்களை கூறுவது நல்லதல்ல. பலவற்றை கேட்கிறோம், சிலவற்றைப் பெற்றாலேபோதும் என்ற நிலைமையில் தான் சில காலக் கட்டங்கள் இருக்கின்றன. மாநில சுயாட்சித் தீர்மானத்தை மத்திய அரசு நிறைவேற்றித் தருவது என்றால் நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி இருந்தால்தான் முடியும். இல்லாவிட்டால் அரசியல் சட்டத்தை அதற்கு ஏற்ப மாற்ற முடியாது. அதுவரையிலே, கிடைக்கின்ற வரையிலே ஆதாயம் என்று தான் எண்ண வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார் திராவிட நாடு கேட்டபோது, தமிழ்நாடு கூட உங்களுக்குக் கிடைக்குமா, அதுதான் கிடைக்கிறது என்று சொன்னபோது அண்ணா சொன்னார் ஒரு அணா நாணயத்திலே கால் அணா இருக்கிறது. அது போல தமிழ்நாடு கிடைத்தாலே போதும் என்று சொன்னார், திராவிட நாடு கேட்டபோது. இப்போது திராவிட நாடு என்று சொல்கிற காரணத்தால் மீண்டும் பிரிவினைக்கு வந்து விட்டதாக எண்ணக்கூடாது. ஒரு உதாரணத்திற்காகச் சொன்னார். ஒரு அணா கேட்கும்போது கால் அணா கிடைப்பதுபோல், கிடைப்பதை வேண்டாம் என்று சொல்லத் தேவையில்லை. இருந்தாலும், நம்முடைய ' எய்ம் ' வேறு; நம்முடைய கொள்கை வேறு; குறிக்கோள் வேறு; இடையிலே கிடைக்கிற ஆதாயங்களை ஒரு அரசு பயன்படுத்திக் கொள்வது தவறு அல்ல.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : இதில் 'Point of order என்ன இருக்கிறது? ஏற்கனவே நிறைய விளக்கங்கள் வந்து இருக்கின்றன. (குறுக்கீடு) அடுத்து நீங்கள் தான் பேசப் போகிறீர்கள். அப்போது பேசுங்கள்.





திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது மாறன் கமிட்டி பற்றி இந்த பதிவேட்டிலே எதுவும் இல்லை. அன்றைய தினம் it was moved by the then Chief Minister, Dr. M. Karunanidhi.

" Sir, I move the following Resolution :... this House, taking into consideration the Tamil Nadu Government's views on State autonomy and the Report of the Rajamannar Committee...." என்று சொல்லியிருக்கிறார்கள். " ......in order to establish a full State autonomy, the Central Government do accept the views of the Tamil Nadu Government on State autonomy and the recommendations of the Rajamannar Committee and proceed to effect immediate changes in the Constitution of India. " என்று அன்றையதினம் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் அதையே குறிப்பிட்டேன். யார் யாரோ எதிர்த்ததாக பெயர்களை அவர்கள் குறிப்பிட்டார்கள். அன்றைய தினம் இதே அவையிலே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சி.பி.ஐ.யின் சார்பில் பேசியவர்கள் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து இருக்கிறார்கள். திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் அந்தத் தீர்மானத்தை கடுமையாக எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். அதேபோல் அன்றைய தினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேசியவர்கள் அந்தத் தீர்மானத்தை கடுமையாக எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள்.

They pressed for a Division of the House. The A.D.M.K. as well as the C.P.I. pressed for a Division and the Congress also pressed for a Division. அன்றைய நிலைமையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Planning Commission—Constitutional status என்று சொல்லப்பட்டு இருப்பதிலே....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தவறான தகவல் தரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதைப்பற்றி கருத்துக்கள் சொன்னது உண்மை. ஆனால் மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற அந்த வாசகங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் அதை வேறுவிதமாகச் சொன்னார்கள். அவர்கள், We press

for Division என்று சொல்லவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அன்றைய தினம் 'வாக் அவுட்' செய்துவிட்டார்கள். அவர்கள்'Pressing for Division அன்றைக்குக் கேட்டதாக எனக்கு நினைவு இல்லை. இருந்தால் பிடித்துக் காட்டினால் நலமாக இருக்கும்.

திரு. எஸ். ஆர் பாலசுப்பிரமணியம்: அதை எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். Just now, I do not have the book mark. (குறுக்கீடு) If I am wrong, I will stand corrected. Whatever it may be, நிச்சயமாக திரு. கே. டி. கே. தங்கமணி pressed for Division. திருமதி டி. என். அனந்தநாயகி pressed for Division. திரு. எட்மண்டு அவர்கள் கடுமையாக எதிர்த்து வாதாடியிருக்கிறார்கள். நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

13-20 மணி

ஹண்டே அவர்கள் ஆங்கிலத்திலே பேச, எனக்கு ஆங்கிலம் புரியாது, தமிழிலே சொல்லுங்கள் என்று நீங்கள் கேட்டு இருக்கிறீர்கள். அதற்கு அவர், நான் மிக எளிமையான ஆங்கிலத்திலே பேசுகிறேன். உங்களாலே புரிந்துகொள்ள முடியும் என்று சொல்லி, அவர் தமிழிலே மொழி பெயர்க்க முயற்சித்து இருக்கிறார். அதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே பிளானிங் கமிஷன்-ஐப்பற்றி கான்ஸ்டிடியூஷனல் ஸ்டேடஸ் என்று சொல்லப்பட்டு இருப்பது, அதிலே என்ன முக்கியத்துவம்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒருவகையிலே எனக்கு மகிழ்ச்சி. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில், நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில், மாநில சுயாட்சியை வலியுறுத்தி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். முழுமையான மாநில சுயாட்சி மாநிலங்களுக்குத் தேவை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒன்றாக இருக்கிற நீங்கள் அவர்களைக் காட்டிக் கொடுப்பதைப் போல அன்றைக்கு எதிர்த்தார்கள். எதிர்த்தார்கள், எதிர்த்தார்கள் என்று பேசுவது தோழமைக்கு அழகல்ல.





திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த காலத்திலேயே அந்தக் கொள்கையை விட்டுவிடுவதா அல்லது வலியுறுத்துவதா என்று வந்த நேரத்தில், மாநில சுயாட்சி என்ற வார்த்தையை கொஞ்சம் மாற்றி, சமநிலையில் இணைவோம் என்ற ஒன்றை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். மாநிலங்கள் அனைத்தும், ஒரு மாநிலம் இன்னொரு மாநிலத்தோடு சமநிலையில் இணைய வேண்டும், மத்திய சர்க்கார் அதற்கு உறவு கொடுக்கின்ற அளவிற்கு இருக்கவேண்டுமென்பதை, அதே மாநில சுயாட்சி என்பதில் என்னென்ன அதிகாரம் வேண்டுமென்று கேட்டோமோ அந்த அதிகாரங்களை கேட்டுக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கும் அந்தக் கொள்கையிலே நாங்கள் எந்த வகையிலும் கொஞ்சம்கூட மாற்றிக்கொள்ளவில்லை. மாற்றிக்கொள்ளவும் மாட்டோம். ஆனால் மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் அவருடைய கருத்து எப்படியிருந்தாலும்—நான் இப்போது திரு. குமரி அனந்தன் அவர்களிடத்திலேகூட சொன்னேன்-அவரும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஆரம்பத்திலே இருந்தவர். திராவிட நாடு திராவிடருக்கே என்பதிலே அவர் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து இருந்தவர். (குறுக்கீடு) நான் விவாதத்திலே இருக்கிற திரு. பாலசுப்பிரமணியத்தைத்தான் சொன்னேன். திரு. குமரி அனந்தன் அதனாலே கோபப்படவில்லை. அவருக்குத் தெரியும். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், திராவிட நாடு திராவிடருக்கே என்று கேட்டுவிட்டு கடைசியில் இப்போது மாநில சுயாட்சி கேட்கிற நிலைமைக்கு வந்ததற்குப்பின்னாலும், அதிலும் எங்களுக்குள்ளேயே ஒரு சந்தேகம் வருவதற்கு, எங்களுக்குள்ளேயே இருக்கின்றவர்கள் சந்தேகத்தைக் கிளப்பி, மறுபடியும் உரிமை தருகிறவர்கள் எங்கே மறுத்து விடுவார்களோ என்பதாலே நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். மாநிலத்திற்கு அதிக அதிகாரம், அதிக உரிமை என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு தேவையில்லை. அந்தக் கருத்தை வலியுறுத்தித்தான் பேசவேண்டுமே தவிர, அந்தக் கருத்திலே குழப்பத்தை உண்டாக்க வேண்டாம் என்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். எங்களைப் பொறுத்த வரையில் அந்தக் கொள்கையிலே அண்ணா அவர்கள் என்ன கொள்கையை சொன்னார்களோ அதே கொள்கையிலே இன்றைக்கும் தொடர்ந்து நீடித்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : I am really sorry for whatever the Leader of the Opposition has said. It was not in good taste. I have been a disciplined soldier of the Congress Party for more than a quarter of a century. I am a Member of the P.C.C. from 1964

and I am a Member of the A.I.C.C. from 1969. Whether in rain or shine I have been with Congress and I will continue to be in Congress. Let him not cast aspersions. Let him not pass such remarks.

**திரு. என். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது, திரு. பாலசுப்பிரமணியம் made in D.M.K.' என்று சொன்னார்: அவ்வளவுதான். இப்போது அவர் எங்கே வேண்டுமானாலும் இருக்கலாம். ஆரம்பத்திலே 'made in D.M.K.' அவ்வளவுதான்.

* **திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 1961-ல் சட்டக் கல்லூரியில் படிக்கின்றபொழுது உயர்திரு. பாலசுப்பிரமணியம் என்னோடு உடன் படித்தவர். அப்போது அவர் தி.மு.க.-வில் தீவிர உறுப்பினராக இருந்தார். பின்பு அவர் தோழர் சம்பத்தோடு பிரிந்துபோனவர் என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** நான் தி.மு.க.-வை விட்டு வெளியேறினேன் என்று வைத்துக் கொண்டாலும் கூட தி.மு.க. ஒரு தீய சக்தி என்று உணர்ந்த காரணத்தால்தான் நான் தி.மு.க.-வை விட்டு வெளியேறினேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கான்ஸ்டிடியூஷனல் ஸ்டேடஸ் என்று சொல்லப்படுவதிலே என்ன முக்கியத்துவம்? கான்ஸ்டிடியூஷனல் ஸ்டேடஸ் என்பது எனக்குப் புரியவில்லை. கமிஷனை.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு தீய சக்தி என்ற காரணத்தினால் விலகி விட்டேன் என்கிறார்கள். அது உண்மையாக இருக்குமானால் 80 ஆவது ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தோடு காங்கிரஸ் உறவு வைத்துக் கொண்டதே, அப்போது என்ன சக்தி என்று சொல்ல வேண்டும்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** அப்போது அறிக்கை ஒன்று கொடுக்கப்பட்டது. அந்த அறிக்கையிலே "All that is dead and dirty, we leave behind and all that is good and true we take" என்று சொல்லியிருக்கிறோம். எனவே அதிலே இருக்கிற நல்லவைகளை மட்டும் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன். All that was dirty and dead I have left behind. *(குறுக்கீடு)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் தி.மு. கழகத்தில் தொடர்ந்து இருந்தாரா அல்லது அதற்குப் பிறகு தொடர்பைத் துண்டித்துக் கொண்டாரா என்பதல்ல விவாதம். உறுப்பினரும், திரு. எஸ். ஆர். இராதா அவர்களும் தான் அது பற்றி முடிவு செய்ய வேண்டும். அவரே அது பற்றிச் சொன்னார். நீங்களும் முன்னால் தி.மு. கழகத்தில் இருந்தவர்கள் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே சொல்லி விட்டார்கள். எனவே நீங்கள் மற்றவர்களை வம்புக்கு இழுக்காமல், நீங்கள் தெளிவாக நான் முன்பு இருந்தேன், அதற்குப் பிறகு நான் விலகினேன் என்று சொன்னால் சரியாக இருக்கும். அதை தீய சக்தி என்று சொல்லித் திசை திருப்ப வேண்டாம். அடுத்து, நீங்கள் உங்கள் செய்திக்கு வரலாம்.

13-25 மணி

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** ஏ.எல்.எஸ். குறுக்கிடாமல் இருந்திருந்தால், நான் நிச்சயமாக அதைப் பற்றி குறிப்பிட்டிருக்க மாட்டேன். கமிஷனுக்கு ஸ்டேட்டஸ் வரவில்லை என்றும் கூட சொல்லியிருக்கிறார்கள், தோற்றுப் போன அரசியல் தலைவர்களுக்கு ஸ்டேட்டஸ் வந்தால் சரிதான். காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகள் பற்றி கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் தமிழ் மக்களும் இந்திய மக்களும் பெரிதும் சம்பந்தப்பட்டிருக்கிற இந்திய—இலங்கை பிரச்சினை பற்றி ஏதும் குறிப்பிடப்படாதது ஏன்? இலங்கைப் போராளிக் குழுக்களுடனும், வடகிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாளுடனும், நம்முடைய பிரதமரும், வெளியுறவு அமைச்சர் போன்ற பிற அமைச்சர்களுடனும், முதலமைச்சர் வரலாறு காணாத வகையில் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்கள். ஆனால் அவருடைய கருத்தை வெளியிடாமல் எல்லாவற்றையும் மூடு மந்திரமாகவே நடத்தி வருகிறார்கள். இதுதான் ஒரு வெளிப்படையான அரசாங்கம் கடைப்பிடிக்கும் முறையா என்பதை அறிய விரும்புகிறேன்

இந்தியாவை அன்னிய நாடு என்றும், இந்திய அமைதி காக்கும் படையை ஆக்கிரமிப்பு ராணுவம் என்றும் அறிவித்து, இலங்கை ராணுவத்துடன் சேர்ந்து கொண்டு இதரப் போராளிகளையும், அப்பாவித் தமிழ் மக்களையும் கொன்று குவிக்கும் எல்.டி.டி.ஈ. அமைப்புடன் மாத்திரம் அதிக ஈடுபாடு கொண்டு அவர்களுக்கு ஆதரவான நிலையை முதலமைச்சரும், அவருடைய இயக்கத்தினரும் மேற்கொண்டிருப்பது ஏன்? அதன் விளைவாக மத்திய அரசின் மந்தப் போக்கும், வெளியுறவுத் துறை அமைச்சரின் விபரீதமான அறிவிப்பும் வந்திருப்பதாக நாங்கள் குற்றம் சாட்டுகிறோம்.

பாரத துணைப் பிரதமர் தேவிலால் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். மக்களவைத் தேர்தலில் தோல்வி அடைந்த கட்சிகளின் முதலமைச்சர்கள் உடனடியாக பதவி விலக வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார். தமிழகத்தில் நடைபெற்ற தேர்தலில், ஆளும் கட்சியான தி.மு.க.-வை மக்கள் முற்றாக நிராகரித்திருக்கிறார்கள். சுருங்கச் சொன்னால், தி.மு.க.-வுக்கு எதிராக மக்கள் மன்றமே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றி விட்டது. சட்ட மன்றம் நிறைவேற்றும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை விட மக்கள் மன்றம் நிறைவேற்றிய தீர்மானம் வலிமையானது, நேரடியானது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று கூறி வந்த நீங்கள் மௌனம் சாதிப்பது ஏன்? சொன்னதைச் செய்வோம் என்ற நீங்கள் மக்களிடம் சொன்னதை மறந்து விட்டது ஏன்? உங்களின் குறுகிய கால ஆட்சியில் எதிர்ப்பும், அதிருப்தியும் ஏற்பட்டதை மதுரை, மருங்காபுரி தேர்தல்முடிவுகள் வெளியிட்டன அதை ஏற்க மறுத்த நீங்கள் பாராளுமன்றத் தேர்தலையும், பெரணமல்லூர் இடைத் தேர்தலையும் காரணம் காட்டி, காலம் கடத்தினீர்கள். தி.மு.க. ஆட்சி நீடிக்க வேண்டுமா, வேண்டாமா என்பதற்கு வாக்களியுங்கள் என்று நேரடியாக மக்களிடம் கேட்டீர்கள். மக்களும் தீர்ப்பு வழங்கி விட்டார்கள். அதை மதித்து நடக்க வேண்டியது உங்களுடைய கடமையாகும். விலகவேண்டிய நீங்கள் ஒட்டிக் கொண்டிருக்கிறீர்கள். விலக்கப்பட முடியாத ஆளுநர்களை விரட்டியடித்துக் கொண்டிருக்கிறீர்கள். எல்லாமே காலத்தின் கோலம். அதிலும் இங்கே அலங்கோலம்.

* திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்திற்குத் தேர்தல் தமிழ் நாட்டில் மட்டும் நடக்கவில்லை. மரியாதைக்குரிய எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கட்சி ஆட்சி செய்கிற ஒரிசாவிலும், ராஜஸ்தானத்திலும், மகாராஷ்டிராவிலும், குஜராத்திலும் அந்த தேர்தல்கள் நடைபெற்று அங்கே அவர்கள் கட்சி தோற்றிருக்கிற காரணத்தால் அவர்கள் கூறுவது முதலில் அந்த மாநிலங்களின் முதலமைச்சர்களுக்குப் பொருந்துமா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: அந்த மாநிலத்தின் தலைவர்கள் அத்தனை பேரும்—ஒரிசாவைச் சேர்ந்த ஜானகி பல்லப் பட்நாயக்கும், மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த மோதிலால் வோராவும், ராஜஸ்தானைச் சேர்ந்த சிவசரண் மாத்தூர் ஆக அத்தனை பேரும் ராஜினாமா செய்திருக்கிறார்கள். அடுத்த மாதம் அங்கே தேர்தல்கள் நடக்க இருக்கின்றன. அதே போல, இந்த முதல்வரும் ராஜினாமா செய்து விட்டு, ஆளுநருக்குப் பரிந்துரை செய்யட்டும், சட்டசபையைக் கலைத்து விட்டு உடனே தேர்தல் நடத்தவேண்டுமென்று பரிந்துரை செய்யட்டும்.



அதுதான் ஜனநாயகமாக இருக்கும். தேர்தலின் போது சவால் விட்டார்களே, உண்மையான ஆட்சி நீடிக்க உதயசூரியனுக்கு ஓட்டு போடுங்கள், தம்பி பாஸ்கரனுக்கு ஓட்டு போடுங்கள், தம்பி பழனி மாணிக்கத்துக்கு வாக்களியுங்கள் என்று சொன்னீர்கள் அல்லவா? அதைத்தான் இப்போது சுட்டிக் காட்டுகிறோம். 1980-ம் ஆண்டு ஒரு நீதி, 1989-ம் ஆண்டு ஒரு நீதி என்று இருக்க முடியாது. அன்றைக்கு மிகத் தெளிவாகவே பேசியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரிசா போன்ற மாநிலங்களில் முதலமைச்சர்கள்தான் ராஜினாமா செய்தார்களேயல்லாமல், அதனுடைய ஆட்சி ராஜினாமா செய்யவில்லை. அதை மறைத்துப் பேசுவதிலே புண்ணியம் இல்லை. நான்—கருணாநிதி—முதலமைச்சராக இருக்கக் கூடாது என்று உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் விரும்புவாரேயானால், நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் எனக்கு வழிகாட்டியாக ராஜீவ் காந்தி இருந்திருக்க வேண்டும். தமிழ்நாட்டு சட்டமன்றத் தேர்தலின் போது 13 முறை ராஜீவ் காந்தி சுற்றுப் பயணம் செய்து தோற்றுப் போனாரே, அப்போது அவர் ராஜினாமா செய்திருந்தால், நான் ராஜீவ் காந்தியைப் பின்பற்றி இருக்க முடியும். (மேசைகளைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக நான் எதுவும் பேசினேன் என்று முதல்வர் அவர்கள் நினைத்து விடக் கூடாது. தனிப்பட்ட முறையில் அவர் மீதும், வேறு யார் மீதும் காழ்ப்புணர்ச்சி கிடையாது. அவர் தலைமையில் நீடிப்பது பற்றி அவருடைய கட்சி தீர்மானிக்க வேண்டுமே தவிர, நான் சொல்ல முடியாது. ஆனால் ஜனநாயக மரபை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னேன். 1985 ஆம் ஆண்டு கர்நாடக மாலநித்தின் முதலமைச்சராக இருந்த திரு. ராமகிருஷ்ணஹெக்டே அங்கே பராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று, ஜனதாக் கட்சி தோற்றவுடன் ராஜினாமா செய்தார். அத்துடன் இல்லாமல் ஆளுநருக்கும் பரிந்துரை செய்திருக்கிறார்.

**13-30 மணி**

சட்டமன்றத்தைக் கலைத்து விட்டு, மற்ற சட்டமன்றங்களுக்குத் தேர்தல் வருகிற நேரத்தில் இதற்கும் தேர்தலை வையுங்கள் என்று சொன்னார்கள். மத்திய அரசு அந்த ராஜினாமாவை ஏற்றுக் கொண்டு......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வழிகாட்டுவதற்குக் கூட எதிர்க்கட்சியிலே இருந்துதான் நீங்கள் இரவல் வாங்குகிறீர்களேயல்லாமல், ஏன் ராஜீவ் காந்தி ராஜினாமா செய்து வழி காட்டவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, ராஜீவ் காந்தி ஒரு போதும் நீங்கள் இங்கே வாக்களித்தால் மத்தியிலே நாங்கள் நீடிக்க உதவும் என்று சொல்லவில்லை. இங்கே நீங்கள் அளிக்கிற வாக்கு சட்டமன்றத்திற்கு அளிக்கப்படுகிற வாக்கு என்று அவர்கள் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நீங்கள், கழக ஆட்சி என்னுடைய ஆட்சி நீடிக்க வேண்டுமா, வேண்டாமா; கடந்த 10 மாத காலத்தில் நாங்கள் செய்த சாதனைப் பட்டியலைப் பாருங்கள்; நாங்கள் எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே கொடுத்திருந்ததில் 75 சதவீதத்தை நிறைவேற்றி இருக்கிறோம், எங்களுடைய சாதனையின் பேரில் நான் வாக்குக் கேட்கிறேன். எங்களுக்கு வாக்களியுங்கள், உதயசூரியனுக்கு வாக்களியுங்கள் எங்கள் ஆட்சி நீடிக்க வேண்டுமென்றால் என்று கேட்டீர்கள். ஆனால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

1980 ஆம் ஆண்டு கூட இரண்டு இடங்கள் தவிர மற்ற இடங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தோற்றுப் போனார்கள். ஆனால் 27 சட்டமன்றத் தொகுதிகளிலே வெற்றி பெற்றார்கள். நாங்கள் 207 இடங்களில் வெற்றி பெற்றோம். அவர்கள் 27 இடங்களில் வெற்றி பெற்றார்கள். ஆனால் இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலையோ பரிதாபகரமான நிலை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உங்களுடைய அணி வெற்றி பெற்றிருக்கிறது என்று ஒரே தொகுதியாக நாகப்பட்டினத்தைச் சொன்னாலும் கூட அதிலும் 6 தொகுதிகளில் இரண்டே இரண்டு இடங்களில்தான் உங்களுடைய அணி வெற்றி பெற்று இருக்கிறது. மீதி நான்கு இடங்களில் காங்கிரஸும், காங்கிரஸின் அணியும்தான் வெற்றி பெற்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, தேர்தலில் அளிக்கப்பட்ட தீர்ப்பை ஏற்று மக்களின் தீர்ப்பே மகேசனுடைய தீர்ப்பு என்று சொல்லிப் பழக்கப்பட்டவர்கள் அல்லவா நீங்கள், அதை நீங்கள் மதிப்பீர்களேயானால் அதைச் செய்யவேண்டுமென்று பணிவன்போடு என்னுடைய கருத்தைத் தெரிவித்து நான் முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 20—1—1990 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13-32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும். ஆணைகளும்.

1. வேளாண்மைத்துறையின் 17-6-1987 ஆம் நாளிட்ட II (2)/ஏஜி. 3368/87 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து அத்துறையின் 26—10—1988 ஆம் நாளிட்ட 1684 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

2. தமிழ்நாடு மாநிலத்தில் பதிவு செய்யப்பெற்ற மோட்டார் வண்டிகளுக்கு சலுகை முறையில் வரிவிதிப்பு குறித்து உள் (போ. 1) துறையின் 20—7—1989 ஆம் நாளிட்ட 1385 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

3. வேளாண்மைத்துறையின் 15—5—1978 ஆம் நாளிட்ட II (2)/ஏஜி./2455/78 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து அத்துறையின் 29—7—1989 ஆம் நாளிட்ட 555 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

4. 1—4—1983 ஆம் நாள் முதல் 31—3—1985 ஆம் நாள் முடியவுள்ள காலவரைக்காக திருவாளர் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தினரால் செலுத்தப்படவேண்டிய வரி மற்றும் மேல்வரியினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 16—8—1989 ஆம் நாளிட்ட 1709 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பெற்ற அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

5. பூந்தமல்லி, சரோஜினி வரதப்பன் பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் அச்சகப் பிரிவிற்காக வாங்கப்பட்ட இயந்திரத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—7—1989 ஆம் நாளிட்ட 569 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 28–6–1989 ஆம் நாளிட்ட 734 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

7. புதிய நகர மேம்பாட்டுத் திட்ட (முன்னேற்பாடு, வெளி யீடுதல் மற்றும் ஏற்பளிப்பு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 6–4–1988 ஆம் நாளிட்ட 454 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புறதிட் டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. கருமரத்துப்பட்டி கிராமத்தில் உள்ள சோதனைச் சாவடி யினை வேறொரு புதிய இடத்திற்கு மாற்றியமைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 6–11—1987 ஆம் நாளிட்ட 1204 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. சென்னை திரு. கே. வி. விஜயராகவன் அவர்கள் செலுத்த வேண்டிய விற்பனை வரி, மேல்வரி மற்றும் அபராதத் தொகை யினை ரத்து செய்வது குறித்து வணிகவரி-சமய அறக்கட்டளை கள் துறையின் 25—7—1989 ஆம் நாளிட்ட 556ஆம் எண் அர சாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. 1973–74 ஆம் ஆண்டிற்காக அரவை ஆலைகளால் செலுத்தப்பட வேண்டிய வரி மேல்வரி மற்றும் கூடுதல் வரி பாக்கியினை ரத்து செய்வது குறித்து வணிகவரி-சமய அறக்கட்டளைகள் துறையின் 13—12—1988ஆம் நாளிட்ட 1494 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்-1) துறையின் 11—10—1988 ஆம் நாளிட்ட





2233 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்து தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

12. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மது விலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 15—12—1988 ஆம் நாளிட்ட 2161 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

13. 1988 ஆம் ஆண்டு சென்னை பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறையின் 9—2—1988 ஆம் நாளிட்ட 78ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறி விக்கை. [1987 ஆம் ஆண்டு சென்னை பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1987) 18 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

14. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய சாட்டப்பெற்ற பணியாளரமைப்பு விதிகளை வகுப்பது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 29—12—1988 ஆம் நாளிட்ட 1750 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் இடவசதி அளித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

15. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து உள் மதுவிலக்கு, ஆயத் தீர்வை துறையின் 29—7—1989 ஆம் நாளிட்ட 783 ஆம் எண் அரசாணை யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

16. பெரியார் மாவட்டத்தில், சூரியகாந்தி வித்துக்களின் கொள்முதல் மற்றும் விற்பனையினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது குறித்து வேளாண்மைத் துறையின் 29—7—89 ஆம் நாளிட்ட 557 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

17. கண்பார்வைக்காக விற்கப்படும் ஆடிகளின் விற்பனைக்கு வரிசெலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 7—9—1989 ஆம் நாளிட்ட 686 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

18. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1—8—1989 ஆம் நாளிட்ட 593 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

19. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 11—9—1989 ஆம் நாளிட்ட 1010 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. உள் துறையின் 16—5—1983 ஆம் நாளிட்ட II(2)/எச்.ஓ/3602/83 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 14—8—1989 ஆம் நாளிட்ட 1694 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

21. தமிழ்நாடு 1988 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு விதிகளை வகுப்பது குறித்து உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 30-6-1988 ஆம் நாளிட்ட 879 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 68/1986) 31 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

22. எம். டி. இ. 1191 ஆம் எண் மோட்டார் வண்டிக்கு 30—9—1975 அன்று முடிவடைந்த கால் ஆண்டிற்காக செலுத்தப்படவேண்டிய வரி மற்றும் அபராதத் தொகையினை தள்ளுபடி செய்வது குறித்து உள் (போ.1) துறையின் 24—8—1989 ஆம் நாளிட்ட 1797 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



23. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு — நிர்வாக சீர்திருத்தத் துறையின் 29-3-1989 ஆம் நாளிட்ட 1640 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

24. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 17—10—1989 ஆம் நாளிட்ட 1173 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

25. பெருந்திட்ட (முன்னேற்பாடு, வெளியீடு மற்றும் ஒப்பளிப்பு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 8—9—1989 ஆம் நாளிட்ட 909 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

26. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை தீர்வை செய்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 22—9—1987 ஆம் நாளிட்ட 1467 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

27. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (தலைவரின் பணிகளை மேற்கொள்வதற்கான மாற்று உறுப்பினர்கள் பட்டியல்) விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம்—குடிநீர் வழங்கல் துறையின் 14—9—1989 ஆம் நாளிட்ட 601 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

28. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 27-3-1989 ஆம் நாளிட்ட 184 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[1990 சனவரி 19

29. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 7—7—1989 ஆம் நாளிட்ட 397 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

30. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு மாநகராட்சி (கோட்டம், அல்லது தொகுதிகள் இட ஒதுக்கீடு மற்றும் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் மற்றும் பெண்களை அவையில் தேர்ந்து கொள்ளுதல்) விதிகளை வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம்-குடிநீர் வழங்கல் துறையின் 4—7—1989 ஆம் நாளிட்ட 407ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (C) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432 (2) பிரிவு மற்றும் 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431 (2) பிரிவு ஆகியவற்றின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

31. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில (அனாதை இல்லங்கள் மற்றும் ஏனைய அறக்கட்டளை இல்லங்கள்) விதிகளை வகுப்பது குறித்து சமூக நலத் துறையின் 22–5–1987 ஆம் நாளிட்ட 778 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1960 ஆம் ஆண்டு அனாதை இல்லங்கள் மற்றும் ஏனைய அறக்கட்டளை இல்லங்கள் [மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1960) 29 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

32. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ் ஆங்கிலம்.]

33. தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் 1986–87 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்.]

34. தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]



1990 சனவரி 19]

ஆ அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

1. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் (திருத்த) அவசரச்சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 12/1989.

2. 1989 ஆம் ஆண்டு பச்சையப்பா அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலை கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/1989).

3. தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதிய (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 14/1989).

4. 1989 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 15/1989).

5. 1989 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான செய்தி குறித்து மக்களவை செகரட்டரி-ஜெனரல் அவர்களிடமிருந்து வரப்பெற்ற 27—12—1989 ஆம் நாளிட்ட 1/25 (3)/89/எல்-1 எண்ணுள்ள கடிதத்தின் நகல்.

6. 1989 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப் பெற்றவாறு).

7. 1989 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு (இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்றவாறு).

8. 1989 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான மக்களவை நடவடிக்கை குறிப்புகள்.

9. 1989 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (அறுபத்தி இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவின் மீதான மாநிலங்களவை நடவடிக்கை குறிப்புகள்.

10. 1990 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 18 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I

(93 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**மதிப்பிற்குரிய சட்டப்பேரவை உறுப்பினர்களே !**

இப்புத்தாண்டில், தமிழ்நாடு சட்டப் பேரவையின் முதலாம் கூட்டத் தொடரில் உரையாற்றுவதில் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன். உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக் களையும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. நாடாளுமன்றத்தில், மேதகு குடியரசுத் தலைவர் அவர் களின் பேருரையில், புதிய தேசிய முன்னணி அரசு அறிவித்துள்ள தொடக்க நடவடிக்கைகளை இந்த அரசு வரவேற்கின்றது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 263 ஆம் பிரிவின்கீழ், மாநிலங் களுக்கு இடையேயான குழு (Inter-State Council) ஒன்றை அமைப்பது என்றும், திட்டக் குழுவிற்கு அரசமைப்புச் சட்ட முறைத் தகுதி வழங்குவது என்றும் புதிய அரசு எடுத்துள்ள முடிவுகள் தனி முக்கியத்துவம் வாய்ந்தவை. முழுமையான கூட்டாட்சி, மாநிலங்களுக்கு சுயாட்சி போன்ற கொள்கை களில், தங்களுடைய உறுதிப்பாட்டினைப் பிரதிபலிக் கும் வகையில், மத்திய அரசு மேற்கொண்டும் நடவடிக்கைகள் எடுக்கும் என நம்புகிறோம்.

3. தேசிய அளவில் இணக்கமும் கருத்தொற்றுமையும் கொள் வதன் மூலம், பஞ்சாப், ஜம்மு-காஷ்மீர் போன்ற பிரச்சினை களுக்குத் தீர்வுகாணும் எண்ணத்தை வரவேற்கிறோம். அதிகாரங்கள், பொறுப்புகள், நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைப் பஞ்சாயத்து அமைப்புகளுக்குப் பரவலாக்கும் செயல், மத்திய-மாநில கூட்டமைப்புத் தன்மையை எவ்வகையிலும் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படும் என்று நம்புகிறோம். தூய்மை யான, வெளிப்படையான அரசு அமைய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை, குறிப்பாக வானொலி, தொலைக்காட்சி நிறு வனங்களுக்கு தன்னாட்சி அளிப்பது, "லோக் பால்" ஏற்படுத் தும் சட்டம் இயற்றுவது ஆகிய நடவடிக்கைகளை வரவேற் கிறோம்.

4. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கான ஒதுக்கீட்டை மேற் கொண்டும் 10 ஆண்டுகளுக்கு நீட்டிக்க சட்ட முன்வடிவு ஒன்றை புதிய நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. நமது அரசு இந்த நடவடிக்கையை முழுமையாக ஆதரிக்கிறது. இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு ஏற்பு அளிக்கச் சட்டப் பேரவையின் இக்கூட்டத் தொடரில் சட்டம் ஒன்று கொண்டு வரப்படும்.





5. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மத்திய அரசுத் துறை களில், கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் இட ஒதுக்கீடு செய்வது குறித்த மண்டல் குழு பரிந்துரைகளைச் செயற் படுத்துமாறு மத்திய அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டப் பேரவை கடந்த ஆண்டு மே திங்களில் தீர்மானம் ஒன்றை நிறை வேற்றியது. மண்டல் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தேசிய முன்னணி அரசு அறிவித்துள்ளது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

6. நடப்பாண்டில், தென்மேற்குப் பருவ மழை, மாநில அள வில் மொத்தத்திலும், பெரும்பாலான மாவட்டங்களில் திருப்தி கரமாகவும் இருந்திருக்கிறது. வடகிழக்குப் பருவ மழை, மாநில அளவில், 1988 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகமே என்றாலும், 8 மாவட்டங்களைப் பொறுத்தவரை இயல்பான அளவைக் காட்டிலும் 20 விழுக்காடு அளவிற்கு மேல் குறை வாகவே இருந்துள்ளது. தென் மாவட்டங்களில் அண்மையில் பெய்த மழையினால் நிலைமை ஓரளவுக்குச் சீராகியுள்ளது. வேளாண்மை உற்பத்தியை உயர்த்த அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் நல்ல அளவுக்கு உற்பத்தி கிட்ட உதவியுள்ளது. நடப்பாண்டில் அரிசி உற்பத்தி 58.5 இலட்சம் டன் அளவுக்கு அதாவது, கடந்த காலத்தில் கிட்டிய உயரளவு உற்பத்திக்கு நிகரான அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். கரும்பு உற்பத்தி 24.20 இலட்சம் டன் அளவுக்கும் பயறு வகைகளின் உற்பத்தி 5.2 இலட்சம் டன் அளவுக்கும் இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இவை ஏற்கெனவே எய்திய உயர் உற்பத்தி யை விட அதிகமாக இருக்கும். சிறு தானியங்கள் உற்பத்தி 13.88 இலட்சம் டன், பருத்தி உற்பத்தி 5.2 இலட்சம் பொதி என்னும் அளவுகளில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7. தமிழ்நாட்டில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இவ் வரசு தலையாய முன்னுரிமை அளித்துள்ளது. இதுவரை குடிநீர் வசதியளிக்கப்படாத 10,323 குடியிருப்புகளுக்கு இந்த அரசு சிறப்பு முன்னுரிமை அளித்து, நடப்பாண்டில் இவற்றில் 5,166 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி அளித்துள்ளது. எஞ்சியிருக் கும் 5,157 குடியிருப்புகளுக்கும் 1990 ஆம் ஆண்டு மே மாத முடி விற்குள் குடிநீர் வசதியளிக்கப்படும். வறட்சி நிவாரணப் பணி யின் ஒரு பகுதியாக 5,149 துளைக் கிணறுகள் அமைப்பதற்கான விரைவுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

8. 1989 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் இந்த அரசு பொறுப் பேற்றபோது, கல்பாக்கம், இராமகுண்டம் ஆகிய இடங்களிலுள்ள மத்திய மின் நிலையங்களில் மின் உற்பத்திப் பிரச்சினை காரண மாகத் தமிழ்நாடு கடுமையான மின் பற்றாக்குறையை எதிர் கொள்ள வேண்டியதாயிற்று. இதன் விளைவாக, ஏப்ரல் மாதத் தில் மின்வெட்டை 60 விழுக்காடாக அதிகரிக்க வேண்டியதாயிற்று.

ஜூலை மாத இறுதியில், மின்வெட்டு 20 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. டிசம்பர் திங்கள் 20 ஆம் நாள் முதல் மின்வெட்டு 10 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. மேலும், இந்த ஆண்டு ஜனவரி 12 ஆம் நாளிலிருந்து மின்வெட்டு அறவே நீக்கப்பட்டுவிட்டது. இந்நிலை மார்ச் திங்கள் இறுதி வரை தொடரும் என்று எதிர்பார்க்கிறோம். மேட்டூர் 3-வது மின் உற்பத்தி நிலையத்தைத் (210 மெ.வா.) தொடங்கவும், எண்ணூரிலுள்ள 110 மெ.வா. திறன் கொண்ட மூன்று மின் உற்பத்தி நிலையங்களையும் மீண்டும் பயனுக்குக் கொண்டுவரவும், அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்திச் செயல்திறனைப் பெருக்கவும் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாலும், புனல் மின் உற்பத்தி நீர்த்தேக்கங்களில் இயல்பான அளவுக்கு நீர் வரத்து இருந்ததாலும், மின்வெட்டின் அளவைக் குறைக்க முடிந்தது. தூத்துக்குடி மின் உற்பத்தி நிலையத்தில் 1989 ஆம் ஆண்டில் எய்தப்பெற்ற 83 சதவீதச் செயல் திறன் பாராட்டத்தக்க ஒரு சாதனையாகும்.

9. மத்திய அரசு அரிசி, பாமாயில், சர்க்கரை ஆகியவற்றின் ஒதுக்கீட்டு அளவுகளை மிகவும் குறைத்துவிட்டதால், நமது பொது விநியோகமுறை பெரும் அளவில் பாதிக்கப்பட்டது. ஆயினும் நமது அரசு, கொள்முதல் அளவை உயர்த்தவும், வெளிச் சந்தையில் 3 இலட்சம் டன் அரிசி வாங்கவும் நடவடிக்கைகள் எடுத்து இந்த நடவடிக்கைகளினால் 1989 ஆம் ஆண்டில் பொது விநியோக முறை மூலம் சுமார் 15 இலட்சம் டன் அரிசி வழங்க முடிந்தது. 1988 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சுமார் 13 இலட்சம் டன் என்ற அளவுடன் ஒப்பிடுகையில் இது அதிகமாகும்.

10. அரிசிப் பிரச்சினையில், புதிய மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு உதவிட முன்வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நமது அவசரத் தேவைக்கென டிசம்பர் மாதத்தில் கூடுதலாக 50,000 டன் அரிசி ஒதுக்கப்பட்டது. மேலும், 1990 ஆம் ஆண்டு ஜனவரியில் மாத ஒதுக்கீட்டினை 60,000 டன்னாக உயர்த்தியுள்ளது. அடுத்துவரும் மாதங்களில், மாதாந்திர ஒதுக்கீட்டின் அளவு, குறைந்த பட்சம் 55,000 டன்னாக இருக்கும், இந்த ஒதுக்கீட்டு அளவை நம்முடைய முறையீட்டுக்கு இணங்க மத்திய அரசு மேலும் உயர்த்தும் என்று எதிர்பார்க்கிறோம். நம் மாநிலத்தின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மத்திய அரசு நல்கிய இவ்வுதவியை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். சம்பாப் பருவத்தில் நெல் கொள்முதல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தவும் 1990 ஆம் ஆண்டில் வெளிச்சந்தையில் தேவையான அளவுக்கு அரிசி வாங்கவும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இக்காரணங்களால் வரும் ஆண்டில் நியாயவிலைக் கடைகளில் அரிசி பற்றாக் குறை இருக்காது என்பது உறுதி.



11. மத்திய அரசு, 1989 ஆம் ஆண்டு பிப்ரவரியில் அரிசி விலையை உயர்த்தியதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இருப்பினும், அந்த விலை உயர்வை நமது அரசு இதுவரை நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. அதே நேரத்தில், நடப்பாண்டில் நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 25 உயர்த்தப்பட்டது. மேலும், நடப்பாண்டில், மொத்தம் ரூ. 38.5 கோடி செலவில், குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 35 ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதர மாநிலங்களில் வெளிச்சந்தையில் அரிசி வாங்க வேண்டியிருந்ததால் நிதிச் சுமை கணிசமாகக் கூடியுள்ளது. வரும் ஆண்டிலும் பொது விநியோக முறையில் அரிசி தட்டுப்பாடின்றிக் கிடைக்க வெளிச் சந்தையில் கணிசமான அளவு அரிசி வாங்க வேண்டிய நிலையில் உள்ளோம். 1988–89 ஆம் ஆண்டில் ரூ. 130 கோடியாக இருந்த உணவு மானியத் தொகையின் அளவு 1989–90 ஆம் ஆண்டில் ரூ. 190 கோடியாகப் பெருமளவுக்கு அதிகரித்துள்ளது. மேலும், இலவச அரிசி விநியோகத் திட்டத்திற்கு சுமார் ரூ. 36 கோடி செலவாகிறது.

12. நடப்பாண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ. 300-க்கும் குறைவாக வருமானமுள்ள 83 இலட்சம் குடும்பங்களுக்கு ஐந்து முறை இலவசமாக 5 கிலோ அரிசி வழங்கி இருக்கிறோம். இத் திட்டம் பரவலாக வரவேற்பு பெற்றுள்ளது என்றாலும், பயனாளிகளின் வருமானக் கணக்கு விவரங்களைப் பதிவு செய்ததில் தவறுகள் இருப்பதால், உண்மையிலேயே வறிய நிலையில் இருந்த குடும்பங்கள் பலவற்றிற்குப் பயன் கிட்டவில்லை என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும், ரூபாய் 300 என்ற வரம்பு மிகக் குறைவானது என்றும், அது உயர்த்தப்படவேண்டும் என்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட உறுதிமொழிக்கு ஏற்ப, ஒவ்வோராண்டும் தமிழ்ப்புத்தாண்டு, தீபாவளி, பொங்கல் ஆகிய மூன்று விழா நாட்களிலும் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 வரையிலும் வருமானமுள்ள குடும்பங்கள் அனைத்திற்கும், இனி இலவச அரிசி வழங்க இப்போது முடிவு எடுத்துள்ளோம், இதன் காரணமாக ஒவ்வொரு முறையும், ஒரு கோடியே இருபது இலட்சம் குடும்பத்தினர் பயன்பெறுவர்.

13. சட்டப் பேரவையில் சென்ற முறை நான் உரையாற்றுகையில், மாநிலத்தின் நிதிநிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும், அதன் காரணமாக 1988–89 ஆம் ஆண்டிற்கு ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டச் செலவான ரூ. 1,457 கோடி என்ற அளவைக் குறைக்க வேண்டியிருக்கும் என்றும் சுட்டிக் காட்டினேன். அதையொட்டி, அந்த ஆண்டுத் திட்டச் செலவின் அளவை ரூ. 1,202 கோடியாகக் குறைத்திட நேர்ந்தது. 1989–90 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், திட்டச் செலவின் அளவை ரூ. 1,360 கோடியாக உயர்த்த வகை செய்யப்பட்டது. நடப்பாண்டில் திட்டச் செலவு இந்த அளவுக்குக் குறையாமல் இருக்கும்.

[1990 சனவரி 19

14. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு அரசு அதிக முன்னுரிமை அளித்துள்ளது. அரசின் புதிய தொழில் கொள்கை தொழிலதிபர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கும் (TIIC) தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகத்திற்கும் (SIPCOT) கடன் விண்ணப்பங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள தொழில் உரிமங்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

15. தொழில் வளர்ச்சிக்கு அளிக்கப்படும் சலுகைகளும் ஊக்க உதவிகளும் திருத்தி வரையறுக்கப்பட்டு, விரிவுபடுத்தப்பட்டுள்ளன, தொழில்கள் தொடங்குவதற்கான மூலதன உதவித் தொகை, வட்டியில்லா விற்பனை வரித் தள்ளிவைப்பு ஆகிய சலுகைகளை, 105 பின்தங்கிய வட்டங்களிலும் மாநிலத்திலுள்ள எல்லா வளர்ச்சி மையங்களிலும் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள குறிப்பான 10 தொழில்களுக்கு சிறப்பு மூலதன உதவித் தொகை கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

16. கருங்கல் (கிரானைட்) தொழிலில் ஏற்றுமதியும் வேலை வாய்ப்பும் பெருகிடும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அத்தொழிலின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வகுக்கப்பட்டுள்ள புதிய கொள்கை, முதலீட்டாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரை, கூட்டுறவுத் துறையில் 5 புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க இசைவுக் கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (TIDCO) பொறுப்பில் மொத்த ரூ. 290 கோடி முதலீட்டுடன் கூட்டுத் துறையிலும் மற்றும் ஊக்கத் துறையிலும் புதிதாக 8 தொழில் திட்டங்களைத் தொடங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 45 கோடி முதலீட்டில் 5 தொழில் திட்டங்களை தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (ELCOT) மேற்கொண்டுள்ளது.

17. தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) இதுவரை 7 தொழில் வளாகங்களை உருவாக்கியுள்ளது. அவற்றில் செய்யப்பட்டிருக்கும் முதலீடு மொத்தம் ரூ. 500 கோடிக்கும் அதிகமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த 7 வளாகங்களில் இன்றியமையா அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது நடப்பாண்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் மயிலாடுதுறை-பூம்புகார் பகுதி, பெரியார் மாவட்டத்தில் ஈரோடு—பெருந்துறைப் பகுதி, நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் கங்கை கொண்டான்—மானூர் பகுதி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.30 கோடி செலவில், 3 வளர்ச்சி மையங்களை அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.



1990 சனவரி 19]

18. சமுதாயத்தில் மகளிர் நிலையை உயர்த்துவது என்ற கொள்கையை நிறைவேற்றுவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுப் பணி நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலைவாய்ப்பில் 30 விழுக்காடு மகளிருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளிலும் முதல் இரண்டு வகுப்புகளில் எழும் அனைத்து ஆசிரியர் பணியிடங்களிலும் மகளிரே நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். பல்வேறு அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறும்பொழுது 30 விழுக்காட்டை மகளிருக்கு ஒதுக்கும் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்றோம். தேர்தல் வாக்குறுதிக்கு ஏற்ப, ஏழை, நடுத்தர வகுப்பைச் சார்ந்த பெண்களுக்கு இளங்கலைப் பட்டப்படிப்பு வரையிலும் இலவசக் கல்வி வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ. 5.05 கோடி செலவில் ஏறக்குறைய 10,100 பெண்கள் பயன் அடைந்துள்ளார்கள். டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு கருவுற்ற மகளிருக்கு 200 ரூபாய் உதவித் திட்டத்தின்கீழ் 65,597 தாய்மார்கள் பயன் அடைந்துள்ளனர். நிதிநிலை அறிக்கையில் பெண்களுக்கு இந்து சட்டத்தின்கீழ் பரம்பரைச் சொத்தில் சம உரிமை வழங்க, சட்டத்திருத்தம் மேற்கொள்வோம் என்று அறிவித்திருந்தோம். இச் சட்டத் திருத்தம் இந்த அவையில் நிறைவேற்றப்பட்டுக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

19. 1990–91 ஆம் ஆண்டு, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்க ஆண்டாகும். முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் பணியாற்றும் மாநிலத் திட்டக்குழுவில் சிறந்த வல்லுநர்கள் இடம் பெற்றுள்ளனர். திட்டக்குழு தமிழ்நாட்டிற்கான எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும் பணியைக் கணிசமான அளவுக்கு நிறைவேற்றியுள்ளது. எனினும், தேசிய அளவில் எட்டாம் திட்டத்தை வகுக்கவும், திட்டக் காலத்தில் மாநிலங்களுக்கான மத்திய நிதியுதவி முறைகளைத் தீர்மானிக்கவும் இன்னும் சிறிது காலமாகும். மேலும், ஒன்பதாம் நிதிக் குழுவானது, அதன் இறுதி அறிக்கையை 1989 ஆம் ஆண்டு கடைசியில்தான் குடியரசுத் தலைவரிடம் அளித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளின் மீதான மத்திய அரசின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் செய்யப்படும் பகிர்ந்தளிப்பிலும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி உதவியிலும் மத்திய அரசு தாராள அணுகுமுறையைப் பின்பற்றும் என நம்புகிறோம்.

20. 1989 ஆம் ஆண்டு ஜூன் திங்களில், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களும் நேரடியாகக் கலந்துரையாடியதன் அடிப்படையில், தெலுங்கு கங்கைத் திட்டத்தை விரைவுபடுத்த அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 1992–93 ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்கு 12 ஆயிரம்

மில்லியன் கன அடி நீர் வழங்கக்கூடிய இந்தத் திட்டத்தை விரைவு
படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், நடப்பாண்டில் நம் அரசு
ஆந்திர மாநிலத்திற்கு ரூ. 60 கோடி வழங்க ஒப்புக்கொண்டுள்ளது.
அதில், ரூ. 30 கோடி வழங்கப்பட்டுவிட்டது. சென்னை மாநக
ருக்குப் பயன் அளிக்கும் மிக முக்கியத் திட்டமாக விளங்கும்
இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் எவ்வித காலதாம
தமோ மறுசிந்தனையோ இருக்காது என்று, தற்போதைய ஆந்திர
மாநில முதலமைச்சர் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளமைக்காக
நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறோம். இத் திட்டம் செயல்படுத்தப்படுவதில்
ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆந்திர மாநில
அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தவும், ஏற்கெனவே ஒப்புக்
கொள்ளப்பட்டுள்ள கால அளவிற்குள் இத் திட்டம் நிறைவு
பெற அவர்களின் ஒத்துழைப்பைக் கோரவும் தொடர்ந்து முயற்சி
கள் மேற்கொள்வோம்.

21. அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடி
வின் அடிப்படையில், காவிரி நீர் பிரச்சினையை நடுவர் மன்றத்
தின் தீர்வுக்கு அனுப்பவேண்டுமென நம் அரசு, மத்திய அரசை
வலியுறுத்தியுள்ளது. இதை நாம் அண்மையில் அவர்களிடம்
நினைவூட்டியுள்ளோம். காவிரி பிரச்சினை குறித்து மேற்
கொண்டும் விவாதிக்கத் தயாராக உள்ளதாகக் கர்நாடக மாநில
முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதைக் கருத்தில் கொண்
டுள்ளோம். பல ஆண்டுகளாக தொடர்புடைய மாநிலங்களுக்கு
இடையே நடைபெற்ற விவாதங்கள் எவ்விதப் பலனையும் அளிக்க
வில்லை. எனவே, இப் பிரச்சினையை நடுவர் மன்றத்திற்கு அனுப்
புவது மேலும் தாமதப்படக்கூடாது என்பதே நம்முடைய நிலை
யாகும். நடுவர் மன்றத்திற்கு இப் பிரச்சினையை அனுப்பிய
பிறகும்கூட, பேச்சுவார்த்தைகளின் மூலமாக சுமுகமான தீர்வு
காணும் முயற்சிகளை ஏற்பதற்குத் தயக்கம் காட்ட மாட்டோம்.

22. தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களினால்,
சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சித் தேர்தல்
களைத் தள்ளிப் போட நேர்ந்தது. இவற்றில் மிக முக்கிய
மான காரணம், நகராட்சி நிர்வாகம் (Nagar Palikas) குறித்த
அரசமைப்பு 65ஆம் திருத்தச் சட்ட முன் வடிவைச் சட்ட
மாக நிறைவேற்ற முந்தைய மத்திய அரசு கருதியதேயாகும்.
இந்தச் சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்
படவில்லை. எனவே, மாநகராட்சிகளில் உள்ள இடங்களில்
30 விழுக்காட்டை மகளிருக்கு ஒதுக்கவும், ஆதி திராவிடர்,
பழங்குடியினர் ஆகியோருக்கு மொத்த மக்கள் தொகையில்
உரிய விகிதத்திற்கேற்பப் பிரதிநிதித்துவம் அளிக்கவும் சட்டம்
கொண்டுவரக் கருதியுள்ளோம். சென்னை மாநகரில் கோட்ட
(Divisi(n) அளவில் சராசரி மக்கள் தொகை, சுமார் 22,000
ஆகும். இது பெங்களூர், கல்கத்தா, டில்லி, பம்பாய், போன்ற



ஏனைய மாநகர் வட்டங்களில் உள்ள சராசரி மக்கள் தொகைக்கு
குறைவாகவேயுள்ளது. இருப்பினும், சென்னை மாநகரில்
8 மிகப் பெரிய கோட்டங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும்
மக்கள் தொகை சுமார் 30,000-க்கு மேல் உள்ளது. அதே
நேரத்தில், 10 கோட்டங்களில், ஒவ்வொன்றிலும் மக்கள்
தொகை 10,000 முதல் 15,000 வரை மட்டுமே உள்ளது.
மக்கள் தொகை, வாக்காளர் எண்ணிக்கை ஆகியவற்றைப்
பொறுத்த வரை, கோட்டங்களுக்கிடையே உள்ள ஏற்றத்
தாழ்வுகளைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் எந்த
ஒரு கோட்டத்திலும் மக்கள் தொகை 30,000-க்கு மேற்
படாமலும், அதே நேரத்தில் பெரும்பாலான கோட்டங்களில்
மக்கள் தொகை 15,000 முதல் 25,000 வரையில் மட்டுமே
இருக்கும் வகையிலும், கோட்டங்களின் அமைப்பை மாற்றி
யமைக்கக் கருதியுள்ளோம். இந்த மாற்றங்கள் அடுத்த சில
மாதங்களில் செய்யப்பட்டு, இந்த மூன்று மாநகராட்சி
களுக்கும் 1990 செப்டம்பர் 30-க்கு முன்னர் தேர்தல் நடை
பெறும்.

23. கடந்த ஆண்டில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களுக்கும்
தேர்தல்கள் நடைபெறுவதற்கு உறுதி செய்ய சிறப்பு நடவடிக்
கைகளை அரசு மேற்கொண்டதை உறுப்பினர்கள் நன்கறிவர்.
பல்வேறு அரசியல் கட்சிகளிடமிருந்து சார்புரைகள் வரப்
பெற்றதன் பேரில் இத்தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டிய
தாயிற்று. தேர்தல்கள் நடத்துவதில் சில நடைமுறைச் சிக்கல்
களை நீக்கும் பொருட்டு, சட்டத் திருத்தங்கள் தேவைப்
படுகின்றன. அரசு, சட்டப் பேரவையின் எதிர் வரும் வரவு-
செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது இத் திருத்தங்
களைக் கொண்டு வரக் கருதியுள்ளது. இத் திருத்தங்களின்
அடிப்படையில், தேர்தல் பணிகள், 1990 ஆகஸ்ட் மாதம்
தொடங்கி நவம்பர் மாதத்தில் முடிவுறும்.

24. இந்தியாவிலேயே முதல் முதலாக இந்த அரசுதான்
முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உட்பட, பதவியில் இருப்
போர்மீது தவறான நடத்தை குறித்த குற்றச் சாட்டுகளை
விசாரித்து, புலனாய்வு நடத்த வகை செய்யும் சட்டத்தை
இயற்றியது. தமிழ்நாடு 1973ஆம் ஆண்டு பொது வாழ்வில்
ஈடுபட்டுள்ளோர் (குற்ற நடத்தை) சட்டம், இது தொடர்பான
முன்னோடிச் சட்டமாகும். இந்தச் சட்டம் 1977-ல் ரத்து
செய்யப்பட்டுவிட்டது. இதனை மீண்டும் கொண்டு வருவ
தாகத் தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டிருந்தது.
நாடாளுமன்றத்தில் அண்மையில் கொண்டுவரப்பட்ட லோக்
பால் சட்ட முன்வடிவு போன்று, முதலமைச்சர், அமைச்சர்கள்
உட்பட பதவி வகிப்பவர்களுக்கெதிரான தவறான நடத்தை
குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்கவும், புலனாய்வு நடத்தவும்
வகை செய்யும் சட்ட மொன்றை வரவு-செலவுத் திட்டக்
கூட்டத் தொடரில் கொண்டுவர முடிவு செய்துள்ளோம்.

25. இந்தக் கூட்டத் தொடரில் உங்கள் விவாதங்கள், ஆக்க பூர்வமானவையாகவும் மக்களாட்சியின் உயரிய மரபுகளைச் சுட்டிக் காப்பவையாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.



## இணைப்பு II.

*93—ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.*

## HONOURABLE MEMBERS OF THE LEGISLATIVE ASSEMBLY

It is my pleasure and privilege to address the first session of the Tamil Nadu Legislative Assembly in the New Year. I extend my greetings to all of you for the New Year and for Pongal Thirunal.

2. This Government welcomes the many initiatives which the new National Front Government have announced in the President's address to Parliament. The new Government's decisions to establish an Inter-State Council under Article 263 of the Constitution and to accord constitutional status to the Planning Commission are of special significance. We trust that further steps will be taken by the Centre to reflect their commitment to genuine federalism and autonomy to the States.

3. We welcome the objective of finding solutions to problems such as the Punjab and Jammu and Kashmir through national reconciliation and consensus. We trust that decentralisation of powers, functions, and resources to Panchayatraj institutions will be approached in a manner that will not in any way vitiate the federal structure of the polity. We also welcome the steps that have been initiated to ensure a clean and open Government, particularly autonomy for AIR and Television and the legislation for setting up a Lok Pal.

4. The new Parliament has passed a Bill for extending reservation for Scheduled Castes and Scheduled Tribes in Parliament and State Legislatures by a further period of ten years. Our Government fully supports this measure and we are bringing up legislation in this session of the Assembly to ratify the Constitutional Amendment.

5. In its session last May, the Tamil Nadu Assembly had passed a resolution urging the Central Government to implement the recommendations of the Mandal Commission to provide reservations for the Backward Classes in educational and employment opportunities under the Central Government. We are happy that the National Front Government have announced their commitment to take appropriate steps to implement the recommendations of the Mandal Commission.

6. In the current year, the South West monsoon has been satisfactory in the State as a whole and in almost all districts. The North-East monsoon has been deficient by more than 20 per cent from normal in as many as 8 districts although compared to 1988 it has been much

more favourable in the State as a whole. The recent rains in the southern districts have some what improved the position. Several steps that the Government have taken to improve agricultural production have helped to sustain crop output. We anticipate an output of 58.5 lakh tonnes of rice in the current year which will equal the peak production in the past. The output of pulses is expected to be 5.2 lakh tonnes and the sugarcane output 24.20 lakh tonnes. The production of sugarcane and pulses will be higher than the peak production in the past. The anticipated production of millets is 13.88 lakh tonnes and of cotton 5.2 lakhs bales.

7. The Government has accorded the highest priority to solve the drinking water problem in the State. Special priority has been given by this Government to provide drinking water-supply to 10,323 habitations which remain to be provided. So far 5,166 of these habitations have been covered in the current year. The balance 5,157 habitations will also be covered before the end of May 1990. A massive programme of sinking 5,149 bore wells as part of drought relief works has been successfully completed.

8. Tamil Nadu faced a situation of acute power shortage when the Government took, office in January 1989 mainly because of generation problems in the Central power stations at Kalpakkam and Ramagundam. Consequently the power cut had to be increased up to 60 per cent in April. By the end of July we were able to reduce the power cut to 20 per cent. This was brought down further to 10 per cent with effect from 20th December. The power cut has been lifted fully from the 12th of January this year. We trust it will be possible to maintain this till the end of March. This was possible because of the steps taken to expedite the commissioning of Mettur-III (210 MW), to bring back all three 110 MW units at Ennore to use to improve the plant load factor in thermal stations and the normal inflow into the hydel reservoirs. The plant load factor of 83 per cent achieved during 1989 in the Tuticorin plant deserves appreciation.

9. The public distribution system in our State has been under great strain because of the sharp curtailment in allotments of rice, palm oil and sugar from the Centre. Our Government had, however, taken steps to increase internal procurement and to arrange for an open market purchase of 3 lakh tonnes of rice. These measures have enabled us to distribute nearly 15 lakh tonnes of rice through the public distribution system in 1989 which is higher than about 13 lakh tonnes distributed in 1988.



10. In dealing with our rice problem, I am happy to say that the new Government at the Centre has come forward to help us. The Centre allotted an additional adhoc quantity of 50,000 tonnes in December to meet our urgent needs. The allotment has been stepped up to 60,000 tonnes in January 1990. In subsequent months, the allotment will be a minimum of 55,000 tonnes and we hope to persuade them to increase it further. We deeply appreciate this gesture on the part of the Central Government to recognise our legitimate needs and come to our help. On our part, we shall also intensify procurement operations in the Samba season and make adequate arrangements for open market purchases in 1990 to the extent necessary. On the basis of these measures, we are confident that there will be no shortfall in the availability of rice in fair price shops in the coming year.

11. As Honourable Members are aware, the Central Government increased the issue price of rice in February 1989. We have not so far given effect to that increase. The procurement price of paddy was also increased by Rs. 25 per quintal in the current year. In addition, an incentive bonus of Rs. 35 per quintal is being given at a total cost of Rs. 38.5 crores in 1989-90. We have also had to undertake a sizable financial burden arising from open market purchases in other States. In the coming year also we will have to go in for open market purchases in other States to maintain our Public Distribution System. The food subsidy has sharply increased from Rs. 130 crores in 1988-89 to Rs. 190 crores in 1989-90. In addition, about Rs. 36 crores is the cost of the free distribution of rice.

12. In the current year, on five occasions we distributed 5 kilograms of rice free of cost to 83 lakh households below an income level of Rs. 300 per month. This scheme has been widely welcomed. However, it has been pointed out that many genuinely poor households did not benefit because of incorrect recording of incomes. It has also been represented that the cut-off limit of Rs. 300 was too low and should be revised upwards. We have now decided that free distribution of rice will be extended to all households upto and including a household income level of Rs. 1,000 per month on three occasions in the year, namely, Tamil New Year's Day, Deepavali and Pongal. This is in keeping with the assurance given in the Election Manifesto and will benefit one crore and twenty lakh households on each occasion.

13. In my last address to the Assembly I had pointed out that the State was in the midst of a severe financial crisis as a consequence of which the approved Plan outlay of Rs. 1,457 crores for 1988-89 would have to be reduced. Accordingly, the Plan outlay for 1988-89 had to

be reduced to Rs. 1,202 crores. In the Budget for 1989-90, provision was made to increase the annual plan outlay to Rs. 1,360 crores in the current year. We will be able to sustain this level of plan expenditure in the current year without any shortfall.

14. Our Government has given high priority to improve the industrial climate in Tamil Nadu. The Government's new policy initiatives have evoked a positive response from industrialists. Loan applications to TIIC and SIPCOT have registered a sharp increase. The Letters of Intent approved have also gone up.

15. The entire structure of incentives and concessions has been rationalised and liberalised. Capital subsidy and interest-free sales tax deferral for setting up industries have now been made available in 105 backward taluks and in all growth centres. Special Capital Subsidy is also available for 10 specific selected groups of industries.

16. The new policy to stimulate the growth of the granite industry, which has significant potential for both export and employment has evoked a positive response from prospective investors. In the sugar industry, action has been taken to obtain letters of intent for 5 new mills in the co-operative sector. Eight new industrial projects have been approved in the joint sector/associate sector under TIDCO with a total investment of Rs. 290 crores. ELCOT has taken up 5 projects with a total investment of Rs. 45 crores.

17. SIPCOT has until now developed seven industrial complexes in which aggregate industrial investment is estimated to be more than Rs. 500 crores. Action has been taken to upgrade infrastructural facilities in these Industrial Complexes. In the current year, we have initiated action for implementing three new growth centres in Mayiladuthurai Poompuhar area in Thanjavur, Erode-Perundurai area in Periyar and Gangaikondan-Manur area in Nellai-Kattabomman districts at a cost of about Rs. 30 crores in each location.

18. The Government is firmly committed to enhance the status of women in society. 30 per cent of job opportunities arising in Government departments, local bodies, public sector undertakings, etc., have been reserved for women. Vacancies of teachers in Standards I and II are filled up by appointing only women teachers. The Government is committed to provide 30 per cent reservation for women in various elected bodies. In accordance with the commitments in the election manifesto free education has been provided upto the Graduate level for girls of poor and middle class families. Under the Moovalur Ramamirtham Ammayar Marriage Assistance Scheme announced in the





budget about 10,100 girls have been assisted at a cost of Rs. 5.05 crores. 65,597 pregnant mothers have been assisted with Rs. 200 under the Dr. Muthulakshmi Reddy Maternity Assistance Scheme. The budget declared our intention to amend the Hindu Succession Act, 1956 to provide equal property rights for female children on par with male children. Legislation enabling this passed by this House, is now awaiting the assent of the President.

19. The coming year, namely 1990-91, marks the beginning of the Eighth Five-Year Plan. The State Planning Commission of which the Chief Minister is the Chairman consists of eminent experts. The Planning Commission has made considerable progress in formulating the Eighth Plan for Tamil Nadu. However, it will take some more time to finalise the Eighth Plan at the national level and to settle the pattern of Central assistance to States during the Plan period. Moreover, the Ninth Finance Commission has submitted its final report to the President only at the end of 1989 and the decisions of the Central Government on the recommendations of the Commission are awaited. We trust that the Centre will adopt a liberal approach both in regard to devolution based on the award of the Finance Commission and in regard to Central Asssistance for the plan.

20. In June 1989, our Government had taken steps to expedite the Telugu Ganga Project on the basis of personal discussions between our Chief Minister and the Chief Minister of Andhra Pradesh. In order to expedite the project, which will bring 12 tmc. of water to Madras City by 1992-93, our Government has agreed to pay a contribution of Rs. 60 crores to Andhra Pradesh in the current year of which Rs. 30 crores has been already paid. We are grateful to the present Chief Minister of Andhra Pradesh for confirming that there will be no delay or rethinking in regard to the execution of this project which is of vital importance for Madras City. We shall review the progress in the project with Andhra Pradesh authorities and seek their continued co-operation in keeping to the agreed time-table.

21. On the basis of the decisions taken by the all-party meeting our Government has urged the Centre to refer the Cauvery dispute to a tribunal. We have also reminded them recently in this matter. We have noted that the new Chief Minister of Karnataka has indicated his willingness to hold further discussions on the Cauvery problem. Inter-State discussions over a number of years have not yielded any result. Hence, it is our stand that the issue has to be referred to a tribunal without any further delay. We are not averse to talks being held even after reference of the dispute to a Tribunal, so that the doors for a negotiated settlement are kept open.

22. Elections to the Municipal Corporations of Madras, Madurai and Coimbatore have had to be postponed on account of various unavoidable reasons the most important of which was the proposal by the Centre to enact the 65th Constitution (Amendment) Bill for Nagarpalikas. This Bill has not been passed by Parliament. We, therefore, propose to introduce legislation to provide 30 per cent of seats in Corporations for women and for due representation for Scheduled Castes and Scheduled Tribes in relation to their population ratio. In Madras City, the average population in a Division is about 22,000 which compares favourably with the size of wards in other major cities such as Bangalore, Calcutta, Delhi and Bombay. However, there are 8 very large Divisions in each of which the population is above 30,000 while 10 Divisions have a population of only 10,000 to 15,000 each. In order to reduce disparities between Divisions in respect of population and voter strength, we propose to restructure these divisions into smaller units so as to ensure that no division has a population exceeding 30,000 and the bulk of the Divisions have a population of 15,000 to 25,000. These changes will be made in the next few months and elections will be held for all three Corporations before September 30, 1990.

23. Members are aware that the Government had undertaken special steps to ensure the conduct of elections to various co-operatives last year. In view of the representations from various political parties, these elections had to be postponed. Legislative amendments to get over certain practical difficulties in the conduct of the elections are required. The Government proposes to bring these amendments in the coming budget session of the Assembly. Based on these amendments the election process will commence in August 1990 and be completed by November, 1990.

24. This Government was the first State Government in India to enact legislation to provide for enquiry and investigation into allegation of misconduct against persons holdings public office, including the Chief Minister and Ministers. The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Act, 1973, which was a pioneering legislation in this respect, was however, repealed in 1977. In the Election Manifesto, we had promised to revive this measure. We have decided to introduce legislation in the Budget session to provide for investigation and enquiry into allegations of misconduct against persons holding public office, including the Chief Minister and Ministers, on the lines of the Lok Pal Bill recently introduced in Parliament.

25. I shall conclude with the confidence that your deliberations in this session will be constructive and in keeping with the highest traditions of democracy. *Vanakkam.*

D
V211,31(N90 143810
N90.18.1